# அநாதியான தேசாந்திரிகள்



## பத்ரஜீ

சர்வோதய விஸ்வலேகா வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்ரஜீ மகிந்த ஜயதிலக

K. Balasubramania
Kanagarayan
kulam

Donated by
SARVODAYA CENTRAL
LIBRARY
MORATUWA

# அநாதியான தேசாந்திரிகள்

(ஸஸர ஸரன்னோ)

தமிழ் மொழிபெயர்ப்பு

MAH

Published by

VISHVA LEKHA
Publishers

41, Lumbini Mawatha, Ratmalana,
Sri Lanka

1998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"Sasara Saranno"
# WANDERER'S IN ETERNITY

## TAMIL TRANSLATION

**First Edition 1998**

An Original Sinhala Novel
Written by
**Bhadraji Mahinda Jayatilaka**
*winner of the prestigious D.R. Wijewardene Award*

*Cover designed by*
**Priyantha Colombage**

**© 1998 Bhadraji Mahinda Jayatilaka**

**ISBN 955-599-121-9**

HAM

All rights reserved. No part of this book may be used or reproduced in any manner whatsoever without written permission of the copyright holder.

**Printed & Published in Sri Lanka**
**by Sarvodaya Vishva Lekha**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

DONATED BY SARVODAYA.
சர்வோதய அன்பளிப்பு

சமர்ப்பணம்

நாட்டிற்காக உயிர்த்தியாகம் செய்த வீரர்களுக்கும், இன்னமும் உயிரைப் பணயம் வைத்து நாடுகாக்கும் வீரர்களுக்கும் சமர்ப்பணம்.

பத்ரஜீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பத்ரஜீ எழுதிய வேறு கதைகள்

සුදු හංසයෝ ඉගිල ගියහ
දිය රැලි නිහඬයි
වැහි දවස
කතලුගල අන්දරය
උලමගෙ රාත්‍රිය
දෝන ලුවිසා සාධනිගේ කථාවෙන් කොටසකි
(ඩී.ආර්. විජේවර්ධන සම්මාන ගෞරවණීය සඳහන්)
සුරදූත පුර
හංස ගීතය
කුරුළු තලාව
සමුද්‍රසිරි
ඉසංකාගේ ලෝකය
හන්තානයි පුරාහඳයි
චිත්‍රපටිය – දශකයක ලියූ කෙටිකතා
වෙස්සන්තර සිද්ධිය සහ තවත් කතා
පරෙවි පොකුණ
සක්වල වහල්ලු
දොඹගල නිධානය
තුන්වන ලෝකයේ මාකෝපෝලෝලා
රූපවාහිණී සටහන්
සඳ වියරුව
පෙරදිග පහන (LIGHT OF ASIA TRANSLATION)
වැව් ඉස්මත්ත
ගිනි සහ සෙව්වන්දි
ශ්‍රී රාවණ්ණා පුවත
සැන්දරසං ඇත්තෝ
සංකර දූවරු
පවුරු බැඳි රාජ්‍යය (WINNER OF D.R. WIJEWARDANE
AWARD FOR BEST UNPUBLISHED NOVEL 1996)
නන්දනීගේ ස්වයංවරය
HOTEL MADHU & OTHER STORIES (English Edition)

DONATED BY SARVODAYA
சர்வோதய நன்கொடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநாதியான தேசாந்திரிகள்
பத்ரஜீ மகிந்த ஜயதிலக்க

*நாங்கள் சண்டையிடுவது எதற்காக? எதைப் பெற்றுக் கொள்வதற்காக சண்டையிடுகின்றோம்? எமக்கு நாமே சொந்தமில்லாதவிடத்து நாம் வெற்றி பெற நினைப்பது எந்த வெற்றியை?*

*கர்ம பலனில் நம்பிக்கையுள்ளவர்கள் அது இல்லாதவிடத்தில் தெய்வத்தில் பக்தியுள்ளவர்கள் பிறருக்கு வேதனை தருவார்களா?*

*மற்றவர்களுடைய இரத்தத்தில் விடுதலை தேடுபவர்கள் மிருகங்களை விடக் கொடியவர்கள். அவர்களுடைய எதிர்காலம் இன்றோ நாளையோ அவர்களாலேயே முடிவுறும்.*

*இனம், பொருள், கோத்திரம் போன்றவற்றால் பெருமைப்படுபவர்கள் அவற்றைக் கொண்டு செல்ல முடியாது. எல்லாம் இறுதியில் அற்றுப் போகும்.*

*பராபவ சூத்திரம்*

ජාතිත්ථද්ධො ධනත්ථද්ධො
ගොත්තත්ථ ද්ධොච යො නරො
සඤ්ඤාතිං අති මඤ්ඤෙති
තං පරාභවතො මුඛං

ජාතිය, ධනය, ගෝත්‍රය යන මේවා නිසා උඩඟුවන යමෙකු නෑයන්ට අවමන් කෙරේ ද, එයද පිරිහීමට කරුණකි. **-පරාභව සූත්‍රයෙන් -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் பதிப்பிற்கான முகவுரை

இது என்னால் எழுதப்பட்ட முப்பத்தோராவது நூலாகும். இதற்கு முன்னர் எழுதப்பட்ட நாவல்கள் சில இன்னமும் அச்சேறாதிருக்கும் பொழுதே இந்த நாவல் அச்சில் வருவதற்கு முக்கிய காரணம் உண்டு.

இக் கதையின் காலத்திலான பெறுமதியைக் கண்ட சிங்கப்பூர் பௌத்த பிரார்த்தனை மையத்தின் பிரதம குருவான சங்கைக்குரிய வெறாகொட சார தேரரின் முன் முயற்சியினாலேயே இக்கதை அச்சேறுகின்றது. சங்கைக்குரிய தேரருக்கும், இக்கதை அச்சேறுவதில் சகல விதத்திலும் உதவி புரிந்த சகலருக்கும், குறிப்பாக சகோதரர் இ. சூரவன்ச, சகோதரி ரேணு, இ. சூரவன்ச, மஞ்சுள, மஹிந்த சகோதரர்கள் ஆகியோருக்கு எனது இதய பூர்வமான நன்றியைத் தெரியப்படுத்துகின்றேன். மேலும் இலங்கையில் எனது பிரசுரங்களுக்கு அனுசரணையாகவிருக்கும் பியசேன விக்கிரமகே, சுனீத்தா விக்கிரமகே, கரு, சுது அக்கா, குட்டி அக்கா, லிலானி அக்கா ஆகியோரை நன்றியோடு நினைவு கூறுகின்றேன். எனது பிரசுரங்களுக்கு சகல விதத்திலும் கைகொடுக்கும் ஆனந்த, கல்யாணி மாக்கலந்த சோடிக்கும், தயாவன்ச ஜயக்கொடி அவர்களுக்கும் எனது நன்றி உரியது. மேலும் இக்கதையில் வரும் தமிழ் வசனங்களை சரிபார்த்துத் தந்த சேர்ளி இக்னேசியஸ், குஸ்ஸானி அமிதிரிகல, சித்திராதேவி பாலசுப்பிரமணியம் ஆகியோருக்கும், அவ்விடயத்தில் எனக்கு மிகவும் உதவிய பேராசிரியர் சந்திரா லக்ஸ்மன் ஐயா அவர்களுக்கும் எனது நன்றி.

இக்கதையைப் படிக்கும் உங்களில் எவராவது ஒருவர்தானும், குரோதத்தை வெறுத்து, யுத்தம் கொடியது என்பதையும், எமது தேசியப் பாரம்பரியங்கள் என்று பெருமையுடன், எம்மைச் சுற்றி வேலிகட்டிக் கொள்வது உண்மையில் ஒரு ஈனச் செயல் என்பதையும் புரிந்து கொண்டால், நான் எனது நோக்கத்தில் வெற்றி பெற்றவனாவேன். ஆக்கபூர்வமான விமர்சனங்களை எதிர்பார்க்கின்றேன்.

*பத்திரஜீ மஹிந்த ஜயதிலக*
BHADRAJI (Bud) Jayatilaka
633 San Dimas St.
Hemet CA 92545
California - U.S.A.
September, 1998.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அநாதியான தேசாந்திரிகள்
## (ஸஸர ஸரன்னோ)
## தமிழ் மொழிபெயர்ப்பிற்கான முன்னுரை

இது என்னுடைய முப்பத்தோராவது நூலாகும். இதற்கு முன்பு நான் எழுதிய பல நாவல்கள் இன்னும் அச்சேறாவிட்டாலும், அநாதியான தேசாந்திரிகள் அச்சுப்பெற்றது ஒரு விசேட காரணத்தின் பேரிலாகும்.


இந்தக் கதையின் நடைமுறைத் தேவையை உணர்ந்த சிங்கப்பூர் பௌத்த பாவனா நிலையத்தின் பிரதம பிக்கு வணக்கத்திற்குரிய வேரகொட சாரத அவர்கள் இதன் சிங்கள மொழி மூலத்தை வெளியிட்டு வைத்தார். இதன் பின்பு இதன் முக்கியத்துவத்தை உணர்ந்த சர்வோதய இயக்கத்தின் தலைவர், டாக்டர் ஏ.ரி. ஆரியரத்ன இதன் தமிழ்மொழிபெயர்ப்பைப் பற்றி அக்கறை கொண்டார். இவ்விருவருக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும். இது இலங்கையில் மட்டுமன்றி, வெளிநாடுகளில் உள்ள தமிழ் பேசும் மக்களையும் சென்றடைய வேண்டும் என்பதே எனது விருப்பமாகும்.

இந்தப் படைப்பை இந்த வடிவத்தில் வெளிக் கொணர்வதற்கு ஒத்துழைப்பு நல்கிய வேறு பலரைப்பற்றி இங்கு விசேடமாகக் குறிப்பிடுதல் வேண்டும். இதனை அழகிய தமிழில் மொழிபெயர்த்த திரு. டப்ளியூ சுமணரத்ன அவர்களுக்கும், சர்வோதய விஷ்வலேகா முகாமைத்துவப் பணிப்பாளர் திரு. சுசிரி டீ. சில்வா அவர்களுக்கும், அச்சு வடிவமைப்பு செய்த சர்வோதய விஷ்வலேகா திரு. எம். தேவராஜு அவர்களுக்கும், தமிழ்ப் பதிப்பின்போது பூரண ஒத்துழைப்பு தந்த இலங்கையில் என்னுடைய வெளியீடுகள்பற்றி மிக உற்சாகத்துடன் பணியாற்றுகின்ற என்னுடைய சகோதரர் பியசேன விக்ரமகே, சுனீதா சாம்தாஸ் ஆகியோருக்கும், அட்டைப் படத்தை அழகுற வடிவமைத்த பிரியந்த கொலம்பகே சகோதரருக்கும், சுது அக்கா, கரு, பொடி அக்கா, லிலானி அக்கா, மாலினி அக்கா, அமெரிக்காவில் என்னுடைய கிரந்தங்கள் சம்பந்தமாக வேலை செய்கின்ற ஆனந்த, கல்யாணி மாகலந்த ஆகியோருக்கும், சிங்களப் பிரதியில் தமிழ் வசனங்களை சரிபார்த்த சேர்ளி இக்னேஷஸ், குஸ்லானி அமிதிரிகல, சித்ராதேவி பாலசுப்பிரமணியம் அவர்களுக்கும், இறுதியாக எனக்கு பல்வேறு வகையில் உதவி செய்த என் மூத்த அண்ணண் பேராசிரியர் லஷ்மன் ஜயதிலக்க அவர்களுக்கும் எனது நன்றிகள்.

உங்கள் அனைவரது ஆதரவை பெரிதும் எதிர்பார்க்கின்றேன்.

பத்ரஜீ மகிந்த ஜயதிலக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அநாதியான தேசாந்திரிகள்

வாழ்க்கைச் சக்கரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 1

# சுந்தரமும் அவன் குடும்பமும்

## 1958-1959

சுந்தரம் தெல்கந்த சந்தியில் உள்ள ஒலந்த ஏரி அருகாமையில் இருந்த குடிசை ஒன்றில் வாழ்ந்து வந்தான். தனியாக அல்ல; மனைவி தங்கமணி, ஆறுவயதுடைய மகள் ஜானகி, மூன்று வயதுடைய மகன் இரங்கநாதன் ஆகியோர் அவனுடன் இங்கு வாழ்ந்து வந்தனர். அக் குடிசை பலகைகளினால் கட்டப்பட்ட ஒரே ஒரு அறையைக் கொண்டது. துருப்பிடித்த தகரங்களினால் செய்யப்பட்ட கூரை, பலகைகளினாலான சுவர்கள் அதற்கு வெளியே கடைசியாக ஒரு பக்கத்தில் அடுப்பும் இன்னொரு பக்கத்தில் சுந்தரம் சேர்த்து வைத்த கோணி உறைகள், போத்தல்கள், பழைய தகரம், பத்திரிகைகள் ஆகியன அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிக அளவான பத்திரிகைகள் குடிசைக்குள்ளே அடுக்கப்பட்டிருந்தன. பலகைகளினாலான சுவர்களுக்கருகே ஈயம், சீனச்சட்டி அலுமினியப் பாத்திரங்கள் ஆகியன இப்பத்திரிகை கட்டுகளில் காணப்பட்டன. அவன் வீடுகளிலிருந்து சேகரிக்கும் பத்திரிகைகளுக்கு பதிலாக இந்த பாத்திரங்கள் வளையல்கள், ஆகியவற்றைக் கொடுத்து மாற்றிக் கொண்டான். வெவ்வேறு நிறங்களைக் கொண்ட வளையல்களை அவன் தனது படுக்கைக்குக் கீழே ஓர் பக்கத்தில் வைத்திருந்தான்.

இந்த படுக்கையில்தான் சுந்தரம் நித்திரை கொள்ளுவான். யாராவது ஒரு பிள்ளை நோய்வாய்ப்படும்போது மட்டுமே அதன்மேல் நித்திரை கொள்வார்கள்.

தங்கமணியும், இரு பிள்ளைகளும் தரையில் போடப்பட்ட பாயில் தூங்கிக் கொண்டனர். இரு கதவுகள் மட்டும் கொண்ட இந்த குடிசைக்குள் இரவும் பகலும் இருளாகவே காணப்பட்டது. பலகைகள் எல்லாம் பூஞ்சணம் பிடித்து கறுப்பு நிறமாகியிருந்தது. குடிசைக்குள், இந்த பூஞ்சணத்தின் துர்நாற்றம் எங்கும் பரவி வீசியது. மழை காலத்திலே இந்த துர்நாற்றம் சற்று அதிகமாக வீசியது. சுந்தரம் குளிருக்காக குடிக்கும் சாராயத்தின் நாற்றம் அந்த பூஞ்சணத்தின் நாற்றத்துடன் கலந்தது. மாலை நேரங்களில் தனது களைப்பை தணித்துக் கொள்ள அவன் பிடிக்கும் சுருட்டின் நாற்றம் எல்லா இடங்களிலும் வீசியது.

எது எவ்வாறாயினும் இதுதான் அவனுடைய வீடு. தங்கமணி தனது நாட்களின் பெரும் பகுதியை இந்தக் குடிசையின் வெளியே உள்ள அடுப்பின் அருகிலேயே கழித்தாள். அவள் ஊதி ஊதி எரிய வைக்கும் இறப்பர் விறகுகளினால் உண்டாகும் புகை, பலகை சுவர்களுக்குள் சென்று குடிசையை நிரப்பிக்கொள்ளும். இரங்கநாதன் சிறுவயதிலிருந்தே இருமுவது இதனால்தான் என தங்கமணி நினைப்பதுண்டு.

எதற்காக கொழும்பில் இப்படி கஷ்டப்படுகிறோம் என தங்கமணி அடிக்கடி நினைப்பதுண்டு. யாழ்ப்பாணத்தில் உறவினர்களோடு இருந்தால் எவ்வளவு நல்லது என அவள் பலமுறை யோசித்ததுமுண்டு. ஆனால் அது கனவு மட்டுமே. அவள் சுந்தரத்தின் நினைவில் வாழ்ந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோணி உறைகள், போத்தல்கள், பத்திரிகைகள் என்பனவற்றை விற்று அதனால் கிடைக்கும் பணத்தினால் சிறியதொரு காணியை வாங்கி, வீடு ஒன்றைக் கட்டுவதே சுந்தரத்தின் கனவாக இருந்தது. இந்த வீடு தன் மகனாகிய இரங்க நாதனுக்கே உரித்தாக வேண்டும் என கனவுகண்டான். அது சுந்தரத்தின் பாதிக் கனவாகும். மறு பாதிக் கனவு மகள் ஜானகிக்கு கல்வி அறிவு புகட்டி அவளுக்கு நல்லதொரு கணவனை தேடிக்கொடுப்பதாகும், இதற்காகவும், சீதனத்திற்காகவும், பணத்தைச் சேமிக்க வேண்டியதாக இருந்தது. தினமும் சம்பாதிக்கின்ற பணத்தில் சொற்ப அளவே சாப்பாட்டுக்காக செலவு செய்தனர். ஆற்றங்கரைப் பக்கத்திலிருந்து பிடுங்கிக் கொள்ளும் கீரையும், சோறு கொஞ்சமும், பருப்பும்தான் அவர்கள் உணவாகும். எண்ணெய்யில் வெங்காயம் உருளைக்கிழங்கு, மிளகாய் ஆகியவற்றைச் சேர்த்து பொரித்து சாப்பிடுவது எப்பொழுதோ ஒரு வேளைதான். அதுதான் அவர்களது ருசியான, அதிகம் விரும்பி உண்ணும் உணவாகும்.

ஆறு வயதுடைய ஜானகி அழகியதொரு பெண்ணாக மாறும் அறிகுறிகள் இப்போது தென்பட்டது. தங்க மணியைப் போலவே அழகான தோற்றமுடைய ஜானகியின் கண்கள் கவர்ச்சி தரக்கூடியதாக இருந்தது. இரு உதடுகளும் நிறைந்து காணப்பட்டன. அவளை ஒருமுறை பார்க்கின்ற எவரும் இன்னொரு முறை கட்டாயமாக திரும்பிப் பார்க்காமல் விடமாட்டார்கள் என்பதை தங்கமணி உணர்ந்தாள். அவள் நெற்றியில் கறுப்புப் பொட்டு வைத்து அவர்கள் கண்ணூறைத் தடுக்க நினைத்தாள். இரங்கநாதன் நெற்றியிலும் இத்தகைய பொட்டு ஒன்றை இட்டாள். அவன் இன்னும் இடுப்பில் அரைநாற்கொடியுடன் நிர்வாணமாக எல்லா இடத்திலும் ஓடி திரிகின்றான். அவன் ஆற்றங்கரைக்கு ஓடும்போது அதை தடுப்பவள் ஜானகியே.

ஜானகி காலையில் பாடசாலைக்குச் செல்வதால், தங்கமணி தன் மகனை குடிசைக்கு வெளியே தூண் ஒன்றில் கட்டிப் போடுவாள். சிறியதொரு கயிற்றை அவன் இடுப்பில் உள்ள அரைநாற்கொடியுடன் சேர்த்து கட்டிவிட்டு, அவள் தனது சமையல் வேலையைச் செய்து கொள்வாள். சிறிது நேரம் அழுதுவிட்டு இரங்கா அம்மா தரும் வெல்லக் கட்டியை சாப்பிட்டு, அருகில் கிடக்கும் கல், பலகை துண்டுகளுடன் விளையாடுவான். இந்த விளையாட்டைத் தொடங்கிய பின்பு அவன் தான் ஒரு தூணில் கட்டப்பட்டிருப்பதையும் மறந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுகின்றான். அவன் காலை நேரத்தை இவ்வாறு கழிக்கின்றான். தங்கமணியும் தன் மகனுக்கு கேட்குமாறு பலவற்றை கூறுவாள். "மகனே நாம் யாழ்பாணம் செல்வோம். அங்கே உன் பாட்டி இருக்கின்றாள். ஆம், நாம் போவோம். புகைவண்டியில் யாழ்பாணம் செல்வோம்.

சுக், சுக், சுக், சுக், ...................... ஊ ........

இரங்காவும் அம்மா சத்தம் செய்வது போல சப்தம் செய்து சிரிக்கின்றான். இது அவர்களின் விளையாட்டு. தங்கமணி மகனுடன் சிரித்து அடுப்பை ஊதுகின்றாள். பருப்பு, மிளகாயுடன் அடுப்பில் வேகின்றது. அதற்கிடையில் அவள் அக்கம் பக்கத்தில் இருந்து பிடுங்கியெடுத்த கீரையை கத்தியால் வெட்டுகின்றாள்.

தங்கமணி ஜானகி பற்றியும் சுந்தரம் பற்றியும் அடிக்கடி நினைப்பாள். அவர்கள் எந்த தொந்தரவும் இல்லாமல் வீடு வந்து சேரவேண்டுமென்ற எண்ணம் அவள் உள்ளத்தில் எப்போதும் குடிகொண்டிருத்தது.

காலையிலிருந்தே வீடுகளுக்குச் சென்று போத்தல், சேர்க்கின்ற சுந்தரம், பாடசாலை முடிகிற நேரம் அங்கு வாசற்படியில் நிற்கின்றான். மகள் சிரித்துக்கொண்டே தன்னை நோக்கி வருவதை காண்கின்ற சுந்தரத்துக்கு, தன்னுடைய களைப்பைக் குளிர்ந்த தண்ணீரினால் போக்கிவிட்டது போல தென்படுகிறது. அவளுடைய கையை பிடித்துக்கொண்டு அவன் தன் தலைமேல் உள்ள கூடையை சரிசெய்துகொண்டு ஆற்றங்கரை அருகாமையில் உள்ள தனது குடிசை நோக்கி வருகின்றான்.

தங்கமணி சமைக்கும் உணவின் வாசனை சுந்தரத்தினதும் ஜானகியினதும் பசியை தூண்டிவிடுகிறது. ஆனால் இருவரும் வீடு வந்த உடனே செய்வது தண்ணீர் குடிப்பதே. பாடசாலைக்கு அணிந்த நல்ல சட்டையைக் கழற்றி, ஜானகி, அம்மா அருகாமையில் உட்கார்ந்துகொண்டு பாடசாலையில் படித்தவற்றை சொல்லுகின்றாள்.

சிறுமி தமிழைப் போலவே சிங்களத்தையும் நன்கு பேசுகின்றாள். அவள் படித்ததொரு பாடலை உரத்துப் பாடிக் காட்டினாள்.

> இந்த மரத்தில் பல ஆரஞ்சுப் பழங்களுண்டு. காயாகி, பழமாகி, பழங்களால் நிறைந்த கிளைகள் பூமியை நோக்கி குனிகின்றன. தம்பிக்கும் எனக்கும் இருகாய்கள் போதும், அதிகமாக பிடுங்கும் கெட்ட பிள்ளைகள் அல்ல நாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பியை தூணிலிருந்து அவிழ்த்துவிட்ட ஜானகி அவன் கையை பிடித்துக்கொண்டு ஆற்றங்கரைப் பக்கம் செல்கின்றாள். சுந்தரம் படுக்கையில் இருந்துகொண்டே ஜானகி கவனமாகப் போ! என சொல்கின்றான்.

ஆம் அப்பா! ஜானகி பதில் கூறுகின்றாள். பிள்ளைகள் இருவரும் சத்தமிட்டு பேசிக்கொண்டு சிரிக்கும் போது சுந்தரம் தனது கால்களின் வேதனையை மறந்து விடுகின்றான். காலையில் தான் எவ்வளவு மைல்கள் தூரம் நடந்தேன்? தொண்டை கட்டிக்கொள்ளும் வரை எத்தனை முறை போத்தல், பத்தர என்று கத்தினேன்? என்று எண்ணினான். அன்று முழுவதும் சேர்ந்த பணத்தை அவன் தலை அணைக்குள்ளே மறைத்து வைத்தான்.

தங்கமணி மூன்று அலுமினிய தட்டுகளில் சோறும், பருப்பும், கீரையும் பரிமாறுகின்றாள். அதில் பெரும் பகுதியை சுந்தரத்துக்கே பரிமாறினாள். அவன் எவ்வளவுதான் சாப்பிட்டாலும் அவனது கறுப்பு நிறமான உடல் மிகவும் மெலிந்து காணப்பட்டது. இந்த மெல்லிய கால்களினால் அவன் வெகு தூரம் நடந்து செல்வது அவனுக்குள் திடமான மனச் சக்தியினால் தானே? என தங்கமணி நினைக்கின்றாள்.

சோறு சாப்பிட வாங்க ஜானகி என்று அவள் தனது கணவருக்கும் கேட்கும்படி சத்தமிடுகிறாள்.

அவர்கள் சாப்பாடு சாப்பிடுவது அடுப்பு காணப்படும் வெளிப்பகுதியில் இருந்தே. சிறிய கதிரையில் சுந்தரம் உட்காருகின்றான். அவனுடைய கையில் தங்கமணி, கோவிலில் பூசைத்தட்டை கொடுப்பது போல, சாப்பாட்டு தட்டை கொடுக்கின்றாள். மற்ற தட்டை ஜானகிக்கு கொடுக்கின்றாள். அவள், அப்பாவின் அருகில் தரையில் உட்கார்கின்றாள். தங்கமணி மற்றைய தட்டில் உள்ள சாப்பாட்டை மகனுக்கும் ஊட்டிக்கொண்டு தூணில் சாய்ந்து நின்று தானும் சாப்பிடுகின்றாள்.

சாப்பிடும்போது அவர்களுக்கிடையில் அவ்வளவாக பேச்சு ஒன்றும் நடக்கவில்லை. தங்கமணி இரங்காவுக்கு ஏதோ கூறுகின்றாள். பிள்ளையும் அவள் சொல்லிக் கொடுத்த சொற்களை கற்றுக்கொண்டு மிக சிரமத்தோடு சோறு கொஞ்சம் சாப்பிடுகிறான்.

இதற்குபின் தங்கமணி செய்ய வேண்டிய வேலைகள் பல இருந்தன. அவள் சட்டி, பானைகள் கழுவும் வரை, ஜானகி தம்பியை தாலாட்டி தூங்க வைக்கின்றாள். அவன் குடிசைக்குள் இருளில் தூங்கத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கினான். சுந்தரம் கொஞ்ச நேரத்திற்கு படுக்கையில் சாய்கின்றான். சில சமயங்களில் ஜானகி அப்பாவின் கால்களில் எண்ணெய் தடவி உருவி விடுவாள்.

சமையலறையில் வேலைகள் முடிக்கின்ற தங்கமணி, கணவன் கொண்டு வந்த கோணி உறைகள், போத்தல் என்பனவற்றைத் தனித்தனியாய் எடுத்து பிரித்து வைக்கின்றாள். வாரத்திற்கு ஒரு முறை சூரியசாமியின் வண்டிவந்த உடன் இவைகளை அதில் ஏற்றுவார்கள். இல்லையென்றால் கந்தசாமியின் லாரி வண்டி வந்து சிலவற்றை எடுத்துச் செல்லும். அலுமினியம், ஈயம், சட்டிகள் ஆகியவற்றை குடிசைக்கு கொண்டு வருவதும் கந்தசாமியின் லாரியில் தான். எல்லாப் பணத்தையும் கணக்கு பார்ப்பது ஜானகிதான். செலவுக்குப்போக மீதிப் பணத்தை படுக்கைக்குக் கீழ் உள்ள தரையில் தோண்டி மண்பாத்திரத்தில் ஒளித்து வைப்பாள்.

மீண்டும் இரவு உணவு சமைக்கும்வரை தங்கமணி இந்த கோணி உறைகள், போத்தல்கள் ஆகியவற்றை வகைப்படுத்தல் நூலை கட்டையில் சுழற்றல், கிழிந்து போன ஆடைகளைத் தைத்தல், வெளியே வளர்ந்துள்ள காய்கறிள் பாத்தியை கவனித்தல் ஆகியவற்றில் ஈடுபடுவாள். ஆற்றங்கரை ஓரத்தில் கீரை, செடிகள் சில தக்காளி செடிகள் எலுமிச்சை செடி, போஞ்சிக் கொடி ஆகியன வளர்ந்து காணப்பட்டன. பருப்பு, உருளைக் கிழங்கு வெங்காயம் என்பனவற்றை இவ்வாறு விவசாயம் செய்ய முடியுமானால் எவ்வளவு நல்லது என நினைத்தாள். ஆனால் அரிசி போன்றவற்றை கடையில் வாங்கத்தான் வேண்டும். எண்ணெய், சீனி, கறிச்சரக்கு, தேயிலை இவையெல்லாம் வாங்கப் பணம் செலவு செய்ய வேண்டும். சம்பாதிப்பதை எல்லாம் முழுமையாக சேமிக்க முடியாது. அவள் இரு பிள்ளைகளின் நன்மைபற்றியே நினைக்கின்றாள். இரங்கநாதன் பெரியதொரு வியாபாரியாக மாறிவிடுவதையும் அவள் கனவில் பார்க்கின்றாள். ஆனால் இவை கனவுகள் மாத்திரமே. "யாழ்ப்பாணம் யாழ்ப்பாணம" புகை வண்டியின் சக்கரங்கள் போகும் ஓசையைப் போலவே அவள் உள்ளம் தாளத்தோடு சொல்கிறது. "யாழ்ப்பாணம் .... யாழ்ப்பாணம்....."

ஜானகி ஆற்றங்கரையில் தானே உண்டாக்கிக் கொண்ட உலகத்தில் வாழ்கின்றாள்.

இலைகள், காட்போட் அட்டைகள் பிளாஸ்டிக் துணிகள் ஆகியவற்றைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு ஒரு சிறிய வீட்டைக் கட்டினாள். விளையாடுவதற்கு, சோறு சமைக்க தோழிகள் யாரும் இல்லை. ஆற்றங்கரைக்கு கொசுக்கள், தவளைகள் மட்டுமே. எப்பொழுதாவது ஒருமுறை உடும்பொன்று வந்து நாக்கை நீட்டிவிட்டு ஈக்களை விழுங்கிவிட்டு போகிறது. சிலநேரம் அழகிய வண்ணாத்திப்பூச்சிகள் அங்கு வந்து பூக்களைக் காணாமல் திரும்பிச் போகின்றன.

ஒரு முறை வண்ணாத்திப்பூச்சி ஒன்றைப் பிடிக்க அதன் பின்னாலே ஓடிப்போய் ஜானகி ஆற்றில் விழுந்தாள். அவள் உடம்பெல்லாம் சேறாகி விட்டது. அவள் தனது ஆடைகள் காயும் வரை குடிசைப் பக்கமே போகவில்லை. ஆற்றங்கரை வழியாக அவள் அம்மாவும், அப்பாவும் காணாதபடி சந்தியை நோக்கி போனாள்.

ஆனால் அங்கே அங்குமிங்குமாக செல்லும் வண்டிகளையும், மக்களையும் கண்டு பயந்து, அவள் சீக்கிரமாக குடிசைக்குத் திரும்பி வந்தாள்.

"எங்கே போனாய்?" தங்கமணி கோபமாக கேட்டாள்.

ஜானகியிடமிருந்து பதில் இல்லை. சொல்லு, சொல்லு என்று தங்கமணி மகளின் கன்னத்தில் இரு முறை அறைந்தாள். ஜானகியின் கண்களில் இருந்து கண்ணீர் வரும்போது தங்கமணிக்கும் அழுகை வந்தது.

உனக்கு புத்தி இல்லையா? ஜானகியிடமிருந்து பதில் எதுவும் கிடைக்காததால் தங்கமணியும் மௌனமானாள். ஜானகி புத்தகம் ஒன்றை எடுத்து குடிசைக்கு வெளியே சென்று படிக்க ஆரம்பித்தாள். அவள் சில நொடிகள் மட்டும்தான் புத்தகத்தை வாசித்தாள். அதன் பின் அவள் அங்கே வைக்கப்பட்டிருந்த பத்திரிகைகளில் இருந்தவற்றை வாசிக்க ஆரம்பித்தாள். கட்டிப்போடப்பட்டிருந்த பத்திரிகைகளை அவிழ்த்து அவற்றை வாசிப்பது அவளுக்கு அவள் பெற்றோர்களால் தடை செய்யப்பட்டிருந்தது. பத்திரிகைகளின் பக்கங்களில் காணப்படும் சிலவற்றை மட்டுமே அவள் உற்சாகமாக பார்க்கின்றாள். படங்கள் இருந்தால் அவற்றை மேலும் அக்கறையுடன் பார்ப்பாள். ஆங்கில எழுத்துக்களையும், சிங்கள எழுத்துக்களையும் முயற்சி எடுத்து வாசிக்க அவள் முற்படுகின்றாள்.

சற்று நேரத்தில் வெளியே வந்த தங்கமணி மறைவாக சற்று நின்று மகளையே பார்த்துக் கொண்டிருந்தாள். மகளின் முயற்சியைக் கண்ட அவள் உள்ளத்தில் பெருமையும் மகிழ்ச்சியும் உண்டானது. பெண், விரல்களை வைத்து எழுத்துக்களை கூட்டி கூட்டி வசனங்களை முணுமுணுப்பதைக் கண்ட தங்கமணி ஓடிவந்து மகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிப்பிடித்துக் கொண்டாள்.

'அம்மா' என்று ஜானகி அழத்தொடங்கினாள்.

"இனிமேல் அப்படி போக வேண்டாம்" என்று கூறிய தங்கமணி மகளோடு சேர்ந்து அழத் தொடங்கினாள். சிறிது நேரத்தின் பின் தங்கமணி மகளின் தலையை வாரிவிட்டாள். புதிய ரிப்பன் பட்டி ஒன்றை அழகாக அவள் முடியில் வைத்து கட்டினாள்.

மாலை நேரமான பிறகு அம்மாவும் இரு பிள்ளைகளும் பொது கிணற்றுக்கு குளிக்க போனார்கள். அந்த இடத்திற்கு சற்று தூரம் நடந்து செல்ல வேண்டும். ரயில் பாதைக்கும், பொது வீதிக்கும் இடையில் அந்த கிணறு இருந்தது. அங்கே சனக்கூட்டம் இருந்தால், தங்கமணி சற்று நின்று கொண்டிருப்பாள். தனது முறை வரும்வரை தங்கமணி துணிகளுக்கு சோப்பு போட்டு கல்லில் துவைப்பாள். பிள்ளைகள் இருவரும் மரத்தடியில் விளையாடிக் கொண்டிருந்தனர். சுந்தரம் மிகவும் இருட்டான பிறகுதான் குளிக்கப் போவான். அவன் உலகத்திற்கு பயந்து வாழ்வது போல தென்படுகிறது. ஒரு நாளும் அவன் மனைவியுடன் அல்லது பிள்ளைகளுடன் பொது கிணற்றுக்கு சென்றதில்லை. ஆண்களுக்கும் பெண்களுக்கும் பொது கிணற்றில் வெவ்வேறாக இரு இடங்கள் ஒதுக்கி வைத்திருந்தாலும் சுந்தரம் இரவில் தனியாகத்தான் குளிக்கச் செல்வான். அவன் குளிர்ந்த நீரில் தனது உடலில் இருக்கும் வியர்வையை சோப்புப் போட்டு கழுவிக்கொண்டு, குளித்து சோப்பு வாசனையுடன் இரவில் தன்னிடம் வரும்போது தங்கமணியும் இரவுவேளையில் எழுந்துவிடுகிறாள். இரு பிள்ளைகளும் நித்திரை கொண்ட பிறகு அவர்கள் இருவரும் ஆனந்தமான வாழ்க்கை நடத்துகிறார்கள். இருவரும் அந்த இரவு நேரத்தில் தங்களது எல்லா கஷ்டங்களையும் மறந்து விடுகிறார்கள். குடிசைக்குள் வீசும் நாற்றம், ஆற்றின் சேற்று நாற்றமெல்லாம் அவர்களது ஆனந்த உலகத்திற்கு அப்பால் இருந்தது.

ஒரு நாள் பகல் நேரம் சுந்தரம் இரண்டாம் முறையாக கோணி, உறைகள் போத்தல்கள் சேகரித்துக்கொள்ள சென்ற நேரத்தில், தங்கமணி குடிசைக்குள்ளே பத்திரிகைகள் மூட்டைகளாக கட்டிப் போடத் தொடங்கினாள். பிள்ளைகள் இருவரும் ஆற்றங்கரையில் பேசிக் கொண்டிருக்கும் சத்தம் மெதுவாக அவளுக்குக் கேட்கிறது. அவர்கள் சிரிப்பதையும் பேசும் குரல்களையும் கேட்கும் வரை அவள் உள்ளத்திற்கு பயமில்லை. அவர்கள் குரல்களைக் கேட்கா விட்டால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனே உற்றுக் கவனிப்பாள். மீண்டும் அவர்களின் குரலைக் கேட்கும்போது அவள் சுறு சுறுப்பாக வேலை செய்கின்றாள்.

அன்று ஒரேயடியாக பிள்ளைகள் இருவரின் குரல்கள் நின்றுவிட்டது. பிறகு யாரோ ஒருவர் பெரும் குரலில் ஏதோ சொல்வதை அவள் கேட்டாள். அது ஒரு தாளத்திற்கு பாடிய கவிதை போல இருந்தது. சற்று நேரத்தில் இரு பிள்ளைகளும் பெரும் கூக்குரலுடன் அழுதுகொண்டு குடிசைக்குள்ளே ஓடி வந்து தங்கமணியின் உடலோடு ஒட்டிக் கொண்டனர்.

வெளியே தொடர்ந்தும் கவிதை சத்தம் கேட்டது. "அளந்து பார்த்துத் தானா மகனே நான் உனக்கு பால் தந்தேன்" என்று.

பிள்ளைகள் இருவரும் அவள் பின்னால் மறைந்து கொள்ள தங்கமணி வெளியே வந்தாள். ஆற்றங்கரையில் வயதான முதுகு குனிந்த கிழவி ஒருத்தி நின்று கொண்டிருந்தாள். அழுக்குப் படிந்த வெள்ளை துணி ஒன்றை கட்டிக் கொண்டிருந்த அவள் ஜாக்கெட் ஒன்றை அணிந்து இருந்தாள். அவள் நிறம் சற்று வெள்ளையாக இருந்தது. ஒரு கையில் பையும் மறுகையில் ஊன்றுகோலும் இருந்தது. அவளது வெள்ளை முடியை ஒரு சிவப்பு நிறத்துவாய் அரைவாசி மறைத்துக்கொண்டு இருந்தது.

"என்ன வேண்டும்?" தங்கமணி கேட்டாள்.

"பசிக்கிறது அம்மா" என்று அந்தப் பெண் கூறினாள்.

"காலையிலும் சாப்பிடவில்லை" என்றாள்.

இவ்வளவு பெரிய வீடுகள் அக்கம் பக்கத்தில் இருந்தும் இந்த பெண் இந்த ஏழைகள் இட்த்திற்கு வந்தாளே என தங்கமணி யோசித்தாள்.

"வாங்க! வாங்க" என்று அவள் கூறினாள். காலையில் சுட்ட ரொட்டி ஒன்று மீதி இருந்தது.

பிச்சைக்காரி அடுப்பு இருக்கும் பகுதிக்கு வந்து கொண்டிருக்கும் போது, தங்கமணி ரொட்டித் தட்டை குடிசைக்கு வெளியே எடுத்துக் கொண்டு வந்தாள். கிழவி பலகை மீது உட்கார்ந்து கொண்டாள். பிறகு தண்ணீர் கேட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஜானகி கொஞ்சம் தண்ணீர் கொண்டு வாம்மா" தங்கமணி கேட்டபடி அவள் சிரட்டை ஒன்றில் தண்ணீர் கொண்டுவந்து கிழவிக்குக் கொடுத்தாள்.

"மிகவும் புண்ணியம் கிடைக்கட்டும். சீதேவியான பிள்ளை", என்று கூறிய கிழவி இரு கைகளினாலும் குளர்ந்த நீரை எடுத்துக் குடித்தாள்.

தங்கமணி சீக்கிரமாக தேங்காய் துருவி வெங்காயம் வெட்டி, அதில் மிளகாய் கொஞ்சம் போட்டு, எலுமிச்சம்சாறு கலந்து சம்பல் கொஞ்சம் செய்தாள்.

கிழவி மிகவும் ஆவலுடன் அந்த ரொட்டியை சம்பலுடன் சேர்த்து சாப்பிட்டாள்.

பின்னர் "நான் கவிதை பாடும்போது இந்த பிள்ளை பயந்து ஓடினாள்" என்று அவள் சொன்னாள்.

"நான் கவிதை பாடியது பிள்ளைகளை பயமுறுத்த அல்ல" அவள் சிரட்டையில் இருந்த மிஞ்சிய தண்ணீரினால் கைகளையும் வாயையும் கழுவிக்கொண்டு தங்கமணிக்கும் ஜானகிக்கும் பெரிதும் நன்றி கூறினாள். ஆனால் இவை ஒன்றும் அவர்களுக்கு புரியவில்லை. இரு பிள்ளைகளும் தாயுடன் தொத்திக்கொண்டு எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்தனர்.

"என் பெயர் சுதுஹாமினே" கிழவி சொன்னாள்.

உங்கள் மகளின் பெயர் என்ன?

"ஜானகி"

ஆ.... தம்பியின் பெயர்?

"இரங்கநாதன"

"அப்பா! அழகான பெயர். எனக்கும் அந்த நாளில் நல்லதொரு பெயர் இருந்தது. இப்போது நான் சுதுஹாமினே! நானும் அந்த நாளில் அத்தனகலையில் பெரியதொரு வீட்டில் வாழ்ந்தேன். சுதுஹாமினேவின் கண்களில் கண்ணீர் பெருகியது. எனக்கும் பிள்ளைகள் இருந்தார்கள். மகள் கள்ளத்தனமாக திருமணம் செய்து கொண்டாள். மகனின் மனைவி என்னை வெளியே துரத்தி விட்டாள்".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜானகி சுதுஹாமினேவுக்கு மீண்டும் ஒரு சிரட்டையில் தண்ணீர் கொடுத்தாள்.

இந்த பிள்ளைக்கு போகும் இடமெல்லாம் நன்மை ஆகட்டும். பல சுகங்கள் கிடைக்கட்டும் மனித சுகங்கள், தெய்வ சுகங்கள் பெற்று கடைசியில் நிர்வாண சுகம் கிடைக்கட்டும்.

சுதுஹாமினே கண்களில் கண்ணீர் கலங்க "ஆம்! எனக்கும் வீடு, வாசல் இருந்தது. ஆனால் இப்போது நான் பன்சாலை அருகில் தான் இருக்கிறேன். இரவில் கிராம-சபை மண்டபத்தில் தங்குவேன். என்ன செய்வது மகளே! கருமம் தான்".

"சுதுஹாமினே! வேண்டிய நேரத்தில் இங்கு வாருங்கள்" என்று தங்கமணி கூறினாள். "நான் சோறு கொஞ்சம் தருவேன்".

"உங்களுக்கு புண்ணியம் கிடைக்கட்டும். இன்று பகல் பன்சாலையில் மிஞ்சிய உணவு ஏதும் இருக்கவில்லை. வேறு சமயங்களில் எனக்கு அங்கு சோறு கொஞ்சம் கிடைக்கும். நான் வருகிறேன்."

"போகும் இடமெல்லாம் புண்ணியம் கிடைக்கட்டும்" எனக்கூறிய சுதுஹாமினே ஆற்றங்கரை வழியாக போகத் தொடங்கினாள். இதன் பின்பு வெகு காலம் வரை அவர்கள் சுதுஹாமினேயைப் பார்க்கவில்லை.

வாழ்க்கை முன்னர் இருந்தது போலவே செல்லத் தொடங்கியது. ஆனால் எதிர் பாராத வகையில் யாவும் மிக வேகமாக நடக்க ஆரம்பித்தன.

அரசாங்கத்தில் பெரும் மாற்றம் ஏற்பட்டது. புதியதொரு பிரதமரின் தலைமையில் புது யுகம் ஒன்று தொடங்குகிறது என்று சொல்லக் கேட்டேன். எல்லாம் மக்கள் மயமாகின. அரசின் மொழியாக சிங்கள மொழியாயிற்று.

தெருவுக்கு வந்த சுந்தரம் வீதியில் சென்று கொண்டிருந்த புதிய பஸ் வண்டி ஒன்றைக் கண்டான். இவ்வளவு தினங்களாக ஓடிய வண்டியை விட இது எவ்வளவு நல்லது. சிவப்பு நிறத்திலான வண்டியில் ஒரு பக்கத்தில் இ.போ.ச என எழுதப்பட்டிருந்தது. பஸ் வண்டி காலியாக இருந்தது. அது பயிற்சி தருவதற்கு பாவிக்கும் வண்டியைப் போல தெரிகிறது.

பிறகு அவன் ஒரு வண்டியில் ஸ்ரீ எழுத்து எழுதியிருப்பதைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டான். இவ்வளவு காலம் வண்டிகளில் CN, EN என எழுதப்பட்டிருந்தன. மாற்றம் தோன்றுவது வரவேற்கத் தக்கதுதான். ஆனால், அந்த மாற்றம் தனக்கு இவ்வளவு தூரம் பாதிப்பு ஏற்படுத்தும் என சுந்தரம் கனவிலும் நினைத்திருக்க மாட்டான்.

நுகேகொட சந்தியில் ரவுடிகள் சிலர் அவனை சுற்றி வளைத்துக் கொண்டனர்.

"அடே தெமலா!" என கூறிய ஒருவன் அவன் தலையில் இருந்த வட்டியை கீழே இழுத்துப் போட்டான். "பற தெமலா" என்றான்.

ஐயா! சாமி, சாமி, வேண்டாம் அடிக்க வேண்டாம் ஐயோ! சுந்தரம் எவ்வளவு சொன்னாலும் ரவுடிகள் அதை ஒன்றும் கேட்ட பாடில்லை. அவன் அவர்களுக்கு வேறு ஒரு மனித உருவமாக தெரிந்தான்.

"வேனா வேனா வேனா ஆண்டவனே"

"உங்கள் ஆட்கள் எங்கள் ஆட்களை அங்கே கொல்லுகிறார்கள்."

"உங்களையெல்லாம் நாம் கொன்றுவிடுவோம்."

"கொடுப்போம் சாப்பாடு!"

"அவனை இங்கே இழுங்கள்".

"ஏய் அந்த பவுசரை நிறுத்து!"

பெரிய எண்ணை பவுசர் பிரேக் போடும் சப்தம் கேட்டது. சுந்தரம் சற்று நேரத்திற்கு கண்களை மூடிக் கொண்டான். அவனுக்கு தன்னைச் சுற்றிக் கொண்டிருக்கும் ரவுடிகளின் வியர்வை, நாற்றமெல்லாம் கலந்து அவர்களது ஈரல் உள்ளே செல்வது போல தோன்றியது. அவர்கள் சொல்வது ஒன்றும் அவனுக்கு கேட்கவில்லை. ஒரே சத்தமாக இருந்தது.

ஒரு சிலரின் மடித்த கைகளால் தொப் தொப் என்று வேகமாக சுந்தரனின் மெல்லிய உடலில் அடி விழ ஆரம்பித்தது. அவன் சத்தமிட்டு அழுதான்.

"ஐயோ! வேண்டாம், மாத்தயா! வேண்டாம். நான் அப்பாவி மனிதன்!"

"போடு இவனுக்கு!"

பெரிய அடி விழுகின்ற சத்தத்தைக் கேட்டு வேதனையுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்களை திறந்த சுந்தரத்துக்கு பவுசரின் பின்னால் குழாய் ஒன்று பொருத்தப்படுவதைக் கண்டான். சூரிய வெளிச்சம் கடுமையாக இருந்தது. அவன் இரு கண்களையும் மூடிக் கொண்டான். அவனுக்கு எல்லாமே சிவப்பு நிறமாகத் தோன்றியது.

சுந்தரத்துக்கு தங்கமணி, இரு பிள்ளைகளின் ஞாபகம் வந்தது. "ஜானகி!" "ரங்கா!" வரண்டு போன குரலில் அவன் அவர்களின் பெயர்களை சத்தமாக அழைத்தாலும், எவருக்கும் அந்த சத்தம் கேட்கவில்லை. அவர்கள் அவனை தரையில் போட்டு இழுத்துக்கொண்டு போகும்போது உடம்பெல்லாம் காயமடைந்தது. அவன் வாய்க்கு அவனது இரத்தச் சுவை தெரிந்தது. நெற்றி குளிராக மாறியது. தலையிலிருந்து கொட்டிய இரத்தத்தினால் அவன் கழுத்தும், சட்டையும் நனைந்து போனது.

நரிகளுக்கு மத்தியில் சிக்கிக் கொண்ட மான் குட்டியைப் போல, அவன் கைகால்களை உதறினான். திடீரென உடம்பெல்லாம் குளிர்ந்து போவதாக அவனுக்குத் தோன்றியது. பெட்ரோல் வாசனை அவனுடைய தலையை மூடிக்கொண்டது. சுந்தரம் எழுந்து நிற்க முயற்சித்தான். அவனுடைய இரத்தத்தை கழுவிக்கொண்டு பெட்ரோல் ஓட ஆரம்பித்தது. அவன் இருமினான். வேறு ஒன்றும் அவனால் சொல்ல முடியாமல், அவன் தொடர்ந்தும் இருமினான். இப்போது கண்களுக்கு வேதனை தெரிந்தது. கைகளும், கால்களும் நடுங்கின.

"ஆண்டவனே! ஆண்டவனே!" என மனதிலேயே முணுமுணுத்தான்.

சுந்தரத்தின் நாக்குக்கு மட்டுமல்லாமல், வயிற்றுக்கும் பெற்றோல் நாற்றம் தெரிந்தது. எங்கேயோ இருந்து வந்த நெருப்பினால் அவன் தலை தீ பற்றிக் கொண்டது. பெட்ரோல் ஓடிய வழியில் தீப்பற்றிக் கொண்டு பின்னர் அவனது முகத்தையும், கழுத்தையும் பற்றிக் கொண்டது. ஒரு நிமிடத்தில் அவனது துணிகள் எரிந்து சாம்பலாகின. சுந்தரம் கீழே விழுந்தான். அவனது உடல் சுருங்கிக் கொண்டது.

புதுமையான கூச்சல் சத்தமும் சிரிக்கும் சத்தமும் அவனுக்கு கேட்டது. தீப்பற்றிக் கொண்டு எரிந்துகொண்டிருந்த உடலில் "சிரிஸ்" என சத்தம் கேட்டது. உடலில் உள்ள ஒவ்வொரு துவாரத்தில் இருந்தும் இரத்தம் வெளியே வந்திருந்தது. சற்று நேரம் வரை சிவப்பு நிறமாய் இருந்த அவன் உடல் இப்போது கறுப்பாக மாறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கும் ஒரே சத்தம். கடலின் அடியிலிருந்து தோன்றும் சத்தம் "சம்சாரம்! சம்சாரம்! தங்கமணி என்னுடைய சம்சாரம்!" ஒரு நொடி நேரத்திற்கு தங்கமணியின் கண்களை கண்டு கொண்டு சுந்தரம், எல்லா வேதனைகளையும் மறந்து விட்டான். அவனுடைய கால்கள் இரண்டும் எரிந்து பின்னர் சுருங்கிக் கொண்டன. எல்லாம் இருளாய் தெரிந்தது. சத்தம் குறைந்துகொண்டு போக, அதன் பின்னர் எல்லாம் அமைதியாகி விட்டது.

அப்பா வரும்வரை பாடசாலையின் வாசற்படியில் காத்துக் கொண்டிருந்த ஜானகிக்கு பொறுமை இல்லாமல் போய்விட்டது.

> "அப்பா இங்கே வாங்க, அப்பா இங்கே வாங்க" என்று அவள் தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள். "சுறுக்கா வாங்க! சுறுக்கா வாங்க" என்று கூறிக் கொண்டாள்.

மற்ற பிள்ளைகள் எல்லாரும் இந்த இடத்தைவிட்டு சென்றிருந்தனர். மைதானத்தில் வண்டி ஒன்று நிறுத்தப்பட்டிருந்தது.

இனம் தெரியாத ஒருவன் அவளிடம் வந்து ஏதோ கேட்டான். ஜானகி திடுக்கிட்டாள். புத்தகங்களைக் கொண்ட பேக்கை தனது மார்போடு சேர்த்து பிடித்துக் கொண்டு வீதிவழியே ஓடத்தொடங்கினாள். மற்ற நாட்களில் அப்பாவுடன் சேர்ந்து வீதியில் இடது பக்கமாக நடப்பாள். அவள் அந்த பக்கமாக ஓடிக்கொண்டிருந்தாள். இந்த மாதிரி தொடர்ந்து சென்றால் வீடு போய் சேரலாம் என அவள் நினைத்தாள். சிலவேளை அப்பாவை வழியில் சந்திக்கக்கூடும். புத்தக பேக்கை கையில் பிடித்துக்கொண்டு, கடும் வெயிலில் வியர்வை சிந்த ஓடினாள். அங்குமிங்குமாக சென்றுகொண்டிருந்த எவரையும் அவள் சரியாகக் கவனிக்கவில்லை.

நுகேகொட சந்திக்கு வந்த அவள் இன்னும் சிலருடன் வீதியைக் கடந்தாள். "கம்சபாவ, தெல்கந்தவுக்கு" இன்னும் இரு சந்திகளைக் கடந்து செல்ல வேண்டும்.

"அப்பா! அப்பா! அம்மா! அம்மா!" என ஜானகி தனது மனதிலே சொல்லிக் கொண்டாள்.

பெரியதொரு எண்ணெய் பவுசர் அவள் இருந்த வழியாக வந்தது. யாரோ அவளுடைய கையைப் பிடித்து நிறுத்தி "அப்பா இல்லையா? அப்பா இல்லையா?" என்றார்கள். ஜானகி அந்த கையை உதறித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தள்ளினாள்.

பத்திரமாக போங்க பிள்ளை என்றார் அவர். பெட்ரோல் ஷெட் ஒன்றை கடந்து சென்ற அவள், அங்கே பேசிக்கொண்டிருந்த சிலரைக் கண்டாள். சற்று நேரத்திற்குள் அவளுக்கு இங்கு ஏதோ அசம்பாவிதம் ஒன்று நடந்துள்ளதாக தெரிந்தது. பெட்ரோல் ஷெட்டுக்கு முன்னால் தரையில் தார் பாதையில் பெரிய கறுப்பு நிறமான பொருள் ஒன்று இருந்தது. அவள் அதைத் தாண்டி ஓடினாள்.

"அப்பா! அப்பா! அம்மா! அம்மா!"

இன்னும் கொஞ்சம் தூரம்தான். அம்மா என்னை ஏசுவாள். தனியாக வந்ததற்கு அம்மா என்னை ஏசுவாள். அப்பா எங்கே?

"மே கஸே பொஹொ பெனி தொடம் திபே"

இந்த மரத்தில் பல ஆரஞ்சு பழங்கள் இருக்கின்றன.

"ஜானகி"

"அம்மா!"

எங்கேயோ இருந்து வந்த அம்மா ஜானகியை தடுத்து நிறுத்தினாள். அம்மா தம்பியை இடுப்பில் தூக்கி வைத்திருந்தாள்.

அம்மா தம்பியை கீழே வைத்து ஜானகியை அணைத்துக்கொண்டு அழத்தொடங்கினாள்.

தம்பியும் அழத்தொடங்கினான். ஜானகியும் தன்னை அறியாமலேயே அழுதாள்.

"என்ன அம்மா? என்ன நடந்தது?"

"ஐயோ ஜானகி அப்பா இல்லை!" என சொல்லிக்கொண்டு அம்மா அழுதாள்.. அம்மாவின் கண்களிலிருந்து கண்ணீர் பொழிந்தது.

அம்மா கையில் இருந்தவற்றை ஜானகியிடம் கொடுத்தாள். ஜானகி குடிசை வாசனை கலந்த அந்த பையைத் தன்னோடு அணைத்துக் கொண்டாள். ரங்காவை தூக்கிக்கொண்டு, தங்கமணி, மற்ற கையினால் ஜானகியை பிடித்துக்கொண்டு கம்சபா பக்கத்தை நோக்கி நடந்து சென்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் பன்சாலையில் போதிமரத்தடியில் நின்று கொண்டனர். பகல் நேரமாக இருந்ததினால் அங்கே யாரும் இருக்கவில்லை. மேலே காகங்கள் கரையும் சத்தம் மட்டும் கேட்டது. போதிமரத்தின் முன்னால் உட்கார்ந்து கொண்ட தங்கமணி தன் இரு கைகளால் முகத்தை மூடிக் கொண்டாள். இரங்கா மணல் தரையில் கோடுகளை கீறிக் கொண்டிருந்தான்.

ஜானகி கையில் இருந்த பையை அவிழ்த்துவிட்டு பார்த்தாள். மற்ற பொருள்களுடன் அங்கே இரு ரொட்டிகள் இருந்தன. ஜானகி பசியை தாங்கிக் கொள்ள முடியாமல் ரொட்டியை மெல்ல மெல்ல விரல்களால் உடைத்து சாப்பிட்டாள். தங்கமணி அழுகையை நிறுத்தாமல் மேலும் அழுதுகொண்டே இருந்தாள். உடுத்திக் கொண்டிருந்த புடவையால் தலையையும், முகத்தையும் மூடிக்கொண்டாள். ஜானகி தம்பிக்கு ரொட்டியை ஊட்டி விட்டாள்.

மற்ற ரொட்டியையும் சாப்பிடும் அளவுக்கு பசியாய் இருந்தாலும், அம்மாவையும் அப்பாவையும் நினைத்துக்கொண்டு அதைப் பையில் போட்டு விட்டாள். பிறகு அவள் தண்ணீர் குழாயை தேடிப் போனாள். சிறியதொரு வெள்ளை நிற துண்டால் நன்கு வடிகட்டி வந்த தண்ணீரை இரு கைகளாலும் எடுத்து குடித்துவிட்டு தமது தாகத்தை நீக்கிக்கொண்டாள். அம்மா மணல் தரையிலிருந்து சீக்கிரம் எழும்புவதாக தெரியவில்லை. தனது சப்பாத்தை கழற்றி பையில் போட்டுக் கொண்டு ஜானகி பன்சாலை விஹாரைக்குள்ளே சென்றாள். உள்ளே குடிகொண்டிருந்த இருளில், பல பூக்களின் வாசனையும் சந்தன வாசனையும் அவளை உள்ளே அழைப்பது போல இருந்தது. அவள் உள்ளே செல்லும் படிக்கட்டுகளில் ஏறினாள். விஹாரையின் தரையில் மினுங்கிக் கொண்டிருந்த செங்கற்களின் குளிர்தன்மையை அவள் கால்கள் உணர்ந்தன. மண்டபத்தின் மத்தியில் சிவப்பு, மஞ்சள், நிறத்திலான மிகப்பெரிய புத்தர் பகவானது சிலை பெரிய திரைக்கு பின்னால் தென்பட்டது. அதன் முன்னால் மேசையின் மீது பலவிதமான பூக்கள் வாடிப்போய் காணப்பட்டன. மேலே பார்த்த ஜானகிக்கு கூரை மிக உயரத்தில் இருப்பது போல தெரிந்தது. அங்கே மேகங்களுக்குள்ளே தெய்வங்கள் பூ மாலைகளை கையில் ஏந்திக் கொண்டிருப்பதைக் கண்டாள். சில கடவுள் சிலைகள் ஆகாயத்தில் உண்மையாக நடமாடுவது போல இருந்தது.

ஜானகி அந்த இடத்தை விட்டு இன்னொரு வாசல் படி வழியாக வெளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டபத்திற்கு வந்தாள். இந்த மண்டபத்தின் இரு பக்கங்களிலும் புத்த மகானின் வாழ்க்கை வரலாற்றில் பல சம்பவங்களை காட்சிகளாக சித்தரிக்கப்பட்டிருந்தது. சித்தார்த்தரின் பிறப்பு, அரண்மனையை விட்டு செல்லுதல், கந்தக என்ற குதிரை கொண்டு நேரஞ்சனா நதியைக் கடத்தல், கடும் தவஞ் செய்தல் ஏழு வாரங்கள் கழித்தல், பால் பிட்டு தானம் வழங்குதல்.....

அங்கே இருந்து இன்னொரு கதவின் வழியாக நடந்து சென்ற அவள் இருள் சூழ்ந்த இன்னுமொரு மண்டபத்திற்கு வந்தாள். சற்று இருளாக இருந்த அந்த மண்டபத்தில் மேலும் பல சிலைகள் இருந்தன. மனதில் சற்று பயமாக இருந்தாலும் அவள் முன்னே நடந்து சென்றாள்.

மண்டபத்தின் கடைசியில் சிலைகள் இருந்த இடம் மிகவும் இருட்டாக இருந்தது. மேலே மாணிக்க கற்களால் அலங்கரிக்கப்பட்ட நாற்காலியில் புத்த மகான் அமர்ந்து கொண்டிருந்தார். கீழ்ப்பாகத்தில் நாகர்கள், இயக்கர்கள் சிலைகள் இருந்தன. போருக்கு தயாரான நிலையில் இருந்த அவர்களின் கைகளில் தடிகள், வாள்கள் உட்பட பல ஆயுதங்கள் இருந்தன. கறுப்பு நிறமான உடலுடன் இருந்த இயக்கர்களின் சிவப்பு நிற கண்களையும் அவர்களது சுருண்ட தலை முடியையும் கண்ட ஜானகி பயங் கொண்டாள். அவைகள் உண்மையிலேயே அவளுக்கு பயத்தைத் தரக்கூடிய வகையில் இருந்தன. தடிகளையும் ஆயுதங்களையும் கையில் ஏந்திக் கொண்டிருந்த அவர்கள் உண்மையிலேயே உயிரோடு இருப்பது போல காணப்பட்டார்கள். ஜானகிக்கு சற்று நேரத்திற்கு இது புதுமையாக இருந்தது. அவளின் தொண்டை வரண்டு போயிற்று. சிவப்பு நிற கண்கள் அவளையே பார்க்கின்றது போல ஒரு உணர்வு. ஜானகி கூச்சலிட்டுக்கொண்டு வெளியே ஓடினாள்.

அப்படி ஓடி வந்த அவள் சிறிய பௌத்த துறவி ஒருவரோடு மோதிக்கொண்டு நின்றாள். காவி உடை அணிந்து கொண்டிருந்தவரின் சொல்லைக் கேட்காமல் அவள் படிக்கட்டுகளில் இறங்கி போதி மரத்தடியின் நிழலைத் தேடிச் சென்றாள்.

காகங்கள் கரையும் சத்தம் தொடர்ந்து கேட்டது. சூரிய வெளிச்சத்தினால் காய்ந்து போயிருந்த போதி மரத்தின் இலைகள் "சரசர"வென சத்தத்துடன் காற்றில் அசைந்து கொண்டிருந்தன. தங்கமணி அதிக களைப்பினாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவலையினாலும் தூங்கிக் கொண்டிருந்தாள். இரங்கநாதன் இன்னும் மணல் தரையில் கீறிக் கொண்டு அவனது உலகத்தில் சஞ்சரித்துக் கொண்டு இருந்தான்.

ஜானசி தம்பியை தன்னோடு அணைத்துக் கொண்டாள்.

“அக்கா நல்லது அக்கா நல்லது”

“தம்பி ஆகாது. தம்பி ஆகாது”

இரங்காவை அழவிடாமல், அவனைத் தாலாட்டி, பிறகு ஜானசி அவனை கூட்டிக்கொண்டு அம்மா இருந்த இடத்திலே படுத்தாள். மாலை நேரம் நெருங்கிக் கொண்டிருந்த வேளையில் தங்கமணி கண்களைத் திறந்தாள். இவ்வளவு நேரம் அவள் பன்சாலை சுவர் அருகாமையில் நித்திரையில் இருந்தது பசி மயக்கத்தினால் தான் என்று ஜானசி உணர்ந்தாள். யாரோ ஒருவனின் குரலைக் கேட்டு கண்களைத் திறந்த அவளுக்கு மணல் தரையை பெருக்கிக் கொண்டிருந்த ஒரு கிழவியின் உருவம் தெரிந்தது. பிறகு அருகில் தூங்கிக் கொண்டிருக்கும் தன் இரு பிள்ளைகளையும் கண்டாள். இருவரின் நெற்றியிலும் அவள் காலையில் வைத்த பொட்டு இருந்தது. மீண்டும் பயம் அவள் உள்ளத்தைத் தாக்கவே ஜானசியின் நெற்றியில் இருந்த பொட்டை துடைத்து விட்டாள். ஜானசி கண்களை திறந்து எழுந்து விட்டாலும் நிலத்தில் இன்னும் சாய்ந்து கொண்டிருந்தாள். தங்கமணி இரங்காவின் நெற்றியிலிருந்த பொட்டையும் துடைத்தாள். ஆனால் பிள்ளை எழுந்திருக்கவில்லை. “எழும்பி என் கூட வாங்க” என கூறிய தங்கமணி தான் அணிந்திருந்த ஆபரணங்களை கழற்றி ஒரு பொட்டலமாக கட்டினாள். மகனைத் தூக்கிக் கொண்ட அவள் ஆபரண பொட்டலத்தை ஜானசியிடம் கொடுத்தாள். தரையை பெருக்கிக் கொண்டிருந்த பெண் சிறிது நேரம் அவர்களை பார்த்துக் கொண்டு தலையை ஆட்டினாள். அவளைக் காணாதவாறு தங்கமணி இரு பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு பன்சாலையை விட்டு கிழம்பினாள்.

அப்போது இருள் எல்லாவிடங்களிலும் சூழ்ந்து கொள்ள ஆரம்பித்தது.

அம்மா எனக்கும் பசி இரவு உணவு இல்லையா? ஜானசியின் குரலை கேட்காதது போல இருந்த தங்கமணிக்கு இப்போது மகனின் அழுகை சத்தம் கேட்டது. அழ வேண்டாம் அழ வேண்டாம் என தங்கமணி மகனுக்கு ஆறுதல் கூறினாள்.

தங்கமணி தானாகவே புகையிரத பாதை பக்கமாக திரும்பினாள். அவள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்தில் எப்படியாவது வீட்டுக்கு போக வேண்டும் என்ற எண்ணம்தான் இருந்தது. "கடவுள் புண்ணியத்தினால் சுந்தரம் குடிசைக்கு வந்திருந்தால்"? என அவள் நினைக்கிறாள்.

தலைக்கு மேலே மின்சார விளக்குகள் அரைகுறையாக எரிந்து கொண்டிருக்கின்றன. இன்று பகல் நடந்தவற்றை நினைக்கும்போது தங்கமணிக்கு அது ஒரு கனவாய் பட்டது. அவள் அழ ஆரம்பித்தாள்.

பொதுக் கிணற்றின் அருகாமையில் சென்று கொண்டிருந்தபோது சல சல வென்ற தண்ணீர் சத்தம் கேட்டது. சிலர் கிணற்றருகே தமது களைப்பை போக்கிக் கொள்ள குளிக்கும் சத்தம் தான் அது.

"அம்மா குளிப்போமா?" என ஜானகி வழக்கம் போல கேட்டாலும் தங்கமணி அதைக் கேட்காதது போல நடந்தாள்.

"அம்மா இரவு சாப்பாடில்லையா?"

"இது என்ன தொந்தரவு?" தங்கமணி அழுதுகொண்டே சொன்னாள். தன்னுடைய கஷ்டத்தை யாருக்குத்தான் சொல்வது? ஆகாயம் இருண்டு மழை வரும்போல் இருந்தது. ஆற்றங்கரைப் பாதை இப்போது சேற்று நிறமாக காணப்படுகிறது. தங்கமணி பயத்தோடு நடந்து போகின்றாள். ஜானகியிடமிருந்து இப்போது பேச்சு சத்தம் கேட்கவில்லை. அவள் தன் பசியை பொறுத்துக் கொள்ள முடியாமல் பையில் இருந்த ரொட்டியை எடுத்து கொஞ்சம் கொஞ்சமாக சாப்பிட்டாள்.

சற்று தூரம் சென்ற பிறகு அவர்களுக்கு மின்கம்ப வெளிச்ச ஒளியில் ஒரு பழகிய முகம் தேவதை போல தென்பட்டது.

"சுது ஹாமினே?"

"ஆ.. இது என் சிறிய பெண்தானே?" என்று சொல்லிய சுதுஹாமினே ஜானகியின் மோவையைத் தடவினாள்.

"ஐயோ சுது ஹாமினே" தங்கமணி அழத்தொடங்கினாள். "எனது கணவன் சுந்தரம்...."

"ஐயோ கடவுளே! புத்த பகவானே! நான் கேள்விப்பட்டேன். காட்டுத் தீப்போல பரவிய இந்த செய்தியை நானும் கேள்விப்பட்டேன். பாவி மக்கள்!" சுது ஹாமினே சாபமிட்டாள்.

"சுது ஹாமினே – நாங்கள் எங்கள் குடிசையைப் பார்க்கப் போகிறோம்." சுதுஹாமினே மெல்ல கண்களை திறந்துகொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தாள். சொல்ல முடியாத ஏதோ ஒன்று அவள் தொண்டையை அடைத்தது.

நீங்கள் விரும்பினால் எல்லாரும் கம்சபா மண்டபத்திற்குப் போவோம். அங்கே போய் படுத்துக்கொள்வோம். நானும் படுத்துக் கொள்வது அங்கே தான். கம்சபாவின் கூரைக்குக் கீழே இருப்போம்.

மீண்டும் இரவில் அமைதி ஏற்பட்டது. சுதுஹாமினே தலையாட்டிக் கொண்டே "ஐயோ கடவுளே இரவு நேரம் ஆவதற்கு முன் போங்கள் போங்கள் பார்த்து வாருங்கள்."

சுது ஹாமினே மேலும் ஏதோ சொல்லிக்கொண்டு கிணற்றின் பக்கமாகப் போனாள். தங்கமணி ஒரு கையில் மகளைப் பிடித்துக்கொண்டு மறு கையில் இருந்த குழந்தையை மார்போடு அணைத்தவாறு தெல்கந்த சந்தியை நோக்கி நடந்தாள்.

மழை தூறத் தொடங்கியது. சிறிது சிறிதாய் தரையில் விழ ஆரம்பித்தது. தரையிலிருந்து வந்த மண் வாசனை அவர்களின் இருதயத்தை தொட்டது.

எதுவுமே நடக்காதது போல வீதியிலே வண்டிகள் அங்கும் இங்குமாக ஓடிக்கொண்டிருந்தன. ஜானகியின் கையை பிடித்துக் கொண்டு தங்கமணி ஹய்லெவல் பாதையைத் தாண்டினாள். இடது பக்கமாக இருந்த ஆற்றில் மழையின் காரணத்தால் தண்ணீர் நிறைந்தோடியது. அத்தோடு அதில் சேற்று நாற்றமும் கலந்து வீசியது.

குடிசை காணப்பட்ட இடத்தில் தற்பொழுது பொருட்கள் அங்குமிங்குமாக சிதறிக் காணப்பட்டன. அதைக் கண்ட உடனே ஜானகி கூச்சலிட்டு அழுதாள். தங்கமணி உள்ளத்தில் தோன்றிய வேதனை கோபம் கவலை ஆகியவற்றை தடுத்துக்கொள்ளும் பொருட்டு தன் சேலை தலைப்பினால் வாயைப் பொத்திக்கொண்டு தேம்பி, தேம்பி அழுதாள். அவளின் கண்களில் இருந்து வந்த கண்ணீர் துளிகளால் அவளின் ரவிக்கை நனைந்தது.

இரங்கநாதன் பசியோடு அவள் மடியில் தூங்கிக் கொண்டிருந்தான். ஜானகி அங்கு சிதறி இருந்த பொருட்களுக்கிடையில் நின்று கொண்டு என்ன செய்வது என்று தெரியாமல் அங்குமிங்குமாக நடந்தாள். எல்லாம் சாம்பலாகி மழை தூறிக் கொண்டு இருந்தாலும் எரிந்து கொண்டிருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்களில் இருந்து புகை வந்த வண்ணமிருந்தது. சட்டிகள், வளையல்கள் என்பவை காணாமல் போயிருப்பதை அவள் கண்டாள். சுந்தரத்தினால் கட்டியெழுப்பப்பட்ட அழகிய கனவுலகம் இப்போது எரிந்து சாம்பலாகி விட்டதை அவள் கண்டாள்.

பிள்ளையை இறக்கிவிட்டு தங்கமணி பைத்தியகாரியைப்போல ஆவேசத்துடன் பூமியைத் தோண்ட ஆரம்பித்தாள். ஆற்றங்கரையில் குளித்து உட்கார்ந்து கொண்ட ஜானகி, கண்ணீர் நிறைந்த கண்களோடு அம்மாவையே பார்த்துக் கொண்டிருந்தாள். அந்த இருளில் வீசிய சிறிது வெளிச்சத்தில் தங்கமணியின் வெள்ளை நிற சேலை கொஞ்சமாக தெரிந்தது. அவள் ஒரு நாயைப் போல தரையை தோண்டிக் கொண்டிருந்தாள். கொஞ்ச நேரத்திற்குப் பிறகு அவள் கையில் ஏதோ சிக்கியது. அது மண்ணுக்குள்ளே புதைத்து வைக்கப்பட்டிருந்த காசுச் சட்டியாகும். யாராவது பார்க்கிறார்களா? என அங்குமிங்குமாக பார்த்த அவள், சட்டியை வெளியே எடுத்து, அதற்குள்ளே இருந்த ஈரமான மண்ணை கையால் அகற்றி உள்ளே இருந்த பணத்தை சீக்கிரமாக மார்புக்குள்ளே வைத்து மறைத்துக் கொண்டாள்.

"சுந்தரம் உனக்கு புண்ணியம் உண்டாகட்டும், சுந்தரம் உனக்கு புண்ணியம் உண்டாகட்டும" என்று அவள் தொடர்ந்து சொல்லிக் கொண்டே போனாள்.

"ஜானகி வாங்க போவோம், சீக்கிரம்!" ஜானகி தமது புத்தகப்பையையும், இன்னொரு பையையும் மார்போடு சேர்த்து வைத்துக் கொண்டாள். இரங்காவை மீண்டும் இடுப்பில் தூக்கிக் கொண்ட தங்கமணி, ஜானகியின் கையை பிடித்துக்கொண்டு "கம்சபா" பக்கமாக நடந்தாள். வெளியே இருட்டாக இருந்ததினால் அவளுக்கு நிம்மதியாக இருந்தது. ஆனால் மழை தூறல் அவளுக்கு நிம்மதியை தரவில்லை. "சுரு சுரு" என மழை தொடர்ந்தும் பெய்து கொண்டிருந்தது. வீதிகளில் நீரை வீசிக்கொண்டு ஓடும் வண்டிகளின் முடிவும் இல்லை. கம்சபா கட்டிடத்தை சென்று அடையும் வரை தங்கமணி வழியில் எங்கேயும் நிற்கவில்லை. அவர்கள் வரும்வரை சுதுஹாமினே தூங்காமல் காத்திருந்தாள். அவளிடம் அன்று பிச்சை எடுக்கும்போது கிடைத்த சோற்று பார்சல் ஒன்று இருந்தது.

சுதுஹாமினேவின் அருகில் வந்த தங்கமணி அவளிடம் சென்று உட்காரவில்லை. துக்கம் காரணமாக அவள்மேல் போய் விழுந்தாள். அவள் தன் உயிர் பிரிந்து போவது போல் எண்ணிக் கொண்டு அங்கிருந்த சுவரில் சாய்ந்து கொண்டாள். சோறு பார்சலின் வாசனை ஜானகியின் பசியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் தூண்டியது.

"இங்கே வாங்க மகளே" சுதுஹாமினே ஜானகியை தன்னிடத்தில் அழைத்தாள். "பசியாய் இருக்கும் அல்லவா? சாப்பிடுங்கள்" என்றாள்.

ஜானகி சோற்று பார்சலை எடுக்கும் சமயத்தில் தங்கமணி சத்தமிட்டு அழத்தொடங்கினாள். "அழ வேண்டாம் பெண்ணே!" என்று சுதுஹாமினே சொன்னாள். நீங்கள் இந்த பிள்ளைகளுக்காக உங்கள் உயிரை பாதுகாத்துக் கொண்டு போக வேண்டும். நீங்கள் எனக்கு ஒருவேளை சாப்பாடு தந்தீர்கள். நான் அதை மறப்பதில்லை!

யாரோ ஒருவன் கட்டிட வாசலுக்குள்ளே நுழைவதை சுது ஹாமினே கண்டாள். அவன் கையில் மின்சார விளக்கொன்று இருந்தது.

"நீங்கள் இந்த இடத்தில் என்ன செய்கிறீர்கள்"?

"ஆ...... சுதுஹாமினே" என்று கேட்டான்.

"ஐயா இது என் மகள்...."

"அப்படியா இருங்கள் இருங்கள் இன்னும் மழை பெய்துகொண்டிருக்கிறது தானே?" என கூறிய அம் மனிதன் வேறு பக்கமாக திரும்பி நடக்கத் தொடங்கினான்.

"இவ்விடத்தின் காவல்காரன்" சுதுஹாமினே சொன்னாள். "எனக்கு தொந்தரவு இல்லை. உங்களுக்கும் தொந்தரவு இல்லை" அவள் சோறு சாப்பிட்டுக் கொண்டிருந்த ஜானகியின் தலையைத் தடவி விட்டாள். "பிள்ளைக்கு அதிகம் பசியாய் இருக்கிறது போல" "பிள்ளை பாக்கியசாலி தான் என அவள் சொன்னாள்.

"யாழ்ப்பாணம்! யாழ்ப்பாணம்!" தங்கமணி தன் மார்பில் அடித்துக்கொண்டு முணுமுணுத்தாள். "நாங்கள் அங்கே செல்வோம்."

வெளியே தொடர்ந்து மழை பெய்துகொண்டிருந்தது. அதிக காலத்திற்கு பிறகு சுதுஹாமினேக்கு இன்றிரவு தனிமை தோன்றவில்லை. ஆனால் அது இன்று இரவுக்கு மட்டும் தானே என நினைத்து பெருமூச்சு விட்டாள். மறுநாள் காலையில் தங்கமணி இரங்காவைத் தூக்கிக்கொண்டு, ஜானகியை கையோடு அழைத்துக்கொண்டு வீதி வழியாக நடக்கத் தொடங்கினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 2
# லயனல் - அஜித்
## 1960-1964

அண்ணா! அம்மா எங்கே போயிருக்கிறார்! தங்கையின் கேள்விக்கு ஒரேயடியாக பதில் கூற லயனலுக்கு முடியவில்லை.

பத்து வயதாகிக் கொண்டிருக்கும் அவனுக்கு சிலவற்றை புரிந்து கொள்ள முடியும். ஆறாவது வயதில் இருந்த சுனீதாவுக்கு இவையெல்லாம் புரியாத புதிர். சுனீதாவை பெற்றெடுக்க அம்மா ஆஸ்பத்திரிக்கு போனது லயனல் ஞாபகத்தில் இருந்தது. அம்மா, தங்கை சுனீதாவைப் பெற்றெடுத்து வீட்டுக்கு திரும்பி வந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறு வந்த நாள் தொடக்கம் அம்மா தன்னிடமிருந்து தூர விலகியது போல அவனுக்குத் தோன்றியதுதான். வேலைக்காரி லூசியின் மேல் கோபமாக இருந்ததும், அம்மா சொல்படி நடக்காமல் போனதும், அவர்களின் அன்பு கிடைக்காத காரணத்தினால் தானே? என அவன் இப்போது நினைத்தான்.

"இந்த பிள்ளை வளரும் விதம் சரியாக இல்லை". அம்மா அந்த நாளில் அடிக்கடி சொன்ன கதை தான் அது. என்றாவது சிறைக்குப் போய் தான் இவன் கதை முடியப்போகிறது.

இவ்வாறான கதைகளை கேட்ட லயனல் கோபமடைந்து லூசீயின் தலை முடியைப் பிடித்து இழுக்கவும், அவளை கிள்ளவும் இவை போன்ற பல இம்சைகளைச் செய்தான். கடைசியில் இவையெல்லாம் பொறுத்துக்கொள்ள முடியாமல் லூசி, இந்த வீட்டை விட்டு தனது கிராமத்திற்கு போனாள்.

அதன் பிறகு வேலைக்கு வந்த எகிநோனா வயது வந்த ஒரு பெண்ணாக இருந்தமையினால் லயனல் அவளுக்கு தொந்தரவு கொடுக்கவில்லை. மேலும் லூசி வீட்டைவிட்டு கிராமம் செல்ல காரணமாய் இருந்தவன் லயனல்தான் என நினைக்க அவன் அப்பா அவனுக்கு நன்றாக அடித்தார். லயனலின் மனதில் இவையெல்லாம் நிரந்தரமாக தங்கிவிட்டது. லயனலுக்கு இப்போதும் அப்பாவின் மேல் இருப்பது மரியாதையை விட பயமும், கோபமும் தான். தன்னை அடித்த அப்பா தன்மேல் அன்பாய் உள்ளார் என்று எப்படிதான் சொல்ல முடியும்? அம்மாவின் அன்பு தனக்கு அதிகமாக கிடைப்பதில்லை என அவன் நினைத்தான். தங்கை பிறந்த பிறகு அம்மா அவளுக்குத்தான் அதிகம் அக்கறை செலுத்துகிறாள். அம்மா அவளை ஒரு பொம்மையை அலங்கரிப்பது போல அலங்கரிக்கின்றாள்.

முதலில் லயனல் தங்கையின் மேல் வெறுப்பைக் காட்டினான். ஆனால் அவள் சிறிது சிறிதாக வளர்ந்து மழலைச் சொல் பேசும் போது இந்த வெறுப்பு அன்பாக மாறியது. அம்மாவும் அவனுடைய இந்த மாற்றத்தைக் கண்டு அவனைப் பாராட்டினாள்.

"ஆம்! இந்த தங்கையைப் பார்த்துக் கொள்ள நல்ல அண்ணா இருக்கிறார். ஆம்! தங்கையின் கையைப் பிடித்துக் கொண்டு போ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகனே. மகனே நீ தான் இனி அவளைப் பார்த்துக்கொள்ள வேண்டும். என் நல்ல மகன்." இவ்வாறான சொற்களினால் லயனலின் மனம் நிம்மதி பெற்றது. அதனால் அவன் உள்ளத்தில் தங்கையின் மேல் அதிக அன்பு உண்டாயிற்று.

ஆனால், அம்மா மீண்டும் கர்ப்பிணியான பின்பு, தங்கையும், தானும் பகிர்ந்து கொள்கின்ற அன்பை இன்னொருவனுக்கு பகிர்ந்து கொடுக்க வேண்டும் என நினைத்தபோது அவனுக்கு பயம் தோன்றியது. அவன் தன் கோபத்தை தங்கையின் மேல் காட்டினான்.

அம்மா ஆஸ்பத்திரிக்கு ஏன் போனாள் என்பதை அவன் அறிந்திருந்தான். தங்கைக்கு இதை சொல்ல வேண்டியவனாக இருந்தான்.

"தங்கையே அம்மா போனது எங்களுக்கு ஒரு தங்கை அல்லது தம்பி ஒருவனை கொண்டு வரத்தான்."

"அது ஏன்?"

"அப்போது எங்களுக்கு விளையாட இன்னொரு பாப்பா கிடைப்பான் தானே?" எனக்கு தம்பிதான் வேண்டும் என தங்கை சொன்னாள்.

இருவரும் வாசற்படியில் உட்கார்ந்து கொண்டு இவ்வாறு பேசியதை எகிநோனாக்கு நன்றாகக் கேட்டது.

"பாப்பாவை எடுத்துக்கொண்டு அம்மா நாளை அல்லது மறுநாள் வீட்டுக்கு வருவார்."

நீங்கள் இருவரும் நல்ல பிள்ளைகளாக இருந்தால் தான் அவள் தம்பிப் பாப்பாவை எடுத்துக்கொண்டு வருவார்.

"இல்லை என்றால"

"இல்லை என்றால் தங்கை ஒருத்தியை எடுத்துக்கொண்டு வருவார்"

அன்று மாலை அப்பா மிகுந்த யோசனையோடு வீட்டுக்கு வந்தார். தங்கை அப்பாவிடம் சென்று அம்மா எப்போது வருவார்? என்று கேட்டாள்.

"நாளை மறுநாள் மகளே!" என அப்பா தங்கையைக் கட்டிப் பிடித்தபடியே அவளது தலையைத் தடவிக் கொடுத்ததை லயனல் பார்த்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் வெளியே உள்ள அறைக்குப் போனான். அப்பாவுக்கு லயனலை அணைத்துக் கொள்ளும் பழக்கம் இல்லை. அம்மா இன்னொரு பாப்பாவை எடுத்துக்கொண்டு வந்தால் தன் நிலைமை என்ன ஆகும்? லயனல் தனது பாடசாலை புத்தகத்தை எடுத்து பக்கங்களை திருப்பும்போது அவனுடைய கண்களில் இருந்து கண்ணீர் பெருகியது. அம்மா வீடு வந்ததும் தன்னுடைய வாழ்க்கை மேலும் மாற்றமடையும் என்பதில் ஒருவித சந்தேகமும் இல்லை என நினைத்தான்.

நானும், சுநீதாவும் நினைத்தபடியும் எகிநோனா சொன்னபடியும் இரண்டு நாட்களுக்கு பிறகு லயனலின் அம்மா மல்லிகா ஹேனகம "தம்பி பாப்பா" ஒருவனை எடுத்துக் கொண்டு வீட்டுக்கு வந்தாள்.

சுநீதாவைப் போல லயனலும் அம்மா அணைத்தவாறு இருந்த தம்பியை எட்டிப் பார்த்தாள்.

"சிவப்பு நிறமான தம்பிப் பாப்பா" என சுநீதா கூறினாள்.

அம்மாவும் அப்பாவும் சிரிக்கும்போது லயனலும் சேர்ந்து சிரித்தான்.

சின்னத்தம்பி கண்களை இறுக மூடிக்கொண்டும் கை விரல்களை மடித்துக்கொண்டும் இருந்தான்.

"தம்பியின் பெயர் என்ன அப்பா?" லயனல் கேட்டான்.

"அஜித் குசும்சிரி" என அப்பா பெருமையுடன் கூறினார்.

"அஜித்" என அம்மாவும் கூறினாள்.

"அஜித் குசும்சிரி" தங்கையும் அவ்வாறே அவனை அழைத்தாள்: என்ன அழகான பெயர்.

தன்னுடைய பெயர் அதைவிட எவ்வளவோ மாறுபட்டதாக உள்ளது என பத்து வயதுடைய லயனல் சிந்தித்தான். லயனல் இது தனக்கு கிடைத்திருக்கும் பெயர். அப்பாவின் தம்பி பெயராக அது இருந்தது. லயனல் பிறப்பதற்கு முன்பு அவர் திடீரென்று ஒரு விபத்தில் சிக்கி இறந்தார். அவரை நினைவுபடுத்தவே அவன் பெற்றோர் இந்தப் பெயரை அவனுக்குச் சூட்டினர். தன் வயதுடைய ஏனையோருக்கு ஸரத், சுனில், வசந்த, மகிந்த, பந்துல போன்ற பெயர்கள் இருந்தாலும் தனக்கு இவ்வாறான பெயர்கள் இல்லாமல் போனது அப்பாவின் திறமையை ஏனையோருக்கு எடுத்துக் கூறுவதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானா? பிற் காலத்தில் ஒரு நாள் தன்னுடைய பெயரை மாற்றிக் கொள்ள வேண்டும் என அடிக்கடி லயனல் நினைத்தான். "தம்பியின் பெயர் அழகாகவுள்ளது. ஏன் அம்மா எனக்கு சிங்கள பெயர் ஒன்றை வைக்கவில்லை?" என்று ஒரு நாள் லயனல் அம்மாவிடம் கேட்டான்.

"மகனுக்கு தெரியாதா? உன்னுடைய சிறிய அப்பாவின் பெயரைத் தான் மகனுக்கும் வைத்தோம்."

"ஆம் அவர் காலமானவர் தானே. அவரைப்போல நானும் சீக்கிரம் இறந்து போவேன்."

"ஐயோ மகனே, அப்படி சொல்லாதே!"

"அம்மா! நான் வேறு ஒரு பெயரை விரும்புகிறேன்."

"மகனே உனக்கு என்ன பெயர் விருப்பம்?"

"சிசிர, அத்துல போன்ற ஒரு பெயர்."

"நான் அப்பாவிடம் சொல்கிறேன" அம்மா அவ்வாறு சொன்னாலும் அந்த வாக்குறுதியை சிலகாலம் சென்ற பின்பு மறந்து விட்டாள். லயனலும் பாடசாலை வேலைகள் காரணமாக இந்த விஷயத்தை மறந்தே போனான். லயனல் நுகேகொடையில் உள்ள நாலாந்தர பாடசாலைக்குச் சென்றான். அடுத்த ஆண்டிலிருந்து சுநீதா தங்கையும் நுகேகொடை சிறுவர் பாடசாலைக்குப் போவாள்.

லயனல் படிப்பில் கெட்டிக்காரன். வகுப்பில் மூன்றாவது இடத்துக்கு கீழே ஒரு போதும் செல்ல மாட்டான். யாராவது அவனை படித்த பின் என்ன செய்வாய்? என கேட்டபோது, தான் ஒரு டாக்டராக வர விருப்பம் என்று கூறுவான். சில நேரங்களில் அவன் மைதானத்தில் இருந்து பூச்சிகள், வண்டுகள் ஆகியவற்றைப் பிடித்து அவற்றைத் துருவி துருவி ஆராய்ந்து பார்ப்பது அவன் சொல்லியது உண்மையே என பலருக்கு எண்ணத் தோன்றியது.

இதைக் கண்ட அவன் அம்மாவான மல்லிகா ஹேனகம சந்தோஷம் கொண்டாள். தனது மூத்த மகன் பல்கலைக் கழகத்திற்கு சென்று பெரியதொரு மனிதனாக வருவான் என அவள் கனவு காண்கின்றாள். பிள்ளைகளுக்கு சரியாக கல்வி அறிவு வழங்குவதே அவளின் ஒரே நோக்கமாகும். ஆனால் அந்த பிரார்த்தனைகள் எந்த அளவுக்கு சரியாக நிறைவேறப்போகிறது? பிறந்து ஒரு மாதத்தில் அஜித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குசும்சிரியின் உடம்பெல்லாம் "குஷ்டம" உண்டாகியதுபோல் சிவப்பு நிறமான தழும்புகள் தோன்ற ஆரம்பித்தன. டாக்டர் தந்த மருந்தினால் அந்நோய் மேலும் அதிகரித்தது. அவன் இரவும் பகலும் விடாது அழுது கொண்டிருந்தான்.

"இது என்ன? இவனுக்கு என்ன ஆகிவிட்டது?" என்று மல்லிகா அழுதுகொண்டே கேட்டாள்.

அஜித் பாலை கொஞ்சம் தான் குடித்தான். வர வர குழந்தை மெலிவதை அவள் கண்டாள். அந்த சிவப்பு நிற தழும்புகளில் இருந்து சீழ் வந்து கொண்டிருந்தது.

"ஏதாவது பூச்சி கடித்திருக்குமா?" என விக்டர் சந்தேகப்பட்டான். ஒரு முறை சிட்னி அவர்களின் மகனை பூரான் கடித்து இந்த மாதிரி தான் ஆகியது. பூச்சிகடி விஷத்திற்கு டாக்டர் மருந்து கொடுத்தார்.

"கெலமயின் லோஷன் உடலின் வெளிப்புறம் தடவும் ஒரு மருந்து மட்டும் தான். உடலில் உள்ளே தான் விஷம் இருக்கிறது" என விக்டர் தர்க்கம் செய்தான்.

"ஐயா! சிலவேளை இது கண்ணூறு தோஷமாகக் கூட இருக்கலாம்" என ஒரு பக்கமாக இருந்த எகிநோனா கூறினாள். அதையும் பார்க்க வேண்டும். பாலகிரி தோஷத்திற்கு தாயத்து ஒன்றை போட்டால் நல்லது. எலுமிச்சம் காயை மந்திரித்து வெட்டினாலும் நல்லது.

ஹேனகம தம்பதிகள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்தனர். எகிநோனா சொல்வதிலும் உண்மை இருக்கிறது, என அவர்கள் நினைத்தனர். மறுநாள் விக்டரின் சிநேகிதன் ஒருவனின் சிபார்சால் காலியில் இருந்து கட்டடியா ஒருவன் நுகேகொடை வீட்டுக்கு வந்தான். ஜினேரிஸ் மந்திரக்காரன் பூசைக்காக பூத்தட்டுகள் உட்பட எல்லாவற்றையும் தயாரிப்பதை லயனல் மிக ஆசையுடன் பார்த்துக் கொண்டிருந்தான். ஆனால் எல்லோரும் தனது தம்பி மீது செலுத்தும் இந்த அக்கறையையும் அன்பையும் அவன் அவ்வளவாக விரும்பவில்லை.

தம்பி இறப்பது நல்லது என அவன் நினைத்தான். உண்மையில் தம்பி இவ்வாறு குஷ்ட நோயால் கஷ்டப்படுவது தன்னுடைய தீய எண்ணங்களினால் தானோ? என்று அவன் எண்ணாமலும் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாரும் அஜித்தைப் பற்றியே கவனஞ் செலுத்துகிறார்கள். பேசுவதும் அவனைப் பற்றியே. அன்பு காட்டுவதும் பரிதாபப்படுவதும் அவனுக்குத் தான். எல்லாம் என் கர்மத்தினால் தானா? என அவன் எண்ணியதுமுண்டு.

மந்திரகாரன் நூலை மந்திரித்து எலுமிச்சை காய்களை வெட்டி, அஜித்தின் உடலில் எண்ணையைத் தடவி அவன் வீட்டை கெட்ட திருஷ்டிகளில் இருந்து பாதுகாக்க சில காரியங்களையும் செய்துவிட்டு காலி நோக்கிப் புறப்பட்டான். குழந்தைக்கு சற்று சுகம் கிடைத்தது போல தோன்றியது. ஆனால் குஷ்ட நோய் அப்படியே இருந்தது. அஜித் இரவு முழுவதும் அழுவதால், பகல் நேரத்தில் களைப்பினால் நன்றாககத் தூங்குகிறான். மல்லிகா இரவெல்லாம் தூக்கமின்றி தவிக்கின்றாள். இரவில் தம்பியின் அழுகையால் லயனலும் அடிக்கடி தூக்கத்திலிருந்து எழும்புகின்றான்.

"பெரிய தொந்தரவாகி விட்டது" என கூறும் அவன் தலைகாணியில் முகத்தை அழுத்திக் கொண்டு குழந்தையின் அழுகையைக் கேட்காதவாறு படுத்துக் கொள்கின்றான். ஆனால் நித்திரை வரும் வரை லயனலுக்கு இந்த தொல்லைதான். அடுத்த வாரம் களுத்துறையிலிருந்து வைத்தியர் ஒருவர் வந்தார். இந்,த மாதிரியான நோய்களுக்கு இவர் பிரசித்தி பெற்றவராகையால் "குஷ்ட வைத்தியர்" என அழைக்கப்பட்டார்.

நோயாளியைச் சோதனையிட்ட இவர், கருத்தரிப்பு காலத்தில் தாயின் உடலினுள் போன விஷம் இப்போது வெளியே வருகிறது என கூறினார். குழந்தை கர்ப்பத்தில் இருந்த சமயத்தில் அம்மாவினால் உட்கொள்ளப்பட்ட உணவின் காரணமாக இப்படி ஆகியிருக்கலாம் என கூறினார்.

இப்போது மல்லிகாவுக்கு ஏதோ ஒரு நினைவு வந்தது. பிள்ளை பிறக்க இருக்கும்போது வடை சாப்பிடும் ஆசை அவளுக்கு தோன்றியது. இந்த ஆசை எதனால் ஏற்பட்டதென்று அவளுக்குத் தெரியாது. சில துஷ்ட பிள்ளைகள் பிறக்க இருக்கும்போது, அவர்களுக்கு இரத்தம் குடிக்கும் ஆசை ஏற்படுகிறது என குஷ்ட நோய் வைத்தியர் கூறினார். தான் வடை சாப்பிடுவதற்கு ஆசைப்பட்ட காரணம் மல்லிகாவுக்கு தெரியாது. அன்று சாப்பிட்ட வடை விஷமாகி விட்டதா? என அவள் யோசித்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எது எப்படி இருந்தாலும் வைத்தியர் கூறியபடி ஆட்டுப்பால் நெய்யை ஒரு துணி திரியில் நனைத்து கொஞ்சம் கொஞ்சமாக குழந்தையின் வாய்க்குள் ஊட்டினாள். கலாத்துரு கிழங்கு, வேப்பிலை ஆகியவற்றை அரைத்து செய்யப்பட்ட மருந்தை குழந்தையின் உடம்பெல்லாம் பூசினார்கள். குழந்தை நித்திரை கொள்ள வேப்பிலைகளால் ஆன படுக்கை ஒன்றையும் தயாரித்து கொடுத்தனர். மிக நீண்ட நாட்களுக்கு பின்பு குழந்தை அதன்மேல் படுத்து நிம்மதியாகத் தூங்கத் தொடங்கினான்.

இதன்பிறகு மிக சீக்கிரமாக அஜித் குணமடைந்தான். விக்டர், மல்லிகா தம்பதிகள் பெரும் நிம்மதி அடைந்தனர். குஷ்டநோய் வைத்தியருக்கு பல பரிசுகளையும் பாராட்டுகளையும் அனுப்பி வைத்தனர்.

அன்று தொடக்கம், அஜித்துக்கு மற்ற பிள்ளைகளுக்கில்லாத செல்வாக்கும் அன்பும் அவன் பெற்றோர்களிடமிருந்து கிடைத்தது.

"மகனே தம்பியை பார்த்துக்கொள்" என மல்லிகா லயனலுக்கு கூறுகின்றாள். "மகனே நீ ஒரு டாக்டராக வர இருப்பவன் தானே. ஆகவே தம்பியை இப்போதே நன்றாக பார்த்துக் கொள்ள கற்றுக்கொள்" என்றாள்.

சுநீதாவுக்கு தன் தம்பி ஒரு பொம்மை போல காணப்பட்டான். அவள், தம்பி ஆடைகள் அணிந்துகொள்ள உதவி செய்கின்றாள். தரையில் உட்கார்ந்து கொண்டு, குழந்தையை தன் மடியில் வைத்து அவன் தூங்கும்வரை தலையணையில் வைத்து தாலாட்டுகின்றாள்.

"அம்மா இங்கே பார்த்தீர்களா! தம்பி கனவில் சிரிக்கின்றான" என அவள் பலமுறை கூறினாள்.

"நன்றாக கனவுகள் காண்கிறான்" என மல்லிகா கூறினாள். "சிலவேளை முன்னர் இருந்த இடத்தை கனவில் காண்கிறானோ? என்னவோ?" என சொன்னாள். "அம்மா தம்பி எங்கே இருந்திருக்கலாம்"?

"தேவர்கள் உலகத்தில்!"

"அப்படியென்றால் நானும் அண்ணாவும் அங்கே இருந்திருக்கலாம் இல்லையா அம்மா?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆமாம் பிள்ளைகள் எல்லோரும் தேவர்கள் உலகத்தில் இருந்துதான் வந்தார்கள்."

அடுத்த அறையில் படித்துக்கொண்டு இருந்த லயனலுக்கு இவர்கள் பேச்சு கேட்டது. தான் தேவர்கள் உலகத்திலிருந்து வந்தான் என கேட்டபோது லயனலுக்கு சந்தோஷம் ஏற்பட்டது.

பன்சாலை சுவர்களின் உச்சிப் பகுதியில், மேகங்களுக்கிடையில் பூமாலைகளை கையில் ஏந்திக் கொண்டிருக்கும் தேவர்களின் சித்திரங்கள் அவன் நினைவுக்கு வந்தன. தானும் அப்படி மேகத்தில் பறந்திருப்பேனா? தேவ உலகத்தில் வாழ்க்கை எவ்வாறு இருந்திருக்கலாம்? தேவ ஆடைகள், தேவர்களின் உணவு, இது ஒன்றும் அவன் நினைவுக்கு வரவில்லை. கற்பனை செய்யவும் முடியவில்லை. தம்பி தேவ உலகத்திலிருந்து வந்தான் என்றால் உடம்பெல்லாம் குஷ்டம் உண்டாகியது ஏன்? அந்த புண்களை காணும் போது அவன் உள்ளத்தில் பயம் ஏற்படுகிறது.

சில நேரங்களில் தம்பி கனவில் சிரித்துக்கொண்டிருப்பான். சில நேரங்களில் அவனது அழுகின்ற குரலையும் லயனல் கேட்டான். அப்படியென்றால் அவன் தேவ உலகத்தில் ஏதாவது தவறு செய்ததினால் அழுகின்றானா?

ஒருமுறை இதைப்பற்றி லயனல் அம்மாவிடம் கேட்டான்.

"அம்மா தேவர்கள் உலகம் மிகவும் நல்லதென்றால் தம்பி கனவில் அழுவது ஏன்"

மல்லிகா மிக கவனமாக அதற்கு பதில் கூறினாள். "மகனே, அவ்வாறு அழுவது ஏன் என்றால் அங்கே இருந்த சுக போகங்களை விட்டு விட்டு வந்ததினாலே இருக்கலாம் அல்லவா?" "அம்மா நானும் அப்போது அப்படி அழுதேனா?" மல்லிகா சிரித்தாள். "மகனே நீ குழந்தையாக இருந்தபோது அதிகமாக அழுதாய். ஆனால் பால் குடித்த பின்பு படுத்துக்கொள்வாய்."

"அம்மா நான் நல்லவனா?"

ஆம்! என் மகனே, எனக்கு நீ பொன் போன்றவன். அம்மா இவ்வாறு கூறினாலும் தான் அவளிடமிருந்து தூர விலகிவிட்டவன் போல லயனலுக்குத் தோன்றியது. அம்மாவின் அன்பையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனிப்பையும் அதிகமாக பெறுபவன் தம்பிதானே? தங்கைக்கும் புதிய ஆடைகள் கிடைக்கின்றது. அப்பா மிகவும் அன்பு செலுத்துவது தங்கைக்குத் தான். லயனல் சாப்பாட்டுத்தட்டில் உள்ள எல்லா சோற்றையும் சாப்பிடாவிட்டால் அப்பா கோபமடைகிறார். அவன் அதிகம் விளையாடினாலும் அப்பா கோபங்கொள்கிறார்.

“இந்த பிள்ளை இப்படி வளர்கின்றானே?“ என அப்பா அடிக்கடி அங்கலாய்ப்பார்.

“நான் என்ன தவறு செய்தேன்?“ என லயனல் யோசிக்கின்றான்.

ஒருநாள் பாடசாலையினால் ஒழுங்கு செய்யப்பட்ட சுற்றுப் பயணம் ஒன்றுக்கு செல்ல அம்மா அனுமதி வழங்கவில்லை. லயனல் தனது கோபத்தை வெளிக்காட்டும் பொருட்டு வீணாக தங்கையை அடித்தான். தங்கை பெரும் சத்தத்துடன் அழத்தொடங்கினாள். இவன் மிகக் கொடியவன் என்று சொல்லி அம்மா லயனலுக்கு அடித்தார்.

லயனலும் அழத்தொடங்கினான். அம்மா தங்கைக்கு ஆறுதல் கூறி, இனிப்பு ஒன்றைக் கொடுத்தாள். இதைக் கண்ட லயனல் தமது புத்தக மேசை அருகில் உட்கார்ந்து கொண்டு மேலும் மேலும் அழுதான்.

அறையினுள் எட்டிப்பார்த்த அவன் அப்பா, லயனலை அழவேண்டாம் எனக் கூறினார். ஜலதோசம் பிடித்திருந்த காரணத்தினால், வேலைக்குப் போகாமல் இருந்த அப்பாவின் குரல் மேலும் சத்தமாகவும் ஆழமாகவும் இருந்தது. அப்பாவின் மேல் தனக்கு இருந்த வெறுப்பு காரணமாக அவன் தொடர்ந்தும் அழுதான். அப்பா மேலும் கோபப்பட்டு லயனலின் முதுகில் பல முறை அடித்தார்.

லயனல் அழுது கொண்டே வீட்டை விட்டு வெளியே ஓடினான். எல்லோரின் மீதும் அவன் எரிச்சலும் கோபமும் கொண்டான். பொறாமை அவனிடம் தலை தூக்கியது. இதற்கு உட்காரணம் என்னவென்றால் தனக்கு தன் பெற்றோர்களது அன்பும் ஆதரவும் கிடைக்காதது தான் என எண்ணிக் கொண்டான். அவன் வீட்டு முற்றத்தை விட்டு வீதிக்கு ஓடினான். ஒரு வண்டிக்கு முன்னால் குதிக்கலாமா என்ற எண்ணம் கூட அவன் உள்ளத்தில் தோன்றிற்று. ஆனால் அவ்வளவு தைரியம் அவனிடம் இல்லை. அவன் அவ்வழியே இருந்த மரத்தடியில் இல்லை. அவன் அவ்வழியே இரந்த மரத்தடியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உட்கார்ந்து கொண்டு கண்ணீர்வற்றும் வரை அழுதான்.

சொற்ப நேரத்தின் பின் எகிநோனா அங்கு வந்தாள்.

"வாருங்கள் சின்ன ஐயா" உள்ளே போவோம் என்று அவள் அவனை மிகவும் தாழ்ந்த குரலில் அழைத்தாள். "பகல் சாப்பாடு தயாராகியுள்ளது சின்ன ஐயா".

"எனக்கு பசி இல்லை."

நான் சின்ன ஐயா மிகவும் விருப்பமான கருவாட்டை எண்ணெயில் பொரித்து வைத்திருக்கிறேன். அதைக் கேட்ட போது லயனலின் வாயில் எச்சில் ஊறியது. அவன் எகினோனாவின் கையை பிடித்துக்கொண்டு வீட்டுக்கு வந்தான்.

இதன் பின்பு லயனல் அம்மாவையும் அப்பாவையும் விட எகிநோனாவையே அதிகம் விரும்பினான். எகிநோனா சொன்னதை மட்டுமே அவன் கேட்டான். அம்மா அப்பாவும் கூட அவனிடம் ஏதாவது வேலை செய்து கொள்ள வேண்டுமென்றால் எகிநோனா மூலம் சொல்லித்தான் அதை செய்வித்தார்கள்.

"இது முன் பிறவியில் ஒரு இணைப்பால் தான் இருக்க வேண்டும்" என மல்லிகா விக்டருக்கு கூறினாள்.

"இருக்கலாம்" என விக்டர் வேண்டா வெறுப்பாக கூறினான். லயனல் தங்கையிடமிருந்து ஒதுங்கி சிறிது சிறிதாக தம்பிக்கு அன்பும், அக்கறையும் செலுத்தலானான். தம்பி லயனல் போலவே உள்ளான் என கூறும் போது அவன் சந்தோஷம் அடைந்தான்.

தம்பி மெல்ல மெல்ல வளர்ந்து பேசப்பழகும் போது தனக்கு ஒரு உதவியாள் கிடைத்தான் என நினைத்தான். தங்கையும், லயனலும் பேசும்போது கோபத்துடன் பேசுவது போல இருந்தது. இருவரும் ஒருவரை ஒருவர் குற்றஞ் சாட்டிக் கொண்டார்கள்.

"ஐயோ அம்மா இங்கே பாருங்களேன்! அண்ணா என் புத்தகங்களை மறைத்து வைத்திருக்கிறார்" என சுநீதா ஒரு முறை கூறினாள்.

"ஐயோ அம்மா பாருங்களேன் அண்ணா என் புத்தகங்களை மறைத்து வைத்திருக்கிறார்" என லயனல் அதையே திரும்ப கேலியாக சொன்னான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தலையில் குட்டுவேன்"

"தலையில் குட்டுவேன்"

"ஐயோ இங்கே பாருங்களேன் அம்மா"

"ஐயோ இங்கே பாருங்களேன் அம்மா"

"மகனே! தங்கைக்கு தொந்தரவு கொடுக்காமல் சும்மா இரு."

மல்லிகா கோபமாக கூறினாள். இந்த பிள்ளை வளரும் விதம் கொஞ்சம் கூட சரி இல்லை.

குடும்பத்தின் மூத்தவன் மற்றவர்களுக்கு முன் மாதிரியாக வளர வேண்டும்.

லயனல் சத்தமின்றியிருந்தான். அவன் உள்ளத்தில் முரட்டுத்தன்மை வரவர அதிகமாக மேலோங்கியது.

இதன் பின்பு ஒரு நாள் லயனல் தம்பியின் கையை பிடித்துக்கொண்டு வீதிக்கு போனான்.

இப்போது அஜித் கொஞ்சம் பேசக்கூடிய வயது.

வெகு தூரம் போக வேண்டாம் என அம்மா சொல்வது இருவருக்கும் கேட்டது.

பிரதான வீதியில் இந்த நேரம் அதிகமாக வாகனங்கள் செல்வது உண்டு. இது பிரதான ஹய்லெவல் பாதையாகும். கொழும்பிலிருந்து நுகேகொடை வழியாக அவிசாவலை பக்கம் செல்லும் வாகனங்களுக்கு முடிவே இல்லை. தம்பியை பிரதான வீதியில் செல்லும் வாகனத்தில் தள்ளும் எண்ணம் லயனல் மனத்தில் சொற்ப நேரத்திற்கு தோன்றியது. ஆனால் அந்த பாவமான எண்ணம் திடீரென மறைந்து போனது தம்பியின் மழலைச் சொல்லும் கள்ளங்கபடமற்ற கண்களுமே அதற்கு காரணமாக இருந்தன.

"அதோ மோட்டார் கார், மோட்டார் கார் அதிலே போவோம், அதிலே போவோம்" என்று சந்தோஷமாக சிரித்த அஜித் திடீரென அழத்தொடங்கினான். தூரத்தில் எண்ணெய் பவுசர் ஒன்று வருவதை லயனல் கண்டான்.

இந்த பெரிய வாகனம் சத்தத்தோடு வேகமாக அவர்கள் இருந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்தைக் கடந்து போக அஜித் அழுதுகொண்டு வீட்டுப் பக்கம் ஓடத் தொடங்கினான். அவன் சமையல் அறையில் உணவு தயாரித்துக் கொண்டிருந்த அம்மாவிடம் ஓடிப்போய் நின்றான். அவள் எவ்வளவு கேள்விகள் கேட்ட போதிலும் அதற்கு பதிலாக கிடைத்தது அவன் அழுகை மட்டுமே.

லயனலும் சிறிது நேரத்தில் சமையல் அறைக்குள் நுழைந்தான்.

"மகனே தம்பிக்கு என்ன ஆனது?"

"எனக்கு தெரியாது அழுதுகொண்டு ஓடி வந்தான்."

இந்த பிள்ளை என்ன செய்தது என்று தெரியவில்லை.

"நான் ஒன்றும் செய்யவில்லை" என லயனல் கோபத்தோடு கூறினான்.

"ஐயோ இவனது வாய்... இவன் வாயை எரிக்க வேண்டும்." என அம்மா சொல்ல, "வேண்டாம்,! வேண்டாம்!" என்று அஜித் சத்தமிட்டு அழுதான். "தீ வேண்டாம்.. வாயில் வேண்டாம்."

அஜித் சமையல் அறையிலிருந்து ஓடிச்சென்று அறையிலேயே இருந்த படுக்கையின் கீழே ஒளிந்து கொண்டான். லயனலும் மனக்குழப்பத்தோடு வெளியே சென்று "நமனங" மரத்தடியில் உட்கார்ந்து கொண்டான்.

எகிநோனா அஜித்தை நித்திரை கொள்ளும் பொருட்டு படுக்கையை கீழே இருந்து வெளியே எடுத்து படுக்கையில் படுக்க வைத்தாள். அவன் உடம்பு காய்ச்சலால் கொதிப்பதை அறிந்தாள்.

"ஐயோ பிள்ளையின் உடல் காய்ச்சலால் கொதிக்கிறது." மல்லிகா அஜித்தின் நெற்றியில் கை வைத்து பார்த்தாள். "சரியான காய்ச்சல" வெப்பமானியை வைத்து பார்த்ததில் காய்ச்சல் இருப்பது நிச்சயமாகியது.

"இந்த பிள்ளை எதற்காகவோ பயந்து விட்டது மகனே, தம்பி எதைக் கண்டு பயம் அடைந்தான்"?

"எனக்கு தெரியாது" என லயனல் வெளியே இருந்துகொண்டே சத்தமிட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"திரும்ப தம்பியை அங்கே அழைத்துச் செல்ல வேண்டாம்."

"எனக்கு அங்கே போக தேவையும் இல்லை".

"பார்த்தாயா கோபம் வருகிறது"

"இரு, அப்பா வந்த பிறகு சொல்கிறேன்."

"நான் ஒன்றும் செய்யவில்லை" என கூறிய லயனல் அழத்தொடங்கினான்.

"ஒன்றும் தெரியாத இந்தச் சின்னப் பிள்ளைக்கு அவன் ஏதோ செய்திருக்கிறான்" என மல்லிகா எகிநோனாவுக்கு சொன்னாள். எகிநோனா நீங்கள் ஒருவேளை அவனிடம் கேட்டால் சொல்லுவாள்.

எகிநோனா சுநீதாவுடன் வெளியே போவது போல் போனாள். லயனலும் அவளை தொடர்ந்து போனான்.

எங்கள் சின்ன ஐயாவே தம்பியை நன்றாக பார்த்துக் கொண்டீர்கள் தானே? என எகிநோனா மெதுவாக கேட்டாள்.

"என்னத்தை பார்த்துக் கொள்கிறது" அவன் எதற்கோ பயந்து வீட்டுக்கு ஓடி வந்தான். "பூத தோசமாக இருக்கலாம்" என எகிநோனா வீட்டுக்கு வந்து மல்லிகாவுக்குச் சொன்னாள். பிள்ளையின் காய்ச்சல் அதிகமாகி விட்டது. அவன் உடல் நடுங்க ஆரம்பித்தது. முன்னொரு முறை அவன் நோய் வாய்ப்பட்டபோது முருகக் கடவுளிடத்தில் வேண்டிக் கொண்டது அவள் நினைவுக்கு வந்தது. அந்த வேண்டுகோளை ஒப்புவிக்காத காரணத்தினால் ஏற்பட்ட கடவுள் சாபமா இது?

அவள் கடவுளுக்கு தீபம் ஏற்றி பிள்ளை சுகம் அடைந்த உடனே தான் கதிர்காமம் வருவதாக வேண்டிக் கொண்டாள்.

பிள்ளையின் உடலின் நாலாபக்கமும் தலையணைகளை வைத்து, தீச் சட்டியை எரியச் செய்தாள். விக்டர் ஹேனகம இரவிலே வீடு திரும்பும்போது அஜித்துக்கு காய்ச்சல் சற்று குறைந்திருந்தது. ஆனால் அவன் உடனடியாக பிள்ளையை வாடகை வண்டியில் ஏற்றிக் கொண்டு நுகேகொடை சந்தியிலுள்ள மருத்துவமனைக்குக் கொண்டு போனான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையை பரிசோதித்துப் பார்த்த வைத்தியர் அவனுக்கு குடிப்பதற்கென சிவப்புநிறக் கலவை மருந்து கொடுத்தார். வீட்டுக்கு போனபிறகு ஆறு மணித்தியாலத்திற்கு ஒருமுறை குடிப்பதற்கு வெள்ளை நிறமான தூள் மருந்தும் கொடுத்தார். சிவப்பு நிறமான கலவை மருந்தினாலேயே அஜித்துக்கு சுகம் கிடைத்தது.

மறுநாள் அஜித் சுகம் அடைந்திருந்தாலும், மல்லிகா கணவருக்கு நிச்சயமாக கதிர்காமம் சென்று வேண்டுகோளை ஒப்புவிக்க வேண்டுமென்றாள். மேலும் அஜித்தை லயனலிடம் சேரவிடக் கூடாது என தம் கணவருக்கு கூறினாள்.

அவனுடன் பிரதான வீதிக்கு அஜித் போனதினால்தான் இப்படி நடந்தது. அவன் மனதில் பொறாமை உள்ளது. தம்பிக்கு தானே எல்லா செல்வாக்கும் என அவன் நினைக்கிறான்.

"இனி இருவரையும் தனியாக பிரதான சாலைக்கு பேகவிடவேண்டாம்."

இச் சம்பவத்திற்கு லயனல் அப்பாவிடமிருந்து அடிபடாமல் தப்பினாலும் அவர் தன் மீது காட்டுவது வெறும் அன்புதான் என அவன் உணர்ந்தான். இதனாலோ தான் என்னவோ லயனல் தற்போது மௌனமாகி விட்டான்.

தம்பியுடன் தனிமையாக பிரதான வீதிக்குப் போகும் உரிமை அவனுக்கு இல்லாமல் போய்விட்டது. இப்போது எகிநோனாவும் சுநீதாவும் மட்டுமே அவனை அங்கு அழைத்துப் போனார்கள்.

"எனக்கு ஏன் தம்பியுடன் பிரதான வீதிக்கு தனிமையாக போக முடியாது?" அவன் அதை ஒரு குற்றச் சாட்டாக நினைத்து கேட்டான். "அதை பெரிய ஐயாவிடம்தான் கேட்க வேண்டும" எகிநோனா ஒரேயடியாக சொன்னாள்.

"எனக்கு அப்பா வேண்டியதில்லை" லயனல் கோபத்தோடு சொன்னான்.

"நான் இதை அப்பாவுக்கு சொல்லுவேன்" என சுநீதா பயமுறுத்தினாள்.

"சொல்லு, சொல்லு, நான் பயப்படமாட்டேன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஐயோ! சின்ன ஐயா!"

"நீங்கள் எல்லாரும் ஒன்றுதான். ஒரே குலையிலிருக்கும் தேங்காய்கள்" அப்படியென்றால் நீங்கள்.... என கேலி செய்தான்.

இந்த முறையும் லயனல் தங்கைக்கு ஒரு அடி அடித்தான். சுநீதா அழுதுகொண்டு வீட்டுக்குப் போய் அம்மாவிடம் லயனல் மேல் குற்றஞ்சாட்டினாள். சிறிது நேரத்திற்குப் பின் அம்மா லயனலைப் பிரம்பால் அடித்தாள். அவன் தோட்டத்தில் ஒரு மூலையில் உட்கார்ந்து இரவு நேரம் ஆகும் வரை அழுதான். எகிநோனா கருவாட்டை பொரிக்கும் வாசனைக்குத்தான் அவன் வீட்டுக்குள்ளே வந்தான்.

அன்றிரவு விக்டர் வீட்டுக்கு வந்தபிறகு சுநீதா லயனல் தனக்கு அடித்ததை சொல்ல கோபமடைந்த விக்டர் தனது மூத்த மகனுக்கு மீண்டும் பிரம்பால் அவன் மறக்க முடியாத அளவுக்கு அடித்தார்.

லயனல் சாப்பிடாமலே படுக்கையில் நித்திரை கொண்டான். கண்ணீரை துடைத்தவாறே அவன் தூங்கினான். அம்மா அங்கு வந்து அவன் முதுகில் எண்ணெய் பூசும்போது தான் அவன் கண் விழித்தான். ஆனால் அவன் தூங்குவதாக பாசாங்கு காட்டினான்.

இவர்களை எல்லாம் ஒரு நாள் நான் பழி வாங்குவேன் என்ற எண்ணம் அவன் உள்ளத்தில் சுவாலை விட்டு எரிந்து கொண்டிருந்தது.

சில நாட்களுக்குப் பின்பு எல்லோரும் கதிர்காமம் போனார்கள். வாடகை வண்டியின் முன் ஆசனத்தில் விக்டர் டிரைவர் அருகில் உட்கார்ந்தார். அவர் அருகில் அஜித் உட்கார்ந்து கொண்டான்.

பின் ஆசனத்தில் லயனலும் சுநீதாவும் ஜன்னல் அருகில் உட்கார போட்டி போட்டுக் கொண்டார்கள். மல்லிகா அவர்களுக்கு மத்தியில் உட்கார்ந்தாள். கொழும்பைத் தாண்டி காலி வீதி வழியாக செல்லும்போது தங்கைக்கு கடலைப் பார்க்கும் வண்ணம் ஆசனம் கிடைத்திருக்கிறது என அவன் அறிந்தான். இதை அவன் விரும்பவில்லை. ஆனால் அவன் ஒன்றும் சொல்லவில்லை. அவன் முகம் கோபத்தில் இருக்கிறான் என்பதைக் காட்டியது. களுத்துறையில் போதி விகாரையில் காணிக்கை செலுத்த வண்டியில் இருந்து எல்லோரும் கீழே இறங்கினர். எல்லோரும் ஏறும்போது லயனல் சுநீதாவின் இருந்த ஆசனத்தில் உட்கார்ந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஐயோ பாருங்கள் அம்மா, அண்ணா என்னுடைய ஆசனத்தை பிடித்துக் கொண்டான்" என சுநீதா சொல்லி அழுதாள்.

"எனக்கு வேண்டியது இந்த பக்கம்தான்!" என்று லயனல் விடாப்பிடியாகச் சொன்னான்.

"இந்த பிள்ளை முரட்டுத்தனம் பிடித்தவன்" என்று மல்லிகா கோபமாக சொன்னாள். "மகனே! தங்கைக்கு அந்த ஆசனத்தை கொடு" என்றாள் அம்மா.

அவள் இவ்வளவு நேரமாக அந்த பக்கம்தான் உட்கார்ந்து கொண்டிருந்தாள். லயனல் அதற்கு காரணம் காட்டினான்.

"ஆகவே எனக்கு இப்போது வேண்டியது அந்த பக்கம்தான்" என்றான்.

"லயனல் தங்கைக்கு அந்த ஆசனத்தைக் கொடு!" என விக்டர் கோபமாக கட்டளையிட்டார்.

"இல்லை என்றால் நீ என்னிடம் நல்ல அடி வாங்கப்போகிறாய்".

லயனல் முகத்திலே கோபம் ஏற்பட அவன் முந்திய ஆசனத்திலே போய் உட்கார்ந்தான். அதன் பின்பு அவன் ஒன்றும் பேசவில்லை. மற்ற எல்லோரும் சந்தோஷமாக பேசிக்கொண்டு போனார்கள்.

தங்கைக்கு இது கவலையை உண்டாக்கியது. காலியில் பகல் உணவு சாப்பிடுவதற்காக வண்டி நிறுத்தப்பட்டபோது, அவள் தன்னுடைய ஆசனத்தை அண்ணாவுக்கு கொடுத்தாள்.

லயனல் எனக்கு வேண்டாம் என்று கூறினாலும் பின்னர் அந்த ஆசனத்தில் அமர்ந்தான். இதன்பின் அவன் போகும் வழியில் கடற்கரை ஓரத்தில் உள்ள காட்சிகளை பார்த்துக் கொண்டு கடல் காற்று அவன் உடல்மேல் பட சந்தோஷமாக பயணம் செய்தான்.

தங்கை தன்னைவிட எவ்வளவு நல்ல குணமுடையவள், அறிவு உள்ளவள் என அம்மாவும் அப்பாவும் கூறியபோது லயனல் அதை மிகவும் வெறுப்புடன் கேட்டுக்கொண்டிருந்தான். ஆனால் இவற்றை கேளாதது போல தன்னுடைய மனதில் மிகுந்த வெறுப்பை ஏற்படுத்திக்கொண்டு தனது உலகத்தில் சஞ்சரித்து மகிழ்ந்தான். இந்த சுற்றுப் பயணத்தில் நடைபெற்ற சம்பவங்கள் அவன் மனதை மேலும் மேலும் கெட்டியாக்கி விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உங்களை எல்லாம் நான் ஒரு நாள் பழிவாங்குவேன் என தன் மனதுக்குள்ளே சொல்லிக் கொண்டான்."

கதிர்காம நகரம் அனைவருக்கும் மகிழ்ச்சியைக் கொடுத்தது. மாணிக்க கங்கையில் அப்பா நீச்சலடிக்கும் விதத்திலே லயனலும் நீச்சலடித்தான். அவர்களுக்கு இராம கிருஷ்ண விடுதியில் தங்குவதற்கு இடம் கிடைத்தது.

நேரத்தோடு உணவு உண்டு கோவிலுக்குப் போகும் எண்ணம் பெற்றோர்களுக்கிருந்தது. லயனலும் தனது கோபத்தை மறந்தது போல தம்பியுடனும் தங்கையுடனும் சேர்ந்து விளையாடினான். அவர்கள் வெகுதூரம் போகவில்லை. விடுதியின் உள்ளேயும் வெளியேயும் மற்றும் பாதையிலும் ஓடியாடி விளையாடினார்கள்.

"சாப்பிடுவதற்கு வாருங்கள்!" மல்லிகா பிள்ளைகளை அழைத்தாள் சாப்பிடுவதற்கு வாருங்கள்! விடுதியிலிருந்து தானமாக கிடைக்கும் சோறு சாப்பிட அவர்களை அழைத்தாள்.

"சாப்பாடு சாப்பிட வாருங்கள்" சுநீதா அம்மா கூப்பிட்டதைப் போல சத்தமிட்டு கூறினாள் "சாப்பிடுங்கள், சாப்பிடுங்கள்".

"சாப்பிடுங்கள், சாப்பிடுங்கள்" சின்ன அஜித்தும் கூறினான்.

"சாப்பிடுங்கள், சாப்பிடுங்கள் சாப்பிடுங்கள் சாமி"

"அம்மா நீங்கள் கேட்டீர்களா"? சுநீதா சிரித்தாள். "தம்பி சாப்பிடுங்கள் சாமி" என்கிறான்.

"சாப்பிடுங்கள் சாமி" மல்லிகாவும் அதைத் திருப்பி சொன்னாள்.

"சாப்பிடுங்கள் சாமி சாப்பிடுங்கள் சாமி" அஜித் திரும்ப, திரும்ப சொன்னான்.

"எங்கேயாவது அவன் கேட்டிருக்கலாம்" என விக்டர் சந்தேகப்பட்டார். "கங்கை அருகில்தான் இருக்கலாம்."

"கன்னசாமி, கன்னசாமி" என்று மீண்டும் மீண்டும் கூறிய அஜித், யோசனை செய்யத் தொடங்கினான்.

"கன்னசாமி இல்லை மகனே, கந்தசாமி" என விக்டர் சொன்னான்.

"யார் அப்பா கந்தசாமி" சுநீதா விசாரித்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கந்தசாமி என்று கதிர்காமக் கடவுளுக்கு சொல்வதுண்டு" "கந்தசாமி"

"கந்தசாமி" என சொல்லிய அஜித் இம்முறை கண்களை மூடிக்கொண்டான். அவன் முகத்தில் வேதனை கலந்திருந்தது. திடீரென அவன் அழத்தொடங்கினான்.

"ஐயோ என் மகனே! அழவேண்டாம்" என்று கூறிய மல்லிகா, அவனை தன்னோடு அணைத்துக் கொண்டாள். நாம் சோறு சாப்பிட போவோம். அம்மாவின் மார்பில் இருந்த வெப்பத்தை அறிந்தோ என்னவோ அஜித் கண்ணீரைத் துடைத்துக் கொண்டான்.

விடுதி மண்டபத்தில் உணவு உண்ட அவர்கள் தூய ஆடைகள் அணிந்து, கைகளில் பூசைத் தட்டுக்களை எடுத்துக்கொண்டு மாணிக்க கங்கையின் அப்பால் காணப்படும் கோவிலுக்கு செல்லத் தொடங்கினர். பாலத்தைக் கடந்ததும் அஜித் திடீரென ஒரு இடத்திலே நின்று கொண்டான்.

பாலத்தின் அக்கரையில் ஒரு வீதியில் ஒரு பெண்ணும் இரு பிள்ளைகளும் நின்றுகொண்டிருந்தனர். ஆண்பிள்ளைக்கு ஒன்பது வயது இருக்கும்; பெண்பிள்ளை சமீபத்தில் பெரியவளாகியது போல தெரிகிறது.

அஜித் அப்பெண்பிள்ளையையே பார்த்துக் கொண்டிருந்தான். ஏதோ ஒரு கவர்ச்சி காரணமாக அவன் திடீரென ஓடிச்சென்று அவளின் கையைப் பிடித்துக் கொண்டான்.

வெள்ளை, வெளீரென்ற கவுன் ஒன்றை அணிந்து கொண்டிருந்த அப்பெண்பிள்ளை அளவில்லா அன்பினால் அஜித்தின் கையை பிடித்துக்கொண்டாள். அஜித் சிரித்தான்.

"மகனே இங்கே வா!" மல்லிகா சத்தமிட்டு கூப்பிட்டாள்.

"எங்கே போகிறாய்?"

"போங்க! போங்க! பாப்பா போங்க" சேலையால் முகத்தை மூடிக்கொண்டு இருந்த பெண்ணும் சொன்னாள். "அம்மாவிடம் செல்லுங்கள்."

விடுதியிலிருந்து வெளியே வந்த கரிய நிறமான தடித்த மனிதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவன் அப் பெண்ணுக்கு ஏதோ தமிழ் மொழியில் கூறினான். அஜித் அவனை தலை தூக்கி பார்த்து பயந்து மீண்டும் அம்மா இருந்த பக்கம் ஓடத் தொடங்கினான்.

அப்பெண் அருகில் இருந்த சிறுவனும், சிறுமியும் சிரிக்க ஆரம்பித்தனர். அவர்கள் உள்ளங்களில் சந்தோஷம் ஏற்பட்டது போல தென்பட்டது.

"ஜானகி என் கூட வா!" அந்த மனிதன் சிறுமியின் கையை பிடித்துக் கொண்டான். தலையைத் தூக்கிப் பார்த்த அஜித் அவர்கள் பாலத்தை கடந்து மற்ற பக்கத்திற்கு செல்வதை பார்த்தான்.

"அழ வேண்டாம்" என அவன் சொன்னான்.

"அம்மா, தம்பி கிழங்குகளைப்பற்றி கூறுகிறான்" என சுநீதா அம்மாவுக்கு சொன்னாள்.

"இந்த பிள்ளைகளுக்கு பைத்தியம்"

மல்லிகா கூறினாள்.

"தம்பி ஏன் தமிழர்கள் இருக்கும் இடத்திற்கு ஓடினாய்" சுநீதா கேட்டாள்.

அஜித் பதில் கூறவில்லை. அவன் தலை பாரமாக இருக்கக் காணப்பட்டது. ஏதோ ஒரு கவலை அவனிடம் தென்பட்டது. கோவில் பக்கத்திலிருந்து பெரிய சத்தமும், மணி ஓசையும் கேட்டது. அவர்கள் கோவிலை நெருங்கும் போது சத்தம் மிகவும் அதிகமாக இருந்தது. அஜித் மீண்டும் சிரிக்கத் தொடங்கினான்.

கோவிலின் உள்ளே நடப்பவற்றை பிள்ளைகள் மூவரும் கடவுள் பக்தியோடும், மரியாதையோடும் பார்த்துக் கொண்டிருந்தனர். பூசாரி பூசை செய்யும் ஓசையும், பேரிகை சத்தமும், மணி ஓசையும், எண்ணெய், கற்பூர வாசனையும், மற்றும் பழங்களின், பூக்களின் வாசனையும் அவர்களை கடவுளோடு நெருங்கிய புதுமையான உலகத்திற்கு கொண்டு சென்றது. வெள்ளை ஆடைகள் அணிந்திருந்த எல்லோரும் கடவுள் பக்தியினால் ஒன்றிணைந்து இருந்தனர்.

அஜித் முருகக் கடவுள் சிலை எதிரில் இருந்த சிவப்பு நிற திரையைப் பார்த்துக் கொண்டிருந்தான். பூசாரி கையில் இருந்த மயில் இறகு அவனுடைய தலையில் படும்போது அவனுக்கு நிம்மதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைத்தது போல தெரிந்தது.

இதன் பின்பு அஜித் மன அமைதி கொண்டவன் போல நடந்து கொண்டான். அவன் சிரித்து ஓடி ஆடுவதைப் பார்க்கும் போது கடந்த காலத்தில் அவனுள் இருந்த தீய கோசங்கள் எல்லாம் தீர்ந்தது போல இருந்தது. இது கடவுளுக்கு காணிக்கை செலுத்திய பிறகு அஜித்திடம் ஏற்பட்ட மாற்றம் என்று மல்லிகா கூறினாள்.

பெற்றோர்கள் கொழும்பு திரும்பி வரும்போது தமது மூன்று பிள்ளைகளும் ஒன்று கூடி மிகவும் சந்தோஷமாக பேசிக்கொண்டிருப்பதை கண்டார்கள்.

திரும்பி வந்து கொண்டிருந்த போது அவர்கள் சற்று நேரம் அம்பாந்தோட்டையில் தரித்தனர். வாடி வீட்டுக்கு சென்று ஏதாவது குளிர்பானம் குடித்து விட்டு போவோம் என விக்டர் யோசனை தெரிவித்தான்.

வாடிவீடு மைதானம் சூரிய ஒளியால் வெப்பமாக இருந்தது. தூரத்தில் கடற்கரை மணலில் பல படகுகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. சில கடல்நீரில் இருக்கக் காணப்பட்டன. மூன்று பிள்ளைகளும் மைதானத்தில் ஓடத் தொடங்கினர். அஜித் மைதானத்திலிருந்து வெளியே வந்து வீதிப்பக்கமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் வண்டி ஒன்றினுள்ளே எட்டிப் பார்த்தான். லயனலும், சுநீதாவும் பின்னாலேயே அவனுக்கு துணையாக ஓடி வந்தார்கள்.

தம்பியைப் பார்த்துக் கொள்ளும் கடமை அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருந்தது.

தூசியால் மூடியிருந்த அந்த வண்டியின் உள்ளே சிலர் உட்கார்ந்து கொண்டிருந்தனர். தாங்கள் கதிர்காமத்தில் பார்த்த அந்த தமிழ் குடும்பமும் இருப்பதைக் கண்டார்கள். ஜானகி கண்ணாடி வழியாக பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவள் அஜித்தை நோக்கி சிரித்துக் கையாட்டினாள். அஜித்தும் அவளுக்கு ஏற்கனவே அறிமுகமானவன் போல ஏதோ சொல்லி சிரித்தான். அவன் சொன்னது யாருக்கும் புரியவில்லை.

வண்டி புறப்பட்டுச்செல்ல ஆயத்தமானது. புகையோடு பெற்றோல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசனையும் வெளிவந்தது. அஜித் இருமினான். வண்டி புறப்பட்டுச் சென்ற உடனே அவனுக்கு மயக்கம் ஏற்பட்டது. இருமிக் கொண்டே அவன் தரையில் விழுந்தான். தூசியினால் மூடியிருந்த வண்டி அவ்விடத்தில் இருந்து புறப்பட்டுச் சென்றது.

'நாற்றம், நாற்றம்' என்று அஜித் எழுந்து கொண்டே சொன்னான். "பெற்றோல் நாற்றம்" சுநீதா கூறினாள்.

அம்மா அழைத்த குரலைக் கேட்ட மூவரும் திரும்பி வாடி வீட்டுக்கு வந்தார்கள். இதன்பிறகு பல நாட்கள் செல்லும் வரை அஜித்துக்கு பெற்றோல் நாற்றத்தை தாங்கிக் கொள்ள முடியாமல் இருந்தது.

பல ஆண்டுகள் செல்லும் வரை அவன் பஸ் வண்டியில் வெறுப்புடனேயே பிரயாணஞ் செய்வான்.

"எனது சின்ன மகனுக்கு பஸ்வண்டியில் போக முடியாது தானே" என மல்லிகா அடிக்கடி கூறினாள். பஸ் வண்டியில் சென்றால் அவனுக்கு வாந்தி வருகிறது.

"பெற்றோல் நாற்றமே காரணம்" என சுநீதா கூறினாள்.

"இவன் கார் வண்டியில் மட்டும் செல்ல பிறந்தவன்" என விக்டர் கேலி செய்தான்.

மெல்ல மெல்ல அஜித் பஸ் வண்டியில் பிரயாணஞ் செய்ய பழகிக் கொண்டான். அடிக்கடி அவனுக்கு தலை சுற்றுதல், வாந்தி வருவதைப் போல இருந்தாலும் அவன் இந்த பயணங்களுக்காக தன்னை தயார்படுத்திக் கொண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 3
# லயனல், அநுலா - விஸாகா
## 1969-1971

அநுலா முதல் முதலாக லயனலை பேராதெனிய பல்கலைக் கழகத்தில் சந்தித்தாள். இருவரும் அங்கு கலைத்துறையில் பட்டம் பெறுவதற்கு தகுதி பெற்று வந்திருந்தவர்களாவர். லயனல் நுகேகொடையில் இருந்து வந்திருந்தான். அநுலா அநுராபுரத்திலிருந்து சற்று தூரமாக இருந்த நெடுந்ஓய என்ற கிராமத்திலிருந்து வந்த பெண் ஆவாள். ஒருவரை ஒருவர் ஆரம்பத்தில் சந்தித்த சமயத்தில் இருந்தே அவர்களுக்கிடையில் ஒருவித காதல் உண்டானது என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறினால் அது தவறல்ல.

இருவருக்கும் முதல் முதலாக பல்கலைக் கழகத்திற்கு வந்த நாளில் கட்டாயமாக முகம் கொடுக்க வேண்டியதாக இருந்தது, மாணவர்களின் துன்புறுத்தலுக்குத்தான்.

அநுலாவை அழைத்துச் சென்ற பெண்கள் அவளுக்கு அளவுக்கு மீறியதாக தேனீர் குடிக்கச் செய்து பிறகு வெகுநேரம் வரை அவளை மலசல கூடத்திற்கு போகவிடாமல் தடுத்து வைத்திருந்தனர். அதே நேரத்தில் அவளுடைய முகத்திலும் இரு கைகளிலும் சாணி பூசப்பட்டது. ஒருத்தி அவளுடைய முகத்தில் எச்சில் துப்பினாள். அநுலா இவை எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டிருந்தாள். இவை எல்லாம் விடுதியில் ஒரு அறையில் தான் நடந்துகொண்டிருந்தது. இவ்வாறான துன்புறுத்தலுக்கு ஆளாகிய வேறு பெண்கள் சிலரும் அந்த அறையில் இருந்தார்கள். இரு பெண்களின் தலைமுடி ஒன்றாகக் கட்டப்பட்டு, இருவரும் ஒரு நடனத்தை ஆடிக் காட்ட வேண்டியதாக இருந்தது.

புதிய மாணவி ஒருத்தி அவர்களை எதிர்த்துப் பேச, அச்சமயமே அவளுடைய கன்னத்தில் அடி ஒன்று விழுந்தது. அவளை அறையிலிருந்து வெளியே அழைத்துச் சென்றார்கள். அவளுக்கு என்ன நடந்தது என்று அநுலாவுக்கு ரொம்ப காலம் செல்லும் வரை தெரியவில்லை. அநுலா இவையெல்லாம் என்றாவது முடியத்தானே போகிறது என நினைத்து, பொறுத்துக் கொண்டாள். தான் தூக்கமின்றி இவ்வளவு தூரம் கஷ்டப்பட்டு பாடம் படித்தது இதற்காகவா என சில நேரங்களில் யோசித்தாள். அம்மாவையும் தம்பியையும் நினைத்துக்கொண்டு கண்களில் கலங்கிய கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

அநுலா முகம் கொடுத்த சூழ்நிலைகளை விட மிகவும் பயங்கரமான நிலைகளுக்கு லயனல் முகம்கொடுக்க வேண்டியதாக இருந்தது.

பல்கலைக் கழகத்தில் சேரத் தேவையான ஆவணங்களை நிரப்பி முடித்த அவன் இரண்டாம் வருட மாணவர் கூட்டம் ஒன்றில் சிக்கிக் கொண்டான். புதிய மாணவர்கள் சிலரை கூட்டிக் கொண்டு அவர்களை மாடுகள் ஓட்டிக்கொண்டு போவதைப் போல் கொண்டு சென்றார்கள். மகாவலி கங்கையைக் கடந்து சென்ற அவர்கள் கடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெயிலில் அக்பார் மண்டபம் பக்கம் அழைத்துச் சென்றார்கள். அவர்களின் ஆவணங்களை தலையின் மேல் வைத்துக்கொண்டு செல்ல வேண்டியதாக இருந்தது. அவர்கள் பேசுவதோ சிரிப்பதோ தடை செய்யப்பட்டிருந்தது.

புதிய மாணவன் யாராவது சிறிதளவேனும் சிரித்தால் "என்னடா சிரிக்கின்றாய் சிரிப்பை வெட்டி உன் பைக்குள் போட்டுக்கொள்" என கேலியாக கட்டளை இட்டார்கள்.

லயனலுக்கும் இதை ஒருமுறை செய்ய வேண்டியதாயிற்று. அவன் கையால் வாயை மூடிக்கொண்டு, இரு உதடுகளையும் மூடி, தன் சட்டைப்பையில் போட்டு, சிரிப்பை அதன் உள்ளே போட்டதாக செய்து காட்டினான்.

இவ்வாறு ஊர்வலமாக பாலத்தை கடந்த கூட்டம் அக்பார் சாலையில் ஒரு அறைக்குள் அழைத்துச் செல்லப்பட்டனர். இங்கே லயனலும் மற்றும் புதிய மூன்று மாணவர்களும் பழைய மாணவர்களால் நிர்வாணமாக்கப்பட்டு துன்புறுத்தப்பட்டனர். இந்நால்வரும் அந்த கொடியவர்களது சிறைக் கைதிகளாக காணப்பட்டனர். அவர்கள் மிகவும் கொடூரமான சூழ்நிலைக்கு முகம் கொடுத்தார்கள். துன்புறுத்தியவர்கள் அவர்களை மூத்திரத்தினால் குளிப்பாட்டினர். அவர்களின் மூத்திரம் அவர்களாலேயே குடிக்க வேண்டியதாகி விட்டது. அந்த மூத்திரம் மீது நீந்தவும் நடந்து செல்லவும் நேர்ந்தது. லயனல் இவர்களை என்றைக்காவது பழிவாங்குவேன் என்ற எண்ணத்துடன் தன் கோபத்தை அடக்கிக் கொண்டான். தான் இவ்வளவு கஷ்டப்பட்டு படித்து பரீட்சைகளில் வெற்றி பெற்று வந்தது இவர்களின் கேலிக்கு ஆளாகவா இது தவிர்க்க முடியாத ஒரு துன்புறுத்தலாகும்.

ஒருவன் லயனலின் தலைமுடியை ஒவ்வொரு இடத்திலும் கத்திரிகோலால் வெட்டி, முகத்திலும் தலையிலும் மற்றும் எல்லா இடத்திலும் பற்பசையை பூசினான். இன்னொருவனின் மர்ம உறுப்பில் மிளகாய் தடவப்பட்டது. அவன் சத்தமிட்டு அழும்போது அவன் வாயில் துணி அடைக்கப்பட்டது. அந்த புதியவனின் பெயர் அதுல என லயனல் பிறகு அறிந்து கொண்டான். உண்மையில் இந்த துன்புறுத்தல் காரணமாக அவன் அப் புதிய மாணவர்களோடு மிகவும் நெருக்கம் கொண்டான். ஒரு புயலில் சிக்கிக்கொண்ட படகு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரயாணிகள்போல அவர்களுக்கிடையில் மௌனமான உறவு ஏற்பட்டது.

இந்த துன்புறுத்தல் படலம் ஒரு நாளில் முடியவில்லை. லயனலுக்கு அக்பார் சாலையில் அறை கிடைக்கவில்லை. பல்கலைக் கழகத்திலிருந்து சிறிது தூரத்திலுள்ள ஒரு தங்குமிடத்தில் அவன் தங்கினான். இந்த இடத்தில் மேலும் பன்னிரெண்டு மாணவர்கள் தங்கியிருந்தனர். ஒரு இரவு புதிய மாணவர்களை தேடிவந்த இரண்டாம் ஆண்டு மாணவர்களில் சிலர், புதிய மாணவர்களை வெளியே அழைத்துச் சென்றனர். நள்ளிரவில் இவ்வாறு எழுப்பி அழைத்துச் செல்லப்பட்டவர்களின் ஆடைகளை கழற்றி நிர்வாணமாக நெடுஞ்சாலையில் அவர்களை நடந்து செல்ல வைத்தனர். பாலத்தின் அருகே அவர்களுக்கு மேலும் ஒரு கட்டளையிடப்பட்டது. அதாவது பால் தொழிற்சாலை திறந்து வைத்தலாகும். பால் தொழிற்சாலை என்ன என்று இவர்களுக்குத் தெரியவில்லை. வட்டமாக நின்றுகொண்டிருந்த இவர்களுக்கு தனது வலது பக்கமாக உள்ளவனின் மர்ம உறுப்பை கையில் எடுக்க வேண்டியதாயிற்று. இதன் பிறகு ஒரு இயந்திரம் செயற்படும் விதத்தில் கைகள் செயற்பட ஆரம்பித்தன. அவர்கள் எல்லோரும் பால் கறக்கும் விதத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அந்த துன்புறுத்தல்காரர்கள் என்ன திருப்தியை அடைந்தார்கள் என்று லயனலுக்கு தெரியவில்லை. எல்லாம் இயந்திரம்போல நடந்தன. சிறிது நேரத்திற்குப்பின் எல்லோரும் சத்தமிட்டார்கள். லயனல் சோர்வோடு தன் அறைக்கு கனவில் நடந்துகொண்டு வருவதைப்போல வந்தான். இதன் பின்பும் ஒரு வாரம் செல்லும் வரை, இவ்வாறான வெவ்வேறு துன்புறுத்தல்களுக்கு முகம் கொடுக்க வேண்டியதாக இருந்தது.

அவன் "வுஸ் கென்டிம" என்ற பெயருள்ள உணவு விடுதியில் அநுலாவை முதன் முதலாக இந்த வாரத்தில் தான் கண்டான். அவள் மற்றும் இரண்டு பெண்களுடன் படிக்கட்டுகளில் ஏறிச் செல்லும்போது பின்னால் வந்து கொண்டிருந்த லயனலை நோக்கி திரும்பிப் பார்த்தாள். இவ்வாறு ஒருவரை ஒருவர் கண்ட நேரத்திலேயே அவர்களுக்குள் ஒரு கவர்ச்சி உண்டாயிற்று.

அடுத்த நாள் அவர்கள் ஒரே மண்டபத்தில் இருந்து கொண்டு சொற்பொழிவை கேட்டார்கள். லயனல் எதிர்பார்க்கமலேயே அநுலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்த இடத்திலேயே சென்று உட்கார்ந்தான். அவர்கள் இருவரும் பேசத் தொடங்கினார்கள்.

அன்று பகல் உணவை அவர்கள் ஒன்றாக உண்டார்கள். அநுலாவின் சிநேகிதிகளான மிறானாவும், விநோதனியும் லயனலை அறிமுகம் செய்து கொண்டனர். லயனலும் சமீபத்தில் தன்னோடு நட்புகொண்ட அநுலாவை மற்ற பெண்களுக்கு அறிமுகம் செய்து வைத்தான்.

பல முறை மாலை நேர வகுப்புகள் முடிந்த பிறகு லயனலும் அநுலாவும் காதலர்கள் பாதையில் நடந்து சென்றனர். காதலர்கள் பாதை செனட் கட்டடத்திற்குக் கீழ் மகாவலி கங்கை அருகில் இருந்தது.

இருவரும் ஒரு மரத்தடியில் உட்கார்ந்து கொண்டு ஆற்றைப் பார்த்தவாறு இரு கைகளையும் பிடித்துக்கொண்டு பலவற்றைப்பற்றி பேசிக் கொண்டிருந்தார்கள்.

அநுலா தன் பெற்றோர்களைப் பற்றியும் கிராமத்தைப் பற்றியும் அவனுக்கு கூறினாள். விவசாயியான அவளின் தந்தை இறந்து மூன்று வருடங்கள் ஆகின்றன. அநுலாதான் குடும்பத்தில் மூத்தவள் அம்மாவும், இரு தம்பிமார்களும் மரக்கறி விவசாயம் செய்துகொண்டு வாழ்கிறார்கள் என அவள் கூறினாள். இந்த விளக்கங்களை கூறும்போது அநுலாவின் கண்களில் இருந்து வந்த கண்ணீரை லயனல் தனது கைகளால் துடைத்தான்.

லயனலும் தனது குடும்பத்தின் விபரங்களை கூறினான். அவனும் குடும்பத்தில் மூத்தவன் தங்கையும், தம்பியும் பிறந்த பிறகு தனக்கு பெற்றோர்களின் அன்பு இல்லாமல் போனதைக் கூறும்போது அவனுடைய குரலில் இருந்த கோபம் அநுலாவுக்கு தெரிந்தது.

"வீட்டிலிருந்து பிரிந்து இருக்கும்வரை எனக்கு நல்லது" என்று லயனல் கூறினான்.

இருவரின் காதல் வளர்ந்து கொண்டுபோக அவர்கள் ஆசையில் பூக்கள் மலர்ந்தன. ஆனால் இருவரும் தத்தமது எல்லைகளை அறிந்து, மற்றவர்கள் மீது கொண்ட மரியாதை காரணமாக கட்டுக் கோப்புடன் நடந்து கொண்டனர். பட்டம் பெற்ற பிறகு தூரத்திலுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமத்திற்குச் சென்று வாழ்வதைப்பற்றி கனவு கண்டார்கள். தனக்கு கொழும்பு பிடிக்கவில்லை என லயனல் கூறினான். அநுலாவின் கிராமத்தில் விவசாயம் செய்துகொண்டு வாழ்வதற்கு தான் விரும்புவதாகக் கூறியபோது அநுலாவின் உள்ளத்தில் சந்தோஷம் நிறைந்தது.

ஆனால் மறு ஆண்டில் லயனல் வேறுவிதமான மனிதனாக மாறினான். இப்போது அதிகமாக மாலை நேரங்களில் அநுலாவும் லயனலும் தனியாக சந்தித்துக் கொள்வது இல்லை. தான் விசேட வகுப்புகளுக்கு செல்வதாக அவன் கூறினான்.

"பொருளாதார விசேட வகுப்பு" என லயனல் கூறினான்.

ஆனால் இருவருக்கிடையில் இருந்த காதலில் குறைபாடு ஏதும் ஏற்படவில்லை. எது எப்படியாயினும் லயனல் தனக்கு ஏதோ மறைக்கின்றான் என்ற உணர்வு அநுலாவுக்கு ஏற்பட்டது. ஒருவேளை அவனுக்கு இன்னுமொரு காதலி இருக்கிறாளோ என்ற சந்தேகம் எழும்பியது. ஆனால் அவ்வாறான ஒருத்தியோ அல்லது அவ்வாறான ஒருத்தியின் வாசனையோ லயனலிடம் இருக்கவில்லை.

அவன் மாலை நேர வகுப்புகளுக்கு அநுலாவுடன் தான் போவான். இன்னொரு நாள் அநுலாவுடனும் லயனலுடனும் கூட வந்த மூன்றாவது நபரை அநுலா கண்டாள். தாடியை வளர்த்துக் கொண்டிருந்த அவன் பெயர் ரோஹண ஆகும்.

சில நாட்களுக்குப் பின் லயனலும் தாடியை வளர்க்க ஆரம்பித்தான். "நீங்கள் ஏன் தாடியை வளர்க்கிறீர்கள்?" என்று அநுலா விசாரித்தாள்.

"வளர்க்கவில்லை, அது தானேகவே வளர்கிறது" என்று லயனல் பதில் கூறினான். "இந்த பெண்களுக்கு தெரிவதில்லை ஆண்களின் தாடியைப்பற்றி"

"உங்களுக்கு தாடி அவ்வளவு அழகாக இல்லை"

"இது அது பாட்டிற்கு வளரும் போது, நான் என்ன செய்வது அநு?" மற்றது, "பிளேட் வாங்க செலவிடும் பணம் மிச்சம்"

"அதை சேமித்து நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்"?

"அந்த பணத்தின் மூலம் துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் மக்களுக்கு உதவி செய்ய முடியும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பிளேட் வாங்க செலவிடும் பணத்தைச் சேமித்துக் கொண்டுதான் நீங்கள் நாட்டை வளர்க்கப் போகிறீர்கள்?"

"சிறு சிறு துளி தண்ணீர் சேர்ந்துதான் அநு, பெரும் கடல் உண்டாகிறது. நாம் எல்லோரும் அந்த விதத்தில் கொஞ்சம் கொஞ்சமாக சேமித்தால் அது பெரும் தொகையாக மாறி அதனால் நாட்டுக்கு பயனுள்ள ஒரு காரியத்தைச் செய்ய முடியும்."

"நீங்கள் நினைக்கும் விதத்தில் நினைப்பவர்கள் எத்தனைபேர் இங்கு இருக்கிறார்கள்?"

"நீ நினைக்கும் விதத்தைவிட இவ்வாறு நினைக்கின்றவர்கள் நிறையபேர் இருக்கிறார்கள் அநு."

"எனக்கு உங்களோடு வாதம் செய்ய முடியாது. ஆனால் உங்களுக்கு தாடி ஒரு பொழுதும் அழகில்லை! லயனல்"

"ஆண்களுக்கு தாடி ஏன் வளர்கிறதென்று நான் யோசிக்கிறேன்"

'ஏன்?'

"பழைய காலத்திலிருந்தே காட்டுக்கு வேட்டையாட சென்றவர்கள் ஆண்கள் தான். பெண்கள் குகைக்குள் மறைந்திருந்தார்கள். வெயிலில் அவர்கள் செல்லவில்லை. மழையில் அவர்கள் நனையவில்லை. அதனால் தான் பெண்கள் மிருதுவாக இருக்கிறார்கள். ஆண்கள் வெய்யிலில் காய்ந்தனர், மழையில் நனைந்தனர். இவற்றிலிருந்து பாதுகாத்துக்கொள்ள எமது உடலிலும் முகத்திலும் முடி வளர்ந்தது."

"உங்களது தர்க்கம் சரியாக இருக்கலாம், ஆனால் உங்களுக்கு தாடி சரி இல்லை."

"தாடி இருப்பதால் நான் பாதுகாப்பு பெறுகிறேன்." என லயனல் வேடிக்கையாக கூறினான்." தாடியுள்ள பலரை உனக்கு சீக்கிரம் சந்திக்க நேரிடும்."

சிறு காலத்திற்குப் பிறகு அநுலாவுக்கு இதற்கு முன் காணாத பலவற்றை காணக் கிடைத்தது. கட்டிட சுவர்களிலும், பல இடத்திலும் புதிய போஸ்டர்கள் பல தென்பட்டன. பெரிய அளவிலான வெள்ளை நிற கடதாசிகளில் சிவப்பு, கறுப்பு நிற எழுத்துக்களால் எழுதப்பட்ட "விமுக்தி" (விடுதலை) "மரணம்" "பணக்காரர்கள் ஒழிக" "தேசத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலை" போன்ற வார்த்தைகள் இப்போது காணக் கூடியதாக இருந்தது. வாழ்க்கையில் அடிமையாக மரணம் அடைவதை விட, போராட்டத்தில் இறப்பது மேலாகும்" "வல்லரசுகளின் கறுப்புப் புள்ளிகளால் மறைக்கப்பட்ட நமது தாய் நாட்டை தூய்மைப் படுத்துவது இவர்களின் இரத்தத்தினாலே மட்டும் தான் முடியும்" என்ற கூற்றுகள் சுவர்களில் காணும்போது அநுலாவின் மனதில் புதியதொரு திகில் உண்டாகியது. ஏதோ ஒரு மாபெரும் மாற்றத்தின் அறிகுறிகள் அவள் மனத்தில் தோன்றியது. வரவர லயனல் தன்னிடமிருந்து பிரிந்து போகும் ஒருவன் போல நடந்து கொள்கின்றான். அவன் கொழும்புக்கு போவதாகக் கூறி, பல நாட்கள் கடந்த பிறகு தான் மீண்டும் பேராதெனியவுக்கு வருகிறான். ஒருமுறை அநுலா அவனுடைய நுகேகொடை வீட்டுக்கு அனுப்பிய கடிதம் தனக்கு கிடைக்கவில்லை என்று அவன் கூறினான். பிறகு அவன் தன்னுடைய சிநேகிதன் ஒருவனின் வீட்டில் சில நாட்கள் தங்கியிருந்ததாகக் கூறினான்.

"அம்மா அப்பாவைப் பார்க்கிலும் எனக்கு சிநேகிதர்கள் நல்லவர்களாகப் படுகிறார்கள். என்னுடைய அம்மா அப்பா ஒரு போதும் என்னுடைய நல்ல குணத்தைக் கண்டு கொண்டதில்லை என ஒரு முறை லயனல் அநுலாவுக்கு கூறினான். நான் ஏதோ கறுமத்தினால் அந்த குடும்பத்தில் பிறந்திருக்கின்றேன்."!

வரவர லயனல் மன வேதனையுடன் பேசினான். சில நேரங்களில் அவன் ஆழ்ந்த சிந்தனையில் இருக்கின்றான். ஒருமுறை அநுலா லயனலிடம் சுவரில் எழுதி இருந்த "விடுதலையைப் பற்றி" விசாரித்தாள். லயனல் அதற்கு பதில் சொல்லவில்லை. லயனல் அவ்வாறான ஒரு செயலில் ஈடுபடமாட்டான் என்ற திட நம்பிக்கை அநுலாவுக்கு இருந்தது.

லயனல் பாடங்களின் மேல் அவ்வளவாக அக்கறை காட்டவில்லை. "நாம் கலைப்பட்டம் பெற்று என்ன செய்வது அநு? நாம் கடைசியில் வயலில் இறங்கி சேற்றை மிதிக்கத்தான் வேண்டும்."

"ஏன் நீங்கள் அப்போது கூறினீர்கள் தானே எனது ஊருக்கு போய் விவசாயம் செய்வோம் என்று?"

"அதை விட மேலானதொரு வேலையை நாம் செய்ய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமக்கு இருப்பது ஒரே ஒரு வாழ்க்கை தான் அனு"

"புத்த தருமப்படி எமக்கு பல பிறவிகள் இருக்கிறதல்லா லயனல்?" நாம் இறந்து, இறந்து திரும்பி பிறக்கிறோம் அல்லவா?

"எனக்கு அதைப்பற்றி நம்பிக்கை இல்லை செய்வது எதுவாயிருந்தாலும் குறித்த நேரத்தில் செய்ய வேண்டும்?"

"அப்படியென்றால் மனிதர்களை கொலை செய்தாலும் காரியமில்லையா?"

"மனிதர்களை கொலை செய்ய நான் கூறவில்லை"

"உலகத்தாருக்கு நன்மை ஏற்படக்கூடிய சூழ்நிலையில் எங்களுள் ஒருவர் இறந்தாலும் பரவாயில்லை"

"நீங்கள் அப்படியென்றால் கரும பலாபலன்களை நம்புவதில்லையா?"

"அதைப்பற்றி எனக்கு தெரியாது. புத்த பெருமானும் சொல்லி இருப்பது எமக்கு ஆத்மம் இல்லை என்று: விடுதலை அடைய ஆத்மாவைப்பற்றிய ஆசையைத் துறக்க வேண்டும்.

"நீங்கள் பேசுவது புத்தர் பெருமான் கூறிய விடுதலை அல்ல!" அநுலா இவ்வாறு கூறி லயனலை மேலும் பேச்சுக்கு இழுக்கலாம் என நினைத்தாள். ஆனால் லயனல் மௌனமாக இருந்தான்.

இப்போது லயனலும், அநுலாவும் காதலர்கள் பாதைக்கு செல்வதோ அல்லது மகாவலி கங்கை ஓரத்தில் மரங்களுக்கு அடியில் உட்கார்ந்து, தத்தமது கைகளை பிடித்துக்கொண்டு இருப்பதில்லை. லயனலுக்கு அதற்கு நேரமும் இல்லை. எப்போதும் விசேட வகுப்புகள்; விசேட வகுப்புகள். அவன் பெரியதொரு மர்மமாக அநுலாவுக்கு தோன்றினான்.

சில நாட்களுக்கு பின்பு, கண்டி வங்கி ஒன்றிலிருந்து பெரிய தொகை பணத்தை எடுத்துக்கொண்டு மறைந்து சென்ற கெசியர் (சிறாப்பர்) ஒருவரைப் பற்றிய செய்திகள் பரவியது. இதைப்பற்றி அநுலா லயனலிடம் வினவிய பொழுது "இல்லாத ஒருவன் அவ்வாறு எடுத்துச் செல்வதில் என்ன தவறு?" என கேட்டான்.

"இந்த சமூக முறைப்படி, இல்லாத ஒருவன் அல்லது ஏழை மக்கள் செய்யக் கூடியது இது மட்டும் தான்,"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அந்த மனிதனுக்கு தொழில் இருந்தது. அப்படியென்றால் அவன் ஏழையாய் எப்படி இருப்பான்?"

"வேலையில் இருந்த ஒரே காரணத்தினால், மனிதன் பணக்காரன் ஆவதில்லை அநு,"

"உங்களுக்கு வறுமையைப்பற்றி தெரியாது லயனல். நாம் வளர்ந்த முறை எப்படியென்று உங்களுக்கு தெரிந்திருந்தால் நீங்கள் அப்படி சொல்ல மாட்டீர்கள்."

"ஆம் அது யாருடைய தவறு?"

"எம்மை சூறையாடிக் கொண்டிருக்கும் சமூக முறையின் தவறு அல்லவா அது"?

"சமூக முறை தவறாக இருக்கலாம். அதை மாற்றி அமைக்கவும் எமக்கு மட்டும் தான் முடியும். நாம் கல்வி பெற்று நாட்டுக்கு சேவை செய்ய வேண்டும்."

"நாம் பெறும் கல்வி முறையும் அந்த வல்லரசுகளின் முறையின் ஒரு பிரிவுதான்" அந்த முறையினால் நாட்டை கட்டியெழுப்ப முடியாது."

"அப்படியென்றால்,"

"இவற்றைப்பற்றி உன்னுடன் எனக்கு பேச முடியாது. உனக்கு இவையெல்லாம் புரியாது."

இவ்வாறு பேசும்போது லயனல் இடையில் நிறுத்திவிட்டு ஆழ்ந்த சிந்தனையில் இறங்குகின்றான். பின்பு திடீரென எழுந்து அநுலாவிடமிருந்து தூர விலகி சென்கின்றான்.

பெனிதெனியேவில் வாழ்ந்த பல்கலைக் கழக எழுது வினைஞர் ஒருவரின் வீட்டில் அநுலா தங்கியிருந்தாள். அவள் இருந்த அறையில் ரேணுகா என்ற இன்னொரு மாணவியும் வாழ்ந்து வந்தாள். அவர்களுக்கு வெளியே போகவும், வரவும் தனிக் கதவு ஒன்று இருந்தது. இதனால் வீட்டு உரிமையாளரிடமிருந்து அவர்களுக்கு எந்த ஒரு தொந்தரவும் இருக்கவில்லை.

சில வேளைகளில் லயனல், அநுலாவை இந்த அறையில் சந்தித்தான். அவன் அவ்வாறு வந்தபோது ரேணுகா அவர்களுக்கு தனியாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்க இடம் கொடுத்து வெளியே அல்லது வீட்டுக்குள் போவாள். ஆனால் இந்த சந்திப்புகளினால் அநுலாவுக்கு எந்தவித சுகமும் தெரியவில்லை. அதற்கு காரணம் லயனல் அவளை விட்டு விலகி போய்க்கொண்டிருப்பதே. சில வேளைகளில் அவர்களின் பேச்சு ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டிக்கொண்டு முடிவு அடைகிறது. ஆனால் மறுநாள் லயனல் வந்து மன்னிப்பு கேட்கின்றான்.

லயனலின் மனதில் மிகுந்த வைராக்கியமும், கோபமும் இருக்கிறது என அநுலா நினைக்கின்றாள்.

ஒரு நாள் இதைப்பற்றி விசாரித்தபோது லயனல் அழுதுகொண்டு பேச ஆரம்பித்தான். "நான் எப்போதும் வெளி ஆள்தான். அம்மா அப்பா ஆகிய இருவரும் என்னை வீணாக ஏசினார்கள். அடித்தார்கள். தினமும் என்னுடைய தவறுகளை மட்டும்தான் சொன்னார்கள். அவர்களை பழி வாங்க நான் நினைத்தேன். நான் எனது கறுமத்தினால் தான் அந்த குடும்பத்தில் பிறந்திருக்கின்றேன். என் தம்பியையும், தங்கையையும் வெறுக்கச் செய்தவர்கள் என் அம்மாவும் அப்பாவும் தான். மற்றப்படி என்னிடம் அன்பு இல்லாமல் இல்லை."

லயனல் அநுலாவின் மடியில் தலைவைத்து அழத்தொடங்கினான். அநுலா பரிதாபம் கொண்டு அவன் தலையைத் தடவிக் கொடுத்தாள். "நாங்கள் கெம்பஸ் வந்த முதல் நாளில் எம்மை பழைய மாணவர்கள் துன்புறுத்தியது ஞாபகம் இருக்கிறதா?" அவர்கள் எம்மை துன்புறுத்தியபோது அவர்கள் எல்லோரையும் கொலை செய்து விட்டு நானும் சாக வேண்டும் என்று நினைக்கும் அளவுக்கு கோபம் என் மனதில் உண்டாகியது. ஏன் இவர்கள் ஏனையோருக்கு இவ்வாறு துன்புறுத்தல் செய்கிறார்கள் அநு? ஏன்?

"சில மனிதர்கள் மிருகங்களைப்போல தான் லயனல். சில மனிதர்கள் எவ்வளவு நல்ல விதத்தில் வாழ்ந்தாலும், கொடிய உணர்வுகளைத் தங்கள் நெஞ்சத்தில் "சாம்பலினால் மறைந்திருக்கின்ற தீயைப்போல" மறைத்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த மிருகத்தனமான குணத்தை செயற்படுத்த சந்தர்ப்பம் கிடைத்த உடன் அவை தானாக வெளிப்படுத்தப்படுகிறது.

இதுவரை அநுலா பேசிக்கொண்டிருந்தவற்றில் அநேகமானவை லயனலுக்கு கேட்கவில்லை. தனக்கு இதுவரை கிடைக்காத ஒரு சுகம் அவள் மடியில் கிடைத்தது. அதன் வெப்பமும், வாசனையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுக்கு நிம்மதியைத் தந்தது. ஒரு குழந்தை தன் தாய் மடியில் பெறும் நிம்மதி போல இருந்தது அது. அவன் வெகு நேரம் அவ்வாறு நிம்மதியுடன் இருக்கையில் அநுலா அவன் தலையைத் தடவிக் கொடுத்தாள்.

படுக்கையின் மேல் யன்னல் வழியாக அந்தி மாலை சூரியனது சிவப்பு நிற வெளிச்சக் கோடுகள் எதிர்ப் பக்கத்திலுள்ள சுவரில் பட்டன. இந்த வெளிச்சத்தினால் தலை தூக்கிப் பார்த்த லயனலுக்கு அநுலாவின் தலையைச் சுற்றி பிரகாசமான வளையம் ஒன்று இருப்பது போல தெரிந்தது. அவள் அவனுக்கு கருணையின் தாயாகத் தோன்றினாள். ஆனால் அவன் உள்ளத்தில் இருந்த இரகசியத்தை அவளிடம் சொல்லுவதற்கு இந்த நேரத்தில் அவனால் முடியவில்லை.

மீண்டும் லயனல் தன்னிடத்தில் நெருங்கிப் பழகுவான் என அநுலா எதிர்பார்த்தாள். ஆனால் இந்த எதிர்பார்ப்பு தற்காலிகமானது தானா?

இது நடந்த சில நாட்களுக்கு பின்பு அதாவது 1971 ஏப்ரல் முதலாம் திகதி பல்கலைக் கழகத்தின் அறை ஒன்றில் இருந்து பல குண்டுகள் பொலீஸாரால் கண்டெடுக்கப்பட்டன. இந்த குண்டுகள் மிகவும் சக்தி வாய்ந்த வெடி மருந்துடனும் மற்றும் ஆணிகள், கண்ணாடித் துண்டுகள் ஆகியவை கலக்கப்பட்டு சிறிய மட் பாத்திரங்களில் நிரப்பி வைக்கப்பட்டு இருந்தன. ஒரு குண்டு திடீரென வெடித்த காரணத்தினால் இவை அகப்பட்டன. இதனால் ஒரு மாணவியின் கை துண்டாகியது. இன்னும் இரு மாணவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இந்த நிகழ்ச்சிக்குப் பின் பல மாணவர்கள் ஒன்று சேர்ந்து இரகசியமாக பேசுவதைக் காணக் கூடியதாக இருந்தது. எல்லோரும் சந்தேகமாக நடந்து கொண்டனர். மாணவர்களிடையில் யார் சேகுவேராகாரர்கள், யார் புரட்சிகாரர்கள்? என எவருக்கும் தெரியாமல் இருந்தது.

அன்று மாலை அநுலா அவள் அறையில் லயனலிடம் இந்த சம்பவம் பற்றி கேட்டாள்.

"எனக்குத் தெரிந்தவர்கள் அல்ல" என லயனல் அநாவசியமாக பதில் கூறினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுநாள் முழுவதும் அநுலா, லயனலை பார்க்கவில்லை. அவன் எங்கே போனான் என்று அவளுக்குத் தெரியவில்லை.

மூன்றாவது நாளன்று மாலை நேரத்தில் அவன் அவளை தேடிக்கொண்டு அவளுடைய தங்குமிடத்திற்கு வந்தான். ஏதோ பொறுமையற்றவன்போல அவன் நடந்து கொண்டான்.

"உன்னோடு இந்த அறையில் தங்கி இருப்பவள் எங்கே?" என லயனல் அநுலாவிடம் ரேணுகாவைப் பற்றி கேட்டான்.

"ரேணுகா அவள் அம்மாவுக்கு சுகவீனம் என்று ஊருக்குப் போய் இருக்கிறாள்."

"உண்மையாகவா" என லயனல் கூறியபோது அவன் முகத்தில் சிரிப்பு உண்டானது.

அநுலா அதன் பொருளை பிறகுதான் அறிந்து கொண்டாள்.

"உங்களுக்கு தேநீர் கொண்டுவரவா?"

"சரி"

அநுலா அவள் அறைக்குள்ளேயே தண்ணீரை சூடாக்கி தேநீர் தயாரித்தாள்.

தேநீர் மிகவும் சுவையாக இருக்கிறதென அதைக் குடித்துக்கொண்டே லயனல் சொன்னான். திடீரென அவனது பேச்சில் ஒருவித அன்பு கலந்திருப்பதை அநுலா உணர்ந்தாள். உன்னை திருமணம் செய்த பிறகு நீ எனக்கு தினமும் தேநீர் போட்டு தருவாய் தானே?"

"நான் தேநீர் தயார் செய்யும் முறையை உங்களுக்கும் கற்றுத் தருகிறேன்."

"இதோ! நீ புது கதை சொல்கிறாய் நீ இருக்கும் போது நான் ஏன் தேநீர் தயார் செய்ய வேண்டும்?" இங்கே வா பெண்ணே தேநீர் கோப்பையை ஒரு பக்கம் வைத்த அவன் அவளை தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டான்.

அவர்களின் உதடுகள் ஒன்று சேர்ந்தன. தேநீரின் சூடு இன்னும் அவர்களின் வாயில் இருந்தது. இந்தச் சூட்டை அவளின் உள்ளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிந்து கொண்டது போல இருந்தது.

வெளியே மெல்ல மெல்ல இருள் பரவியது. வெளியே மரக்கிளைகளில் குருவிகள் "கீச் கீச்" என்ற சத்தத்தை எழுப்பின.

"நானும் நாளைக்கு கொழும்பு போகிறேன்" லயனல் இரகசியமாக சொன்னான்.

"தங்கையின் சில வேலைகளுக்காக."

"உங்களுக்கு விருப்பம் என்றால் நீங்கள் இன்றிரவு இங்கேயே தங்கலாம்."

"அப்போது இரவு சாப்பாடு?"

"நாம் கடைக்குச் சென்று வாங்கி வருவோம்."

"நீ இங்கே இரு. நான் போய் கொண்டு வருகிறேன்."

"நானும் வருகிறேன்'

"இல்லை அநு, நீ ஆடையெல்லாம் உடுத்திக்கொண்டு வருமுன்னர் நான் போய் சீக்கிரம் கொண்டு வரலாம்"

லயனல் சந்திக்கு போன நேரத்தில் அநுலா குளியலறைக்குச் சென்று குளித்தாள். லயனல் மீது கொண்ட அன்பும், குளிர்ந்த தண்ணீரும் அவளுக்கு புதியதொரு உணர்வை ஏற்படுத்தியது. எல்லாம் நல்லபடியாக நடக்கும் என்ற எண்ணம் அவள் உள்ளத்தில் தோன்றியது.

லயனல் இரு சோறு பார்சல்களை வாங்கிக் கொண்டு வரும்வரை அவள் அறையில் விளக்கேற்றி காத்துக் கொண்டிருந்தாள். அது அவளுடைய படுக்கை அருகையில் இருந்த சிறிய விளக்காகும். இருவரும் புத்தக மேசையின் அருகே உட்கார்ந்து சோறு சாப்பிட்டார்கள். அநுலா லயனலுக்கு சோறு ஊட்ட அவனும் அவளுக்கு சோறு ஊட்டினான். அதில் ஏதோ ஒருவித இனிமை இருவருக்கும் தெரிந்தது. இந்த செயலினால் அவர்களுக்குள் ஒருவித உணர்ச்சி உண்டாகியது. அவனுடைய விரல்கள் தன்னுடைய உதடுகளில் படும்போதெல்லாம் அவளுக்கு இந்தவித புதிய உணர்ச்சி ஏற்பட்டது. உணவு உண்ட பிறகு லயனல் குளியலறைக்குச் சென்று குளித்துவிட்டு வந்தான். அவன் சோப்பு வாசனையுடன் அறைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தபோது, அநுலா தலைமுடியை விரித்துக்கொண்டு படுக்கையில் உட்கார்ந்து கொண்டிருந்தாள்.

இதன்பின் எல்லாம் மிக சீக்கிரமாக நடந்தது. லயனல் ஒருவித ஆவேசத்துடன் நடந்துகொண்டான். அணையப்போகும் விளக்கின் வெளிச்சத்திற்கு ஒப்பான வெளிச்சம் அவன் உள்ளத்தில் தோன்றியது. அநுலாவும் அவனுடைய எல்லா நடத்தைகளுக்கும் இடமளித்தாள். அவளுக்கு தொந்தரவு, பலாத்காரம் செய்யாமல் இருக்கும் எண்ணத்துடன் ஆரம்பித்த அவன் செயல் அவளின் கற்புக்கு அழிவைத் தேடிக் கொடுத்தது. வெளியே சிறிது மழை பெய்து கொண்டிருந்தது. அநுலாவின் கண்களில் கண்ணீர் வந்தது. சந்தோஷம், துக்கம், மகிழ்ச்சி, வேதனை, ஆசை எல்லாம் கலந்த கண்ணீர்தான் அது. அவள் உடலின் மேல் இருந்த லயனல் விளக்கை அணைத்து விட்டான். வெளியே இருந்து வந்த சிறிய வெளிச்சம் மட்டும் அந்த அறையில் காணப்பட்டது.

லயனல் எவ்வளவு ஆவேசத்துடன் நடந்து கொண்டான் என அநுலா பிறகுதான் நினைத்தாள். இவ்வளவு நேரம் உள்ளத்தில் அடைத்துக் கொண்டிருந்த கோபம், வேதனை ஆகியவற்றை வெளிப்படுத்தவா அவன் இவ்வாறு நடந்து கொண்டான்? எந்த காரணத்திற்காக தான் அவனுக்கு நல்ல நிம்மதியைக் கொடுக்க முற்பட்டேன் என்ற உணர்வு அவள் உள்ளத்தில் தோன்றியது. தன்னுடைய இந்த தியாகத்தினால் அவன் விடுதலை பெற்றுக் கொண்டான் என்பதை மட்டும் அவள் உணர்ந்தாள்.

மழை தொடர்ந்து பெய்து கொண்டே இருந்தது. சிறிது வியர்வையினால் உடல் நனைந்த போது பெருமூச்சு விட்டுக்கொண்டு லயனல் அநுலாவின் அருகில் படுத்தான். அவன் சீக்கிரமாக நித்திரை கொண்டாலும் அநுலா மட்டும் விழித்துக்கொண்டு சிந்தனையில் இறங்கினாள். அவன் அந்த மாதிரி நடந்து கொள்ளதான் ஏன் இடம் கொடுத்தேன்? காமம், ஆசை எவ்வளவு இன்பமான உணர்வுகள்? உள்ளத்தை அடக்கிக் கொண்டாலும் உடலின் புலன்களில் எழுகின்ற உணர்ச்சிகளை அடக்கிக் கொள்வது அவ்வளவு இலேசான காரியமல்ல. அவளது இரு தொடைகளுக்கிடையில் ஒருவிதமான வேதனை ஏற்பட்டாலும், அதில் சுகமும் இருந்தது. புண்ணின் வேதனையால் ஏற்படும் இன்பம் எவ்வளவு தற்காலிகமானது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லயனல் தன்னைவிட்டு போகமாட்டான் என்ற நம்பிக்கை அநுலாவுக்கு இருந்தது. ஆனால் எதிர்காலத்தில் தான் முகங்கொடுக்க வேண்டிய சந்தர்ப்பங்களைப்பற்றி அவள் யோசித்தாள். லயனலைப் போல சுலபமாக நித்திரை கொள்ள பெண்ணான தனக்கு முடியவில்லையே?

அநுலா நடு இரவில்தான் நித்திரை கொண்டாள். தொடர்ந்தும் மழை பெய்கிறது.

அவள் மறுநாள் காலை எழுந்து பார்த்தபோது லயனல் அங்கு இருக்கவில்லை. அருகே அவன் எழுதியதொரு கடிதமும், தோட்டத்திலிருந்து பிடுங்கிவைத்த வெள்ளை நிற அரலிய பூ ஒன்றும் இருந்தது.

"என் அன்புள்ள அநு, உன்னை எழுப்பாமலேயே நான் போகிறேன். நான் பெற்றுக்கொண்ட விடுதலை உனக்கும் கிடைத்திருக்கும் என நான் பிரார்த்திக்கிறேன்.

நான் திரும்பி வந்த உடன் இருவரும் சந்திப்போம். என்றும் மறக்காத

உங்கள் அன்புள்ள

லயனல்

இந்த வாசனை பூ எமது அன்பின் ஞாபகச் சின்னம்.

அநுலாவின் கண்களில் கண்ணீர் கலங்கியது. உடல் வேதனைக்கு அல்ல. பல உணர்வுகள், அவள் உள்ளத்தில் தோன்றின. அன்பு, காதல், வேதனை, தியாகம் பிரிந்து செல்லுதல் மற்றும் கடந்த இரவில் நிரம்பி வழிந்த காமம், இவையெல்லாம் கண்ணீராக கண்களிலிருந்து வெளிவந்தது.

இதன்பின்பு என்றுமே அவளுக்கு லயனலைப் பார்க்கக் கிடைக்கவில்லை. ஏப்ரல் 5ம் திகதி கிளர்ச்சிக்காரர்களால் நாடெங்கும் ஆரம்பித்த பல கலவரங்கள் காரணமாக பலர் மரணமடைந்தனர். கலகக்காரர்கள் மட்டும் அல்லாமல் பொலீஸ் உத்தியோகத்தர்கள், இராணுவத்தினர், அப்பாவி மக்கள் போன்ற சிலர் அன்று உயிர் நீத்தார்கள்.

லயனல் கைது செய்யப்பட்ட பிறகு இறந்தான். நீண்ட காலத்திற்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறகு அநுலாவுக்கு கிடைத்த செய்தி என்னவென்றால் லயனல் இராணுவ முகாம் ஒன்றுக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு கொடூரமாக துன்புறுத்தப்பட்டு, அல்லது சுட்டுக் கொல்லப்பட்டு இறந்தான் என்பதாகும். எல்லா செய்திகளும் சேற்றில் மறைந்து காணப்படுபவைபோல தெளிவற்ற செய்திகளாக இருந்தன.

லயனல் திரும்பி வரும்வரை காத்துக் கொண்டிருந்த அநுலாவுக்கு, அவனது இந்த பரிதாப முடிவு ஒரு பேரிடியாக இருந்தது. சிநேகிதர்கள், சிநேகிதிகள் ஆகியோர் மூலம் லயனலின் பெற்றோர்களுக்கு கிடைத்த செய்தியைப் போலவே அவளுக்கும் கிடைத்தது. சில காலம் செல்லும்வரை பல்கலைக்கழகம் மூடப்பட்டதினால் அவள் திரும்பி தனது கிராமமான "நெடும் ஒயவுக்கு" வாடிய உடலுடன் போனாள். இனிமேலும் பல்கலைக் கழகத்திற்குச் சென்று கல்வி பயிலும் ஆசை அவளுக்கு இருக்கவில்லை.

அநுலா தன் தாயாருக்கு, தனது தோழிகள் சிலரை பயங்கரவாதிகள் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டதையும், தன்னையும் சந்தேகப்பட்டு விசாரணைக்குக் கொண்டு சென்று மீண்டும் வீட்டுக்கு அனுப்பப்பட்டதையும் கூறினாள். அதில் ஒருவித உண்மை இல்லாமல் இல்லை. அநுலாவின் அறையில் தங்கியிருந்த ரேணுகா என்ற மாணவியும் கதிர்காமத்தில் மரணமடைந்தாள். அவளும் ஒரு பயங்கரவாதி என்று அநுலா பிறகுதான் அறிந்தாள். லயனல் போலவே ரேணுகாவும் எனக்கு சொல்லாமல் எல்லாவற்றையும் எவ்வளவு இரகசியமாக மறைத்திருந்தாள்? லயனல் தன்னுடைய உண்மையான உள்ளத்தை ஏன் தனக்கு காட்டாமல் மறைத்து விட்டான்? அவன் தனக்கு மட்டும்தான் அன்பு செலுத்தினானா? அல்லது அவனுடைய விடுதலை புரட்சிக்கா? அவன் அந்த கடைசி இரவில் தன்னுடன் படுத்துக்கொண்டு ஆவேசத்துடன் நடந்துகொண்டது, எதிர் காலத்தில் நடக்கக்கூடிய ஆபத்தை அறிந்துகொண்டு தானா? அவன் அவ்வாறு நடந்துவிட்டு பிரிந்து சென்றது மட்டுமல்லாமல் தனக்கு ஒரு ஞாபக சின்னத்தையுமல்லவா கொடுத்துவிட்டு சென்றிருந்தான்.

காலம் செல்ல செல்ல அநுலாவுக்கு தன் வயிற்றில் காணப்படும் மாற்றத்தை அறியக்கூடியதாக இருந்தது. இதை எவ்வளவு காலம் அம்மாவிடம் மறைத்து வைக்கலாம். கரு வயிற்றில் வளரும்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதை மறைத்து வைக்க முடியுமா என்ன?

பல சந்தர்ப்பங்களில் நீண்ட நேரமாக ஆழ்ந்த யோசனையில் ஈடுபட்டிருக்கும் அநுலாவை காணும் போதெல்லாம் அவளுடைய ஏழை அம்மா நினைத்தது, என் மகள் தடைபட்டுப்போன கல்வியைப்பற்றி ஏதோ கவலைப்படுகிறாள் என்று தான். பெற்றெடுத்த தாய்மார்கள் கூட தங்களுடைய பிள்ளைகளைப்பற்றி எவ்வளவு சொற்பமாகத் தெரிந்து கொள்ளுகிறார்கள்?"

இதன் பின்பு மீண்டும் அநுலா விவசாயத்தில் ஈடுபட்டாள். அவள் சிரிபாலாவுடன் சிநேகிதம் கொண்டது, ஒரு அறுவடைக்கு சென்றிருந்த ஒரு சந்தர்ப்பத்தில் தான். அவன் யான் ஒய கிராமத்திலிருந்து வந்ததொரு இளைஞன் ஆவான். அவனுடைய கறுப்பு நிற உடலும், வெள்ளை நிற பற்களைக் காட்டி சிரிக்கும் விதமும் அநுலா மனத்தைக் கவர்ந்தது.

அநுலா இன்னும் லயனல்பற்றி எண்ணினாலும், வர வர அவளுடைய மனம் சிரிபால மீதும் செல்கிறது. தான் கர்ப்பிணியாக இருப்பதை உலகத்தார் அறிந்துகொள்வதற்கு முன் அவள் அவனுடன் உண்மையான அன்புணர்வுடன் சேர்ந்து கொள்ள ஆசைப்பட்டாள்.

மிக சீக்கிரமாக அவள் அவனை தன் வசப்படுத்திக் கொண்டாள். பல்கலைக்கழகத்திற்கு சென்றதொரு இளம்பெண் இவ்வாறு தன்னுடன் இணைவது சிரிபாலவின் உள்ளத்தில் ஒருவித பெருமை தோன்றச் செய்தது. அவளைப்பற்றி அவன் உள்ளத்தில் காதல் ஏற்படாமல் இல்லை.

இந்த ஆரம்ப சந்திப்பின் பிறகு இருவரும் அடிக்கடி சந்தித்தார்கள். மகளின் முகத்தில் மீண்டும் மகிழ்ச்சி உண்டாகி இருப்பதைக் கண்ட அவளது அம்மா சந்தோசம் கொண்டாள்.

"சிரிபால நல்ல மனிதன்" என்று அம்மா பலமுறை சொல்வது அநுலாவுக்கு கேட்டது. இதன் பின்பு ஒரு நாள் சிரிபாலாவும் அநுலாவும் காட்டில் தனிமையாக இருந்தனர். சிரிபால, அநுலாவுக்கு சம்மதித்தானா? அல்லது அநுலா, சிரிபாலவுக்கு சம்மதித்தாளா? என்பது தெளிவாகத் தெரியவில்லை. இருவரும் காமத்தினால் உணர்ச்சி வசப்பட்டு நடந்தார்கள்.

ஒருவாரம் சென்ற பிறகு, தான் கர்ப்பிணியாகி இருப்பதாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநுலா சிரிபாலாவுக்குத் தெரிவித்தாள்.

"என்ன செய்வது மெனிகே. நாம் இப்போது கல்யாணம் செய்வோம்". சிரிபால அவளுடைய பேச்சைக் கேட்டு சற்று சிந்தனையில் இறங்கி, தான் நின்றுகொண்டிருந்த இடத்திலிருந்த துத்திரி செடியில் 'துத்திரி' கொடி ஒன்றை உடைத்து வாயில் போட்டுக் கொண்டு சொன்னான். அதிலுள்ள பால் சுவையை அவன் வாயிலிருந்த எச்சிலோடு கலந்து துப்பினான். சிரிபால ஏதோ ஒரு தீர்மானத்தை எடுத்தது போல அங்கிருந்து எழுந்தான். "அம்மாவுக்கு சொல்லுவோம் என்னால் முடிந்தவரை நான் உன்னை பாதுகாக்கின்றேன்."

"சிரி, என் அம்மாவுக்கு உங்கள் மேல் விருப்பம்."

சிரிபால மிகவும் அப்பாவியாக சிரித்தான்.

"என்னால் உனக்கு நடந்ததை அம்மா அறிந்தால், அம்மா என்னை விரும்ப மாட்டாள்! மெனிகே!"

"அம்மா விருப்பம் தான். அதை நாம் சொல்ல வேண்டியதில்லை தானே."

"எனக்கு யான்ஓயாவில் மூன்று ஏக்கர் காணி கிடைக்கிறது. நான் அதற்கான பத்திரங்களை நிரப்பி அனுப்பிவிட்டு இருக்கிறேன். புதிய கிராமங்கள் அங்கே தோன்றிக் கொண்டிருக்கின்றன."

"உங்களுடன் நானும் வருகிறேன்."

"நீ இல்லாமல் நான் அங்கு போவதில்லை மெனிகா"

அவனிடம் மிக மிருதுவான அப்பாவி குணம் தான் இருந்தது. லயனலிடம் காணப்பட்ட அறிவும், கோபமும், சிரிபாலவிடம் இருக்கவில்லை.

அம்மாவின் அனுமதியும் அநுலாவுக்கு கிடைத்தது. சிரிபாலவின் வயதான தந்தையும், ஒரு அக்காவும் வவுனியாவில் வாழ்ந்தார்கள். சிரிபால, அக்காவின் கணவனுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் காரணமாக இவ்வாறு தனியே வந்து விட்டான்.

"அந்த ஆள் குடித்துவிட்டு கத்தியை காட்டுகிறான். எனக்கு அந்த பழக்கங்கள் பிடிப்பதில்லை." என ஒரு நாள் சிரிபால அநுலாவுக்கு சொன்னான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நான் அதிர்ஷ்டவசமாக இங்கே வந்து உங்களைச் சந்தித்து இருக்கிறேன்'

"நானும் என் அதிர்ஷ்டம் காரணமாக தான் இங்கே வந்திருக்கிறேன்" என அநுலா கூறினாள்.

'நீ பல்கலைக் கழகத்திற்கு போயிருந்தால் நான் எப்படி உன்னை சந்தித்திருப்பேன்?'

"நான் எனது கல்வியை முடித்துக்கொண்டு ஊருக்கு திரும்பி வரத்தான் இருந்தேன்." லயனலுடன் அந்த நாளில் பேசிய பேச்சுக்கள் ஞாபகத்தில் வரவே அநுலா நீண்டதொரு மூச்சுவிட்டாள். இப்போது அவை எல்லாம் வேண்டாம்; நான் இப்போது கிராமத்திற்கு வந்திருக்கிறேன்.

இருவரின் திருமணம் மிகவும் எளிய முறையில் நடைபெற்றது. சுப முகூர்த்தம் உள்ள ஒரு நாள் காலையில் அவர்கள் திருமணம் பதிவுசெய்யும் அலுவலகம் ஒன்றுக்கு சென்று தங்களது திருமணத்தை பதிவு செய்தார்கள். அம்மா பால் சோறு சமைத்தாள். அயல் வீடுகளில் உள்ளவர்கள் ஒன்று சேர்ந்து பகல் திருமண விருந்திற்காக சோறு சமைத்தார்கள். சிரிபாலவின் உறவினர்கள் ஒருவரும் இந்த திருமணத்திற்கு வரவில்லை.

அநுலாவின் தம்பிமார்கள் வாங்கி வந்த 'வெடி' கொளுத்தியதுடன் கிராமப்புற பெண்கள் நான்குபேர் 'ரபன்' அடித்தார்கள்.

மாலை நேரம் மீண்டும் வீடு காலியாகி இருந்தது. அம்மா களைப்பினால் நித்திரை கொண்டாள். இரு தம்பிமார்கள் கிராமத்தைச் சுற்றி வரச்சென்றனர். அநுலாவும் சிரிபாலவும் அறையில் தனிமையாக இருந்தனர்.

நான் கடைசியாக லயனலுடன் தனியாக இருந்த சந்தர்ப்பத்தை அநுலா கண்ணீர் கலந்த கண்களோடு ஞாபகப்படுத்திக் கொண்டாள். அவள் அருகில் கயிற்றினாலான படுக்கையின் மீது படுத்துக்கொண்டிருந்த சிரிபால அவளுடைய முதுகை தடவிக் கொண்டு "ஏன் எனது மெனிகே அழுகிறாய்" என கேட்டான்.

"இல்லை"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எனக்கு தெரியும் என்னால் தானே உனது படிப்பு நின்று போய்விட்டது. உனக்கு தேவையென்றால் மீண்டும் பல்கலைக்கழகத்திற்குப் போகலாம் மெனிகே, நான் இங்கே வயல்களை பார்த்துக்கொண்டு இருக்கிறேன்."

சிரிபால தன் மீது காட்டும் அன்பும், விசுவாசமும், அவனது மென்மையான மனதையும் நினைத்து அநுலா கண்களை துடைத்துக்கொண்டு சிரித்தாள்.

"அந்த மாதிரி சிரிப்பது மிகவும் நல்லது. என் மெனிகே சிரிக்கிறாள்."

தன்பக்கம் சாய்ந்து கொள்ளும் சிரிபாலவை அநுலா தன்னோடு அணைத்துக் கொண்டாள். லயனலைவிட சிரிபா நல்லவன் அல்லவா? என அவள் நினைத்தாள். லயனல் அவனுடைய முன்னேற்றம், விடுதலை ஆகியவை பற்றி மட்டுமே நினைத்தான். அவன் அழிந்து போனது இந்த சுயநலமான உணர்வுகளால் அல்லவா? அவன் மற்றவர்களுக்கு உதவி செய்ய போக சமூகத்தின் தவறுகள் காரணமாக அகால மரணம் அடைந்தான். ஆனால் அந்த கடைசி இரவில் அவன் தன்னோடு எவ்வளவு சுயநலமிக்கவனாக நடந்து கொண்டான்? அவன் ஒருவேளை இதுவே கடைசி ராத்திரி என்று அறிந்து கொண்டு அது போல நடந்து கொண்டானோ? அவன் என்னிடம் அவனது ஞாபக சின்னம் ஒன்றை கொடுத்துவிட்டுப் போனது அதனால் தானா? தன்னுடைய கருப்பையில் இருக்கும் கரு கொஞ்சம் அசைவது போல அநுலாவுக்குத் தெரிந்தது. சிரிபால அவளின் படுக்கையின் மீது அமரும்போது அவள் ஒரு பெட்டியை அருகில் இழுத்து அதைத் திறந்தாள். பூச்சி ஒன்று நாற்றம் கலந்த அப்பெட்டியில் இருந்து ஓடிப்போயிற்று. அவள் பெட்டியின் மேலே இருந்த பொருளாதார புத்தகத்தை கையில் எடுத்தாள். அதன் கடைசிப் பக்கத்தில் லயனல் கொடுத்த காய்ந்து போன வெள்ளை நிற அரலிய பூ இருந்தது.

அவள் அதைக் கையில் எடுத்து மூக்குக்கு அருகில் வைத்து முகர்ந்து பார்த்தாள். சிறிதளவு வாடிப் போன வாசனை இருந்தது. அன்று மஞ்சள் நிறமும் வெள்ளை நிறமும் கொண்டிருந்த அப் பூ இப்போது மண்ணிறமாக மாறி இருந்தது. வாடியிருந்த பூவில் அழகு இருக்கவில்லை. அதில் சுவையான ஞாபகம் மட்டுமே இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லயனலை நினைவுபடுத்திக் கொண்டு, அன்று இரவு நடந்தவற்றை ஞாபகப்படுத்திக்கொண்டும் கண்ணீரைத் துடைத்துக் கொண்ட அநுலா அப்பூவை மார்போடு வைத்து அணைத்துக் கொண்டாள்.

சிரிபால கொஞ்சம் கொஞ்சமாக படுக்கையின் மறுபக்கம் திரும்பினான். அநுலா அவசரமாக வாடிப்போன பூவை திரும்பவும் புத்தகத்தினுள் மறைத்து வைத்தாள். சிரிபால மெல்ல கண்களைத் திறந்து பார்த்தான்.

'அநு'

"என்ன சிரி" புத்தகத்தை திரும்ப பெட்டியில் போட்டு அவள் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து எழுந்தாள்.

"நீ இன்னமும் புத்தகம் படிக்கிறாயா?"

"இல்லை! இல்லை! சும்மா திறந்து பார்த்தேன்"

"நீ இன்னும் பல்கலைக்கழகம்பற்றி நினைக்கிறாய் போலும்"

"இல்லை சிரி" என கூறிய அநுலா சிரிபாலவிடம் வந்து அவன் தலையை தடவினாள். அவனுடைய கை அவனுடைய கை அவளுடைய வயிற்றில்பட்டது. அவன் திரும்ப நித்திரை கொள்ளும்வரை அவள் அவனருகே உட்கார்ந்து கொண்டிருந்தாள்.

காட்டுப் பக்கமாக இருந்து ஓடிவந்த தம்பிமார்களின் சத்தத்தைக் கேட்டு அவள் எழுந்து நின்றாள்.

இதன்பின்பு பல காலம் வரை அவளுக்கு பொருளாதாரப் புத்தகத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வாடிய பூவை மறக்க முடியவில்லை.

ஏழு மாதங்கள் சென்ற பின் அநுலா பெண்குழந்தை ஒன்றை பெற்றெடுத்தாள். அவள், குழந்தை பெற்றெடுத்தது வீட்டிலிருந்த கயிற்றுப் படுக்கையின் மீது தான். தாதி ஒருவள் அவளுடைய உதவிக்காக வந்திருந்தாள்.

வயலிலிருந்து ஓடி வந்த சிரிபால அறைக்கு வெளியே அங்குமிங்குமாக பொறுமையற்றவனாக நடந்தான். அநுலா அழுதுகொண்டே ஒவ்வொரு நிமிடமும் அவன் நின்று கொண்டிருந்த அறைப்பக்கம் பார்த்தாள். அறையின் ஜன்னல் மூடப்பட்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகல்நேரம் ஆகும்போது அநுலாவின் அழும் குரல் மேலும் அதிகமாகிவிட்டது. பொறுத்துக் கொள்ள முடியாமல் சிரிபால வீட்டு வாசலுக்கு வந்து அம்மாவை அழைத்தான். அவள் அவனுக்கு வெளியே இருக்குமாறு கூறினாள். சிரிபால அநுலாவின் அழுகையைப் பொறுக்க முடியாமல் வெளியே பாக்குத் தோட்டப் பக்கமாக சென்று இரு காதுகளையும் தன் கையால் மூடிக்கொண்டு இருந்தான். மரத்தில் இருந்த ஒரு காகம் கரைந்தது.

"நீயும் கத்துகிறாயா காக்கா?" சிரிபால மேலே பார்த்து காக்காவோடு பேசினான்." ஐயோ! மெனிக்காவுக்கு துன்பம், தொந்தரவு இல்லாமல் பிள்ளை பிறக்க வேண்டும். அப்படி நடந்தால் நான் உனக்கு தானம் கொடுப்பேன். - காக்கா தானம்.

அநுலாவின் உதவிக்காக வந்திருந்த ஹீன் எதனா என்ற பெண் சிரிபாலவை தேடிக்கொண்டு ஓடி வந்தாள்.

"வா சிரிபால உனக்கு பிள்ளை பிறந்தது."

"பிள்ளை பிறந்ததா?"

"ஆம். ஆம் பெண்பிள்ளை உன்னைப்போலவே இருக்கிறாள்."

சந்தோசம் அடைந்த சிரிபால அறைக்குள்ளே ஓடினான். இன்னமும் இரத்த வாசனையோடு இருந்த குழந்தையை அளவில்லா அன்புடன் தனது இரு கைகளாலும் வாரி எடுத்துக் கொண்டான்.

மழலைச் சிறுமி கைகளை சுருக்கிக் கொண்டு அசைந்தாள். "சின்ன பூச்சியைப்போல்" என சிரிபால சொன்னான்.

அநுலா சிரித்தாள்.

"மெனிக்காவுக்கு தொந்தரவு இன்றி குழந்தை பிறந்தால் நான் காக்காவுக்கு தானம் வழங்குவேன் என வேண்டிக் கொண்டேன் என்று அவள் பக்கம் உட்கார்ந்தவாறு சொன்னான்.

மறுநாளே இந்த தானம் தயாராகி விட்டது. பாக்குத் தோட்டத்தில் வைத்த தானம் காக்காக்களுக்கு சுவைமிக்க உணவாக இருந்தது. அவைகளது கூச்சல் மத்தியானம்வரை கேட்டது.


அநுலா தன் மகளுக்கு 'விசாகா' என பெயர் இட்டாள். சிரிபால

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பை முழுமையாக தன் மனைவிக்கே விட்டுவிட்டான். "உனது குழந்தை உன்னைப் போலவே உள்ளது". சிரிபால கூறினான்.

உண்மையிலே விசாகா தன்னைப் போலவே இருக்கிறார் என அநுலா நினைத்தாள். ஆனால் அவளுடைய இரு உதடுகளும் லயனலின் உதடுகள் போல அல்லவா உள்ளது? கண்கள் அநுலாவின் கண்கள் போல இருந்தன. ஆனால் அவன் அம்மா, "குழந்தை சிரிபால போலவே உள்ளது" என கூறினாள் சிரிபால சிரித்தான்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 4

# ஜானகி - சிவன்கரன்
# வசந்தராஜா

## 1972

ஆகஸ்ட் மாத வெப்பநிலை மிகவும் கடுமையாக இருந்தது. கடல் ஓரமாக வீசும் உப்புக்கலந்த காற்றும் மிகவும் கொடுமையாக இருந்தது. மாலை நேர சூரிய வெளிச்சம் பொன் நிறமாக பிரகாசித்தது.

சின்னக்குழந்தையை அணைத்துக் கொண்ட ஜானகி மக்கள் கூட்டத்தில் இருந்து சற்று விலகி கோபுரத்திற்குக் கீழ், சுவர் அருகில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்த மாமரத்தின் நிழலுக்கு போனாள்.

இது நல்லூர் உற்சவ காலம். கந்தசாமி கோவிலின் சுற்றிலும் விழாக்கோலம் காணப்பட்டது. மக்கள் கூட்டம் அதிகமாக இருந்தாலும், பரபரப்பு இருக்கவில்லை. எல்லோரும் பக்தியினால் மனம் நிறைந்து நடந்து கொள்கிறார்கள் என ஜானகி நினைத்தாள்.

மாமரத்தடியில் சிலர் உட்கார்ந்து கொண்டிருந்தனர். கோவிலில் நடைபெறும் பூசைக்கு இடையூறுகள் செய்யாமல் நிசப்தமாக இருந்தனர். ஓரிருவர் அப்படி ஏதாவது பேசினால் மிகவும் மெல்லிய குரலிலேயே பேசினர். மரத்தடியில் இருந்த ஜானகியின் பார்வை வயது சென்ற ஒரு சிவ பக்தன் மீது சென்றது. அவன் மஞ்சள் நிற ஆடை அணிந்து, பூணூல் தரித்திருந்தான். நீண்ட வெள்ளை தாடியோடு அவன் ஆவேசம் கொண்டவன் போல தென்பட்டான். அவன் மஞ்சள் தண்ணீரில் குளித்திருக்கலாம். தான் ஒரு பிராமணன் என்ற பெருமையில் அவன் முகத்தைத் திரும்பிக் கொண்டான். அவனுக்கு தொந்தரவு கொடுக்காமல் ஜானகி கடும் வெயிலில் வேறுபக்கமாக இன்னொரு மரத்தடிக்குப் போனாள். தன்னுடைய அப்பா இருந்திருந்தால் அந்த சிவ பக்தன் போல இருந்திருப்பார் • என அவள் நினைத்தாள். நடுத்தர வயதுடைய ஒவ்வொருவரையும் காணும்போது அவளுக்கு தன் அப்பா நினைவு வருகிறது. அவருடைய அகால மரணம் நடந்து இப்போது பதின்மூன்று ஆண்டுகள் ஆயின. ஜானகி பெருமூச்சிட்டாள். "அப்பா" என்று அவள் அறியாமலேயே கூறினாள்.

தன் மடியில் இருந்த மகனின் மேல் படும்படியாக அவள் நீண்ட பெருமூச்சு விட்டாள். குழந்தை எதுவும் அறியாமல் படுத்துக் கொண்டிருந்தான். "என் வசந்த ராஜா" என அவனை அழைத்தாள். "என்னுடைய மகனே" பிள்ளையை நினைத்தாலே அவளுடைய மார்பில் பால் நிறைகிறது.

தன் கணவராகிய சிவன்கரன் மிக நீண்ட நாட்களுக்குப் பின் சந்தித்த சிநேகிதன் ஒருவருடன் பேசுவதற்கு கோவிலிருந்து வெளியே சிறிது தூரம் சென்றான். அவர்கள் எங்கே போனார்கள் என்று ஜானகிக்கு தெரியவில்லை. கோபுர அருகில் காத்துக் கொண்டிருந்த ஜானகி பிள்ளைக்கு பால் கொடுக்கும் எண்ணத்துடன் மக்கள் கூட்டத்திலிருந்து வேறு பக்கம் திரும்பிக் கொண்டு தன்னுடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளை புடவையால் முக்காடு அணிந்தவாறு பிள்ளைக்கு முலைப்பால் ஊட்டும்போது அவளுக்கு அம்மா நினைவு வந்தது. தனக்கும் தன்னுடைய தாய் இவ்வாறு பால் ஊட்டி இருக்கலாம் அல்லவா?

இப்படிப்பட்ட அம்மாவின் சொல்லை கேட்காமல் வல்வெட்டித்துறைக்குப் போன தம்பியின் நினைவு அவளுக்கு வந்தது. "பதினாறு வயதுடைய தம்பி இரங்கநாதன் இவ்வளவு மோசமாக வளர்ந்ததற்குக் காரணம் அப்பாவின் மறைவுதான்" என அம்மா பல முறை சொல்வதை ஜானகி கேட்டிருந்தாள். "அப்பா இருந்திருந்தால் இவன் இவ்வளவு தூரம் திரியமாட்டான்" என தங்கமணி கூறுவதையும் ஜானகியின் மனதிற்கு வருகிறது. தான் ஏன் அவ்வாறு திரிவதற்கு பழகவில்லை? என அவள் யோசிக்கின்றாள். ஒருவேளை இரங்கநாதன் செல்லப் பிள்ளையாக வளர்ந்ததாலே அப்படி இருக்கலாமா? அப்பா இல்லாத பிள்ளை! என கூறிக்கொண்டு மிக செல்லமாக இரங்கநாதனை வளர்த்தார்கள். தானும் அப்பா இல்லாத ஒரு பெண் பிள்ளைதானே? ஆனால் ஜானகி தன் உள்ளத்தை அம்மாவுக்காக திடப்படுத்திக் கொண்டாள். அம்மா அனுபவித்த துன்பத்தை அவள் அறிவாள். அப்பா காலமான பிறகு அம்மா யாழ்ப்பாணம் வந்தது ஜானகிக்கு சற்று ஞாபகம் இருக்கிறது. அது புகை வண்டியில் ஏறி வந்த நீண்ட தூர பயணமாகும்.

அதன் பின்வு அவர்கள் தமது சுற்றத்தாரின் வீடுகளில் வாழ்ந்தார்கள். அம்மாவின் தூர உறவினராகிய மகேஸ் மாமா இவர்களில் மிகவும் நெருங்கியவராவர். "கறுப்பு மாமா" என அழைக்கப்பட்ட மகேஸ் கருப்புள்ளே அப்போது திருமணம் செய்தவராக இருந்தார். புத்தூரில் அவருக்கு சிறு கடை ஒன்று இருந்தது. ஜானகி பெரியவளாக வந்ததும் இந்த கடைக்கு பின்னால் இருந்த ஒரு அறையில் தான். அது தென்னை ஓலையால் வேயப்பட்ட ஒரு சிறிய குடிசையாகும். இந்த இருள் சூழ்ந்த குடிசையில் ஜானகி பத்து நாட்கள் தங்கி இருந்தாள். இதன்பிறகு வண்ணான் இனத்தைச் சேர்ந்த மாமி குளிப்பாட்டிய பின்னர் தம்மினப் பெண்களால் குளிப்பாட்டப்பட்டு வெளி உலகத்திற்கு நடந்து வந்தது அவள் நினைவில் உள்ளது. மகேஸ் மாமன், தன்னுடைய அப்பாவைப் போலவே நடந்து கொண்டார். தனது பத்து அல்லது பதினொரு வயதில் மகேஸ் மாமா மற்றும் குடும்பத்தவர் ஒரு சிலருடன் கதிர்காமம் சென்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் நினைவில் இன்னும் இருக்கிறது. அதற்கு விசேட காரணமும் உண்டு.

மகேஸ் மாமாவின் மனைவியாகிய ராகவதி சிறிது காலம் உடல் நிலை சரி இல்லாமல் இருந்து, மரணமடைந்தாள். அதன் காரணமாக மூன்றுமாதத்திற்கு பிறகுதான் கதிர்காமம் போனார்கள்.

இதன் பிறகு அம்மாவும், தானும், தம்பியும் மகேஸ் மாமாவின் வலையில் சிக்கிவிட்டோம் என ஜானகி நினைத்தாள். விதவையாகிய அம்மா, மகேஸ் மாமாவின் மனைவியானாள். மகேஸ் மாமா அம்மாவை சட்டப்படி திருமணம் செய்து கொள்ளவில்லை.

ஆண்களும், பெண்களும் தத்தமது வாழ்க்கைத் துணைவர்களை இழக்கும்போது இருவிதமாக மதிக்கப்படுகிறார்கள் என்று ஜானகி அறிந்து கொண்டாள். ராகாவதி ஆன்ரி இறந்து போன பிறகு, மகேஸ் மாமாவுக்கு ஆறுதல் கூறிய எல்லோரும் ராகாவதி மிகவும் அதிர்ஷ்டசாலி என கூறினார்கள். கணவருக்கு முன் இறந்துவிட்ட அவள் எங்கேயாவது நல்ல இடத்தில் பிறந்திருப்பாள் என சிலர் கூறினார்கள். ஆனால் தன்னுடைய அப்பாவின் மரணத்தினால் விதவையாகிய அம்மாவை எல்லோரும் துரதிர்ஷ்டவசமான பெண் என்ற நோக்கில்தான் பார்த்தார்கள். தன்னுடைய கடவுளை இழந்த பாவி ஒருத்தி என கருதினார்கள். 'ராகாவதி ஆன்ரி' இறந்து மறு உலகம் செல்லும் போது சுமங்கலியாக கழுத்தில் அணிந்த பொன் தாலியுடன் போனாள். ஆனால் அப்பாவின் மரணத்திற்குப் பிறகு ஜானகியின் அம்மாவுக்கு பொன் தாலி இல்லாமல் போய்விட்டது. அப்பா இறந்த பிறகு அம்மா பொன் ஆபரணங்கள் எதுவும் அணியவில்லை. அவள் வெள்ளை நிற புடவை மட்டுமே அணிந்தாள். தன் அம்மா தன் இரு பிள்ளைகளின் எதிர்கால நன்மையைக் கருதித்தான் மகேஸ் மாமாவின் வேண்டுகோளுக்கு இணங்கினாள் என அவள் பின்னர் அறிந்தாள்.

தானும் மகேஸ் மாமாவுக்கு கீழ்படிந்து எல்லாவற்றையும் செய்தாள். தான் வயதுக்குவந்த நாள் விழாவின் போது, பச்சையான முட்டையுடன் நல்லெண்ணெய் கலந்து சமைத்த பிட்டு சாப்பிட்டதும், அம்மாவைப் போலவே மௌனமாக இருந்ததும் ஒரு பெண்ணுக்குரிய கடமையாகும் என்ற நினைப்பில் தான். இந்த கடமைகளுக்கு கீழ்படிந்து செயற்படும் நோக்கத்துடன் மகேஸ் மாமாவின் சொந்தக்காரனாகிய சிவன்கரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாதுரையை ஜானகி திருமணம் செய்து கொண்டாள்.

அப்பா உயிருடன் இருந்திருந்தால் தனக்கு இந்த கதி ஏற்பட்டிருக்காது என ஜானகி பலமுறை நினைத்தாள். அப்பா இருந்திருந்தால் தான் மேலும் கல்வி பயின்று ஒரு ஆசிரியையாகி இருப்பாள் என் நினைத்தாள். தான் அப்பாவின் கையைப் பிடித்துக் கொண்டு பாடசாலைக்கு போன விதத்தை அவளுக்கு நினைவில் இருக்கிறது. ஒருநாள் பகல், தான் அப்பா வரும்வரை காத்துக்கொண்டிருந்து; அவர் வராத காரணத்தினால் தனியாக வீட்டுக்கு ஓடி வந்தது, அவள் ஞாபகத்திற்கு வந்தது. அவளுடைய வாழ்க்கை அன்று தொட்டு மாறிவிட்டது அல்லவா? எல்லா கனவுகளும் உடைந்து போனது அன்று தான்!

நெருப்பினால் எரியாமல் தப்பி இருந்த சிறு சிறு பொருள்களை எடுத்துக்கொண்டு, அம்மாவின் கையைப் பிடித்த வண்ணம் அன்று இரவில் பிரதான வீதியில் நடந்து வந்தது ஒரு பயங்கரமான கனவைப் போல அவளது நினைவுக்கு வந்தது. தம்பி இரங்கநாதனுக்கு இது ஒன்றும் தெரியாது. பாவம் அப்பா இல்லாத சிறுவன். பாவம் அப்பா இல்லாத சிறுவன். பாவம், பாவம்.

தன்னுடைய பிள்ளைக்கு அவ்வாறான துரதிஷ்டம் ஏற்படக்கூடாது என ஜானகி மகனுக்கு பால் ஊட்டும் போது நினைத்தாள். குழந்தையான வசந்தராஜா பால் குடிக்கும் போது ஜானகியின் மார்பில் அந்த வெப்பம் தெரிந்தது.

தன்னுடைய தம்பி, அம்மாவை விட்டு சென்றது போலவே, என்றாவது வசந்தராஜாவும் தன்னைவிட்டு போவானா? இரங்கநாதன் அம்மாவை ஏசிவிட்டு வல்வெட்டித்துறைக்குப் போனது அங்கே ஒரு கத்தோலிக்க பெண் ஒருத்தி காதலித்த காரணத்தினால் என்பதை ஜானகி இப்போது உணர்ந்தாள். அம்மா பொறுக்க முடியாத கோபத்துடன் இருந்தாள். அவள்தான் ஜானகிக்கு இதைச் சொன்னாள். சிவ பக்தியுள்ள இந்து சமய குடும்பத்தில் பிறந்த ஒருவன் கத்தோலிக்கப்பெண் ஒருத்தியை காதலிப்பது எப்படி? அது மட்டும் அல்ல. ஜானகியின் குடும்பத்தினர் வெள்ளாளர் ஜாதியைச் சேர்ந்தவர்களாவர். இரங்கநாதனின் காதலியின் குடும்பத்தினர் மீன் பிடிப்பவர்களாவர். மீன் பிடிப்பவர்கள் 'தோறு', 'சூடயோ', 'சவாலயோ'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நெத்தலி', 'அறக்குலா, 'சூடயன்' ஆகிய மீன்களை வலைவீசி பிடிப்பது போல இரங்காவை வலைவீசி பிடித்தார்கள் என்று அம்மா கூறுகிறாள். அவர்கள் இந்தியாவிலிருந்து கள்ளத்தனமாக பொருட்களை இங்கு கொண்டு வருபவர்கள் "கள்ளத்தோணி" மகேஸ் மாமா கூறினார். "இல்லை என்றால் எப்படி இவ்வளவு செல்வாக்கோடுஇருக்க முடியும்? வல்வெட்டித்துறையில் வசிப்பவர்கள் இப்படித்தான்."

இரங்கநாதன் தன் குடும்பத்தினருடன் வல்லிபுர ஆழ்வார் கோவிலுக்கு போன சமயத்தில் தான் தன் காதலியாகிய அருணாக்ஷியை முதன்முதலாக சந்தித்தான். அம்மா தங்கமணி, விஷ்ணு கடவுளை பூசிக்கவே அங்கே போவாள். வல்லிபுரம் கோவில் விஷ்ணு, கிருஷ்ணர் ஆகிய தெய்வங்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததொரு தேவஸ்தானமாகும். கோவிலிலே தெய்வங்களை வணங்குதல், தியான மண்டபத்தில் பூசை செய்தல், கடவுளை பிரார்த்தனை செய்தல் ஆகியவற்றை ஜானகி தன் அம்மாவிடம் இருந்து கற்றுக் கொண்டாள். சிறு வயதில் இந்த வழிபாடுகளை மிக சிறப்பாக நடத்திய தம்பி, இப்போது மெல்ல மெல்ல இவற்றிலிருந்து விலகி தூரமாகச் செல்வதை ஜானகி அறியாமல் இல்லை.

தம்பி தன் அசட்டுத்தனமான காரியங்களால் மகேஸ் மாமாவிடம் பலமுறை அடிவாங்கியது ஜானகியின் ஞாபகத்திற்கு வந்தது. மகேஸ் மாமா ஜானகிக்கு அன்பு செலுத்தி பல பரிசுகள் தருவார். இரங்கநாதனை வேறு விதமாக கவனிப்பார். கதிர்காம பிரயாணத்தின் போது இது தெளிவாகியது. மகேஸ் மாமா முதல் முதலாக இரங்கநாதனுக்கு அடித்தது இந்த பிரயாணத்தின் போதுதான். மகேஸ் மாமாவின் அளவில்லா அன்புக்கு பாத்திரமாய் விளங்கியதும், இந்த கதிர்காமப் பிரயாணத்தில் தான். அவளுக்கு கதிர்காமப் பிரயாணம் இன்றுவரை ஞாபகத்தில் இருப்பதற்கு காரணமும் அதுவே. எல்லோரும் சேர்ந்து மடத்தில் படுத்துக் கொண்டிருக்கையில், நடு இரவில் அவனுடைய கைவிரல்கள் தன்னைத் தேடி வந்தது. ஜானகிக்கு இப்போதும் கூட மிக அச்சத்தைக் கொடுத்தது. ஆனால் கதிர்காமம் ஒரு புண்ணிய பூமியாதலால் அவள் இதைப்பற்றி யாரிடமும் சொல்லவில்லை. அம்மாவுக்காக எல்லா கஷ்டங்களையும் பொறுத்துக் கொண்டாள். இதைப்பற்றி ஏதாவது சொன்னால் ஜானகியும், அம்மாவும், தம்பியையும், வெளியே துரத்தி விடுவதாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகேஸ் மாமா அடிக்கடி பயமுறுத்தினார். இதனால் ஜானகி எல்லாவற்றையும் இரகசியமாக வைத்துக் கொண்டாள். அவள் கடவுளுக்கு மாத்திரம் தன் கஷ்டங்களைக் கூறினாள். இதுவரையும் மகேஸ் மாமாவுக்கு கடவுள் தண்டனை கொடுக்கவில்லை.

கதிர்காமம் சென்று வந்த நாள் முதல், தான் வீட்டில் தனியாக இருந்த எல்லா நேரத்திலும் மகேஸ் மாமா ஜானகியை தன் மடியில் கிடத்திக் கொண்டான். ஆனால் அவன் செய்த சேஷ்டைகளி எல்லாம் ஒரு எல்லைக்குள்ளேயே இருந்தது. எல்லை கடந்து செல்லும் அளவுக்கு அவன் கொடூரமாக நடந்து கொள்ளவில்லை. ஜானகி மகேஸ் மாமாவின் மடியில் உட்கார்ந்து, அவனுக்கு வேண்டியதை செய்ய இடமளித்து, தன் அப்பாவைப்பற்றி நினைத்துக் கொண்டே இருந்தாள். அப்பாவுடன் சேர்ந்து அவள் வேறு ஒரு உலகத்திற்கு பறந்து போனாள். அந்த உலகத்தில் துன்பங்கள் இருக்கவில்லை. மகேஸ் மாமா திருப்தி அடைந்த பிறகு ஜானகியை மடியிலிருந்து இறங்கச்செய்து, அவளுக்கு பனை வெல்லம் அல்லது மிட்டாய் கொடுப்பான். ஜானகி இந்த மிட்டாய்களுக்கு ஆசை கொண்டாள். இரங்கநாதனுக்கு அப்படியான பரிசுகள் கிடைக்கவில்லை. அவள் தம்பிக்கு கொடுப்பதற்காக மிட்டாய்களை மறைத்து வைத்தாள்.

ஆனால் இந்த மிட்டாய்களால் இரங்கநாதன் திருப்தி அடையவில்லை. அவனுக்கு தேவைப்பட்டது வல்லிபுரம் கோவிலுக்கு சென்று திரும்பி வரும்போது சந்தித்த அருணாக்ஷி மாத்திரமே. திரும்பிவரும்போது அவர்கள் மகேஸ் மாமாவின் சிநேகிதன் ஒருவனை சந்திப்பதற்கு வல்வெட்டித்துறைக்குச் சென்றார்கள். அங்கே ஒரு கடை அருகில் இரங்கநாதனின் கண்கள் அருணாஷியைச் சந்தித்தன. காதல் வயப்பட்ட இரங்கநாதன் அருணாஷியின் கண்களாகிய வலையில் சிக்கிக் கொண்டான்.

இதன் பிறகு இரங்கநாதன் ஒரு புதுமையான மனிதன் ஆனான். அவன் அம்மாவுடன் சண்டை போடத் தொடங்கினான். கடைசியில் மகேஸ் மாமாவிடம் அடிவாங்கிக்கொண்டு வீட்டை விட்டு ஓடிச் சென்றான்.

ஜானகி மகேஸ் மாமாவின் வேண்டுகோளுக்கிணங்க சிவன்கரனை திருமணம் செய்து கொண்டாள். அப்பாவியான சிவன்கரன் எதுவித குற்றமற்ற ஒரு இளைஞன். ஆனால் அவன் சுறுசுறுப்பு இல்லாதவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் நீர்வேலியில் தனது பெற்றோர்களின் வயலில் வேலை செய்தான். அங்கு காய்கறி, வகைகள், புகையிலை, வெங்காயம் ஆகியவை பயிரிடப்பட்டன. மேலும் அவன் தோட்டத்தில் சில மாமரங்களும் இருந்தன. சிவன்கரன் பிறப்பிலேயே ஒரு கமக்காரன். அவன் நாட்டியதெல்லாம் பிரமாதமாக வளர்கிறது என்று எல்லோரும் சொல்வதைக் கேட்கும்போது ஜானகி பெருமிதம் கொண்டாள். சிவன்கரன் தன்னைவிட நிலத்திற்கே அன்பு செலுத்துகிறான் என்று அவள் நினைத்தாள். அவன் காலை தொடக்கம் மாலை நேரம் வரை வயலில் வேலை செய்கின்றான். மாலை நேரத்தில் கிணற்றிலிருந்து வயல்களுக்கு தண்ணீரை இறைக்கின்றான். அவனுடைய அப்பாவாகிய அமிர்தலிங்கத்துடன் சேர்ந்து அறுவடையான பொருட்களை யாழ்ப்பாணம் எடுத்து செல்கின்றான். அநேக சந்தர்ப்பங்களில் அதிக களைப்பின் காரணமாக நித்திரை கொள்கின்றான். சில நேரங்களில் ஏதோ ஒரு கனவை கண்டு எழுந்து நிற்கும் அவன், அவளையும் எழுப்பி தன் ஆசைகளை தீர்த்துக் கொள்ளுகின்றான். எல்லாம் சிறியதொரு கனவைப் போல அவனுக்கு தென்படுகிறது. சிவன்கரன் மீண்டும் நித்திரை கொள்கின்றான். ஜானகி இருளில் எழுந்து நின்று பனை ஓலையால் வேயப்பட்ட கூரையைப் பார்த்துக்கொண்டு சிந்தனையில் இறங்குகின்றாள்.

அம்மா, அப்பா, தம்பி, மகேஸ் மாமா. மகேஸ் மாமா இப்போது அவளை தன் மடியில் வைத்துக் கொள்வதில்லை. அவை எல்லாம் கடந்த கால கனவுகளாகி விட்டன. அம்மா, அப்பா எவ்வாறு இறந்தார் என்பதை மகேஸ் மாமா சொல்ல கேட்டறிந்தாள். அம்மா அதைப்பற்றி பேசவில்லை. "சிங்களவர்கள் உன் அப்பாவைக் கொன்று விட்டார்கள் ஜானகி!" என்று ஒரு நாள் மகேஸ் மாமா அவளை மடியில் வைத்துக் கொண்டிருக்கும் போது சொன்னான். "உன் அப்பாவின் மேல் பெற்றோல் ஊற்றி கொளுத்தினார்கள். அது உனக்கு ஞாபகம் இல்லை. கொடூரமான மக்கள் ஜானகி அழத்தொடங்கினாள். அப்போது அவளுக்கு பிச்சை எடுக்கும் ஒரு பெண்ணைப் பற்றிய ஞாபகம் வந்தது. அந்த பிச்சைக்காரி தனக்கும், அம்மாவுக்கும் உதவி செய்தாள் அல்லவா? ஆனால் ஜானகிக்கு தன் அழுகையை நிறுத்திக்கொள்ள முடியாமல் போன பிறகு மகேஸ் மாமா "என் பெண்ணே! என் தங்கமான பெண்ணே" என்று அவளுக்கு ஆறுதல் கூறினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னுடைய தங்கம் போனது!"

"தங்கம் போனது!" சிவன்கரனை தான் திருமணம் செய்து கொண்டபோது தன்னை எண்ணி அவ்வாறு பேசினார் அல்லவா? ஆனால் இவை எல்லாம் தற்காலிகமான வார்த்தைகளேயாகும்.

"ஜானகி!"

சிவன்கரனின் குரலைக் கேட்டு ஜானகி திடுக்கிட்டாள். தலையைத் தூக்கிப் பார்த்தாள். அவள் இதுவரை தன்னுடைய மார்பில் பால் குடித்துக்கொண்டிருக்கும் மகனின் முகத்தைப் பார்த்தவாறு யோசனையில் இருந்தாள்.

வா கோவிலுக்குள் போவோம் என அவன் சொல்ல ஜானகி குழந்தையைத் தூக்கிக்கொண்டு எழுந்தாள். சிவன்கரன் ஒரு கையில் பழங்களைக் கொண்ட கூடை ஒன்றையும் மறுகையில் பால், ஊதுபத்தி, கற்பூரம், எண்ணெய், போத்தல் ஆகியவை அடங்கிய ஒரு சாக்குப் பையை வைத்திருந்தான். அவன் நெற்றியில் விபூதி பூசியிருந்தான். பஞ்ச பூதங்களின் பூசைக்கு தேவையான எல்லா பொருட்களும் அவனிடம் இருந்தன. அவன் வெள்ளை நிற சாரம் உடுத்திக் கொண்டிருந்தான்.

மாலை நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. கோவிலில் சங்கு ஊதும் சத்தமும், பேரிகை ஓசையும், மணி அடிக்கும் சத்தமும் வானத்தை பிளந்தன. குழந்தை எழுந்து அழத் தொடங்கினான். அந்த அழுகையுடன் காகங்கள் கரையும் ஓசையும் கலந்தது.

கோபுரத்தின் அப்பால் இருந்த மண்டபத்தில் கூடி இருந்த பக்தர்கள் தமது பூசைத்தட்டுகளை அங்கு வைக்கிறார்கள். ஒரு இடத்தில் சிவலிங்கத்திற்கு பால் ஊற்றுகிறார்கள். சிவபெருமானது உருவத்தை பிரதிபலிக்கும், கறுப்புநிற கல்லால் செய்யப்பட்ட சிவலிங்கம் காணப்படுகிறது. அதைச் சுற்றிலும் பூக்களும் ஊதுபத்தி வாசனை நிரம்பி இருந்தது. பாலையும் தேனையும் அதன் மேல் அபிஷேகம் செய்கிறார்கள். பல பக்தர்கள் சத்தம் ஏனைய சத்தங்களுடன் கலக்கின்றது. அதன் மத்தியில் சிறு பிள்ளைகள் அழுகிறார்கள். நாய்கள் வாலை ஆட்டுகின்றன. பூசைத் தட்டுகளில் உள்ள பழங்களின் வாசனைக்கு ஈர்க்கப்பட்ட குரங்குகள் மரத்திலிருந்து கீழே இறங்குகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் கூட்டத்தின் மத்தியில் அங்கு பிரதிஸ்டை செய்யப்பட சிவலிங்கத்தை நெருங்கிய சிவன்கரன், தன் கையில் இருந்த பாலை அதன் மேல் அபிஷேகம் செய்தான். ஜானகி இதை கண்டாள். சிவன்கரன் சட்டை அணிந்திருக்கவில்லை. அவன் உடம்பின் மேற்பக்கம்தான் அவளுக்கு அதிகம் தென்பட்டது. அவன் வயலில் வேலை செய்யும் போது வியர்வையால் நனைந்திருக்கும் அவனது முதுகைத்தான் அவள் பார்த்துக் கொண்டிருப்பாள். அவன் மேல் ஒருவித சிரத்தை அவள் உள்ளத்தில் தோன்றியது. அவள் கடவுளை நேசிப்பது போல சிவன்கரனையும் நேசித்தாள். சுற்றுப்புறமெங்கும் வீசிய நறுமண வாசனையும் மற்றும் பூக்களின் வாசனையும் அவளது பக்தி உணர்வுகளை மேலும் அதிகப்படுத்தியது. இவ்வோசைகளால் தன்வசப்பட்ட குழந்தை இப்போது மௌனமாக கண்களை திறந்து பார்த்துக் கொண்டிருக்கிறது. அவனுடைய நெற்றியில் இருந்த சந்தனப் பொட்டைக் கண்ட ஜானகி மகன் முக்கண்ணனா? என்று நினைத்தாள். சிவபெருமானுக்கு மூன்று கண்கள் நெற்றிக் கண்பார்வையால் உலகம் அழிந்து சாம்பலாகியதல்லவா? தன்னுடைய மகனுக்கு அவ்வாறான சக்தி இல்லை. எல்லா சக்திகளும் சிவபெருமானுடையது. உலகத்தை அழித்துவிடுவதும், அதை மீண்டும் உருவாக்குவதும் சிவபெருமானின் செயலாகும்.

சிவா! சிவா! என்ற ஓசையும், ஓம் நமோ! அரோகரா அரோகரா சத்தமும் பேரிகை சத்தங்கள் மணி ஓசைகள் எல்லாம் ஒன்று கலந்து வந்தன. சிவ சிவா... சிவ சிவா... சிவ சிவா..

ஜானகிக்கு மயக்கம் வருவது போல இருந்ததினால் மக்கள் கூட்டத்தில் இருந்து அப்புறமாக சென்று கோவில் மைதானத்திற்கு அருகில் வந்தாள். அங்கேயும் மக்கள் கூட்டம் இல்லாமல் இல்லை. கோவிலுக்குள்ளே இருந்த அளவுக்கு கூட்டம் இல்லாவிட்டாலும் கொஞ்சமாக மக்கள் கூட்டம் இருந்தது. மணல் தரை கொஞ்சம் கொஞ்சமாக குளிராகிறது. ஆயிரக் கணக்கானோரின் காலடிகள் பட்ட இந்த மணலில் அவை அங்குமிங்கமாக சிதறிக் காணப்படுகின்றன.

ஜானகி குழந்தையைத் தூக்கிக் கொண்டு, சிவன்கரன் மீண்டும் வெளியே வரும்வரை கோபுரம் அருகில் உட்கார்ந்திருந்தாள். ஒருமுறை அம்மா சொல்லித் தந்த கதை ஒன்று அப்போது அவள் ஞாபகத்தில் வந்தது. யாழ்ப்பாணம் என்ற பெயர் எப்படி உண்டானது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா அதற்கு சுவையான ஒரு கதை கூறினாள்.

"பழைய காலத்தில் சங்கீதம் பாடும் ஒருவர் இந்தியாவில் இருந்தார். அவர் யாழ் வாசிப்பதில் மிகவும் கெட்டிக்காரன். யாழ் வாசித்துக்கொண்டு எல்லா இடத்திற்கும் போகின்றான். அந்த மனிதனுக்கு யாழ் வாசிப்பது மட்டுமல்ல, சோதிடம் சொல்லவும் முடியும். அவனிடம் தெய்வீக ஞானம் இருந்தது. இவ்வாறு எல்லா இடங்களுக்கும் போவதால் அவனுக்கு மனைவியைக் கவனிக்க முடியாமல் போனது. எனவே மனைவி அவனுக்கு ஏசுகின்றாள். அவனை துன்புறுத்துகின்றாள் - மிகவும் கொடுமை செய்கிறாள். அந்த மனிதன் அவளிடமிருந்து தப்பித்துக்கொள்ள இந்தியாவிலிருந்து வெளியேறி இலங்கைக்கு வந்தான். இந்த யாழ் வாசிப்பவனைப்பற்றி அரசனுக்கு செய்தி கிடைத்தது. யாழ் வாசிப்பனின் திறமையைப்பற்றியும், ஞான சக்தையைப் பற்றியும் அறிந்த அரசன் யாழ் வாசிப்பவனை அழைத்து பல கேள்விகள் கேட்டார். யாழ் வாசிப்பவன் ஒவ்வொரு கேள்விக்கும் உண்மையான விடை கூறினான். அரசன் மிகவும் மனம் மகிழ்ந்து வட பிரதேசத்தில் உள்ள எல்லா இடங்களையும் யாழ் வாசிப்பவனுக்கு பரிசாகக் கொடுத்தான். ஆகவே இந்த பகுதிக்கு யாழ்புரம், யாழ்ப்பாணம் என்று பெயரிடப்பட்டது."

"ஜானகி வா!" சிவன்கரனின் குரல் ஏனைய சத்தங்களைக் காட்டிலும் பெரிதாகக் கேட்டது. "இரவில் ஊர்வலம் பார்க்க வேண்டும்" என்று அவன் கூறினான்.

சிறு வயதில் ஒருமுறை மகேஸ் மாமாவுடன் நல்லூர் ஊர்வலம் பார்க்க வந்தது அவளுக்கு நினைவில் வந்தது. அவள் அன்று பக்தர்கள் இழுத்துக்கொண்டு சென்ற இரதத்தை எவ்வளவு புதுமையோடு பார்த்துக் கொண்டிருந்தாள்? இன்று அந்த புதுமை இல்லை. இரதத்தில் உள்ள பூமாலைகள், கலை ஓவியங்கள் ஆகிய எல்லாவற்றையும் இப்போது அவள் மிக உதாசீனமாகப் பார்க்கின்றாள். அவை எல்லாவற்றையும் பார்க்க அவளுக்கு தன்குழந்தை வசந்த ராஜாவே பெரிய சந்தோஷமாக திகழ்ந்தான்.

வசந்த ராஜா தன் வயிற்றில் இருக்கும்போது அவள் கண்ட ஒரு கனவு இன்னும் அவள் நினைவில் இருந்தது. அந்த கனவில் அவள் கண்டது இரத்த ஓட்டம்தான். இரத்த குளத்தில் ஒருதாமரைப்பூ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர்ந்திருந்தது. அந்த தாமரைப் பூவின் இதழ்களுக்குள்ளே வண்டுகள் ரீங்காரம் செய்தன. தேன் அருந்திய மயக்கத்தில் வண்டுகள் இரத்த குளத்தில் விழுந்து மரணம் அடைவதை அவள் கண்டாள். கனவின் பொருள் அவளுக்கு ஒரு கேள்விக்குறியாக இருந்தது. அவள் அதைப்பற்றி யாருக்கும் கூறவில்லை.

தான் கர்ப்பிணியாக இருக்கும்போது அதிகமான பொரித்த உணவுகளைச் சாப்பிட ஆசைப்பட்டாள்? பிள்ளை பிறக்க உள்ள எல்லா பெண்களுக்கும் இந்த மாதிரியான ஆசை பிறக்கிறது என அவள் அறிந்திருந்தாள். ஒரு நாள் ஜானகிக்கு கருவாடு பொரித்து சாப்பிடும் ஆசை ஏற்பட்டது. சிவன்கரன் மீன், மாமிசம் ஏதும் சாப்பிடாதவன். ஆனால் ஜானகி ஆசைப்பட்டதனால் அவன் கருவாடு கொண்டு வந்தான். சிவன்கரனின் அம்மா சீதம்மா கருவாடு பொரித்து கொடுத்தாள். பிள்ளை பிறந்த பிறகு ஜானகிக்கு இந்த ஆசை தீர்ந்துவிட்டது. ஆனால் எதையாவது பொரிக்கும் வாசனை வந்தால் உடனே அவளுடைய பசி அதிகரிக்கிறது.

அவர்கள் கோவிலுக்கு வெளியே உள்ள கடையில் இரவு சாப்பாட்டை சாப்பிட்டார்கள். ஜானகி சோறு, குழம்பு ஆகியவற்றை சாப்பிடுவதை விட, வடை, பொரியல் ஆகியவற்றை மிகவும் ஆசையுடன் சாப்பிட்டாள். சிவன்கரன் சாப்பிட்ட அப்புறம்தான் அவள் உணவு உண்டாள். எல்லா இடங்களிலும் சனக்கூட்டத்தைக் காணக்கூடியதாக இருந்தது.

பலவித ஓசைகள் மத்தியில் கொண்டாட்டம் நடைபெறுகிறது. இரவில் வானத்தில் ஆகஸ்ட் மாத வெண்ணிலா தோன்றிக்கொண்டு வருகிறது. அன்று கடல் ஓரமாக வீசிய காற்று குளிராக இருந்தது.

உணவு உண்டபிறகு அவர்கள் கன்னாதிட்டி தெருவாக நடந்து சென்றனர். வழியில் இரு பக்கத்திலும் நகைக்கடைகள் இருந்தன. கடைகள் அனைத்தும் விளக்கொளியில் பிரகாசமாக ஜொலித்துக் கொண்டிருந்தது. ஜானகியின் மனம் தங்க ஆபரணங்கள் மீது செல்கிறது. அவற்றை பார்த்துக் கொண்டு செல்லும் பெண்களின் முகங்களில் சந்தோஷம் மலர்கிறது.

சிவன்கரன் சில வளையல்களினதும் மாலைகளினதும் விலையை விசாரித்தான். ஜானகி அவற்றை தொட்டுப் பார்த்தாள். 'இல்லை' 'இல்லை' வேண்டாம். அந்தப் பணத்தை மகனுக்காக சேர்த்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்க வேண்டும்" என அவள் சிவன்கரனுக்கு சொன்னாள். அவன் "அப்பா! இதன் விலை அதிகம்!" என கடைக்கு வெளியே வந்து கூறினான். பாதை ஓரத்தில் உட்கார்ந்து சிறிது நேரம் களைப்பாறிய பிறகு அவர்கள் மீண்டும் அவ்வழியே நடந்தனர். பாதையின் இரு பக்கங்களிலும் மக்கள் கூட்டம் தேர்வரும் காட்சியை பார்க்க காத்துக் கொண்டிருந்தனர். வசந்த ராஜா தூங்கிக் கொண்டிருந்தான். ஜானகி இன்னும் அவனை அணைத்துக் கொண்டு, மற்றக் கையால் சிவன்கரனின் கையைப் பிடித்து, மக்கள் கூட்டத்தோடு செல்லத் தொடங்கினாள். ஊர்வலம் வரும்வரை அவர்கள் வெகு நேரம் காத்துக் கொண்டிருக்க வேண்டியதாயிற்று. முன்னால் போய்கொண்டிருக்கும் வியாபாரிகள் கையில் தீன்பண்டங்கள், பலூன்கள், விளையாட்டுப் பொருட்கள், குளிர்பானங்கள் ஆகியவை காணப்பட்டன. தேர் வருவதற்கு முன்னால் சில நாட்டியக்காரர்கள் நடனம் ஆடிக் காண்பித்தனர்.

இறுதியாக ஊர்வலம் தொடங்கும்போது, ஜானகி தன் கண்களை அகலமாகத் திறந்து பார்த்துக் கொண்டிருந்தாள். அம்மாவும், தம்பியும் தன்னிடம் இருந்திருந்தால்? என அவள் நினைத்தாள். தம்பி வல்வெட்டித்துறைக்கு சென்ற நாள் முதற்கொண்டு அம்மா சுகவீனமுற்று இருக்கின்றாள். ஒருவேளை மனக்கவலையாகக் கூட இருக்கலாம். ஆனால் தன்னுடைய இள வயதில் தன் குடும்ப அங்கத்தவர்கள் எல்லோரும் சிதைந்து போயிருப்பதை எண்ணி ஜானகி மனவேதனை அடைந்தாள். இப்போது தனக்கு என்று ஒரு புதிய குடும்பம் உண்டு. ஜானகி சிவன்கரன் - வசந்தராஜா.

தேரைச் சூழ்ந்து கொண்ட மக்களின் கரகோஷ ஊர்வலம் வெளிச்சத்தின் மத்தியில் சென்றுவிட்டது. மாலைகள் அணிந்த கடவுள் உருவச்சிலை, பேரிகைகள் மணியொளி ஆட்டம், பாட்டு ஆகியன எல்லாம் முதலாவதாக போய் கொண்டிருந்தன. எல்லாம் ஒரு கனவைப் போல தென்பட்டது.

தன் கையில் இருக்கும் வசந்தராஜா மட்டும் தான் உண்மையான பொருள் என அவள் எண்ணினாள். "என்னுடைய செல்வ மகனே!" என்று மீண்டும் சொல்லிக்கொண்டு அவனுக்கு பால் ஊட்டினாள்.

மறுநாள் அவர்கள் நீர்வேலிக்கு வரும்போது மாலை நேரமாகிவிட்டது. கோவிலிருந்து வாங்கி வந்த எண்ணெய் ஜானகியிடம் இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற ஆண்டில் மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலுக்கு போன பொழுது அவள் இவ்வாறு எண்ணெய் வாங்கிக் கொண்டு வந்தாள். கோயில் எண்ணையில் ஏதோ ஒரு புதுமையான சக்தி இருக்கிறதென்பது அவள் நம்பிக்கை.

பழங்காலத்தில் சோழ நாட்டு குமாரியாகிய மருதபிரவிகாவலியுடைய குதிரைமுகம் அழகான முகமாக மாறியது. கீரிமலை ஊற்றில் பல நாட்கள் குளித்ததினால்தான் என்பது பழங்கால நம்பிக்கை. ஆகவே அதன் அருகில் மாவிட்டபுர கந்தசாமி கோவில் கட்டப்பட்டதும் அந்த அரச குமாரியால் தானாம். ஊற்றுத் தண்ணீர் போலவே கோவிலின் எண்ணெயையும் கொண்டு வருவதற்கு விசேட காரணம் இருந்தது. சோழகுமாரிக்கு இருந்தது போல் ஜானகிக்கு குதிரை முகம் இருக்கவில்லை. ஆனால் அவளுடைய குழந்தை வசந்த ராஜாவின் பின்புறத்தில் இருந்த பெரியதொரு கறுப்பு நிறமான தழும்பே இதற்கு காரணமாக இருந்தது. இது அவனது பிறப்பிலிருந்து காணப்படுகிறது.

அவன் பிறந்த உடன் ஜானகி அவனிடம் முதன் முதலாக கண்டது இந்த அழகற்ற கறுப்பு நிற தழும்பையாகும். அவள் இதைக் கண்ட உடன் மனம் கலங்கி அழுதாள்.

ஆனால் கீரிமலை ஊற்று நீராலும், கோவிலில் எண்ணையாலும் இந்த பிறப்பு அடையாளம் சிறிதளவு மறைந்து போய்விட்டது என அவள் நிச்சயமாக நம்பினாள். கீரிமலையில் அவள் பிள்ளையின் அந்த பிறப்பு அடையாளத்தை ஊற்று நீரால் கழுவினாள். அதன்பிறகு கோவிலிருந்து கொண்டு வந்த எண்ணெயைத் தடவினாள். சிறிது நாட்கள் சென்ற பிறகு வசந்த ராஜாவின் பிறப்பு அடையாளம் சிறிதாகிவிட்டது.

"பாருங்கள் சிவன்கரன்" ஜானகி இந்த புதுமையை தன் கணவருக்கும் சொன்னாள். கீரிமலை நீரினாலும் கோவில் எண்ணையாலும் பிள்ளையின் பிறப்பு அடையாளம் சின்னதாகிவிட்டது.

"இப்போது நாம் தினமும் கீரிமலை போகவும் முடியாது. மாவிட்டபுரக் கோவிலுக்கு போகவும் முடியாது" என சிவன்கரன் கூறினான்.

"அடுத்த ஆண்டில் போவோம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அடுத்த ஆண்டில் நாம் போவது நல்லூர் கோவிலுக்கு தான்."

"அதற்கு அடுத்த ஆண்டில் மாவிட்டபுரம் போவோம்".

"பார்க்கலாம்."

"நல்லூரிலிருந்தும் நான் எண்ணெய் கொஞ்சம் கொண்டு வருவேன்"

ஜானகி இப்போது அவள் வாக்குறுதியை நிறைவேற்றிக் கொண்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 5
# அஜித்
## 1983

ஜீப் வண்டியின் முன் ஆசனத்தில் உட்கார்ந்திருந்த அஜித் தன்னைக் கடந்து செல்லும் காட்சிகளை பாதி மூடிய தன் கண்களால் பார்த்தான். வெளியே வெறும் மணல் தரைதான் தென்படுகிறது. வெளியே பனை மரங்கள், மாமரங்கள் நீண்டு வளர்ந்து ஆகாயத்தைத் தொடுவது போல் இருந்தது. செல்லும் மக்களிடம் ஒருவித சோம்பல் தன்மையைக் கண்டான். பகல் நேர வெய்யில் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து சென்றது. வயல்களில் வேலை செய்யும் விவசாயிகளதும் மாடுகளினதும் நிழல்கள்தான் அஜித்துக்குத் தெரிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கே அஜித்துக்கு, புத்தி குணசேகர என்ற பழைய மாணவனின் சிநேகிதம் கிடைத்தது. புத்தி அடிக்கடி இராணுவத்தில் சேருவது பற்றியே பேசினான். இராணுவத்தைப்பற்றிய எண்ணத்தை அஜித்தின் மனதில் பதித்தவனும் புத்தியேதான்.

புத்தி, கணக்காளருக்கு படிப்பதை விட்டு விட்டு இராணுவத்தில் சேர்ந்தபிறகு அஜித் கூட அதே தீர்மானத்தை எடுத்தான். தன் தோழன் சென்ற வழியில் தானும் செல்ல முடிவு செய்தான். ஆனால் இராணுவத்தில் சேர்ந்த அஜித்துக்கு புத்தியை எப்பவோ ஒரு முறை தான் சந்திக்க கிடைத்தது.

புத்தி தியதலாவையில் பயிற்சி பெற்றான். அஜித் அங்கே சிறிது காலம் இருந்துதான்: பிறகு கனேமுள்ளவுக்கு அனுப்பப்பட்டான். பயிற்சி பெறும் காலத்தில் அஜித் சொல்ல முடியாத துன்பங்கள் அனுபவித்தான். சேற்றில் இறங்கியும் முட் கம்பிகளின் கீழ் தவழ்ந்து போகவும் கயிற்று பாலங்களில் தொங்கிக் கொண்டும், துப்பாக்கிகளை ஏந்திக்கொண்டும், தாக்குதலுக்கு தயாராகும் வகையில் பெற்றுக் கொண்ட பயிற்சி தன்னை மேலும் மனிதத்துவம் புரிந்து கொண்டவனாக்கி விட்டது என்று அஜித் எண்ணினான். ஆனால் அவன் பெற்றோர்கள் அஜித் இராணுவத்தில் சேர்வதற்கு வேண்டா வெறுப்பாகவே சம்மதம் தெரிவித்தனர். நான் தேசத்தைக் காக்கும் சேவையில் ஈடுபடப் போகிறேன் என அஜித் கூறினான். உண்மையாகவே நாட்டைக் காக்க போராடும் உன்னத நோக்கம் அஜித்திடம் இருந்தது. தன் அண்ணன் பயங்கரவாதிகளுடன் சேர்ந்து போராட்டம் செய்த காரணத்தினால் தான் மரணமடைந்தான் என்பதை அவருடைய உயிரற்ற உடல் வீட்டுக்கு வந்தபோதே அஜித் அறிந்தான்.

அண்ணாவின் மார்பில் குண்டு துளைத்திருந்தது என்று அஜித் கேள்விப்பட்டாலும் அவன் அதை காணவில்லை. லயனலின் உடலை வீட்டுக்கு கொண்டு வரும்போது நல்ல ஆடைகள் அணியப்பட்டிருந்தது. அந்த முகத்தில் வேதனையும் வெறுப்பும் கலந்திருப்பதை அஜித் கண்டான். லயனலின் உதடுகள் இரண்டும் கெட்டியாக மூடப்பட்டிருந்தது. கண்களும் மூடியிருந்தது. தீராத கோபம் அந்த முகத்தில் இருப்பது போல அவனுக்கு தென்பட்டது.

அம்மாவும், அக்காவும் பெருங்குரலுடன் அழும்போது, அஜித்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் கூட அழுதான். அப்பா அழுகையைக் கட்டுப் படுத்திக்கொண்டார்.

மயானத்திற்கு சென்ற அஜித்துக்கு அங்கே ஒருவர் அப்பாவுக்கு சொன்னது ஞாபகத்தில் வந்தது. "விக்டர் அதிர்ஷ்டசாலிதான்" என அவர் கூறினார். இறந்து போன சில பிள்ளைகளின் உடல்கள் இன்னும் அவர்கள் பெற்றோர்களுக்கு கிடைக்கவில்லை. ஜயசேகர பிரின்சிபாலின் மகனின் சாவு கூட இன்னும் சரியாகத் தெரியவில்லை. இராணுவ முகாமில் எல்லோரையும் கொன்றுவிட்டு ஒரே குழியில் போட்டு இருக்கிறார்கள் என்று கேள்வி. அப்பா மௌனமாக இருந்தார். மற்றவர் தொடர்ந்து பேசிக்கொண்டிருப்பதை அஜித் கேட்டுக் கொண்டிருந்தான். வீதிகளில் சில இடங்களில் டயர்கள் மேல் உடல்களை ஒன்றாகப் போட்டு கொளுத்துகிறார்களாம். இவ்வாறு திரு. மீகஸ்தென்ன சொன்னார். கண்டி வீதியில் ஒரு இடத்தில் ஆறு உடல்களைப் போட்டு கொளுத்தினார்களாம். அந்த இடத்தில் இறப்பர் செருப்புகள் இருந்தனவாம். திரு. மீகஸ்தென்ன சொல்வதைப் பார்த்தால் அப்பிள்ளைகள் செருப்பு போடாமல் தெருவுக்கு வராதவர்களாக இருப்பார்கள் போலிருக்கிறது. நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைகள் தவறான வழியில் போவதால்தான் இப்படி தீயில் வெந்து எரிகின்றார்கள்.

இந்த பேச்சுக்களை கேட்ட அஜித் தானும் தீயினால் பற்றி எரிகின்ற காட்சியை கற்பனை செய்து பார்த்தான். ஒருவித குளிர் உணர்வு அவனின் உடம்பெல்லாம் ஓடுவது போல தெரிந்தது. மனதில் இக்காட்சியைக் கண்ட அஜித் வீட்டுக்குள்ளே ஓடி வந்தான். அன்று மாலையில் அவனுக்கு காய்ச்சல் பிடிக்க ஆரம்பித்தது.

"மகன் எதற்கோ பயந்து இருக்கிறான்" என மல்லிகா ஹேனகம தன் கணவருக்கு சொன்னாள்.

அவனுக்கு அண்ணன் இல்லாத குறைபாடு காரணமாக காய்ச்சல் பிடித்திருக்கலாம் என விக்டர் மெல்ல கூறுவதை அஜித் கேட்டான்.

அஜித்துக்கு உண்மையிலேயே அண்ணா தன்னை விட்டு பிரிந்ததால் ஏற்பட்ட துன்பம் இருந்தது. ஏதோ ஒருவித இருள் பரவி வீட்டையும், அவன் வாழ்க்கையும் மறைத்துக் கொண்டது போல தோன்றியது.

எல்லாம் மரணத்தினால் முடிவு பெறுகின்ற தற்காலிக கனவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமே என்ற எண்ணம் அன்று அவன் உள்ளத்தில் தோன்றியது. ஆனால் நெருப்பு என்ற வார்த்தைக்கு தான் ஏன் அவ்வளவு பயப்படவேண்டும்? என்பது அவனுக்கு புரியாத புதிராக இருந்தது. தீயில் பற்றி எரிகின்ற உணர்வு அது.

சிறு வயதில் இருந்தே தான் வீட்டுத் தோட்டத்தில் குப்பைகள் காய்ந்து போன இலைகள் ஆகியன தீயினால் எரிகின்றபோது அந்த இடத்தை விட்டு தூரமாக ஓடிச் சென்றது இப்போது அவனது கவனத்திற்கு வந்தது. அண்ணன் ஒருமுறை விளையாட்டுக்காக தன்னை தூக்கிக்கொண்டு போய் எரிகின்ற நெருப்பில் போடுவதற்கு ஆயத்தம் செய்தபோது, தான் கூக்குரலிட்டு அழுதது அவன் ஞாபகத்திற்கு வந்தது. தனக்கு காய்ச்சல் பிடித்தது. அண்ணன் சம்பந்தமான அந்த நெருப்பு கவனத்தில் வந்த காரணத்தினால் தானா? அன்று அண்ணன் தன்னை துன்புறுத்தியதற்கு அம்மாவிடம் அடி வாங்கினான்.

அண்ணாவினால் அவனுக்கு ஏற்பட்ட எல்லா துன்புறுத்தல்களும் அவன் இறந்ததினால் முடிவு அடைந்தது அல்லவா? ஆனால் புரட்சி இன்னும் முடியவில்லை. தென்பகுதியைப் போலவே, வட பகுதியிலும் இப்போது பரவிவருகின்ற பயங்கரவாதிகளின் தகவல்கள் வரவர அதிகமாகிக் கொண்டு வந்தன.

அவன் இராணுவ பிரிவினருடன் யாழ்ப்பாணம் வந்தது, இவ்வாறான பயங்கரவாதிகளின் வன்செயல்களை அடக்குவதற்கேயாகும். வடக்கே புலிகள் என்ற சொல் பயத்தை ஏற்படுத்துகிறது. அஜித்தின் உள்ளத்தில் தமிழ் மக்கள் மேல் கருணை தோன்றியது. அவர்களும் புலிகளினால் பல தொந்தரவுகளை அனுபவிக்கின்றார்கள். மரணம் அடைகின்றார்கள். புலிகள் என்பவர்கள் ஒரு இனத்தைச் சேர்ந்த மக்கள் அல்ல; மிருக இனத்தைச் சார்ந்த மிருகங்கள் என அவன் நினைக்கின்றான். ஆனால் தன்னைக் கடந்து செல்லும் மக்களிடையில், தங்கள் மிருகக் குணங்களை மறைத்துக் கொண்டு மனித உருவத்தில் காட்சி அளிக்கின்றவர்கள் யார்? யார்? என்று அவனால் பிரித்து அறிய முடியவில்லை. இராணுவம் புலிகளை மட்டுப்படுத்தலாம். மக்களின் மனதில் பயத்தை நீக்கி சக்தியை ஊட்டுவதற்கு இராணுவம் பலவாறான வழியில் சேவை செய்கிறது. இராணுவம் அங்கு கடமை புரிவது புலிகளுக்கு பெரிய சவாலாகும். தான் தமிழ் மக்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவை செய்வதை நினைக்கும் போது அஜித் உள்ளத்தில் ஒருவித உணர்வலைகள் தோன்றின. தான் கடும்வெயிலில் பிரயாணம் செய்வது நாட்டுக்கும், இனத்திற்கும் மேன்மையான சேவை செய்வதற்கு தானே? என எண்ணினான்.

'சார்!' என்ன யோசிக்கின்றீர்கள்?" டிரைவர் மனதுங்கவின் குரலால் திடுக்கிட்டு அஜித் ஹேனகம இவ் உலக நினைவுக்கு வந்தான்.

"ம் இல்லை.... இந்த மக்கள் எவ்வளவு தைரியசாலிகளாக இருக்கிறார்கள் என்று நினைத்தேன். இந்த பாலைவனத்தில் விவசாயம் செய்து வாழ்கிறார்களே!"

"அந்த மக்கள் கெட்டிக்காரர்கள் தான். ஒரே ஒரு தவறு - ஒரு சிலர் அந்த திறமையை வன்செயலில் காட்டுகிறார்கள்.

சில மக்களுக்கு தேவைப்படுவது இந்த பூமியில் உரிமை கொண்டாடுவதற்கு மட்டுமே. கடைசியில் இதே மண்ணில் தான் எல்லோரும் ஒன்று சேர்கிறார்கள்.

"சாருக்கு இதில் ஒன்றும் ஆசை இல்லாதது போல தெரிகிறது."

"எதற்காக ஆசைப்படவேண்டும் மனதுங்க?" ஆனால் ஒரு வயதில் இந்த மாதிரி பெரிய புரட்சி செய்து விட்டு, உலகத்தை மாற்ற வேண்டும் என்று நினைக்கின்றோம். எனது அண்ணாவும் அத்தகைய ஒரு புரட்சியில் ஈடுபட்டு உயிரை அழித்துக் கொண்டான்.

"அது எப்போது?"

"1971ம் ஆண்டில் புரட்சி தொடங்கும்போது"

மனதுங்க "ச்சோ" என்றான்.

"பாருங்கள் சார்! எங்கள் எல்லோருக்கும் இம் மாதிரி இறந்தவர்கள் ஒருவரையாவது தெரியும் தானே? கிஸாகோதமியின் கதைபோல யாரும் சாகாத வீட்டில் கடுகு தேடுவது போல, நம்மில் யாராலும் இதைத் தடுக்க முடியாது."

"நாம் இப்போது எங்கே இருக்கிறோம்"? அச்சுவேலிக்கு இந்த பக்கம். அதோ பாலம் தெரிகிறது. கடல்?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்த இடம் இன்னும் கொஞ்சம் குளிராக இருந்தால் எவ்வளவு நல்லது? அப்படியாயின் இங்கே மரங்கள் வளர்ந்து அழகாக இருக்கும் அல்லவா?

"அது தானே! இங்கே வெய்யிலில் காய்பவர்களுக்கு எங்கள் நாட்டின் அரைவாசி வேண்டுமாம்." அப்படி என்றால் எல்லாருக்கும் வேண்டிய இடத்திற்கு போவதற்கு தடை உண்டா?

"ஐயோ, எனக்குத் தெரியாது சார். நிலைமை வர வர மோசமாக இருக்கிறது. அமைதியாக இருந்த அஜித்தின் நினைவில் நேற்று காலை பேதுருதுடுவையில் கண்ட இரு சடலங்களைப்பற்றி ஞாபகம் வந்தது. ஒன்று பொலிஸ் சார்ஜன்ட் ஒருவருடையது; மற்றது இராணுவத்திற்கு தகவல் கொடுத்தவர் என்ற சந்தேகத்தின் பேரில் கொல்லப்பட்டவர். இருவரும் தமிழர்களே. இருவரும் தமது இனத்தைச் சேர்ந்த பயங்கரவாதிகளின் கையால் கொல்லப்பட்டார்கள். சார்ஜன்டின் உடல் தலையின்றி காணப்பட்டது. அவரது சைக்கிள் வண்டி உடலின் அருகிலே விழுந்து கிடந்தது. வெட்டப்பட்ட கை, கால்கள் அங்குமிங்குமாக சிதறிக் காணப்பட்டன. தலை கொஞ்ச தூரத்தில் மணல்மேல் காணப்பட்டது. இன்னொருவரின் கைகள் கட்டப்பட்டு வாயில் சுடப்பட்டிருந்தது. துப்பாக்கி சூட்டினால் அவனுடைய தலை சின்னாபின்னமாக்கப்பட்டு இருந்தது. இந்த உடல்களை பார்த்த சிலர் வாந்தி எடுத்தனர். அஜித் கூட வாந்தி எடுத்தான். இதற்கு முன்பும் புத்தூரில் அவன் மின்சார தூண்களில் கட்டி வைக்கப்பட்டிருந்த உடல்களைப் பார்த்திருக்கிறான். வடபகுதியில் நடைபெறுகின்ற வன்செயல்களை கொழும்பு மக்கள் இன்னும் சரியாக உணர்ந்து கொள்ளவில்லை என அஜித் நினைத்தான். இவர்கள் யாருடைய வெற்றிக்காக தம்முடைய சொந்த இன மக்களையே கொல்கிறார்கள்? நிலைமை வர வர மோசமாகி வருகிறது என இவற்றை காணும்போது தான் தெரிகிறது.

ஒரு குழுவாக துப்பாக்கிகளை தூக்கிக்கொண்டு போகும்போது மனத்தில் தைரியம் தோன்றுகிறது. புலிகள் தாக்கினால் அவர்களை தோல்வி அடைய செய்ய முடியும் என்ற எண்ணம் எழுகிறது. ஆனால் இந்த யுத்தம் எப்போது முடியப்போகிறது?

புத்தூரைக் கடந்து ஜீப் வண்டிகள் நீர்வேலிப் பக்கம் போய்க் கொண்டிருந்தன. அப்போது மாலை நேரம் நெருங்கிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தது. எல்லாம் பொன் நிறமாகத் தென்பட்டது. அது கவலை, பயம், வேதனை ஆகிய எல்லா மனித உணர்வுகளை மறைக்க முயல்வது போல தெரிகிறது. அந்த பொன் நிறத்தால் மூடிக் கொண்ட சில கட்டிடங்களின் பாதிப்பகுதி தீயால் அழிந்து போயிருந்தன, அல்லது வெடிகுண்டுகளில் அழிந்து போயிருந்தன. சூரிய வெளிச்சத்தால் மறைக்க முடியாத காட்சிகளாக அவை தென்பட்டன.

நீர்வேலிக்கு போய்ச் சேர்வதற்கு முன் ஜீப் வண்டிகள் எல்லாம் திடீரென ஒரு இடத்தில் நிறுத்தப்பட்டன. முன்னால் போய்க் கொண்டிருந்த ஜீப் வண்டியில் இயந்திர கோளாறு ஏற்பட்டுள்ளது என தொலைபேசி மூலம் அறிவித்தல் கொடுத்தனர்.

இராணுவ வீரர்கள் எல்லோரும் வண்டிகளிலிருந்து கீழே இறங்கி அங்குமிங்குமாக நடமாட தொடங்கினர். எல்லோரின் கைகளில் இருந்த துப்பாக்கிகள் குறிபார்த்த வண்ணம் இல்லாவிட்டாலும் எந்நேரமும் தயாரான நிலையில் இருந்தனர். அவர்கள் வெகுதூரம் செல்ல அச்சப்படுகிறார்கள். யாவரும் ஒன்றிணைந்து இருப்பதால் சக்தியும், தைரியமும் அவர்களிடத்தில் மேலோங்கி காணப்பட்டது.

அஜித், மனதுங்க ஆகியோர் வண்டியிலிருந்து கீழே இறங்கினார்கள். சிலர் புகை பிடித்தார்கள். அஜித் புகை பிடிக்க மாட்டான். வண்டியின் தெற்குப் பக்கமாக பார்த்த அவனுக்கு சற்று தூரத்தில் புகையிலை விவசாயம் செய்யும் நிலம் ஒன்று காணப்பட்டது. அதன் அருகே குடிசை ஒன்றிலிருந்து வெளியே வந்த சிறுவன் ஒருவன் சந்தேகத்தோடும் பயத்தோடும் அங்குமிங்கும் பார்க்க ஆரம்பித்தான். சிறுவனுக்கு பத்து அல்லது பதினொறு வயது இருக்கலாம் என அஜித் நினைத்தான். அவன் சாரம் மட்டும்தான் அணிந்திருந்தான். கறுப்பு நிறமான அவன் மெலிந்திருந்தான். அவன் மீது அஜித் பரிதாபம் கொண்டான்.

"நாம் வந்து போகின்றோம். ஆனால் இந்த சிறுவன் எப்பொழுதும் இந்த யுத்தத்திற்கு முகம் கொடுத்து இங்கேயே இருக்கத்தான் வேண்டும்" என கவலையோடு எண்ணினான்.

மறு நிமிடம் அங்கு ஒரு பெண்ணின் குரல் வீட்டுக்குள்ளே இருந்து கேட்டது. "வசந்த ராஜா" இங்கே வா!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவன் கண்களை அகலமாக்கிக் கொண்டு ஜீப் வண்டிகளை ஆச்சரியமாக பார்த்துக் கொண்டிருக்கின்றான். கை ஆட்ட அஜித் நினைத்தாலும், அது செய்யக்கூடாத ஒரு காரியமாகும். தன்னுடைய மனம் அந்த பிள்ளையை நாடி செல்வதற்குக் காரணமென்ன? மீண்டும் ஒரு முறை கூச்சலிட்டவாறு அப் பெண் வீட்டு வாசலுக்கு வந்தாள். அவளுடைய முகம் பொன் நிறமான சூரிய வெளிச்சத்தினால் பிரகாசித்தது. அவள் தனது முழங்கால் வரையில் ஊதா நிறமான கவுனும் அரைவாசி கை மறைத்த வண்ணம் மஞ்சள் நிற ரவிக்கையையும் அணிந்திருந்தாள். அவளைக் கண்ட சிறுவன் அவளைக் கேலி செய்துவிட்டு வீதியில் ஓடத்தொடங்கினான்.

ஒரு இராணுவ வீரன் ஒருவித யோசனையுமின்றி தன் துப்பாக்கியால் அவனை குறிவைத்தான்.

"இல்லை வேண்டாம்!" என்று யாரோ கூறினார்கள்.

அப்பிள்ளை சிரித்துக்கொண்டே வந்து சூடான தரையில் உட்கார்ந்தான். ஏதோ சொல்லிக் கொண்டு அப்பெண் வீதியின் பக்கம் வந்தாள். அவள் தன் இரு கைகளால் கண்களை மறைத்துக் கொண்டாள். அவள் பிள்ளை, அஜித் முன்னால் கீழே உட்கார்ந்து கொண்டிருந்தான்.

"ஐயா! நான் பிள்ளையை எடுத்துக்கொண்டு போகிறேன்" அத் தமிழ் பெண் மிக தெளிவான சிங்களத்தில் எல்லோரும் வியக்கும் வண்ணம் பேசினாள். ஒரு நிமிடம் அஜித்தின் கண்கள் இந்த பெண்ணின் கண்களைப் பார்த்தன. புரியாத ஒரு சக்தியால் உந்தப்பட்டு இருவரும் ஒருவரை ஒருவர் சிறிது நேரம் பார்த்துக் கொண்டார்கள். அவளுடைய பார்வையில் இருந்த காந்த சக்தி என்னவாக இருக்கும் என்று அஜித் அறியவில்லை. அவள் ஒரு இளம்பெண். நல்ல நிறமும் அழகான முகத்தையும் அவள் கொண்டிருந்தாள். ஆனால் வேறு எந்த பெண்ணிடமும் இல்லாத அந்த பார்வையின் சக்திதான் என்ன. தான் இந்த பிள்ளையையும் அதன் அம்மாவையும் பார்த்தது எங்கே?

"ஐயா அப்பெண் மீண்டும் பேசினாள்"

"ஐயா என்னை தெரியுமா?"

"எங்கேயோ பார்த்த முகம்போல் தெரிகிறது"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஜித் சொன்னான்.

எங்கே, எப்போது?

"என்னை தெரியும் போல தெரிகிறது."

"ம் ... இல்லை!"

"எனக்கு ஐயா முகம் பழகிய முகமாக தெரிகிறது. நாங்கள் கொழும்பு போயிருக்கிறோம். எங்கள் சொந்தக்காரர்கள் கொழும்பில் இருக்கிறார்கள்."

"எங்கே?"

"வெள்ளவத்தையில் வசந்தராஜா இங்கே வா!"

"வெள்ளவத்தை - இல்லை நாம் நுகேகொடையில் இருந்தோம்"

"ஆ - ஐயா நாம் சின்னவயதில் நுகேகொடையில் இருந்தோம்." அவள் கண்களில் கண்ணீர் பெருகியது.

அவள் பிள்ளையை எழுப்பி தன்னிடம் எடுத்துக் கொண்டாள். அவனை எழுப்பும் போது அவன் உடலில் பின்புறத்தில் இருந்த மச்சத்தைக் கண்டாள். அவன் உடல் கறுப்பு நிறமாக இருந்ததினால் அது அவ்வளவு தெளிவாக தெரியவில்லை.

பிள்ளையின் கையை பிடித்துக்கொண்ட அப்பெண் மீண்டும் வீட்டுக்குள் போகத் தொடங்கினாள். அவள் பலமுறை பின்னால் திரும்பிப் பார்க்கும் போது, அஜித் ஏதோ வசப்பட்டவன் போல பார்த்துக்கொண்டிருந்தான்.

"என்ன ச்சு ஆசை கொண்டீர்களா?" மனதுங்க சிரித்துக் கொண்டே கேட்டான். ம்.. இல்லை! எனக்கு நல்ல பழக்கமானதொரு முகம். அந்த பிள்ளையின் முகமும்தான்... நான் நினைக்கிறேன். கொழும்பில் தான் பார்த்திருக்க வேண்டும்.

"ஐயாவும் நுகேகொடையில் தானே"

"ஆம்"

"அந்த பெண் நுகேகொடையில் இருந்ததாகத் தானே சொன்னாள்."

வண்டிகள் எல்லாம் மீண்டும் பயணம் செய்யலாம் என்ற செய்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவிக்கப்பட்டது. மெல்லிய காற்றில் புகையிலைச் செடிகள் ஆடத் தொடங்கின. பிள்ளையும், அப் பெண்ணும் புகையிலை செடிகளுக்கு மத்தியில் நடந்து குடிசைக்குள்ளே செல்வதை அஜித் கண்டான். அவர்களின் வாழ்க்கை எவ்வாறு இருக்கலாம்? என அஜித் யோசித்தான். "அவளுடைய பெயர் எதுவாக இருக்கலாம்? அவளுடைய கணவன் எங்கே? அவன் எப்படிப்பட்டவனாக இருக்கலாம்? அவன் அவளை நன்றாக கவனிக்கின்றானா? அந்த சின்னபிள்ளை மீது அவள் எவ்வளவு அன்பு கொண்டவளாக இருக்கிறாள்? அவள் நீர்வேலிக்கு வந்தது எப்படி? அவளுடைய பெற்றோர்கள் அந்த வீட்டில் இருக்கிறார்களா? அவள் யார்? யார்? யார்? வண்டியில் ஏறிய பிறகு கூட, அவன் அந்த வீட்டுப்பக்கம் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவ்விளம் பெண் வீட்டு வாசலுக்கு வந்து நின்றுகொண்டிருப்பது தென்பட்டது. அவள் தன்னையே பார்த்துக்கொண்டிருக்கிறாள் என எண்ணினான். தூரத்தில் தென்படும் பொன்நிறமான சூரிய வெளிச்சத்தினால் அவள் மேலும் அழகாக காட்சியளிக்கின்றாள். அவள் ஒரு தெய்வம் என்றால், அந்த வீடு ஒரு கோவில் மாதிரி தான். வண்டி புறப்பட தொடங்கியதுடன், பெருமூச்சுவிட்டு அஜித் தனது மனதை சற்று நிம்மதிப்பட்டுக் கொண்டான். வண்டி தூரமாக செல்லும்போது, அவன் உள்ளத்தில் பெரும் பாரமும், வேதனையும் ஏற்பட்டது. தன்னுடைய இதயத்தை திருட வந்த அவள் யார்?

வெகு தூரம் செல்லும்வரை அஜித்தினுடைய மனத்தில் நீர்வேலியில் இருந்த அந்த குடிசை நினைவிலிருந்து அங்கே தான் கண்ட இளம் பெண்ணின் உருவமும் சிறு பிள்ளையின் உருவமும் அவன் உள்ளத்தை கவராமல் இருக்கவில்லை. ஆனால் சின்னபிள்ளை பற்றி அவன் உள்ளத்தில் ஒருவித பயம் ஏற்பட்டிருந்தது. அந்த பிள்ளை தன்னை ஒரு முறை பார்த்த பார்வையே அதற்குக் காரணம். அதில் வெறுப்பு கலந்திருந்தது. அன்பும் வைராக்கியமும் – ஒரே நாணயத்தில் இரு பக்கங்கள். எனவே தன்னிடம் தோன்றும் இந்த உணர்வுகளில் புதுமை ஏதும் இல்லை. தன்னிடம் ஏற்பட்ட இந்த கவர்ச்சியில் ஒரு பக்கம் வேதனையும் கலந்திருந்தது. அதை அவனால் யாருக்கும் விளக்கிக்கூற முடியாத விடயமாக இருந்தது.

இராணுவ குழுவினர் யாழ்ப்பாண முகாமுக்கு வரும்போது இரவாகி விட்டது. குளிர் நீரில் குளித்த அஜித், ஏனைய இராணுவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரர்களுடன் உணவு மண்டபத்தில் இரவு உணவை உண்டான். அந்த இரவில் அவனுக்கு அவ்வளவு பசி இருக்கவில்லை.

நீர்வேலியைக் கடந்து செல்லும்போது அவனுக்கு தலைவலி வந்தது. சிறிது நேரத்தின் பின் வண்டிகளின் பெட்ரோல் வாசனை அவனுக்கு மிகவும் வேதனை தந்தது. திடீரென அவனுக்கு இந்த வாசனை பொறுக்க முடியாமல் போனது. தலை சுற்றத் தொடங்கியது. அவன் முகாமுக்கு வந்த உடனே குளித்ததும் அதனாற்றான். குளித்தால் சுகம் கிடைக்கும் என நினைத்தான். ஆனால் தலைப்பாரம் நீங்கவில்லை.

"ஐயா, நீங்கள் தமிழ்பெண் மீது ஆசைப்படுவது போல தெரிகின்றதென்று மனதுங்க கூறியபோது அஜித் மிக உற்சாகத்துடன் சிரித்தான். யாரையும் நம்ப முடியவில்லை ஐயா! யார் புலி; யார் புலி இல்லை என்று நம்பமுடியாமல் இருக்கிறது."

"அது என்னவோ உண்மைதான்"

இந்த வார்த்தைகளால் அஜித் மிகவும் வேதனை கொண்டான். அவள் எவ்வளவு நெருங்கி தன்னோடு சிங்களத்தில் பேசினாலும் அவளுடைய உள் மனதை அவள் மட்டுமே அறிவாள். அவள் பயங்கரவாதிகளுக்கு உதவி செய்யும் ஒரு பெண்ணாக இருக்க முடியாதா? அவளுடைய கணவன் ஒரு புலியாக இருக்க முடியாதா?

"நமக்கு தெரிந்த ஒருவன் இங்கு இருக்கிறான்" சாப்பிட்டுக் கொண்டிருந்த அஜித் தனக்கு பழக்கமான குரலைக் கேட்டு தலையைத் தூக்கிப் பார்த்தான்.

"புத்தி! நீ எங்கே இங்கு வந்தாய்?" "நாம் இன்று மாலை வந்தோம்". புத்தினுடைய முகத்தைப் பார்த்த அஜித் அளவில்லா சந்தோஷமடைந்தான்.

"நான் உன்னை இனிமேல் பார்க்க முடியாது என்றல்லா நினைத்திருந்தேன்?"

"இங்கே மேலும் இரண்டு யுனிட்கள் அனுப்பப்பட்டன." புத்தி அஜித் அருகில் அமர்ந்துகொண்டு சொன்னான். "நிலைமை மோசமாகி விட்டது."

"எம்மால் முடிந்ததை நாம் செய்வோம்." புத்தியை அஜித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிப்பிடித்துக் கொண்டான். “அம்மா அப்பா ஆகியோரை கண்டது போல ஒரு உணர்வு.”

“நீ சோறு சாப்பிடுவதாக தெரியவில்லை? சும்மா சோற்றை பிசைந்து கொண்டிருக்கிறாய்”?

“எனக்கு தலைவலி”

“சாப்பிடு சாப்பிடு அது தானாக போய்விடும்.”

‘இரண்டு பெனடோல் சாப்பிடு’!

“பெனடோல் சாப்பிட்டேன்.”

“வா, வெளியே கொஞ்சம் காற்றுப்பட உலாவிவிட்டு வருவோம்.”

“நீங்கள் சாப்பிட்டீர்களா”?

“நான் சாப்பிட்டேன், எல்லோரும் சாப்பிட்டு விட்டார்கள். வா, காற்றுபட போனால் எல்லாம் சரியாகிவிடும்.

வெளியே வந்து புத்தியுடன் பேசிக் கொண்டிருக்கும் போது உண்மையிலேயே அஜித்துனுடைய தலைவலி நீங்கி விட்டது. இருவருக்கும் பேசுவதற்கு பல விஷயங்கள் இருந்தன. இருவரும் இரவு நேரம் ஆகும்வரை பலவற்றைப் பற்றி பேசிக்கொண்டு இருந்தனர்.

சுற்றுப்புறம் ஒரே அமைதியாக இருந்தது. காலவல் காத்துக்கொண்டிருந்த இராணுவ வீரர்களின் காலடி சத்தங்கள் மட்டும் கேட்டது. முகாம்களுக்கு வெளியே கடலில் அலை ஓசையும் பனை ஓலைகள் ஓசையும் நிம்மதியைத் தரும் ஒரு சங்கீதம் போல இருந்தது. ஆனால் ஆபத்து சாம்பலுக்குள்ளே மறைந்திருக்கும் நெருப்பைப் போல இருக்கிறதென்பதை எல்லோரும் அறியாமல் இல்லை.

அஜித்தும் புத்தியும் பலவற்றைப் பற்றி பேசினாலும், அஜித் ஒரு விஷயத்தை மட்டும் அவனிடம் குறிப்பிடவில்லை. அது தான் நீர்வேலியில் அன்று மாலை குடிசை ஒன்றில் கண்ட இளம் பெண்ணைப்பற்றியேயாகும். புத்தியுடன் பேசும்போது சற்று நேரத்திற்கு அஜித் அந்த பெண்ணைப்பற்றி மறந்து விட்டான். ஆனால் இரவில் தூங்கும்போது அவளைப் போல ஒரு பெண்ணை கனவில் கண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் கைகளை ஆட்டிக்கொண்டு தான் இருக்கும் பக்கத்திற்கு வருவதைப்போல அவன் கனவு கண்டான். அஜித் மிகவும் கவலையுடன் எழுந்தான். அவளை கனவில் கண்டதனால் மகிழ்ச்சியும், அத்தோடு வேதனையும் கொண்டான்.

இதன் பின்பு சில நாட்கள் வரை அஜித் அதித வேலை காரணமாக எல்லாவற்றையும் மறந்துவிட்டான். சங்கானையில் இன்னொரு தாக்குதல் ஒன்று நடந்ததால் அவன் அங்கு செல்ல வேண்டியதாயிற்று. சில இராணுவவீரர்கள் காயமடைந்தாலும், ஒருவரும் இந்த சண்டையில் மரணம் அடையவில்லை. பயங்கரவாதிகள் சிலரைக் கைதுசெய்ய அவர்களால் முடிந்தது. இந்த தாக்குதலின் பின்பு அஜித் சற்று ஓய்வு பெற்றான். ஒருநாள் முகாமிலிருந்து வெளியே செல்லும்போது, தன் பக்கம் நோக்கி இரு பழக்கப்பட்ட முகங்கள் நடந்து வந்து கொண்டிருந்ததை அவன் கண்டான். அப் பெண் அவளது மகனின் கையைப் பிடித்துக் கொண்டு அஜித் இருந்த இடத்திற்கு வந்தாள்.

"ஐயோ! ஐயா! உங்களுக்கு என்னை ஞாபகம் இருக்கிறதா?"

ம் .... ஆம், ஆம் நீர்வேலியில்....

"சரி ஐயா! நான் ஐயாவின் முகத்தை நல்ல ஞாபகப்படுத்தி வைத்துக்கொண்டு இருந்தேன். இந்த இரு கண்கள்...."

"ஏன் என்ன நடந்தது?" அவளின்மேல் கொண்ட அன்பை மறைத்துக் கொண்டு, அவன் விசாரித்தான்.

ஐயோ! ஐயா! சிவன்கரன் என் கணவன். பொலீஸார் அவரை எடுத்துச் சென்றார்கள். நான் பொலீசுக்குப் போனபோது அவரை இராணுவத்திற்கு ஒப்படைத்தோம் என்று அவர்கள் கூறுகிறார்கள். எனக்கு யாரும் இல்லை ஐயா! எனக்கு ஐயாவின் நினைவு வந்தது. யாரிடம் கேட்டாலும் சரியாகப் பதில் சொல்கிறார்கள் இல்லை. நான் நேற்றிலிருந்து ஐயா வருவீர்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டு இருந்தேன் என அவள் சொன்னாள்.

"கொஞ்சம் மெல்ல பேசுங்கள். இப்போது என் பின்னால் வாருங்கள் என அஜித் அவளை அழைத்துக்கொண்டு மரத்தடிக்கு போனான். அவளுடைய மகன் முகத்தை முறைத்து வைத்துக் கொண்டிருந்தான். அஜித் அவனுடைய முகத்தைப் பிடித்து சிரித்தாலும், பிள்ளை கோபத்துடன் தலையைத் திருப்பிக்கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாவின் பின்புறமாகப் போனான்.

"என்ன நடந்தது? சொல்லுங்கள்" இப்போது அந்த பெண் சற்று நிம்மதியாகப் பேசினாள். தன்னுடைய கணவராகிய சிவன்கரனை ஒரு புலி என்று சந்தேகப்பட்டு பொலிஸ் அவனைக் கைது செய்துகொண்டு சென்றது. சன்னகாய் தாக்குதலில் அவனும் பங்குபற்றியதாக பொலீஸ் கூறுகிறது. இரு நாட்களாக அவனைப்பற்றி எந்த தகவலும் இல்லாத காரணத்தால் அவள் பொலிசுக்குப் போய் விசாரித்திருக்கின்றாள். சிவன்கரனை இராணுவத்திடம் ஒப்படைத்துள்ளதாக பொலிஸ் கூறியுள்ளது. ஆனால் அவளுக்கு இராணுவத்தால் எந்த உதவியும் கிடைக்கவில்லை. இவ்வளவு நேரமாக அஜித் அவ்வழியே வருவான் என அவள் காத்துக் கொண்டிருந்தாள். அஜித்தின் உள்ளத்தில் தன்மேல் கருணை இருக்கிறதென்று தெரிந்த காரணத்தினால் அவன் உதவியை நாடி வந்ததாகக் கூறினாள்.

"இருங்கள், நான் தேடிக்கொண்டு வருகிறேன்" என்று கூறிய அஜித் நடந்துகொண்டே, "பெயர் என்ன?" என்றான்.

"சிவன்கரன் அப்பாதுரை"

"இல்லை, உங்கள் பெயர்?"

"நான்.... நான்... ஜானகி ஐயா! ஜானகி சுந்தரம்!" அவளுடைய பதில் அஜித்தினுடைய தலையில் இடியைபோல் விழுந்தது. அந்த பெயரில் தன்னுடைய உள்ளத்தை கவரும் உறவு ஏதோ இருக்கிறது என அவன் உணர்ந்தான். "ஜானகி சுந்தரம்".... என்ன அழகான பெயர்....?

ஜானகியும் வசந்தராஜாவும் முகாமின் வெளியே மரத்தடியில் காத்துக்கொண்டு இருக்கும்போது, அஜித் இராணுவ அலுவலகத்திற்கு சென்று, சன்னகாய் தாக்குதலின்போது கைது செய்யப்பட்ட சிறைக் கைதிகளின் பெயர் பட்டியலில் சிவன்கரனின் பெயரை தேடிப்பார்த்தான். அதில் சிவன்கரன் அப்பாதுரையின் பெயர் இருக்கவில்லை.

"சில சந்தர்ப்பங்களில் இவர்கள் பொய் பெயர் கொடுக்கிறார்கள்" என்று பெயர் பட்டியலைக் காண்பித்த கேர்ணல் வணிகசேகர சொன்னான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எம்மிடம் இருப்பது அவர்கள் கொடுத்த பெயர்கள் தான். அங்கு பெயர்கள் அல்லாது அவர்கள் சொல்லியபோது வேறு பெயர்களும் இதோ இருக்கிறது.

உண்மையில் சில கைதிகளுக்கு இரண்டு அல்லது மூன்று பெயர்கள் இருந்தன. இரங்கநாதன் அல்லது கருப்புவேலு, சாமி வேல் அல்லது திமுரன். இது போன்ற பல பெயர்கள்.

அஜித் வெளியே போய் ஜானகியிடம் இதைப்பற்றி விசாரித்தான்.

"சிவன்கரனுக்கு வேறு பெயர்கள் இருக்கிறதா?"

"எனக்கு தெரியாது ஐயா! சிவன்கரன் தான்...."

"வீட்டில் அம்மா வீரன்" என்று அழைப்பாள். வீரன் என்ற பெயரை அஜித் அப்பட்டியலில் காணவில்லை.

ஜானகியின் கண்களில் கண்ணீர் வந்தது.

"நான் மேலும் தேடிப் பார்க்கிறேன்."

அஜித் வாக்குறுதி கொடுத்தான்.

"ஐயோ ஐயா! உங்களுக்கு புண்ணியம் ஐயா, புண்ணியம் உங்களுக்கு"

"இந்த பிள்ளையின் அப்பா அவர்"

"அப்பா இல்லாத துக்கம் எனக்கும் தெரிகிறது."

அவள் தொடர்ந்தும் அழத் தொடங்கினாள்.

"அழ வேண்டாம்" என அஜித் சொன்னான்.

"அழுவதால் அந்த மனிதர் திரும்பி வரப்போவதில்லையே"

ஜானகி தன் புடவையால் கண்ணீரை துடைத்துக் கொண்டாலும், கண்களில் மேலும் கண்ணீர் பெருக்கெடுப்பதை அவளால் கட்டுப்படுத்த முடியவில்லை.

திடீரென அவள் பிள்ளை முன்னால் ஓடிவந்து ஏதோ முணுமுணுத்தாள். அஜித்திற்கு அது சற்றுக் கேட்டது. "கள்ளன் கொல்ல வேண்டும்" என்று சொன்னதாகக் கேட்டது. ஜானகி பிள்ளைக்கு சத்தம் போட்டாள். "ஐயோ, ஐயா! இந்தப் பிள்ளை மிகவும் கெட்டவனாய் வளர்கின்றான்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மரணவா என்கிறான்"

"இல்லை ஐயா! மரம் மரம் என்று சொன்னது இந்த மரத்தைத்தான் என்று எதிரே இருந்த மரத்திற்கு கையை நீட்டினாள்.

"ஐயா! கொஞ்சம் தேடிப் பாருங்கள். நான் மீண்டும் வருகிறேன்."

"நான் பார்க்கிறேன்." தனக்கு எது செய்ய முடியும், எது செய்ய முடியாது என்பதை யோசிக்காமல் அஜித் சொன்னான். அது ஒரு உறுதிமொழி அல்ல, எனக்கு வீட்டு விலாசம் தாருங்கள்."

அஜித், ஜானகி கூறிய நீர்வேலி விலாசத்தை தன்னுடைய குறிப்பு எழுதும் புத்தகத்தில் எழுதிக் கொண்டான். அப்போது ஜானகி தன்னையே வேண்டுமென்று பார்த்துக் கொண்டிருந்தது அவனது கண்ணுக்குத் தெரிந்தது. என்றும் இல்லாதவாறு அவன் உடம்பை வியர்வை நனைத்தது. ஜானகி புடவைத் தலைப்பால் தனக்கு காற்று வீசிக் கொள்ளும்போது அவனுக்கும் காற்று பட்டது, அவள் அவ்வாறு செய்தது தனக்கும் காற்றுப் படும் பொருட்டாகவா? என அவன் நினைத்தான்.

திடீரென வசந்தராஜா அப்பக்கம் ஓடத்தொடங்கினான். "ஓடாதே" என்று ஜானகி கூவினாள்.

"எனக்கு வர முடியாது!" வசந்த ராஜா தூரமாக இருந்து கொண்டு சொன்னான்.

"அவன் வரமாட்டான். நான் போகிறேன் ஐயா!"

"பிள்ளைக்கு சிங்களம் தெரியுமா?"

"கொஞ்சம் தெரியும் ஐயா!"

"நான் சின்ன வயதில் படித்த புத்தகம் இன்னும் என்னிடம் இருக்கிறது. நான் அவனுக்கு சிங்களம் படிப்பித்தேன். வெள்ளவத்தையிலும் படிப்பித்தேன்."

"அது நல்லது! சின்ன வயதில் நானும் தமிழ் கொஞ்சம் படித்தேன். இப்போது ஞாபகம் இல்லை."

"உண்மைதானா? ஐயா?"

அஜித் சிரித்தான். சிறுவயதில் தான் எங்கேயோ கற்றுக் கொண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் பாடல்களின் வரிகளை அம்மாவுக்குக் கேட்கும்படியாக பாடியது அவன் ஞாபகத்தில் வந்தது. ஆனால் இப்போது அந்த பாட்டுக்கள் ஞாபகம் இல்லை. ஜானகி உற்சாகத்துடன் சிரித்தாலும், அடுத்த நிமிடமே அந்த சிரிப்பு மறைந்தது.

"ஐயோ! ஐயா என் கணவரைப்பற்றி கொஞ்சம் பார்த்துச் செய்யுங்கள்."

"ஆம் இப்போது விலாசமும் இருக்கிறது தானே. நான் கொஞ்சம் தேடிபார்த்துச் சொல்லுகிறேன்."

"புண்ணியம் ஐயா! நாங்களும் நுகேகொடையில் இருந்தோம்" அவள் கண்களில் கண்ணீர் வந்தது.

"நான் போகிறேன் ஐயா! துக்கத்தோடு சொன்னாள். அவள் திடீரென மறுபக்கம் திரும்பி தூரமாக போகத் தொடங்கினாள். கொஞ்சம் தூரத்தில் அவள் வசந்த ராஜாவைப் பிடிக்கும் நோக்கத்துடன் ஓடினாள். அவள் போவதை அஜித் மரங்களுக்கிடையில் நின்று கொண்டு பார்த்தான். இராணுவ முகாமுக்கு வந்த லொறியால் எழுப்பப்பட்ட தூசி காரணமாக அவள் சிறிது நேரம் கண்தெரியாது கஷ்டப்பட்டாள். தூசி அங்கிருந்து அகன்ற பின்பு மீண்டும் அவள் தன் பிள்ளையின் கைகளைப் பிடித்துக்கொண்டு போவதைக் கண்டான். அவள் திரும்பி பார்த்தாள்; பிறகு புடவைத் தலைப்பால் அவள் தலை மூடிக்கொண்டாள்.

அஜித் மனதில் சொல்ல முடியாதளவு துக்கம் ஏற்பட்டது. அந்த துக்கம், வேதனை அநேகமாக ஜானகியின் காரணமாக ஏற்பட்டது. பிள்ளை அசட்டுத்தனமாக வளர்ந்தாலும், அவன் மீது அஜித்தின் உள்ளத்தில் ஒருவித கருணை ஏற்பட்டது. தன் தந்தை காணாமல் போனதற்கு காரணமாக இருந்த இராணுவம் மீதும், பொலீஸார் மீது கோபம் ஏற்பட்டது நியாயம் தானே? என அஜித் மனதிற்குள் தர்க்கம் செய்தான். ஜானகியின் கணவனாகிய சிவன்கரனை தேடிப்பார்ப்பதற்கு அவன் எவ்வளவு தீர்மானம் எடுத்தாலும் அது அவ்வாறு நடைபெறவில்லை.

அதற்குக் காரணம் அந்த ஜூலை மாதம், ஒருநாள், அஜித் எதிர்பாராத வகையில் ஒரு சம்பவம் நடந்ததாகும். யாழ்ப்பாணத்தில் இராணுவ வீரர்கள் பயணம் செய்த வண்டிகளில் ஒன்று வெடிகுண்டில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிக்கியது. அஜித் கூட இந்த பிரிவில் பயணம் செய்தாலும் முந்திய பிறவியின் புண்ணியத்தினாலோ என்னவோ அவன் பயணம் செய்த வண்டி இந்த தாக்குதலில் சிக்கிக் கொள்ளவில்லை. குண்டுவெடிப்பில் சிக்கிக் கொண்டது அவர்களுக்கு முன்னால் சென்றுகொண்டிருந்த வண்டிதான். அஜித் கூட சிறு காயங்களுக்குள்ளானான். எங்கேயோ இருந்து பறந்து வந்த இரும்புத் துண்டு ஒன்று அவனுடைய கையைப் பதம் பார்த்தது. பெரும் சத்தம் ஒன்று மட்டும் கேட்டது. அவனது ஞாபகத்தில் வந்தது. அவன் வவுனியா ஆஸ்பத்திரியில் கண்களைத் திறந்து பார்த்தபோது கேர்ணல் வணிகசேகர அவனருகில் நின்று கொண்டிருந்தான்.

"எங்களில் பதின்மூன்று பேர் மரணமடைந்தார்கள்." வணிகசேகர சொன்னதைக் கேட்டு அஜித்தின் மனம் வேதனை அடைந்தது. நேற்று அவர்களது சடலங்கள் கொழும்புக்கு எடுத்து செல்லப்பட்டன.

"அங்கே கொழும்பு நெருப்புப்பற்றி எரிகிறதாம்"

"அது ஏன் கேர்ணல்?"

"எமது வீரர்களின் சடலங்களைக் கண்டு எமது மக்கள் ஆவேசம் கொண்டுள்ளார்கள். கொழும்பில் தமிழ் மக்களைக் கொன்று போடுகிறார்களாம். கடைகளைத் தீக்கிரையாக்குறார்களாம்."

"அப்பா?"

"உங்களுடைய நிலைமையைச் சொல்லி அப்பாவுக்கு நாம் செய்தியை அனுப்பி இருக்கின்றோம்."

"எனக்கு இந்த கையை அசைக்க முடியவில்லை" அஜித்தின் கை மேலும் வேதனையைக் கொடுத்தது.

"வலிக்கிறதா?"

"ஆம் சார், ரொம்ப,

"இருங்க, நான் ஒரு மருந்தைக் கொண்டுவரச் சொல்கிறேன்"

"யார் சார் இறந்தது"

கேர்ணல் பெயர் பட்டியல் ஒன்று வாசித்துக் கொண்டே போனான். ஒரு பெயரைக் கேட்டதும் அவனுக்கு வேதனையாக இருந்தது. "புத்தி குணசேகர மற்றும் எமது சாரதி மனதுங்க".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஜித் சத்தமிட்டு அழுதான். புத்தி, மனதுங்க... தன்னுடைய இதயத்தின் ஒரு பகுதியை யாரோ பிளந்தது போல உணர்ந்தான்."ஐயோ ஐயா! ஐயோ!".

"பொறுத்துக்கொள்ளுங்கள் அஜீத்" என கூறிய வணிகசேகர வெளியே போனான். அஜித்தின் கை மேலும் மேலும் வேதனை தந்தது. அவனது இதயமும் சேர்ந்து வலிப்பதுபோல இருந்தது. கையில் பென்டேஜ் கட்டப்பட்ட காரணத்தினால் அவனால் வெளியே போக முடியவில்லை. அந்த வேதனை உடல் முழுவதும் பரவுவது போல அவன் உணர்ந்தான். குண்டு வெடித்த சப்தம் இன்னும் காதில் கேட்பது போல உணர்ந்தான்.

வணிகசேகரவுடன் வந்த ஒரு தாதி அவன் பின்புறத்தில் ஊசி ஒன்றைப் போட்டாள். அந்த ஊசியின் வேதனையை அவன் அறியவில்லை. காரணம் அவன் உள்ளத்தில் அதைவிட பன்மடங்கு வேதனை நிறைந்திருந்தது. புத்தி, மனதுங்க கொழும்பு தீக்கிரையாகி எரிகிறது. ஜூலை புரட்சி - இறந்த புரட்சி." அஜித் மெல்ல மயக்கமாகி நித்திரையில் மூழ்கினான். அப்படி மயக்கம் கொள்ளும்போது அவனுக்கு ஜானகியின் முகம்தான் தெரிந்தது. அவளுடைய கண்ணீர் நிறைந்த கண்கள் அவனுக்கு தெரியவே "ஜானகி" என்று அவன் புலம்பினான்.

அவன் சீக்கிரமாக நித்திரையாகி கனவுலகில் பிரவேசித்தான். அந்த கனவில் அவன் முதல் முதலாகப் பார்த்தது ஜானகியைத்தான். ஜானகி சிரித்த முகத்தோடு காட்சியளித்தாள். மெல்ல மெல்ல வட்ட வடிவமாக சுற்றிக் கொண்டிருந்த அவள் முகம், சின்னதொரு சிறுமியின் முகத்தைப் போலத் தெரிந்தது. அதன் பின்பு, அந்த சிறுமியின் கையைப் பிடித்துக்கொண்டு போகும் மனிதன் ஒருவனைக் கண்டான். அவன் தலைமேல் பெரியதொரு கூடை இருந்தது. சுறுசுறுப்பான மெல்லிய உருவத்தை அவன் கொண்டிருந்தான்.

சிறுமியின் கையைப் பிடித்துக்கொண்ட அந்த மனிதன் தகரக் கூரையினாலான வீடு ஒன்றின் உள்ளே போனான். குடிசைக்குள்ளே, இருளில் குழந்தையைக் கையில் ஏந்திக்கொண்டு பெண் ஒருத்தி இருந்தாள். அந்த பெண்ணின் முகமும், ஜானகியின் முகமும் ஒரே மாதிரியாக அவனுக்குத் தென்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பெண், குழந்தையை அந்த மனிதனுடைய கையில் கொடுத்தாள். குழந்தையைத் தூக்கிக் கொண்ட அந்த மனிதன், குடிசைக்கு வெளியே வந்தான். குடிசையின் வெளியே ஆறு ஒன்று இருப்பதைக் கண்டான். குழந்தையைக் கையில் ஏந்தியவாறு அம் மனிதன் ஆற்றின் அருகில் அமர்ந்து யோசனையில் இறங்கினான்.

இதன் பின்பு கனவு காட்சிகள் மாற்றமடைந்தன. அந்த மனிதனின் அழுங் குரலை அஜித் கேட்டான். அம் மனிதன் தார் ரோட்டில் உட்கார்ந்தான். அவனைச் சூழ்ந்து மக்கள் கூட்டம் இருந்தது. திடீரென அவன் இருந்த இடம் தீப்பற்றி எரிய ஆரம்பித்தது.

அஜித்துக்கு மூச்சு விடுவது கூட கஷ்டமாக இருந்தது. மக்கள் கூட்டத்தின் மத்தியில் எரிகின்ற நெருப்பு சிறிது சிறிதாக குறைந்து அவ்விடத்தில் இருள் சூழ ஆரம்பித்தது.

அஜித் வேர்த்து கொட்டிக் கொண்டு எழுந்து நின்றான். அவனுடைய குரலைக் கேட்டு சிலர் அந்த இடத்திற்கு ஓடி வந்தார்கள்.

"குண்டு அதிர்ச்சி" என்று யாரோ சொல்வது கேட்டது. "ஷெல் ஷொக்" என்றார்கள்.

"இன்னொரு ஷொட் கொடுப்போமா டாக்டர்?"

"இல்லை. அப்படியே அவனை தூங்க விடுங்கள்."

இந்த சம்பாஷணைக் கேட்டுக் கொண்டே அஜித் மீண்டும் தூக்கத்தில் இறங்கினான். இதன் பிறகு அவன் இந்தக் கனவு காணவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



6

# வசந்த ராஜா

## 1987

சரியான சந்தர்ப்பம் வரும்வரை, வசந்த ராஜா காட்டில் இருளில் மறைந்து இருந்தான். கொஞ்ச வியர்வையால் அவன் உடம்பெல்லாம் நனைந்திருந்தது. கொசுக்களின் தொந்தரவை அவன் மௌனமாக பொறுத்தக் கொண்டான். கொசுவை அடிக்கவும் முடியவில்லை. அத்தகைய எந்த சத்தமும் எதிராளியை உஷார்படுத்தக் கூடியதாக இருக்கும் என நினைத்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் காடு யான்ஓயாவிற்கு வடக்கே போதிபுரத்திற்கு அருகில் இருந்தது. வசந்த ராஜா உட்பட பன்னிரெண்டுபேர் முன்கூட்டியே பேசிக் கொண்டவாறு இங்கே கூடி இருந்தார்கள். இவர்கள் இந்த இடத்திற்கு ஒரே நேரத்தில் வரவில்லை. வல்வெட்டித்துறையில் முருகன் கொடுத்த ஆணையின்படி அவர்கள் ஒருவர் ஒருவராக இந்த இடத்திற்கு வந்தார்கள். அப்படி வரும்போதும் அவர்களுக்கு வேண்டிய ஆயுதங்கள் இந்த காட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்தன.

வசந்த ராஜா உட்கார்ந்த இடத்தையே குனிந்து பார்த்துக் கொண்டிருந்தான். தனக்கு ஆணை கிடைக்கும்வரை அப்படியே இருந்தான். அவன் உடுத்திருந்த பச்சை நிற சட்டையும், காற்சட்டையும் இந்த காட்டுக்குப் பொருத்தமாக இருந்தது. அவனை அறியாமலேயே அவன் தன் கழுத்தில் தொங்கிக்கொண்டிருந்த மாலையை தடவிப் பார்த்தான். இந்த மாலை தன்னுடைய அம்மா பாதுகாப்புக்காக கட்டிய மாலையை விட எவ்வளவு வித்தியாசமானது? இந்த மாலையில் வேறுவிதமான பாதுகாப்புண்டு. இந்த மாலையில் 'சயனைட்' அடங்கியுள்ளது.

எதிரியின் கையில் சிக்கிக்கொண்டால் அவர்கள் கையில் துன்பப்படாமல் இந்த 'சயனைட்' கேப்சூலை உட்கொண்டு தற்கொலை செய்து கொள்ள வசந்த ராஜா கற்றுக் கொண்டது வல்வெட்டித்துறை முகாமிலிருந்த சமயத்திலேயாகும்.

தன்னுடன் வந்த ஏனையோரும் கழுத்தில் இந்த 'சயனைட்' மாலையை அணிந்து கொண்டிருந்தனர். ஆனால் அவர்களின் நோக்கம் தற்கொலை செய்து கொள்வதல்ல. போதிபுர கிராமத்தை அழிப்பதே அவர்களுடைய நோக்கமாக இருந்தது. கூடிய சீக்கிரத்தில் கிராமத்தில் உள்ள இளைஞர்கள், வயோதிபர்கள், குழந்தைகள், ஆண்கள், பெண்கள் ஆகிய எல்லோரையும் கொன்று விட்டு, குடிசைகளை தீக்கிரையாக்குவதே அவர்கள் திட்டம்.

இதற்கு முன்னால் இருமுறை வசந்த ராஜா தன் உயிரை பணயம் வைத்து இவ்வாறான தாக்குதலில் ஈடுபட்டு தன் இனத்திற்காக சேவை செய்திருக்கின்றான். பதினாறாவது வயதை அடைந்த வசந்த ராஜா தான் உண்மையான மனிதனாக மாறுவதற்கு இந்த கொரில்லா சண்டையே காரணம் என்று நினைத்தான். அந்த சண்டையில் அவனோடு சென்ற குழுவினர் வவுனியாவுக்கு போகும் பஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்டியை தாக்கினார்கள். வசந்த ராஜா இளம்பெண் ஒருத்தியின் மார்பைக் குறிபார்த்து சுட்டான். இதன் பின்பு பைத்தியம் பிடித்தவன் போல் அவனுடைய கை வேகமாக செயற்படத் தொடங்கியது. எல்லா இடங்களிலும் பலத்த அழுகை குரல்களின் நடுவில் பயங்கரவாதிகள் தமது செயல்களை வேகமாக செய்யத் தொடங்கினர். அப்பாவி மக்கள் ஆயுதங்களின்றி சண்டை செய்ய முடியாமல் பயத்தினால் என்ன என்று தெரியாது நடுங்கும் சமயத்திலே வசந்த ராஜா தன் கையில் இருந்த கத்தியால் சிலரை வெட்டினான். மிகவும் கூர்மையாக இருந்த அந்த கத்தியால் வெட்டும்போது வந்த இரத்த வாசனையும், சதையை வெட்டும்போது மிருகங்களுக்கு சமமான கீழ்தர ஆசையும் அவனிடம் தோன்றின. அவன் இதுவரை அறியாத காம உணர்ச்சி, மனித உடல்களின் பல உறுப்புக்களைக் கண்டு அவனுள் எழுந்த உணர்ச்சிகளால் அவன் உள்ளம் நடுங்கியது. எல்லாம் முடிந்த பிறகு அவன் மார்பிலும், கைகளிலும் இரத்தம் இருக்கக் கண்டான். கைகளை குளத்து நீரில் கழுவும்போது அவன் தன் உடலில் உணர்ச்சி வசப்பட்டிருந்ததை உணர்ந்தான். தான் சிவபெருமான் போல நடந்துகொண்டான்! சிவபெருமான் எல்லாவற்றையும் அழிப்பதும், சாம்பலாக்குவதும் இப்படி தானா? என நினைத்தான். இந்த அழிவுக்கு பிறகு எல்லாம் புதுமையாக மாறியது. இரத்தத்தினால் கழுவப்பட்டு உதயமாவது தான் புதிய உலகம்.

இதன் பிறகு தந்திரிமலையில் உள்ள பன்சாலை ஒன்றைத் தாக்குவதில் வசந்தராஜா கலந்து கொண்டான். பிக்குகள், பலரை வெட்டிக் கொலை செய்வதில் இவனும் பங்கு கொண்டான். இந்த முறையும் அப்பாவி பௌத்த பிக்குகள் கொல்லப்பட்டார்கள். அவர்கள் உடைகள் இரத்தத்தினால் ஈரமானது. வசந்த ராஜா மனதில் முந்திய முறையைப் போல இப்போதும் மிருகத்தனமும் காம உணர்ச்சிகளும் தோன்றின. இந்த இரவிலும் தன்னுடைய வேலைகளை செய்து முடித்த அவன், ஏனைய பயங்கரவாதிகளுடன் சேர்ந்து பனஞ்சாராயம் குடித்தான். இரவில் வெகு நேரம் போகும் வரை அவனுக்கு தூக்கம் வரவில்லை. இறுதியில் அவன் தனது இரகசிய இடத்தைத் தேடிப் பிடித்து அங்கே தன் இச்சையைத் தீர்த்துக் கொண்டு படுத்து உறங்கினான். இந்த பூமியில் தனக்கும் ஒரு பகுதி இருக்கிறது என்பதை இந்த இரவிலேயே வசந்த ராஜா அறிந்து கொண்டான்.

வசந்த ராஜா இந்த பூமிக்காக சண்டை போட்டான். தன்னுடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனத்திற்கு இந்நிலம் சொந்தம் என நம்பிய வசந்த ராஜா இந்த பூமியை உரிமை கொள்ளத் தான் இந்த முடிவு இல்லாத சண்டை நடக்கிறது என்று நினைத்தான்.

பதினாறு வயதுடைய தான், வாழ்க்கையில் எவ்வளவு தூரத்தை கடந்திருக்கின்றேன்? என அவன் தன்னுள் நினைத்தான். வயது பத்தாகும் வரை அவன் நீர்வேலியில் அப்பாவின் வீட்டில் தான் தங்கியிருந்தான். அப்பா மர்மமான முறையில் காணாமல் போன பிறகு, வசந்த ராஜா தன் அம்மாவுடன் தங்கமணி பாட்டியின் வீட்டுக்கு வந்தான். பாட்டி புத்தூரில் மகேஸ் மாமா உடன் இருந்தாள். பனை ஓலை வேலியைக் கொண்ட இந்த மைதானத்திலேயே அவன் விளையாடுவான். மகேஸ் பாட்டன் என்றாலே அவன் உள்ளத்தில் பயம் தோன்றியது. பாட்டாவின் குரல் மிக கடுமையாக இருந்தது. அவனுடைய கறுப்பு நிறமான பெரிய உடல் திமிங்கிலம் போல காட்சியளித்தது. பாட்டி எப்போதும் வெள்ளை நிற புடவை உடுத்தி குனிந்த உடலுடன் மௌனமாக இருப்பாள். அவளிடம் நிரந்தரமான சோகம் குடிகொண்டிருந்ததை அவன் கண்டான். பாட்டி தனக்கு எவ்வளவு அன்பு செலுத்தினாலும், அவள் தன்னைவிட்டு தூரமாக ஒதுங்கி இருப்பதாக வசந்த ராஜாவுக்குத் தெரிந்தது.

அம்மா, வசந்த ராஜாவை தன்னால் முடியுமளவுக்கு தீயவைகளிலிருந்து பாதுகாத்தாள். இத்தகைய நெருங்கிய அன்பையும் உறவையும் ஒதுக்கிக் கீழ்தள்ளிவிட்டு, கடைசியில் புத்தூரை விட்டு வல்வெட்டித்துறைக்கு சென்றான்.

இரங்கநாதன் மாமா அவனை தன் வசப்படுத்தி எடுத்துக்கொண்டு போனான் என அம்மா குற்றம் சாட்டினாள். இரங்கநாதன் மாமா அம்மாவின் தம்பியாகும். அவன் பாட்டியுடன் சண்டை போட்டுக்கொண்டு பதினாறாவது வயதில் வல்வெட்டித்துறைக்குப் போய் விட்டான்.

அங்கு ஒரு கத்தோலிக்கக் குடும்பத்தைச் சேர்ந்த இறைச்சி வெட்டுபவரின் குடும்பத்தில் பிறந்த ஒரு பெண்ணை மணந்து கொண்டான். இதை வசந்த ராஜாவின் அம்மா அடிக்கடி கூறுவதை அவன் கேட்டிருக்கின்றான்.

இரங்கநாதன் புத்தூர் வீட்டுக்கு எப்போதாவது வந்தால் மகேஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டன் இல்லாத நேரத்தை பார்த்து தான் வருவான். இவ்வாறு வரும்போதெல்லாம் இரங்கநாதன் மாமா வசந்த ராஜாவுக்கு இனிப்பு பண்டங்கள் வாங்கிக் கொண்டு வந்தான். ஆரம்பத்தில் அவன் அம்மா இந்த இனிப்பு பண்டங்களை சாப்பிட வசந்த ராஜாவுக்கு அனுமதியளித்தாலும், சில காலம் செல்ல அம்மா அவற்றை குப்பைத் தொட்டியில் போட்டாள்.

"அவன் என்ன வசிய மருந்து போட்டுக்கொண்டு வருகிறான் என்று தெரியவில்லை, இந்த சிறுவனையும் தன் வசப்படுத்திக் கொள்வான் போல் தெரிகிறது" என பாட்டி கூறினாள்.

தான் இரங்கநாதன் மாமாவின் வலையில், சிக்கிக் கொண்டதை வசந்த ராஜா உணர்ந்தான். அவன் இரங்கநாதன் மாமாவைப் போல சுதந்திரமாக அங்கும் இங்கும் பிரயாணம் செய்ய ஆசைப்பட்டாலும், யாழ்ப்பாணத்திலும் ஏனைய இடங்களிலும் பல கொலைகளும், பயங்கரவாத செயல்களும் நடந்து கொண்டிருந்தமையால் அம்மா வசந்த ராஜாவைத் தங்களது தோட்டத்திலிருந்து வெளியே செல்ல அனுமதிப்பதில்லை.

"கொழும்பு போகவும் முடியாது" என பாட்டி கவலைப்பட்டாள். அங்கே போனாலும் பயம்தான். இங்கேயே இருக்கிறேன்" கொழும்பு சுற்றுப் புறத்தில் உள்ள தமிழ் மக்களை கொலை செய்த செய்தியை வசந்த ராஜா பலமுறை கேட்டிருந்தான். "எங்கே போனாலும் சாவதற்கு நேரம் வந்தால் மரணம் நிச்சயம்?" என பாட்டி கூறினாள். நாம் கடவுளை வணங்கி எம்மைப் பாதுகாக்குமாறு வேண்டிக் கொள்வதுதான் நம்மால் செய்ய முடியும், மற்றதை கடவுள் பார்த்துக் கொள்வார்.

இரங்கநாதன் மாமா கடவுளை வணங்காத காரணத்தினால் பாட்டி அவனை மதிப்பதில்லை. இரங்கநாதன் மாமா கத்தோலிக்கப் பெண் ஒருத்தியைத் தேடி போனதினால் அவனுக்கு தன் சொந்த குடும்ப உறவை வளர்த்துக் கொள்ள முடியவில்லை. காரணம் அவர்களிடம் இருந்து அதற்கு அனுமதி கிடைக்கவில்லை. அவள் ஊரில் இறைச்சி வெட்டும் மக்களோடு சேர்ந்து வாழ்ந்த இரங்கநாதன், அவளுடைய அனுமதியின்றி படகில் ஏறி தென் இந்தியாவுக்கு போனான்.

ஓர் ஆண்டு கடந்த பிறகு அவன் சொந்த நாட்டுக்குத் திரும்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தான். இப்போது அருணாக்ஷியை அடைய வேண்டும் என்ற எண்ணம் அவனிடம் இருக்கவில்லை. அருணாக்ஷியைவிட அவனுக்கு வேறு பல முக்கிய விடயங்களில் கவனம் இருந்தது.

ஒருமுறை இரங்கநாதன் புத்தூரில் இருந்த தன் தாயின் வீட்டுக்கு வரும்போது அவனுடைய அக்காவாகிய ஜானகி, தன் மகனாகிய வசந்தராஜாவை அவன் கண்களில் இருந்து மறைத்து வைக்க முயற்சித்தாள். ஒருமுறை இரங்கநாத மாமா வந்தபோது அம்மா தன்னைப் படுக்கையின் கீழ் மறைத்து வைத்தது வசந்தராஜாவுக்கு இன்னும் ஞாபகம் இருக்கின்றது. இரங்கமாமா பெரிய குரலில் அப்போது பேசியதை சிறியவனாகிய வசந்த ராஜாவுக்கு, புரியவில்லை. ஆனால் அம்மா அடிக்கடி தான் வீட்டில் இல்லை என்று அவனுக்குக் கூறுவதை அவன் நன்கு கேட்டிருக்கின்றான்.

இரங்கமாமா வரும்போதெல்லாம் அம்மா தன்னை மறைத்து வைத்தது ஏன்? என ஆரம்பத்தில் வசந்த ராஜாவுக்கு புரிந்துகொள்வது சற்று கடினமாக இருந்தது. மாமன் வருவதை முன்கூட்டியே அம்மா அறிந்து கொண்டால், வசந்த ராஜாவுக்கு வீட்டுக் கூரைக்குள்ளேயாவது ஒளிய இடம் கிடைக்கவில்லை. அம்மா அவனை அயலார் வீட்டுக்கு அனுப்பி வைத்தாள். ஆனால் அம்மாவுக்கு இந்த விளையாட்டை தினமும் செய்ய முடியவில்லை. இந்த பழங்களை சாப்பிடக்கூடாது என்று சொல்லும்போது சாப்பிடுவதற்கு ஆசை ஏற்படுவது போல வசந்த ராஜாவை இரங்கநாதன் மாமாவிடம் சேர வேண்டாம் என அம்மா கூறினாலும் அவனுக்கு அவனிடம் பழகவேண்டும் என்ற ஆசை வரவர அதிகமாகியது. ஒரு நாள் மாலை நேரம் எதிர்பாராத விதத்தில் இரங்கமாமா பனை வேலியினுள்ளே பிரவேசிக்கும்போது, வசந்த ராஜாவை வீட்டு பின்புறத்தில் உள்ள வழியாக வெளியே போகும்படி அம்மா கூறினாள். வேறு சமயங்களில் வசந்த ராஜா அம்மாவின் சொல்லைக் கேட்டு சிவம்மானுடைய வீட்டுக்கு ஓடுவான். ஆனால் அன்று அவன் பனைவேலிக்கு வெளியே நின்று கொண்டு எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்தான்.

இரங்க மாமாவும், அம்மாவும் வெகுநேரமாகப் பலத்த குரலில் பேசிக்கொண்டிருப்பதை அவன் கேட்டான். பாட்டியும் எதை எதையோ கூறினாள். இதன்பிறகு இரங்க மாமா எல்லோரையும் சபித்துவிட்டு வெளியே சென்றான். அவன் வரும்போது, திடீரென வசந்த ராஜா பனை வேலிக்கு வெளியே வந்து திடீரென அவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னால் நின்றான். இருவரும் நேருக்கு நேராகப் பார்த்துக் கொண்டார்கள். இரங்கமாமாவிடம் கொடிய பார்வையும், கபடமான சிரிப்பும் இருந்தது.

"ஏய் பொடியா இங்கே வா," இரங்கமாமாவின் பேச்சைக் கேட்டு வசந்தராஜா, மாமா இருந்த பக்கமாக ஊசி ஒன்று காந்தத்தினால் ஈர்க்கப்படுவது போல சென்றான். "நீ என்னுடன் வல்வெட்டித்துறைக்கு வருகிறாயா? இந்த பெண்களுடன் இருந்து உனக்கு எந்த சுகமும் வரப்போவதில்லை."

"உனக்கு இப்ப என்ன வயது?"

"பதின்மூன்று ஆகிவிட்டது மாமா"

வாயிலிருந்து பால்வரும் வயது

"அடேய் உனக்கு வேண்டியதை நாம் கொடுப்போம். இங்கே இருந்து கஷ்டப்படத் தேவை இல்லை."

"எங்கே போக வேண்டும் மாமா"

"உனக்கு சம்மதம் என்றால் இந்தியாவுக்கும் போகலாம். ஏ பொடியன்! உனக்கு துப்பாக்கிகளுக்கு ஆசையா?"

"வசந்த ராஜா ஆம் என்று பொம்மையைப் போல தலையாட்டினான்"

"உனக்கு தெரியுமா நாங்கள் ஏன் சிக்கிக்கொண்டு இருக்கிறோம் என்று"?

கீழே இருப்பவர்கள் எம்மை சிக்க வைத்திருக்கிறார்கள். நீ சண்டை போட வருகிறாயா"?

"எம்.ஜி.ஆர். போல"

வசந்த ராஜா மீண்டும் தலையாட்டினான். கிட்ட நெருங்கிய இரங்க மாமாவின் வியர்வை நாற்றம் அவனுக்கு தெரிந்தது. "அடேய் நீ எங்களுடன் வா." நாளை இரவு நான் சைக்கிள் வண்டி எடுத்துக்கொண்டு வருகிறேன். நீ எழுந்து இருக்கவேண்டும்.

"எத்தனை மணிக்கு மாமா"?

"உனக்கு மணி பார்க்கத் தெரியுமா?"

"இருளில் முடியாது"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீ வீட்டுக்குள்ளேதான் படுக்கிறாயா?"

"ஆம்! வெக்கை அதிகம் என்றால் வெளியே படுப்பேன்."

"நீ நாளைக்கு வெக்கை அதிகம் என்று கூறி வெளியே படுத்துக்கொள். தெரியுமா?"

நான் மோட்டார் சைக்கிள் எஞ்சினை நிற்பாட்டிவிட்டு இங்கே வருகிறேன். தெரியுமா? நீ அதில் ஏறிச்செல்ல வா? நான் விசில் அடிக்கிறேன். அப்ப நீ வா? சரியா? வரவில்லை என்றால் உனது அம்மாவையும் பாட்டியையும் நான் கொன்று விடுவேன்! சரியா?

கடைசிச் சொல்லைக் கேட்கும்போது வசந்த ராஜாவின் உடல் நடுங்கியது. இரங்கமாமா அதை எவ்வளவு இலேசாகச் சொன்னான். ஆனால் அவன் குரல் கடுமையாக இருந்தது. வசந்த ராஜா பயந்து காணப்பட்டான். இரங்கமாமா சிரித்துக்கொண்டு அவனுடைய மார்பைப் பிடித்தான். அதில் இன்பமும், வேதனையும் இருந்தது.

"இந்தா! இரங்கமாமா வசந்த ராஜாவின் கையில் மிட்டாய் ஒன்றை வைத்தான்.

"சாப்பிடு."

அதை கையில் எடுத்த வசந்த ராஜா, இரங்க மாமா சந்தோஷத்துடன் வெளியே நடந்து செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்தான். மிட்டாய் பல நிறமான கடதாசியில் சுற்றியிருந்தது. அந்த அழகான கடதாசியைக் கழற்றி மிட்டாயைச் சாப்பிட நினைக்கும்போது வசந்த ராஜாவுக்கு அம்மாவும், பாட்டியும் சொன்ன புத்திமதிகள் ஞாபகத்தில் வந்தது. இரங்கமாமா இந்த மிட்டாயில் ஏதாவது வசிய மருந்து வைத்திருப்பானோ? தான் இந்த மிட்டாயை சாப்பிட்டால் இரங்க மாமாவின் வசமாவேனா? அதைச் சாப்பிட்டாலும், சாப்பிடாவிட்டாலும் இரங்கநாத மாமாவின்பால் வசப்பட்டுள்ளேன் என அவன் நினைத்தான்.

இரங்கமாமாவுடன் சேர்ந்து வல்வெட்டித்துறைக்குச் சென்று, அங்கே வல்வெட்டித்துறைக்கு சென்று, அங்கேயிருந்து படகில் இந்தியாவுக்குப் போனால் எவ்வளவு நல்லது? இந்த பனை வேலிக்குள்தான் எவ்வளவு காலம் சிக்கிக்கொண்டு இருப்பது? கடதாசியைக் கழற்றி மிட்டாயை வசந்த ராஜா வாயில் போட்டுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டான். அதில் புதுமையான சுவை இருக்கிறது என அவன் நினைத்தான். ஏதோ ஒரு உணர்வு உடம்பெல்லாம் ஓடுவதைப்போல அவனுக்குத் தெரிந்தது. இது தன் வசப்படுத்தும் மருந்தா? பனைவேலி அருகில் உட்கார்ந்த வசந்த ராஜா உடலில் ஏதோ ஒரு உணர்ச்சி ஓடுவதுபோல் இருந்தது. மாலை நேர சூரிய ஒளியினால் அவன் உடல் சூடேறி இருந்தது. அவனை அறியாமலேயே அவன் தன் மார்பைத் தடவிப் பார்த்தான்.

அதில் புதுவிதமான சுகம் இருந்தது. அவன் அதை மெல்லப் பிடித்தான். இரங்க மாமாவின் விரல்களின் கெட்டியான தன்மை இன்னும் அங்கே இருப்பது போல தெரிந்தது.

"நீ அங்கே என்ன செய்கிறாய்?" அம்மாவின் குரலைக் கேட்டு வசந்த ராஜா திடுக்கிட்டான்.

"நீ சிவம்மா வீட்டில் இருக்கிறாய் என்றல்லவா நான் நினைத்தேன்"

"நான் போய் வந்தேன். இரங்கமாமா போய்விட்டாரா?"

"போய்விட்டான். வா வீட்டுக்கு நீ வெளியே இருக்க வேண்டாம். மிகவும் கொடிய மனிதர்கள் உன் வயதில் உள்ளவர்களை பிடித்துக்கொண்டு போகிறார்கள். ஐயோ! எனக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை"

அம்மா சொல்லைக் கேட்டு வசந்த ராஜா பனை வேலியின் உள்ளே வந்தான். ஆனால் இரவு நேரம் வரும்வரை அவன் பொறுமையற்றவனாக இருந்தான். அவன் அன்றிரவு சோற்றை சாப்பிடாமல் பிசைந்த வண்ணம் இருந்தான்.

"உனக்கு என்ன வந்தது" ஒரு பாயில் உட்கார்ந்து சோறு சாப்பிட்ட மகேஸ் பாட்டன் கேட்டான்.

"எனக்கு வயிற்றுவலி" வசந்த ராஜா பொய் சொன்னான்.

"நீ என்ன சாப்பிட்டாய்?" "மாங்காய் சாப்பிட்டாயா? யாராவது ஏதாவது கொடுத்தார்களா?"

"இல்லை, இல்லை"

"என் தம்பி வந்தான்." ஜானகி சொன்னாள். "நான் அவன் வரும்போது மகனை சிவம்மா வீட்டுக்கு அனுப்பினேன்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இரங்கநாதன் உனக்கு ஏதாவது கொடுத்தானோ?"

"இல்லை நான் அவரைக் காணவில்லை."

"நீ ஜாக்கிரதையாக இரு பொடியா" மகேஸ் பாட்டன் மிக கடுமையாக சொன்னான். "இரங்கா, அவர்களுடன் சேர்ந்து இருக்கிறான்" என வதந்தியாக உள்ளது. இன்னும் சிலரைக் கொன்று இருக்கிறார்களாம்." இந்த செய்திகள் எதுவும் வசந்த ராஜாவுக்குப் புதியது அல்ல. அடிக்கடி வெடி சத்தம் கேட்கிறது. எல்லா இடத்திலும் பயம் உள்ளது. தூரத்தில் தீப்பற்றி எரியும் போது, புகை நாற்றம் வீசுகிறது. வசந்த ராஜாவுக்குப் பயம் தெரியவில்லை. எப்படியாவது அன்றிரவு இரங்கமாமாவுடன் ஓடிப் போக அவன் தீர்மானித்திருந்தான்.

அன்றிரவு அவன் வெளியே படுத்துக் கொண்டான். "நீ வீட்டில் உள்ளே படு" என அம்மா கூறினாள்.

"இல்லை, எனக்கு உள்ளே மிகவும் சூடாக இருக்கிறது. வயிறும் சரி இல்லை. வெளிக்கு போக இலகுவாக இருக்கும்." அம்மா மௌனமாக அனுமதித்தாள்.

எங்கும் இருள் சூழ்ந்திருந்தது. ஆகாயத்தில் நட்சத்திரங்கள் மினுமினுத்தாலும் சந்திரனின் வெளிச்சம் காணப்படவில்லை. தவளைகளின் சப்தம் நிரந்தரமாக வசந்த ராஜாவுக்கு கேட்டுக் கொண்டிருந்தது. சில நாட்களுக்கு முன் மழை பெய்ததினால் சுற்றி இருந்த நிலத்தில் சேற்று வாசனை வந்தது. இந்த சேற்றிலே தவளைகள் பிறந்திருக்கலாம் என எண்ணினான். வீட்டுக்குள்ளே மணி பத்து அடித்தது. அதன்பின் மணி பதினொன்றானது. வசந்த ராஜா மார்பைப் பிடித்துக் கொண்டு தூங்காது இருந்தான். வீட்டில் எல்லோரும் தூங்கிக்கொண்டிருந்தனர். உலகம் ஒரே நிசப்தமாக இருந்தது. பனைவேலியின் உட்புறம் இருள் சூழ்ந்து காணப்பட்டது. கண்கள் மூடும் போதெல்லாம் வசந்த ராஜா தன் கண்களில் எச்சிலை தடவிக்கொண்டான்.

மணல் தரையில் மோட்டார் சைக்கிளின் சக்கரங்களின் சத்தம் சிறிதாகக் கேட்டது. வசந்த ராஜா ஒரே அடியாக எழுந்து பனைவேலிக்கு அருகிலே போய் நின்றான். பின்னர் வீட்டை விட்டு வீதிக்கு ஓடி வந்த அவனுக்கு சைக்கிள் வண்டியைப் பிடித்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்த இரங்கநாதன் மாமாவைக் கண்டான். வசந்த ராஜா பின் ஆசனத்தில் உட்கார்ந்தான். சிறிது தூரம் மோட்டார் சைக்கிளைத் தள்ளிக்கொண்டு சென்ற இரங்கநாதன் சில வீடுகளைத் தாண்டியபிறகு அதை 'ஸ்டார்ட்' செய்தான். அவன் சொன்னது போலவே வெகு தூரம் போகவில்லை. அன்றிரவு புத்தூரில் ஒரு வீட்டிலே வசந்த ராஜா தங்கினான்.

அது ஒரு பழைய வீடு. அதில் சில இளைஞர்கள் இருந்தார்கள். மாமாவும் இருந்தபடியால் வசந்த ராஜாவுக்கு பயம் தோன்றவில்லை. வயதில் பெரியவர்கள் மூவர் துப்பாக்கிகளைக் கையில் ஏந்திக்கொண்டு இருந்தார்கள். அறையின் நடுவில் விளக்கொன்று எரிந்து கொண்டிருந்தது. அதன் சிவப்பு வெளிச்சத்தில் அவர்களின் கண்களும் சிவப்பு நிறமாக தென்பட்டன. ஒருவரும் ஒன்றும் பேசவில்லை. வசந்த ராஜா இரங்க மாமா அருகில் நித்திரை கொண்டான். நடு இரவில் அவன் எழுந்து பார்க்கும்போது அந்த மூவரும் துப்பாக்கிகளைப் பிடித்துக் கொண்டிருந்தனர். வசந்த ராஜா இரங்க மாமாவிடமிருந்து சற்று தூரமாக விலகி நித்திரை கொண்டான். துப்பாக்கி மனிதன். அவன் கையில் இருந்த போத்தல் ஒன்றை வசந்த ராஜாவுக்கு நீட்டினான். 'குடி' என்று அவன் சொன்னான். வசந்த ராஜாவின் வாய்க்கு நேரே போத்தலை நீட்டினான். அவன் போத்தல் இருந்ததை வசந்த ராஜாவின் வாயில் ஊற்றினான். அது இனிப்பாக இருந்ததினால் வசந்தராஜா ஆசையோடு குடித்தான். இதன் பின்பு சத்தமில்லாமல் வசந்த ராஜா நித்திரை கொண்டான்.

கடலில் போய்க் கொண்டிருந்த படகு ஒன்றில் அவன் கண் விழித்தான். சுற்றிலும் இருளாக இருந்தது. மறுநாள் காலையில் அவன் இந்தியாவில் இருப்பதை உணர்ந்தான். இதன்பின் வசந்த ராஜா மரத்தினால் செய்த துப்பாக்கியை கையில் ஏந்திக் கொண்டு வாழத் தொடங்கினான்.

அங்கு அவன் பலவிதமான பயிற்சிகள் பெற வேண்டியதாக இருந்தது. வெவ்வேறு விதமான சொற்பொழிவுகளைக் கேட்டான். "சயனைட் கெப்சூலை" அணிந்துகொள்ள அவன் இங்கேயே கற்றுக் கொண்டான். சிங்கள இனத்தவர்கள் தன்னுடைய தேசிய உரிமையை அழித்ததனால் அவன் இரத்தம் கொதிப்படைந்தது. தன் நாட்டுக்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரையும் தியாகம் செய்யும் உணர்வு அவனிடம் தோன்றியது.

அம்மா, பாட்டி, மகேஸ் பாட்டன் எல்லோரையும் அவன் மறந்து விட்டான். இந்த புதிய சூழலில் அவனுக்கு புதிய சிநேகிதர்கள் கிடைத்தனர். சோறு சாப்பிட்டு முடிந்தவுடன் புகை போடவும் அவன் கற்றுக் கொண்டான்.

அன்று இரவில் போதிபுரம் அருகில் இருந்த காட்டிலே வசந்த ராஜா புகை பிடித்துக் கொண்டிருந்தான். புகையிலையின் மகிமையால் அவன் விழிப்புடன் இருந்தான். அவனுக்கு சற்று தூரத்தில் நீலன் புகையிலை போட்டு எச்சிலை துப்பிய சப்தம் வசந்த ராஜாவுக்குக் கேட்டது. நீலனும் வசந்த ராஜாவுடன் இந்தியாவில் பயிற்சி பெற்றான். ஆனால் நீலன் முதலில் அங்கு செல்ல விரும்பவில்லை. அவனை பலாத்காரமாக அங்கே கொண்டு வந்தனர். ஆரம்ப நாட்களில் நீலன் சாப்பிடாமலும், குடிக்காமலும் அழுது கொண்டிருந்தான். ஆனால் நாட்கள் செல்ல மற்றவர்களைப் போல துப்பாக்கியை எடுத்துக்கொண்டு சண்டை செய்யக் கற்றுக் கொண்டான். அவனை மரணத்தை உண்டாக்கும் இயந்திரம் என அறிமுகம் செய்யப்பட்டான். "மரணம் மோட்டார்" என்பது நீலம் அவர்களிடம் இருந்து பெற்றுக் கொண்ட பதக்கமாகும்.

போதிபுரத்திற்கு ஒரு மைல் தூரம் இருக்கலாம். இந்த இரவில் அந்தப் பக்கத்திலிருந்து ஒரு சத்தமும் கேட்பதில்லை. ஊர் முழுவதும் நித்திரை கொள்வது போல இருந்தது. அங்கே மக்கள் நடமாற்றம் இன்னும் காணப்படுகிறது என்று நீலன் அன்று மாலை தான் கண்ட விபரங்களை சொன்னான். தான் போக வேண்டிய இடம் எது என வசந்த ராஜா தானாகவே அறிந்து கொண்டான்.

திடீரென ஒரு குருவியின் அலறல் சத்தம் காடு முழுவதும் கேட்டது. நீலன் போலவே வசந்த ராஜாவும் திடீரென எழுந்து நின்றான். முகாமில் பயிற்சி பெறும் காலத்தில் எத்தனையோ முறை இவ்வாறே அவர்களுக்கு கட்டளைகள் வந்தது. இப்போது அவர்கள் நினைவுக்கு வந்தது. ஆகவே அவர்கள் அந்த பழக்கத்தால் எழுந்து நின்றார்கள்.

இருளில் ஓடி செல்வதற்கு முன் வசந்த ராஜா தனது சயனைட் கெப்சூலை தொட்டுப் பார்த்தான். தான் மரணத்திற்கு எவ்வளவு தூரம் நெருங்கி வந்துள்ளான் என்ற எண்ணம் உண்டானது. அந்த எண்ணத்தால் தனக்கு வந்த கட்டளையை ஓடோடிச் சென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவேற்ற ஆசையாக இருந்தது. அந்த ஆசையில் கோபமும் கலந்திருந்தது.

துப்பாக்கியை இரு கைகளால் பிடித்துக்கொண்டு வசந்த ராஜா முன்னால் ஓடிக் கொண்டிருந்தான். இப்போது திரும்பிப் பார்க்கும் பழக்கம் அவனிடம் இல்லை. ஒரேயடியாக சத்தமிட்டு அழுகின்ற குரல்கள் எல்லா பக்கங்களிலும் கேட்டது. குடிசைகள் எரிந்துகொண்டதால் எல்லாவிடங்களிலும் தீச்சுவாலை பரவியது.

சில குடிசைகளில் அரைகுறையாகச் சமைத்த சோறு இருந்தது. இன்னொரு இடத்தில் ரொட்டி தயாரிப்பதற்கு ஆயத்தமாக மா பிசைந்து இருக்கக் காணப்பட்டது. இவர்களை கொன்று சாப்பாடும் சாப்பிட்டு போகலாம் என வசந்த ராஜா நினைத்தான். அந்த இடத்தில் இருந்த வயோதிபர் ஒருவர் அவனுடைய துப்பாக்கிக்கு பலியானான். எரிந்து கொண்டிருக்கும் நெருப்பினால் அக்கிராமம் நரகமாக காட்சியளிக்கிறது. அந்தக் காட்டிலிருந்து வானத்திற்கு பரவும் கறுப்பு நிறமான புகை, நட்சத்திரங்களை மறைக்கின்றன. மரணபயத்தினால் அழுகின்ற மக்களின் குரலோடு நரகத்தில் இருப்பவர்களின் குரல்களும் சேர்ந்தது போல இருந்தது.

நீலன் இளம்பெண் ஒருத்தியின் தலைமுடியை பிடித்து இழுத்துக் கொண்டு காட்டுக்குள்ளே மறைவதை வசந்த ராஜா தீ வெளிச்சத்தில் கண்டான். காட்டிலும் எதிரிகள் மறைந்து கொண்டிருக்கலாம்.

தீப்பற்றி எரிகின்ற காட்டுப்பக்கம் அவன் துப்பாக்கியைத் தூக்கிக்கொண்டு ஓடினான். செடிகளுக்குள்ளே மறைந்திருந்த மனிதன் ஒருவனையும் சிறிய பையன் ஒருவனையும் அவன் கண்டான். வசந்த ராஜாவின் கொடிய முகத்தை பார்த்த உடன் அந்த மனிதன் பையனை ஒளித்து வைக்க முயற்சித்தான்.

வசந்த ராஜாவின் துப்பாக்கி பெரும் சத்தத்துடன் வெடித்தது. தலையிலிருந்து இரத்தம் கொட்டிட சிறுவனை தன் மார்போடு அணைத்துக் கொண்டு அம் மனிதன் கீழே விழுந்தான். வசந்த ராஜா அம் மனிதனை ஒரு புறம் தள்ளிவிட்டு சிறுவனை இழுத்து துப்பாக்கியால் அவன் தலையில் அடித்தான். தலையில் பட்ட அடியினால் சிறுவன் மயக்கமாகி தன் தந்தை இருந்த இடத்திலே விழுந்து விட்டான். ஆவேசம் கொண்ட வசந்த ராஜா சிறுவனைச் சுட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செடிகளுக்குள்ளே அழுதுகொண்டிருந்த பெண் ஒருத்தியின் குரல் கேட்டது. அத்துடன் இன்னொரு குரலும் கேட்டது. அந்த பக்கமாக திரும்பும் போது சிறுமி ஒருத்தியையும் இளம் பெண் ஒருத்தியையும் கண்டான். அவ்விருவரது முகங்கள் தீயின் வெளிச்சத்தினால் சிவப்பு நிறமாக தென்பட்டது. அந்த இரு முகங்களிலும் ஒரேவித அன்பும் பரிதாபமும் காணக்கூடியதாக இருந்தது. துப்பாக்கியை மேலே தூக்கினாலும் அதைக்கொண்டு சுடும் அளவுக்கு வசந்த ராஜாவிடம் தைரியம் வரவில்லை.

கொலை செய்ய பயிற்சி பெற்ற அவனுக்கு இந்த இரு பெண்களின் முகங்களில் ஏதோ ஒருவிதமான கவர்ச்சி சக்தியைக் காணக்கூடியதாக இருந்தது. இதற்கு முன் பெண் ஒருத்தியின் சுகம் அவன் கண்டதில்லை. அடிக்கடி விலை மாதர்களுடன் படுத்துறங்கினாலும் அவர்களோடு தொடர்பு ஏற்பட்டதில்லை. ஆனால் இந்த இரு முகங்களில் அவனுக்குப் புதுமையான கவர்ச்சி தோன்றியது. அவனுடைய தலை சுற்றத் தொடங்கியது. ஒரு நிமிடத்தில் அவனது இருதயம் நின்று விட்டது போல தோன்றியது.

இது யார்? இந்த பழக்கமான முகங்கள் யாருடையது? அத்துடன் ஒரு வெடி சப்தமும் கேட்டது. தனது பின்புறம் ஏதோ துளைத்தது போல தெரிந்தது. அந்த வேதனையை அவன் பிறகுதான் அறிந்து கொண்டான்.

தீப்பற்றி எரிந்துகொண்டிருந்த குடிசை பக்கமாக இருந்தே அந்த துப்பாக்கிச் சூடு வந்தது. எல்லாம் முடிந்தது என வசந்த ராஜா நினைத்தான். அவனுடைய கைகளிலிருந்து துப்பாக்கி கீழே விழுந்தது.

எதிரிகளின் கைகளில் சிக்கிக் கொள்வதற்கு முன் தன்னுடைய சயனைட் குப்பியை சாப்பிட வேண்டும், கழுத்தைத் தடவிப் பார்த்தான். தன் உயிரை நீக்கக்கூடிய விஷம் கலந்த அந்த குப்பி அவன் கழுத்தில் இல்லை என அவனுக்குத் தெரிந்தது. வசந்த ராஜா இருள் சூழ்ந்த அக் காட்டினுள் ஓடத்தொடங்கினான். அவன் ஆவேஷத்துடன் ஓடினான். தன் பின்புறத்தில் இருந்த கொட்டும் இரத்தம் குளிர்மையாக இருந்ததை அவன் விரல்கள் அவனுக்கு வெளிப்படுத்தின. கால் தவறி கீழே விழுந்த அவன் அழுதுகொண்டே கண்களை மூடினான்.

ஆனால், எல்லாம் அத்தோடு முடியவிலலை. அவன் உள்ளத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த இரு முகங்களும் ஒரு முகமாக தென்பட்டது.

ஒரே முகம்! ஒரே முகம்! அது யாருடையது? தன் மனத்தைக் கவர்ந்த அந்த கண்கள் யாருக்குச் சொந்தமானது?

நீண்ட காலத்திற்கு முன்பு எங்கோ அந்த முகத்தைப் பார்த்தது அவன் ஞாபகத்தில் வந்தது. இப்போது அது ஞாபகம் இல்லாமல் போய்விட்டது. ஒருவித அன்பின் இணைப்புடன் அவன் மயக்கமாகி விட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 7

# அஜித் - சூபூதி சுவாமிகள்

## 1988

வாங்க! வாங்க! ஐயா. நான் நினைத்தேன் இந்த மாதிரி நேரத்தில் ஐயா வருவீர்கள் என்று! சூபூதி பிக்குகளின் வட்டமான அழகான முகத்தைப் பார்த்து, அவருடைய சாந்தமான பேச்சைக் கேட்டு, அஜித் ஹேனகம பன்சாலையின் படிகட்டுகளில் ஏறினான்.

மாலை நேர வெப்பத்தைப் போக்குவது போல திஸருகுளம் பக்கத்திலிருந்து காற்று வீசியது. பன்சாலையின் முன்புற வாசலுக்குப் போன அஜித்திற்கு திஸரு குளமும், வெகு தூரத்தில் தென்பக்கத்தில், அநுராதபுர ஸ்தூபத்தின் மேற்பாகமும் தென்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஐயா! கடிதத்தில் எழுதியிருந்த விஷயங்களுக்கு கடிதம் மூலம் பதில் எழுத முடியாது. நீங்கள் நேரடியாக வந்து சந்தித்தது தான் நல்லது." என்று கூறிய பிக்கு, "உட்காருங்கள் ஐயா" என சொல்லி நாற்காலி ஒன்றை காண்பித்தார்.

"நல்லது" என கூறிக்கொண்டு உட்காருவதற்கு முன் அஜித், கீழே விழுந்து பிக்குவுக்கு வணங்கினான். இடது கையின் வேதனை இன்னும் இருந்தது.

பிக்குகள் பத்திரிகையில் எழுதிய கடிதம் வாசித்த பிறகு தான் எனக்கு அந்த மாதிரி எழுத மனம் வந்தது. "பிக்குகள் வாழ்க்கை முறையைப் பற்றி மிக நன்றாக எழுதியிருந்தீர்கள்." சிலவேளை பெரியதொரு தரும உபதேசம் செய்வதை விட அந்த மாதிரி கட்டுரை மூலம் பலருக்கு ஒரு விஷயத்தை விளக்கிக் கூறுவது நல்லது.

ஆ .... ஐயா இன்னும் நீங்கள் இராணுவத்தில் இருக்கிறீர்களா?

"இல்லை பிக்குகளே! நான் சமீபத்தில் ஓய்வு பெற்றுக்கொண்டேன். எண்பத்தி மூன்றாம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் எனக்கு காயம் ஏற்பட்டது."

"ஐயோ என்ன நடந்தது?"

"தெரியும் தானே ஜூலை கலவரம்"

"ஏன் தெரியாது?"

நான் அந்த ஜீப் வண்டி அருகில்தான் இருந்தேன். எனது இடது கையில் இரும்புதுண்டு பட்டது.

"அத்துடன் போனது நல்லதாயிற்று."

அஜித் பேசும்போது கொஞ்சம் கஷ்டப்பட்டான். என்னுடைய சிநேகிதர்கள் பலர் அன்று இறந்து விட்டார்கள்.

"வாழ்க்கை அப்படிதான் ஐயா!"

கருமம் பலிக்காவிட்டாலும் திடீர் மரணம் ஏற்படக்கூடும். எங்கேயோ வீசும் காற்றினால் விளக்குகள்...

பிக்குகளை நான் சந்திக்க வந்தது அந்த கட்டுரையில் குறிப்பிட்டிருந்த மோக நிலைபற்றி படித்துவிட்டு தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பொடியா", சூபூதி பிக்குகள் அஜித்தின் பேச்சை கேளாதது போல பன்சாலைக்குள்ளே சத்தமிட்டு கூப்பிட்டார். சாரம் அணிந்த மெலிந்த உடலுள்ள இளைஞன் ஒருவன் அறை வாசலுக்கு வந்தான். எங்கள் ஐயாவுக்கு குடிப்பதற்கு பானம் ஏதாவது கொண்டு வா"

"ரணவரா நீர் குடித்திருக்கிறீர்களா ஐயா...?"

"இல்லை"

"பொல்பலா நீர்" ரணவரா நீர் மிகவும் நல்லது தானே ஐயா!

"குடித்து பாருங்களேன்!"

"கரும்பு வெல்லத்துடன் கொண்டு வா பொடியா ஐயாவுக்கு சர்க்கரையுடன் தேநீர் குடித்து தானே பழக்கம்."

"ஆம்"

"நான் தேநீர் குடிப்பதும் இல்லை" சீனி பாவிப்பதுமில்லை. ஆம் இவை எல்லாம் ஆங்கிலேயர்களால் எமக்கு பழக்கப்பட்டவை. பழக்கவழக்கில் இருக்கும் தீய பழக்கங்கள். எமக்கு தேநீர் கொடுத்தார்கள். சர்க்கரை தந்தார்கள். இப்போது இவை இல்லாமல் நம்மால் இருக்க முடியவில்லை.

"அது சரி பிக்குகளே!"

"அப்ப ஐயா, உங்கள் கதையை சொல்லுங்கள்!"

சூபூதி பிக்குகள் திறந்த மனப்பான்மையுடன் பேசுவதால் அஜித்துக்கு அவருடன் பேசுவது, நடந்தவற்றை சொல்லுவது சற்று இலேசாக இருந்தது.

"இது முதல் முதலில் அந்த யாழ்ப்பாண சம்பவத்தின் பிறகுதான் ஏற்பட்டது பிக்குகளே! ஒரு தமிழ்ப் பெண்ணைப்பற்றி நான் ஒரு கனவு கண்டேன்!

"உங்களுக்கு தெரிந்த ஒருவரா?"

"ஆம் பிக்குகளே! ஒரு நாள் நாம் நீர்வேலியை தாண்டிக்கொண்டு யாழ்ப்பாணத்திற்கு போகும்போது ஜீப் வண்டியில் ஏதோ ஒரு கோளாறு ஏற்பட்டு மொத்த யுனிட்டும் அங்கே நிறுத்தப்பட்டது. அங்கே புகையிலை பயிர்செய்யும் நிலத்தில் இருந்த குடிசையில் தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த பெண் வாழ்ந்திருந்தார். அவளுக்கு ஒரு மகனும் இருந்தான். இருவரையும் எங்கோ கண்டிருப்பதாக எனக்கு ஞாகபம்.

"அந்த மாதிரி ஞாபகம் வருகிறதென்றால் உங்களுடைய முந்திய பிறவி கவனத்திற்கு வருவதுதான் காரணமாகும்.

"நானும் அப்படிதான் நினைத்தேன். பிக்குகளே! முந்திய ஒரு பிறவியில் கண்டதாக ஞாபகம்."

"இது ஒரு நல்ல சுவராஸ்யமான கதையாக இருக்கிறது."

"எமக்கு ஒரு ஆத்மா இல்லைத்தானே ஐயா!"

"ஆத்மா என்று கூறியது பிக்குகளே முந்திய ஒரு பிறவியில் தானே?"

"அது சரி. பிறவியிலிருந்து இன்னொரு பிறவிக்கு போகிறோம். ஆனால் ஆத்மா அப்படி இல்லை." ஆத்மா என்று ஒன்று இல்லை என்று புத்தமகான் உபதேசித்தருளியவர் தானே?" அளவு கடந்த ஆசைதான் ஆத்மா ஒன்று இருக்கிறது என்ற உணர்வு நமக்குள் தோன்றுகிறது!

எனக்கு பௌத்த நெறிபற்றி அவ்வளவு ஆழமாகத் தெரியாது பிக்குகளே!

ஐயாவுக்கு முடியுமென்றால் கற்றுக் கொள்ளுங்கள். எம்மிடம் நாம் ஏற்படுத்திக் கொண்டுள்ள தவறான எண்ணம்தான் எமக்கு ஒரு ஆத்மா இருக்கிறது என்ற நினைவை தோற்றுவிக்கிறது. ஏன், இப்படி நினையுங்களேன்! எங்களது ஆசைக்கு எங்களுடையது என்று சொல்லிக் கொள்ள ஏதாவது இருக்கத்தானே வேண்டும்? அதனால் தான் ஆத்மா என்ற ஒன்றை பிடித்துக்கொண்டு அலைகின்றோம். ஆனால், எல்லாமே மாறிக் கொண்டிருக்கின்றது. இந்த உலகத்திலே மாறாத ஆத்மா எங்கே இருக்கிறது ஐயா? எல்லாம் நிரந்தரமாக மாறிக்கொண்டே இருக்கிறது.

"அது சரி பிக்குகளே!"

"சங்கிலித் தொடர் போன்ற இணைப்புக்கள் ஐயாவுக்கு சரியாகத் தெரியாது போல தெரிகிறது. மூலக் காரணிகளின் அடிப்படையில் விஞ்ஞான சக்தி தோன்றுகிறது. அவ்வாறாக தோன்றுகின்ற விஞ்ஞான சக்தியினால் தான் இப்படியான இணைப்புகள் ஏற்படுத்தப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பிறப்பிலிருந்து மறுபிறப்பிற்கு மாறிக் கொண்டே செல்லும் வாழ்க்கை நெறி தான் இது ஐயா!

அந்த மாதிரியான ஒரு இணைப்புத்தான் பிக்குகளே இது! அந்த பெண்ணுடைய முகத்தைக் கண்டவுடன் எனக்கு புதியதொரு உணர்வு ஏற்பட்டது. இதை உங்களுக்கு விளக்கிக்கூற என்னால் முடியாததாக உள்ளது. பிக்குவுக்கு நான் இதை எப்படிதான் விளக்குவது? இது காதலா? அன்பா? அல்லது இணைப்பா? எல்லாவற்றையும் புரிந்துகொண்டது போல பிக்கு தலையாட்டினார். இது இணைப்பு தான் ஐயா! பெரியதொரு இணைப்பு! அவ்வேளையில் பையன் ஒரு தட்டில் கரும்ப வெல்லத்தோடு இரண்டு கண்ணாடி குவளைகளில் ரணவரா நீரைக் கொண்டுவரவே அவர்கள் பேச்சு சிறிது நேரம் தடைப்பட்டது. பையன் முதல் குவளையை பிக்குவுக்கு கொடுத்து விட்டு இருகைகளையும் எடுத்து அவரைக் கும்பிட்டான். "சுகமாக இரு" என்று அவனை பிக்கு ஆசீர்வதித்தார்.

மற்ற குவளையை எடுத்த அஜித் அதில் இருந்த நீரை கொஞ்சம் குடித்துவிட்டு அருகில் இருந்த தட்டில் காணப்பட்ட கரும்பு வெல்லக் கட்டி ஒன்றை எடுத்துக் கடித்தான்.

பையன் பன்சாலையின் அறை வாசலுக்கு சென்ற பிறகு அவர்கள் பேச்சு மீண்டும் தொடர்ந்தது. அப்ப, நீங்கள் சொல்லும் அந்த பெண்ணுக்கு இதைப்பற்றிக் கூறினீர்களா? என பிக்கு விசாரித்தார். இல்லை பிக்குகளே! அந்தப் பெண்ணின் கணவனை பொலீஸார் கைது செய்துகொண்டு போயிருக்கிறார்கள். அவர்கள் அவனை பின்னர் இராணுவத்திடம் ஒப்படைத்ததாக கூறினார்களாம். பிறகு அந்தப்பெண் என்னைத் தேடிக்கொண்டு முகாமுக்கு வந்தாள். கணவனை எப்படியாவது தேடிக்கொடுக்கும்படி என்னை கேட்டாள். இது நடந்து ஐந்து ஆண்டுகளுக்கு மேலாகி விட்டது பிக்குகளே!

"அப்ப ஐயா! அந்த மனிதனை தேடிப்பார்க்க முயற்சி செய்தீர்களா?" இல்லை பிக்குகளே! எங்களுக்கு ஆபத்து ஏற்பட்டதும் அதே நேரத்தில்தான். என்னை வவுனியா ஆஸ்பத்திரிக்கு எடுத்துக்கொண்டு போய் அங்கே இருந்து கொழும்புக்கு கொண்டு வந்தார்கள். 'ரிஹெப்'வில் இருந்து திரும்பியவுடன் கொழும்பு காரியாலயத்தில் வேலை கிடைத்தது. ஆனால் எனக்கு அங்கு சரியாக வேலை செய்ய முடியவில்லை பிக்குகளே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த ஆபத்து நடந்தது எனக்கு வேதனையாக இருந்தது.

'அது போன்ற சம்பவங்களை மறப்பது கடினம் தான் ஐயா! எல்லாம் எமது இந்த உள்ளத்திலே தானே இருக்கிறது."

அப்ப பிக்குகளே! இந்த எல்லா சம்பவங்களுக்கிடையில் எனக்கு அந்த பெண்ணின் முகம் தானே தெரிகிறது. நான் அந்த பெண்ணுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் என்னுள் இருக்கிறது.

"ஐயாவிடம் விலாசம் இல்லையா?"

நீர்வேலி விலாசம் என்னிடம் இருக்கிறது பிக்குகளே! நான் அந்த விலாசத்திற்கு எழுதினேன். ஆனால் பதில் இல்லை. மற்றது இப்போது எமக்கு யாழ்ப்பாணப் பக்கம் போக முடியாது தானே?

'அது சரி'

அந்த பெண்ணுக்கு சிங்களமும் தெரியும். சிறுவயதில் நுகேகொடையில் இருந்தார்களாம். நாங்களும் நுகேகொடைதானே. அவர்களை எங்கேயோ கண்ட ஒரு ஞாபகம். ஆனால் அந்த ஆபத்து நடந்த பிறகு இன்னொரு கனவு கண்டேன். நெருப்புப் பற்றி எரிகிறது. அதன் மத்தியில் ஒரு மனிதன். "அஜித்துக்கு அதற்குமேல் ஒன்றும் சொல்ல முடியவில்லை."

"ஐயா கொஞ்சம் மனக்கவலையுடன் இருக்கிறீர்கள் போலும்."

"பிக்குகளை நான் தேடிக்கொண்டு வந்தது உங்கள் கட்டுரை பத்திரிகையில் வாசித்த பிறகுதான். பிக்குகள் இவ்வாறு மோஹன வித்தையினால் முந்திய பிறவி பற்றி அறியத் தருகிறார்கள் என கேட்டு....."

'நாம் அதை செய்து பார்ப்போம்' பிக்குகள் உற்சாகத்துடன் கூறினார். சிலர் அந்த மாதிரி பார்த்து தத்தமது வாழ்க்கை குறைபாடுகளை சரிசெய்து கொள்கின்றார்கள். இவை எல்லாம் கனவு போல உள்ளது என்ற கருத்து வெளிப்படுகிறது. ஐயா! இவை எல்லாம் எங்கள் சொந்தம் என்று சொல்வதற்கு இல்லை என்ற உண்மையை உணர முடிகிறது. இன்னும் சிலருக்கு மேலும் மேலும் இதில் பயணம் செய்ய ஆசை தோன்றுகிறது. இது மனித இயல்பு....

"இந்தத் துயரங்களை எல்லாம் காணும்போது நாம் திரும்பி இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் எதற்கு பிறக்கிறோம் என்ற எண்ணம் தோன்றுகிறது பிக்குகளே!

"அது நல்லதொரு கருத்து"

"மக்கள் எதற்காக தங்களைத்தானே கொலை செய்துக் கொள்கிறார்கள் என யோசிக்கின்றேன் பிக்குகளே!

"அது தானே ஐயா! நாம் போகும்போது எடுத்துக்கொண்டு போக வா போகிறோம்?" அப்படியாக கொண்டு போவது கரும சக்தியை மட்டும் தானே. அதனால் தான் நாம் நன்மையையே செய்ய வேண்டும். நதியைக் கடந்து செல்ல நல்ல படகு இருக்க வேண்டும். படகைச் சக்தியுள்ளதாகவும் ஓட்டை இல்லாதவாறு செய்து கொள்ள வேண்டும். எமது எண்ணங்களையும் அது போலவே சரிபடுத்திக்கொள்ள வேண்டும்.

"அப்படி தானே?"

"ஆம்."

"நல்லது. வாங்க அறைக்கு போவோம்." எழுந்து நின்ற பிக்குகள் ஆடை சரிபடுத்திக்கொண்டு அஜித்துடன் பன்சாலையில் பின்பக்கத்தில் உள்ள அறைக்கு போனார்கள்.

"இது பழைய ஒரு பன்சாலை ஐயா!"

"சிறிதாக கட்டப்பட்ட அறைகள். இன்னொரு பிக்கு இருக்கிறார். அவர் தியானத்தைக் கற்பித்துத்தர அநுராதபுரம் போயிருக்கிறார்."

"இது மிகவும் சாந்தமான பிரதேசம் பிக்குகளே!"

"பதிரூபதேச வாசோச" என புத்த மகான் கூறினார்தானே. நாம் வாழ்வதற்கு தகுந்த சுற்றாடலை நாமே ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்."

அது சரி பிக்குகளே!

"அப்படியே அந்த படுக்கையில் படுத்துக்கொள்ளுங்கள்."

அறையின் நடுவில் ஒரு படுக்கையும் அதன் அருகில் ஒரு நாற்காலியும் இருந்தது. படுக்கையில் படுத்துக்கொண்ட அஜித்துக்கு அவ்அறையின் ஜன்னல் கதவுகளை மறைத்த நீல நிறமான திரைகளும், நீல நிறம் பூசப்பட்ட சுவர்கள் மட்டுமே தெரிந்தன. "நீலநிறம்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயா, மனத்தை அடக்கச் செய்யும் நிறம். ஐயா நீங்கள் அப்படியே படுத்துக்கொண்டு, கண்களை மூடி "நீல நிறமான நீரில் நீந்திச் செல்வது போல நினைத்துக் கொள்ளுங்கள்."

இரு கண்களை மூடிக்கொண்ட அஜித்துக்கு, அவன் படுக்கையின் அருகில் இருந்த நாற்காலிப் பக்கமிருந்து பிக்கு பேசுவது கேட்டது. ஐயா, இப்போது நீங்கள் உங்கள் மேல் உதடுகள், கீழ் உதடுகள் பற்றி நினைத்துக் கொள்ளுங்கள். பிறகு அங்கே இருக்கும் திடமான கெட்டியான நிலையைத் தழுவி விடுவதுபோல போக்கிவிடுங்கள். தண்ணீரால் கழுவி போக்கி விடுவதைப் போல செய்யுங்கள்.

'ஆம்'

"நான் சொல்லும் விஷயங்களுக்கு விடை சொல்ல வேண்டாம்! செயல்பட முயலுங்கள். அடுத்ததாக நான் கேட்கும் கேள்விகளுக்கு கிடைக்கும் விடைகளை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்."

அஜித் மௌனமாக இருந்தான்.

"நல்லது! அடுத்ததாக கண்மூடிய பகுதியைப்பற்றி நினைத்துக் கொள்ளுங்கள். கண்கள் சுற்றிலும் உள்ள பகுதியை கழுவி அதிலுள்ள கெட்டியான தன்மையை இல்லாமல் செய்யுங்கள்." சுபூதி பிக்கு அஜித்தினுடையை முழு உடலையும் இவ்வாறாக பாரமற்ற ஒரு நிலைக்கு கொண்டு வருமாறு கட்டளையிட்டார். சிறிது நேரத்தில் தன் உடம்பெல்லாம் பாரமற்று பஞ்சின் பாரத்தை விட மிகவும் குறைந்து போவது போல உணர்ந்தான்.

ஐயா! இப்போது உங்கள் எண்ணங்களுக்கு கடந்த காலத்தின் பக்கமாக செல்ல முடியும். அந்த எண்ணங்கள் எல்லாவற்றையும் நாம் எமது விஞ்ஞானத்தில் சேர்த்து வைத்துக்கொண்டு இருக்கின்றோம். ஐயா! இப்படியே இருப்பதுடன், இந்த உடலிலிருந்து மேலே சென்று, காலத்தால் பின்னால் செல்லுங்கள். அஜித் தன்உடல் பாரமற்ற நிலைய அடைந்து மேலே செல்வது போல உணர்ந்தான். தான் பூமிக்கு மேலே ஆகாயத்தில் இருந்து எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருப்பது போல தெரிந்தது. பிக்கு அவர்களின் கட்டளையின்படி அஜித் தன் கடந்த கால பிறவியைப் பற்றியும், அந்த பிறவி வாழ்ந்திருந்த இடத்தைத் தேடி தனது எண்ணங்களை அனுப்பவும் செய்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயா! இப்போது நீங்கள் வாழ்ந்த சுற்றாடலைப்பற்றி நினையுங்கள். பின்புறம், முன்புறம், வடக்குப்பக்கம், தெற்குப்பக்கம் நீங்கள் உள்ளே நுழையப்போகும் வீடுபற்றி நினையுங்கள். வீட்டு வாசலைப்பற்றி பாருங்கள். உள்ளே இருப்பதையும் பாருங்கள்.

அஜித் ஏரி அருகில் இருந்த குடிசை ஒன்றை கண்டான். இது தெல்கந்த சந்தி தானே? என அவன் நினைத்தான். குடிசைக்குள்ளே சென்ற அவன் சூபூதி பிக்கு அவர்கள் சொன்னது போல, சுற்று முற்றும் பார்த்துவிட்டு தன்னையும் பார்த்தான். தான் ஒருமுறை கனவில் கண்ட மெல்லிய கறுப்பு மனிதனின் உருவம்தான் அது. அவன் வெள்ளை நிற சாரமும் பெனியன் ஒன்றையும் அணிந்து இருந்தான். குடிசைக்குள்ளே பத்திரிகைகள், சாக்குகள் போத்தல் ஆகியன காணப்பட்டன. ஒரு பக்கத்தில் படுக்கையும், அதன் மேல் சிறு பிள்ளை தூங்கிக் கொண்டிருக்கக் கண்டான்.

"உங்களுடைய பெயர் என்ன என்று பாருங்கள்?"

"சுந்..... சுந்.... சுந்தரம்" அஜித் சொன்னான்.

"எனக்கு பதில் சொல்ல தேவை இல்லை. ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்." பிக்கு மீண்டும் கூறினார்.

இப்போது அஜித் குடிசையின் வெளியே உணவு சமைக்கும் தமிழ் பெண்ணையும் அவள் அருகில் உட்கார்ந்த குழந்தையையும் கண்டான்.

"ஜா....ன......கி!" அது தன்னுடைய மகள் தான். நான் முந்திய பிறவியில் சுந்தரம் என்ற தமிழ் மனிதன். நான் கோணி, போத்தல் ஆகியவற்றைச் சேகரித்து வியாபாரம் செய்யும் ஒருவன். ஜானகி என் மகள்.

இரு பிள்ளைகளுடன் ஆற்றங்கரை அருகில் செல்லும் அம் மனிதனின் மனத்தில் இவையெல்லாம் ஒரு படம் போல காட்சியளித்தது

இதன் பிறகு அவன் கோவிலுக்கு சென்று வழிபாடுகள் செய்வதையும், தன் மனைவியுடன் படுத்துக் கொள்வதையும் கண்டான். அடுத்ததாக சுந்தரம் கூடை ஒன்றை தலையில் வைத்துக்கொண்டு பத்திரிகை, கோணி, போத்தல் சேகரிக்கப் போவதை அஜித் கண்டான். ஒரு பெண் பிள்ளையின் கையைப் பிடித்துக்கொண்டு வீடு திரும்புவதையும் கண்டான்.

"இப்போது நீங்கள் இந்த வாழ்க்கையில் மரணம் அடைந்த இடத்திற்கு வாருங்கள். அவனுக்கு உடலில் ஒரு பாரமும் தெரியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவும் இலேசாகப் பாய்ந்து மேலே செல்லுங்கள். இனி அந்த உடலுடன் தொடர்பு இல்லை," என்று பிக்குவின் குரல் கேட்டது.

"பாருங்கள் அந்த உடலுக்கு என்ன ஆகிவிட்டது என்று?"

ஒரு நாள் கடும் வெய்யில் அடித்த பகல் நேரத்தில் மக்கள் கூட்டம் தன்னை சூழ்ந்து கொள்ளும் விதத்தை அஜித் கண்டான். அடுத்ததாக கண்ட காட்சி அவன் முன்னே கண்ட கனவின் இன்னொரு பகுதியைப் பூரணமாக்கியது. சுந்தரத்தை சூழ்ந்து கொண்ட மக்கள் பவுஸர் ஒன்றிலிருந்து எடுத்த பெட்ரோலை அவன் உடலில் ஊற்றினார்கள். அடுத்த நிமிடம் அவனுக்கு பெற்றோல் வாசனை தெரிந்தது. கழுத்து எரிவது போல தோன்றியது. ஆண்டவனே! ஆண்டவனே! என்று சொன்னான். மிக சிரமத்துடன் படுக்கையில் அங்கும் இங்கும் புரண்ட அஜித், இந்த கொடிய அனுபவத்திலிருந்து விடுபட சற்றுக் கடினமாக இருந்தது. கண்களில் இருந்து கண்ணீர் பெருகி கன்னத்தில் விழுந்தது. "வேண்டாம் வேண்டாம் ஐயா." எங்கேயோ இருந்து வந்த தீ அவன் உடலை கவ்விக் கொண்டது. தனக்கு இவ்வாறாக கொடுமை செய்யும் மக்கள் மீது பொறுத்துக் கொள்ள முடியாத கோபம் உண்டாகியது.

இப்பொழுது ஐயா இந்த நிலைமையிலிருந்து இப்பக்கத்திற்கு வாருங்கள். அதைப்பற்றி அறிய வெளியே வந்து பாருங்கள். அந்த உடல் தற்காலிகமானது மட்டுமே. வேதனையின்றி மேலே பறந்து இந்த கால எல்லைக்கு வாருங்கள். நான் மூன்று எண்ணும் போது நீங்கள் எந்த வேதனையுமின்றி களைப்புமின்றி கண்கள் திறந்து விடுங்கள். ஒன்று! இப்போது எழுந்து நிற்கத் தயார். உடல் பாரமின்றி உள்ளது. இரண்டு! எழுந்து நிற்க தயாரான நிலையில் உள்ளது. உடலுக்கு சுகம் தெரிகிறது. மூன்று! எழுந்து நிற்கவும்."

அஜித் கண்களைத் திறந்து கண்ணீரை துடைத்துக் கொண்டான். பிக்கு அவர்களே! எனக்கு சிறிது நேரத்திற்கு மூச்சு விட முடியவில்லை.

"ஐயா என்ன பார்த்தீர்கள்?"

"நான் அந்த பிறவியில் சுந்தரம் என்ற தமிழ் மனிதன், பிக்கு அவர்களே!" மீண்டும் கண்களில் இருந்து வந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டான். துக்கம் நிறைந்த ஒரு மரணம் பிக்கு அவர்களே! சிங்கள-தமிழ் கலவரம் காலத்தில் அந்த மனிதனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோல் ஊற்றி தீவைத்து கொன்று இருக்கிறார்கள்.

"ஐம்பத்தியொன்பதில்"

"ஆம், அப்படித்தான் நான் நினைக்கிறேனா. ஜானகி என்பவள் இந்த சுந்தரனுடைய மகள்."

பாருங்க ஐயா! அதன் சுபாவம் எப்படியென்று. ஒரு பிறவியில் நாம் தமிழர்களாக பிறக்கின்றோம். இன்னொரு பிறவியில் சிங்களவர்களாக பிறக்கின்றோம். அப்படியும் இல்லையென்றால் ஐரோப்பிய, சீன, ஜப்பான் இனத்தவர்களாக பிறக்கின்றோம்.

'அப்பொழுது ஐயா நாம் அந்த இனம், இந்த இனம் என்று கூறிக்கொண்டு எதற்காக பெருமைப் படுகின்றோம். இது எல்லாம் ஒரு பரம்பரையினால் வருகிற உரிமைகள் தானே? ஐயா! நாம் போகும்போது இனத்தையோ உடல் நிறத்தையோ எடுத்துக்கொண்டு போவதில்லையே?"

ஒரு வேளை நாம் போகும்போது எமது ஆசைகளை ஞாபகங்களை எடுத்துக்கொண்டு போவதாக நாம் நினைக்கலாம். பிக்கு அவர்களே. அந்த சுந்தரனுக்கு நன்றாக கணக்கு வரும். எனக்கும் நன்றாக கணக்கு வரும். அந்த சுந்தரம் போல எனக்கும் வடை சாப்பிட மிகவும் ஆசை.

"எனக்கு இப்போது ஞாகபம் வருகிறது பிக்கு அவர்களே, நான் பிறக்க இருக்கும்போது அம்மா வடை சாப்பிட மிகவும் ஆசைப்பட்டாராம்"

'இதோ பாருங்கள்! இதன் சுபாவம் எப்படி என்று ஆசைகளை எடுத்துக் கொண்டு போகின்றோம்.'

பிக்குகளே! எனக்கு இன்னொரு ஞாபகம் வருகிறது. நான் சிறிய வயதில் மிகவும் நோய்வாய்ப்பட்டு இருந்தேனாம். உடம்பெல்லாம் புண்களாகி வாய் சுற்றிலும் ஒருவிதமான புள்ளிகள் தோன்றியதாம். அம்மா அப்படி சொல்வதுண்டு.

"அது மரணம் அடைந்த நேரத்தில் உங்கள் ஞாபகம் ஐயா"

எனக்கு அப்போது பெற்றோல் நாற்றத்தை பொறுத்துக் கொள்ள முடியாமல் இருந்தது. அந்த நாற்றத்திற்கு வாந்தி வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியவனாகிய பின்னர் அது சரியாகி விட்டது. ஆனால் இப்போது நீர்வேலியில் ஜானகியைக் கண்ட பிறகு மீண்டும் அதே பெற்றோல் நாற்றத்தால் உடல் சரி இல்லாமல் போய் விட்டது. இப்போது கூட சில நேரங்களில் எனக்கு பெற்றோல் வாசனையைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் தலைவலி உண்டாகிறது.

"அதுவும் ஒரு ஞாபகம் ஐயா. விரும்பத்தகாத ஒரு ஞாபகம்"

"நான் இப்போது பல விஷயங்களை புரிந்து கொண்டேன். பிக்குவுக்கு அதிக புண்ணியம் கிடைக்கட்டும். எனக்கு இப்போது அந்த ஜானகியை இன்னொரு முறை காண ஆசையாக இருக்கிறது!" பிக்குகளே!"

"எனக்கு புரிகிறது ஐயா! அப்பொழுது நிறைவேற்ற முடியாத ஒரு ஆசையை தீர்த்துக் கொள்ள முயலுகிறீர்கள். நீங்கள் கூறியவாறு அவள் விலாசம் நீர்வேலியில் தானே?"

"ஆம் பிக்குகளே!"

"எனக்கு நன்கு தெரிந்த டாக்டர் ஒருவர் நீர்வேலியில் இருக்கிறார். நான் அவரிடம் விசாரித்துப் பார்க்கின்றேன்."

"எனக்கு இப்போது தான் நிம்மதியாக இருக்கிறது பிக்குகளே! உண்மையில் எனக்கு முன்னர் இருந்தது போல ஒரு இணைப்பு இப்போது தெரியவில்லை."

"ஐயா ஒரு விஷயத்தைப் புரிந்து கொண்டிருக்கிறீர்கள். அத்தோடு ஒரு கருத்தை உணர்ந்து கொண்டிருக்கிறீர்கள். இந்த பிறவிக்கடலில் மாயையான பிரயாணத்தின் சுபாவத்தைப் பற்றி அறிந்துள்ளீர்கள்."

"நாம் இறந்து விடுகிறோம். பின்னர் பிறக்கிறோம்; மீண்டும் இறக்கிறோம்; அதேபோல மீண்டும் பிறக்கிறோம் அல்லவா பிக்குவே?"

"அதற்கிடையில் நாம் கர்மங்களை சேர்த்துக் கொண்டு துக்கத்தை அனுபவிக்கின்றோம்."

"சுவர்க்கம், நரகம் என்று இருக்கிறதா பிக்குகளே?"

நாம் பல இடங்களில் பிறக்கக் கூடும் ஐயா! இதே பூமியிலானாலும் பிறப்பதற்கு எவ்வளவோ இடங்கள் இருக்கின்றன. ஆனால் விஞ்ஞான சக்தியை பிறவியில் செலுத்துவதற்கு மனித உடல் மட்டும் தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவை என்று ஒன்றும் இல்லை. ஒவ்வொரு கர்ம சக்திகளுக்கு அநுகூலமாக ஒவ்வொரு இடங்களுக்கும் நம்மை நாமே இழுத்துப் போகின்றோம். இருளிலிருந்து வெளிச்சத்திற்கும், வெளிச்சத்திலிருந்து இருளுக்கும் போக எம்மால் முடியும் தானே ஐயா?"

"பிக்குவை சந்தித்த காரணத்தினால் என் தலையில் இருந்த பெரியதொரு பாரம் நீங்கியதுபோல எனக்குத் தெரிகிறது."

"நான் அந்த ஜானகியைப் பற்றி விசாரித்து பார்க்கின்றேன்."

"ஜானகி சுந்தரம், அவள் சிவன்கரன் அப்பாதுரை என்ற ஒருவனை திருமணம் செய்தாள். நான் விலாசத்தை எழுதி தருகிறேன்."

வெளியே இருள் சூழ்ந்திருந்தது. அஜித் அறையிலிருந்து வெளியே வந்த உடன் ஜானகி தனக்கு தந்த விலாசத்தை பிக்குவின் குறிப்பு எழுதும் புத்தகத்தில் எழுதினான். இந்த யுத்தம் கலவரங்கள் ஆகியவை மத்தியில் ஜானகி இன்னும் உயிரோடு இருப்பாளா? என்பதும் சந்தேகமே. அவள் மகன் எங்கே இருப்பான்? அவனுடைய முகம் நல்ல பழக்கப்பட்ட முகமாக தெரிகிறது. ஏன்?

"ஐயா விரும்பினால் இன்று இரவு இங்கே தங்கிவிட்டுப் போகலாம். எனது பையனிடம் சொல்லி உணவு கொஞ்சம் சமைக்கச் சொல்லுகிறேன்."

"இல்லை அநுராதபுரத்தில் ஒரு சிநேகிதன் வீட்டில் தங்கி இருக்கின்றேன். நான் அங்கு போகவில்லை என்றால் அவர்கள் பயந்து விடுவார்கள்.

"அப்படியென்றால், ஐயா போங்கள். நான் அந்த விலாசத்தை தேடிப்பார்க்கிறேன். ஐயாவினுடைய நுகேகொடை விலாசம் என்னிடம் இருக்கிறது தானே?"

பன்சாலை பூமியிலிருந்து வெளியே வந்த அஜித்துக்கு தான் தனிமையாக இருப்பதுபோல தெரிந்தது. பன்சாலை தோட்டத்திலிருந்து வெளிப்பக்கம் வரை பரந்து வளர்ந்த போதி மரம் கிளைகளின் இலைகள் 'சரசர' என்று அசையும் சத்தம் கேட்டு அவன் மேலே பார்த்தான்.

பிக்குவின் கடிதத்தில் எழுதியிருந்த படி இந்த எல்லா இடங்களிலும், உயிரினங்களிலும் விஞ்ஞான சக்திகள் இருக்குமா? தான் ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்ஞான சக்தி மட்டும்தான். இந்த சக்தியில் பிறக்கும் எண்ணங்கள் எவ்வளவு வகைப்பட்டது? எவ்வளவோ துக்கங்களை ஒரு பிறவியிலிருந்து இன்னொரு பிறவிக்குப் போகும்போது நாம் அனுபவிக்கிறோம் என அவன் நினைத்தான். தான் அனுபவிப்பது போன பிறவியின் ஞாபக சக்திதான். அந்த ஞாபகத்தை நாம் நினைக்கும் விதத்தில் அவ்வளவு இலேசாக மறந்து விட முடியாது? ஜானகி..... சுந்தரம்....... அந்த பிறவியில் தான் அன்பு செலுத்திய மகள் இப்போது தன்னிடமிருந்து எவ்வளவு தூரம் போயிருக்கிறாள்? தான் வேறு ஒரு இனத்தில் பிறந்து, துப்பாக்கியைத் தூக்கிக்கொண்டு சேவை செய்ய போனது தன்னுடைய முன் பிறவியின் மக்களுக்காக அல்லவா? இனம் என்பது ஒரு பிறவியில் கிடைக்கும் ஒரு உரிமை மட்டுமே. எல்லாம் தற்காலிகமானது. எல்லாம் கனவைப் போன்றது. கடைசியில் எல்லாமே நிலையில்லாதது.

அநுராதபுரத்திற்குப் போகும் வண்டி ஒன்று வரும்வரை அவன் வீதியில் வெகுநேரம் காத்துக் கொண்டிருந்தான். அஜித் அநுராதபுரத்தில் இராணுவத்தில் தனக்குத் தெரிந்த ஒருவரின் வீட்டில் தங்கியிருந்தான். தான் இங்கே ஏன் வந்தேன்? என்று அவன் அந்த வீட்டில் உள்ளவர்களுக்கு சொல்லவில்லை. பிக்கு ஒருவரை சந்திக்க வந்தேன் என்பதை மட்டும் சொன்னான். சூபூதி பிக்கு அவர்கள் தனக்கு எழுதிய ஒரு கடிதத்தைக் கண்டு மனம் மகிழ்ந்து அவரை சந்திக்க போவதாக மட்டுமே அவன் அவர்களுக்கு சொன்னான்.

இரவில் அவன் தங்கியிருந்த வீட்டுக்கு வந்தபிறகு எவரும் அவ்வளவாக அவனை விசாரிக்கவில்லை. வீட்டில் உள்ளவர்களுடன் சேர்ந்து இரவு உணவு உண்டபின் அவன் பல விஷயங்களைப்பற்றி பேசினாலும், மறுபிறப்பு அனுபவங்கள் அவனிடம் மாத்திரமே சிக்கிக்கொண்டது. அவர்கள் அதிகமாக 'புலி' பிரச்சினை பற்றியும் யுத்தத் தீயினால் இறந்த தங்கள் சிநேகிதர்களைப் பற்றியுமே பேசினர்.

வாழ்க்கை என்பது ஒரு துக்ககரமான பிரயாணமென்றும் ஆனால் அதில் அடிக்கடி ஏற்படும் சந்தோஷமென்பது சிறு சிறு நீர்த்துளிகள் போல தோன்றி மறையும் என்றும் அஜித் அன்றிரவு நினைத்தான். ஆகாயத்தில் தோன்றும் நட்சத்திரங்களும் இந்த மாயையின் ஒரு பகுதிதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஜித் அன்றிரவு என்றுமில்லாதவாறு நிம்மதியாக நித்திரை கொண்டான். ஜானகி, சுந்தரம் ஆகியோர் அவன் கனவில் வரவில்லை. மறுநாள் காலையில் புத்துயிர் பெற்றவன்போல அஜித் படுக்கையில் இருந்து எழும்பினான். ஜானகியைத் தேடி நீர்வேலிக்குப் போக அவனுக்குத் தோன்றியது. ஆனால் இச் சந்தர்ப்பத்தில் யாழ்ப்பாணம் போவதைப்பற்றி நினைப்பதும் ஒரு கனவு என்று நினைத்தான். வடக்கே எல்லா இடங்களிலும் தீப்பற்றி எரிகின்றது. சூபூதி பிக்கு தனக்கு கொடுத்த வாக்குறுதியின்படி உதவி செய்வார் என்று உறுதியாக எண்ணிக் கொண்டு, அஜித் அன்று காலையில் நுகேகொடையில் உள்ள தமது வீட்டுக்குத் திரும்பினான்.

இவ்வாறாக சில ஆண்டுகளாக அஜித்தினுடைய வாழ்க்கையில் கவலை சூழ்ந்து காணப்பட்டது. யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட ஆபத்துக்குப் பின்பு அவனுக்கு இந்த உலகமும் வாழ்க்கையும் வெறுத்துப் போய் விட்டன. இனிமேல் துப்பாக்கியை ஏந்திக்கொண்டு யுத்தத்திற்கு செல்ல முடியாத காரணத்தினால், அவன் கொழும்பிலுள்ள இராணுவ அலுவலகத்தில் வேலை செய்தாலும் அங்கேயும் கூட மனதை ஒரு நிலைப்படுத்திக்கொண்டு வேலை செய்ய அவனால் முடியவில்லை. அந்த மனிதன் தீயில் பற்றி எரிகின்ற காட்சி அவன் உள்ளத்தில் எப்போதும் இருந்தது. யாருக்கும் இதைப்பற்றி சொல்ல அவன் விரும்பவில்லை. உண்மையிலேயே அவனுடைய கதைகளைக் கேட்க நண்பர்கள் யாரும் இருக்கவில்லை. தனது ஒரே ஒரு நண்பனான புத்தி யுத்தத்தில் இறந்த பிறகு அவன் இவ்வுலகத்தில் தனித்து விடப்பட்டது போல உணர்ந்தான்.

அஜித் செய்தித்தாள்களில் திஸரவெவ சூபூதி பிக்கு எழுதும் மறுபிறப்பு பற்றிய கட்டுரைகளை படிப்பதிலேயே கூடிய கவனஞ் செலுத்தினான்.

கனவுகளில் கடந்த கால வாழ்க்கை விபரங்கள் இருக்கலாம் என்றும், மோகன முறையால் கடந்த கால வாழ்க்கைபற்றி தெரிந்து கொள்ளுகின்ற மேற்கு நாட்டு விஞ்ஞானிகள் பற்றியும் அந்த கட்டுரையில் குறிப்பிடப்பட்டிருந்தது. அஜித் இவ்வாறான கட்டுரைகளை பத்திரிகைகளில் வாசித்த பின்னரே சூபூதி பிக்குவைச் சந்திக்க வேண்டும் என்று தீர்மானித்தான். பிக்கு அவர்கள் தன்னை வந்து காணுமாறு அஜித்திற்கு பதில் எழுதவே அவரைக் காண அநுராதபுரத்திலிருந்து சற்று வடக்கே உள்ள திஸர வெவவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கிப் போனான்.

சூபூதி பிக்கு அவர்கள் செய்த மோகனவித்தை காரணமாக அஜித்துக்கு தனது வாழ்க்கை ஒரு முழுமை அடைந்த வட்டம் போலத் தெரிந்தது. அதில் ஒரு குறைபாடாக இருந்தது ஜானகி மட்டுமே. அவளை மீண்டும் கண்டு பேசித்தான் அவளுக்கு முன்னே பழக்கமானவன் என்பதை எடுத்துச் சொல்லலாம் என நினைத்தான். அனால் இவ்வாறான தன்னுடைய கருத்துக்களை யாருக்குத்தான் சொல்வது? யார் இதை நம்புவார்கள் என நினைத்தான்?

வீட்டுக்கு வந்த அஜித்தினுடைய கவலைமிக்க முகத்தைக் கண்ட மல்லிகா ஹேனகம மகனிடம் என்னவென்று விசாரித்தாள். அஜித் தன் நண்பர்களைக் காண அநுராதபுரம் போனான் என்பதை மட்டும் அவள் அறிந்திருந்தாள். என்ன மகனே யோசனை செய்கிறாய்? அநுராதபுரம் பிரதேசத்தின் செய்திகள் எப்படி?

"ஏதோ, மக்கள் வாழ்கின்றார்கள்."

"சில மக்கள் புலிகள் வந்தால் என்ன செய்வது என்ற பயத்தோடு இருக்கிறார்கள்."

"மகன் இன்னும் என்ன யோசனையில் இருக்கிறாய்?" அஜித் கொஞ்சம் சிரித்தான்.

"என்ன நடந்தது? சொல் மகனே! அவன் பக்கத்தில் இருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்ட மல்லிகா இவ்வாறு கேட்டாள்.

"அங்கே எனக்கு ஒரு பிக்குவைச் சந்திக்க நேர்ந்தது. திஸரவெவ சூபூதி என்பது அவர் பெயர். பிக்கு என்னை மோகன வித்தையில் ஆழ்த்தினார். கடந்த கால வாழ்க்கை பார்ப்பதற்கு இவ்வாறு செய்தார்.

"அப்ப என்ன பார்த்தாய்?"

அஜித்தான் கண்ட மோகன நிகழ்ச்சிகளை விளக்கிக் கூறும்போது மல்லிகா மிகவும் ஆவலோடு கேட்டுக் கொண்டிருந்தாள். "அப்ப மகனே நீ அந்த தமிழ் மனிதன்தான் என்று நினைக்கின்றாயா?"

"அப்படி நினைப்பது மட்டுமல்ல; அது எனக்கு இப்போது நன்றாகத் தெரிகின்றது. எனது சிறுவயதில் உடம்பெல்லாம் சிறிய புண்கள் காணப்பட்டதும், வாயைச் சுற்றிலும் கரும்புள்ளிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்ததையும் நீங்கள் தனக்குச் சொன்னது ஞாபகம் இருக்கிறதா? அவை எல்லாம் நான் முன்பு தீபற்றி எரிந்த காரணத்தினால்தான்" என்று இப்போது ஞாபகத்தில் வருகிறது.

"மகனே நீ சின்ன வயதில் எனக்கு புரியாதது சிலவற்றை சொன்னது உண்மைதான்."

"எனக்கு இப்ப தெரிகிறது. நீர்வேலியில் நான் எனது கடந்த பிறவியில் பெற்றெடுத்த மகள் ஜானகியைக் கண்டேன்." மல்லிகாவுக்கு ஏதோ ஒரு ஞாபகம் வந்தது. அஜித்துடன் கதிர்காமம் சென்ற பயணம்...

"மகனுக்கு ஞாபகம் இல்லாமல் இருக்கலாம்.

மகன் சிறிய வயதில் நாம் சாமியை வேண்டிக்கொண்டு, அதை ஒப்புதல் செய்ய கதிர்காமம் போயிருந்தோம். அப்போது பாலத்தின் அருகில் ஒரு தமிழ் குடும்பம் நின்று கொண்டிருந்தது. நீ அவர்கள் இருந்த இடத்திற்கு ஓடிப் போனாய். என் ஞாபகத்தின்படி அங்கே இருந்த மனிதன் அந்த சிறுமியை ஜானகி என்று சொல்லி அழைத்தான்.

"எனக்கு அது எல்லாம் சரியாக ஞாபகம் இல்லை அம்மா."

"எனக்கு ஞாபகமுள்ளது, எனக்கு ஞாபகமுள்ளது. அதல பிறகும் நீ அந்த பிள்ளை இருந்த வண்டிப் பக்கமாய் ஓடினாய்" என்று உன் அக்கா சொன்னாள். அஜித் பெருமூச்சுவிட்டான். மகனே நீ சின்ன வயதில் பெற்றோல் பவுசர் ஒன்றைக் கண்டு பயந்து அதனால் உனக்கு காய்ச்சல் பிடித்தது. பிறகுதான் உன் அண்ணா அந்த காரணத்தைச் சொன்னான். இறந்து போன பெரிய மகன் லயனல் ஞாபகம் அவளுக்கு வந்து மல்லிகாவின் இதயம் எரிவது போல் இருந்தது. அவளும் பெருமூச்சுவிட்டாள்.

"அண்ணாவும் எங்கேயாவது நல்ல ஒரு இடத்தில் பிறந்திருப்பாரா அம்மா!" "எங்களுக்கு எப்படி தெரியும் மகனே?" அண்ணா எப்போதும் முரட்டுக்குணம் கொண்டிருந்தான். இல்லையென்றால் அது போன்ற புரட்சியில் ஈடுபடுவானா?

"அண்ணா அதை அப்போது சரி என்று நினைத்து செய்திருக்கலாம்." அண்ணாவைப்பற்றி பேச அம்மாவுக்கு அவ்வளவு விருப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை என்று அறிந்த அஜித் பேச்சை வேறு பக்கமாக திருப்பினான்.

எனக்கு அந்த பெண்ணை சந்தித்து ஒரு முறையாவது பேச வேண்டும் போல இருக்கிறது அம்மா. பிக்குவுக்கு தெரிந்த ஒரு டாக்டர் நீர்வேலியில் இருக்கிறார் என்று சொன்னார். அவர் அவளைத் தேடிப் பார்த்து எனக்கு கடிதம் எழுதுவார்.

"எப்படியோ பார்ப்போம்"

"அம்மா! எனக்கு இப்போது ஒரு மாற்றம் தெரிகிறது. நமது ஞாபகங்கள் ஆசைகள் இவையெல்லாம் எமக்கு உரிமையுடையது அல்ல, என்பது இப்போது விளங்குகிறது. இதனால் தான் என்னவோ எனக்கு பெற்றோல் வாசனையை பிடிப்பதே இல்லை.

"மகனே! நீ சிறு வயதில் பஸ்வண்டியில் பிரயாணம் செய்தால் வாந்தி எடுப்பதுண்டு. பெற்றோல் நாற்றத்தை அப்போது உன்னால் பொறுக்க முடியாததாக இருந்தது.

இப்போது அதற்கான காரணத்தை நான் தெரிந்து கொண்டதனால் அதற்கு முகம் கொடுக்க என்னால் முடிந்தது. அம்மா! இன்னுமொரு விஷயம்; எனக்கு கணக்கு நன்றாக வரும். காரணம் என்னவென்று தெரியுமா அம்மா? அந்த சுந்தரத்திற்கும் நன்றாகக் கணக்கு வரும். அவன் மகளுடைய சீதனத்திற்காக பணம் சேர்த்திருக்கின்றான்."

தெல்கந்த சந்தியும் அதன் அருகில் இருந்த ஏரியும் அஜித்தின் ஞாபகத்தில் வந்தது. அங்கே போக அவனுக்கு ஆசையாக இருந்தது.

"அம்மா நான் கொஞ்சம் வெளியே போய் வருகிறேன் என்று அஜித் சொல்ல, "இரவு நேரம் ஆவதற்கு முன்னால் வீட்டுக்கு வந்துவிடு" என்றாள் மல்லிகா.

அஜித்தினுடைய வீடு "ஹத்தே கணுவ" அருகில் தான் இருந்தது. அங்கே இருந்து தெல்கந்த சந்திக்குப் போக அவனுக்கு அரைமணி நேரம் ஆகியது. அவனைச் சுற்றி படிப்படியாக இருள் சூழ ஆரம்பித்தது.

ஏரியை அவன் நெருங்கும்போது சிறிது வெளிச்சம் காணப்பட்டது. சந்தியில் கூடி இருந்த மக்கள் கூட்டத்திலிருந்து விலகி சிறிது தூரம் சென்று தென்பக்கமாக திரும்பி நடந்தான். பாதையின் வலது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கமாக ஏரிக் கரையோரத்தில் காணப்பட்ட செடிகளுக்கிடையில் இருந்த குடிசைகளின் வெளியே சிறுவர்கள், சிறுமிகள் விளையாடிக் கொண்டு இருந்தார்கள். அவர்கள் சிரித்து விளையாடும் சத்தமும் கேட்டது. அஜித் திடீரென ஓரிடத்தில் நின்றான். அந்த இடம் இது தான் என்று அவன் உள்ளம் சொல்லியது.

ஏரியைக் கடந்து செல்வதற்கு சிறிய ஒரு பாலம் இருந்தது. அவன் அந்த இடத்திற்கு முன்னரே பழக்கப்பட்டவன்போல அதை கடந்து சென்று குடிசைகள் இருந்த இடத்திற்கு போனான். அவன் மார்பு வேகமாக அடித்துக் கொண்டது. அவன் தொண்டை அடைத்துக் கொண்டது போல உணர்ந்தான். இந்த சுற்றாடல் தனக்கு முன்னர் மிகவும் பழக்கமான ஒன்றாகும் என்று நினைத்தான். இங்கே தான் தன்னுடைய குடிசை இருந்தது. ஆனால் இப்போது அது தன்னுடையது தானா? தான் சுந்தரம் தானா? இல்லை எனில் ஞாபகம் மட்டும் தானா? உடல் ரீதியாக சுந்தரத்திற்கும் தனக்கும் இடையில் எந்தவித சமமான நிலையும் இல்லை. ஆனால் தன் எண்ணத்தில் சுந்தரத்தின் வேதனை தான் தென்படுகிறது. அஜித் கண்களில் கண்ணீர் நிறைந்து காணப்பட ஏன் ஏன்?

அவர்கள் என்னை கொன்றார்கள்? அவர்கள் ஏன் என்னைப் போன்ற ஒரு அப்பாவி மனிதனை கொன்றார்கள்? என்று அவன் நினைத்தான். இதயம் வேகமாக அடித்துக் கொள்ளவே அவன் அக் குடிசைக்கு முன்னால் காலை மடித்துக் குந்தி உட்கார்ந்து கொண்டான்.

ஒரு சிறு பையன் அவனிடம் வந்து "என்ன ஐயா இப்படி இருக்கிறீர்கள்" எனக் கேட்டான்.

"ம்.... இல்லை. என் கால்.... என் கால் கொஞ்சம் வலிக்கிறது...."

"சமன், ஐயாவுக்கு உட்கார ஒரு நாற்காலி கொண்டு வா!" பெண் ஒருத்தி. வீட்டு வாசலில் இருந்து கொண்டு சொன்னாள்.

"இல்லை, இல்லை கஷ்டப்பட வேண்டாம்."

"என்ன ஐயா? யாரையாவது சந்திக்க வந்தீர்களா?" இவ்வாறு ஒரு பெண் கேட்டாள்.

"இல்லை, நான் சும்மா இப்படியே நடந்துகொண்டு வந்தேன்." என்று கூறிய அஜித் எழுந்து நின்றான். சுந்தரம் தான் சேமித்த பணத்தை ஒரு சட்டியில் போட்டு புதைத்து வைத்தது இந்த நிலத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானே? சுந்தரம் மரணம் அடைந்த பிறகு அவர்கள் பணத்தை எடுத்துக்கொண்டு யாழ்ப்பாணம் போய் இருக்கலாம். ஜானகிக்கு இந்த தகவல்கள் எல்லாம் தெரியுமா? ஜானகியின் தாய், அதாவது சுந்தரத்தினுடைய மனைவி இன்னும் உயிருடன் இருக்கிறாளா?"

"ஐயாவுக்குச் சுகமில்லையா?" "இல்லை இல்லை இப்போது சரி. கால் கொஞ்சம் வலிக்கிறது. "அஜித் காலை தடவிக்கொண்டான்?" "இந்த வீடுகள் கட்டி எவ்வளவு காலம் ஆகிறது?"

"அப்பா, ரொம்ப காலம் ஐயா!" இங்கே வருவோர் எல்லோரும் குடிசை கட்டிக்கொள்கின்றார்கள். இப்போது இங்கு இடமும் இல்லை."

"நான் போகிறேன்."

"ஐயா! கவனமாகப் போங்கள். பாலத்தின் மேல் போக முடியவில்லை என்றால் கொஞ்சம் தூரத்தில் பலகைப் பாலம் ஒன்று இருக்கிறது."

"இல்லை எனக்கு போக முடியும்."

அந்த சிறுவனும் சிறுமியும் அவனையே பார்த்துக் கொண்டிருந்தனர். அஜித் அங்கிருந்து சேற்று நீரைத் தாண்டி பாலத்தின் அக்கரையை அடைந்தான். மிக சீக்கிரத்தில் அவ்விடம் இருளால் மூடிக்கொண்டது. பகலின் பின் இரவு வருவது போல வாழ்க்கையும் இரண்டாக மாறுபடுகிறது. ஆனால் பகலுக்கும் இரவுக்கும் தொடர்புண்டு. ஆனால் பகல் இரவு அல்ல என அஜித் நினைத்தான்.

"தான் வாழ்க்கையில் தேடிக் கொண்டது வெறும் கானல் தானா?" அஜித் வீட்டுக்கு வந்த சமயம் அப்பாவும் வீட்டிலிருந்தார். தான் அம்மாவிடம் சொன்னதை அவள் அப்பாவுக்கு சொல்லி இருப்பாள் என்பதை அப்பாவின் முகத்தை பார்த்த போது அஜித் தெரிந்து கொண்டான்.

"சூபூதி பிக்குவைப்பற்றி நானும் கேள்விப்பட்டிருக்கிறேன்" என்று கூறிய அப்பா பேச்சை தொடங்கினார்.

"அப்பா! நான் இப்போது அதைப்பற்றி பேச விரும்பவில்லை எனக் கூறிய அஜித் தன் அறைக்குள் நுழைந்தான்.

அப்பாவும் அம்மாவும் ஒன்றும் புரியாமல் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். கொஞ்ச நேரம் கடந்த பிறகு அப்பாவுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச அஜித் தீர்மானித்தான்.

அவன் சூபூதி பிக்குவிடமிருந்து கடிதம் வரும்வரை தினமும் வழிமேல் விழிவைத்துக் காத்திருந்தான். திரும்பவும் ஒருமுறை அவன் அவருக்கு கடிதம் எழுதியும் சீக்கிரமாக பதில் கிடைக்கவில்லை.

இரண்டு மாதங்கள் கடந்த பிறகு அஜித்துக்கு கடிதம் ஒன்று வந்ததும் பிக்குவின் கையெழுத்திலான அக்கடிதத்தைப் பார்க்கும்போது அஜித்தினுடைய கைகள் ஆடத்தொடங்கின.

"அஜித் ஐயா" என்று பிக்கு அவரது கடிதத்தை ஆரம்பித்திருந்தார். நீர்வேலியில் உள்ள டாக்டர் சாமிநாதன் எனக்குத் தகவல் தேடி அனுப்பும் வரை உங்களுக்கு கடிதம் எழுத தாமதித்தேன். ஜானகி சுந்தரம் என்ற நபர் யாரும் நீர்வேலியில் இல்லையாம்!

அவளுடைய கணவன் காணாமல் போனபிறகு ஜானகி புத்தூரில் இருக்கும் தனது அம்மா வீட்டிற்கு போய்விட்டாளாம். அவளது புத்தூர் விலாசம் இங்கே உள்ளது. ஆனால் அங்கே போவது சற்று ஆபத்துக்குரியது.

அவளைச் சந்திக்க நான் ஏற்பாடுகள் செய்திருக்கிறேன். அவளுடைய மகன் வசந்த ராஜாவைப் பார்ப்பதற்கு அவள் மாதத்திற்கு இரு தடவைகள் வவுனியாவுக்கு வருகிறாள். வசந்த ராஜா "ஈழப் புலி" இயக்கத்தில் ஒருவன். "போதிபுர" தாக்குதலின்போது கைது செய்யப்பட்டிருக்கிறான். தற்போது வசந்த ராஜா வவுனியாவில் உள்ள இராணுவ முகாமொன்றில் சிறைக் கைதியாக உள்ளான். ஐயாவுக்கு சம்மதம் என்றால் அவனைச் சந்திக்க முடியும்.

ஜானகி வவுனியாவுக்கு வரும் நாளை நான் அறிந்து கொண்டேன். அடுத்த மாதம் மூன்றாம் திகதி அவள் வருகிறாள். விருப்பம் என்றால் பன்சாலைக்கு வாருங்கள். நாம் அன்றைக்கு வவுனியாவில் உள்ள முகாமுக்கு போவோம். பதில் போடவும்.

"மும்மணிகளின் ஆசி உரித்தாகுக! திஸரவெவ சூபூதி"

அஜித் அக்கடிதத்தை வாசிக்கும் போது மல்லிகா அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். மகனின் முகத்தில் சிரிப்பு தோன்றுவதை அவள் கண்டாள்.

"மகனே! பிக்கு என்ன சொல்கிறார்." அஜித் பதில் ஒன்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லாமல் கடிதத்தை அம்மா கையில் கொடுத்தான். அதை வாசித்த மல்லிகா "அப்படியென்றால் மகனே அங்கே போகத் தயார் தானே?" என்றாள்.

"போகாமல் பின்னே?"

"நாங்களும் வரவா?"

"ம் ... இல்லை அம்மா! நான் அதை விரும்பவில்லை"

"நான் அப்பாவிடம் பேசினேன்?"

"அம்மா இது நான் தனியாக போய் முகம் கொடுக்க வேண்டிய விஷயம். ஒரு வேளை பிறகு ஒரு நாள்......"

"அக்காவுக்கும் ஆசை தான்."

"நான் சொன்னேனே பிறகு ஒருநாள் பார்ப்போம்."

நல்லது, நல்லது மகனே உன் விருப்பம் போலவே செய் என மல்லிகா அவன் சொன்னதை ஏற்றுக் கொண்டாள். அவள் உள்ளத்தில் ஒரே சந்தோஷம் அதற்குக் காரணம் என்னவென்றால் இதுவரையில் அஜித் எல்லோரிடமும் மறைந்தே வாழ்ந்தான். இப்போது அவன் அதிலிருந்து வெளியே வர முயற்சிக்கிறான் என்பதை எண்ணும்போது மன மகிழ்ந்தாள். இதற்கு காரணமான சூபூதி பிக்கு அவர்களுக்கு அதிக புண்ணியம் உண்டாகட்டும் என மனதுக்குள் நினைத்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



8

# ஜானகி - அஜித் - வசந்த ராஜா
## 1988

ஒரு பிக்குவும் சாதாரண மானிடன் ஒருவனும் தன்னை நோக்கி நடந்து வந்து கொண்டிருப்பதை வேலியருகில் நின்று கொண்டிருந்த ஜானகி பார்த்தாள். தன்னை அறியாமலே அவள் கைகள் வேலியை திறக்க ஆயத்தமானது. அவள் தான் உடுத்தியிருந்த வெள்ளை புடவை தலைப்பை சரிசெய்து பின்னர் தனது தலைமுடியையும் சரி செய்து கொண்டாள். தன் அருகில் இருந்த சாமிநாதன் டாக்டர் ஏதோ அவளிடம் சொன்னாலும் அது அவளுக்கு சரியாக கேட்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கத்தில் இருந்த இராணுவ முகாமிலிருந்து ஒரு இராணுவ அதிகாரி தன் படைவீரர்களுக்கு பயிற்சி வழங்கும் சத்தம் கேட்டது வவுனியாவில் பூமி வரண்டு காணப்பட மாலை சூரிய வெளிச்சத்தால் மேலும் நிலம் வெப்பமாகிக் கொண்டிருந்தது. எங்கேயோ காகங்களின் கூட்டம் கரையும் சத்தம் கேட்கிறது.

சற்று நேரம் பிக்குவின் முகத்தைப் பார்த்த ஜானகி அவளை அறியாமலேயே குனிந்து இரு கைகளையும் கூப்பி வணங்கினாள். "சுகமாக இருங்கள்" என்று பிக்கு கூறினார். மறு நிமிடம் ஜானகி பிக்கு அருகில் இருந்த இளைஞனின் முகத்தைப் பார்த்தாள்.

இருவரும் ஏதோ சொல்ல முடியாத உணர்வுகளுடன் ஒன்றும் பேசாமல் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டே இருந்தனர். டாக்டர் சாமிநாதன் பிக்குவுக்கு ஏதோ சொல்லி ஜானகியின் பக்கம் திரும்பினார்.

"ஜானகி, இவர்கள் யார் என்று சொல்ல முடியுமா?

ஜானகி இன்னும் அஜித்தைப் பார்த்துக் கொண்டே இருந்தாள். ஆம் என்று தன் வாயினுள்ளே முணுமுணுத்தாள்.

"இவள் ஜானகியாகத்தான் இருக்க வேண்டும்" பிக்குவின் கேள்விக்கு "ஆம்! ஆம்!" என்று அஜித் கூறினான்.

"நாம் அந்த கடைக்கு போவோம்" என்று சாமிநாதன் பாதைக்கு அப்பால் இருந்த கடையைக் காட்டிக் கூறினார்.

அஜித்துக்குப் பேசுவதற்கு வார்த்தைகள் வரவில்லை. ஜானகியைப் போலவே அவனும் மௌனமாக இருந்தான். எங்கே இருந்து தொடங்குவது என்று அவர்களுக்கு தெரியவில்லை.

நான்கு பேர்களும் கடையினுள்ளே நுழையும் போது சிலரின் கண்கள் அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தன. ஒருவர் பிக்கு, ஒரு தமிழ் ஜோடி, மற்றவர் ஒரு சிங்கள மனிதன்.

நான்கு பேரும் ஒரு மேசையின் அருகில் வந்த சமயம் டாக்டர் சாமிநாதன் தெளிவான சிங்கள மொழியில் "தேநீர் குடிப்போம்" என்று கூறினார்.

"எனக்கு வேண்டாம்! தண்ணீர் கொஞ்சம் போதும்." என சூபூதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிக்கு கூறினார். பிக்குவும், அஜித்தும் ஒரு பக்கமாக உட்கார்ந்தபோது, மற்ற இருவர் அவர்கள் முகத்தைப் பார்த்த வண்ணம் அவர்களுக்கு எதிராக உட்கார்ந்தார்கள். ஜானகியின் கண்கள் அஜித்தின் கண்களைப் பார்த்த வண்ணம் இருந்தன.

"ஜானகிக்கு சிங்களம் தெரியும்" என டாக்டர் சாமிநாதன் கூறினார். "நான் இந்த ஐயாவை சில காலத்திற்கு முன் நீர்வேலியில் சந்தித்திருக்கிறேன்." ஜானகி திடீரென பேசத் தொடங்கினாள்.

"நான் யார் என்று சொல்ல முடியுமா?" என்று அஜித் கண்களை அகலமாக விரித்துக்கொண்டு கேட்டான்.

"ஐயா, என்னுடைய கணவனை தேடிக் கொடுக்கிறேன் என்று சொன்னீர்கள்." அதன் பிறகு ஐயா போனது போனது தான்.

"இந்த ஐயா குண்டு விபத்தொன்றில் சிக்கினார்" என பிக்கு சொன்னார். சாமிநாதன் முதலில் அவளிடம் தமிழில் பேசியது அதுவாக இருக்கும் என அஜித் நினைத்தான். ஜானகி அவனை மன்னிக்கும் எண்ணமாகவோ என்னவோ சிறிது சிரித்தாள்.

"ஐயாவை எனக்கு நல்ல பழக்கம். நல்ல ஞாபகம் இருக்கிறது."

"ஜானகிக்கு மறுபிறப்பு பற்றி ஏதாவது தெரியுமா?" என பிக்கு கேட்டார். பிறக்கிறோம்; இறக்கிறோம்; பின்பும் பிறக்கிறோம். இறக்கிறோம்.

"ஆம் சாது! பிறவி என்பது அப்படிதான்."

"ஜானகி உங்கள் அப்பா எந்த ஆண்டில் காலமானார்?"

"அப்பா? ஐம்பத்திஒன்பதில்" "59" என்று சாமிநாதன் மொழிபெயர்த்தார்.

"இந்த அஜித் ஐயா பிறந்தது ஆயிரத்து தொளாயிரத்து அறுபதில்."

ஜானகியின் அப்பாவின் பெயர் சுந்தரமா? அஜித் கேட்டான்.

"சுந்தரம் ஆமாம்"

"நான் தான் சுந்தரம்!"

"அப்பா!"

ஜானகியின் கண்களில் இருந்து கண்ணீர் பெருகியது. அதைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்து அஜித்துக்கு அழாமல் இருக்க முடியவில்லை. அவ்விடம் அமைதியில் மூழ்கியது.

'அப்பா' என அலறிக்கொண்டு ஜானகி அழத்தொடங்கினாள். கையில் சுற்றியிருந்த கைக்குட்டையால் கண்களை துடைத்துக் கொண்டாள்.

'பிறப்பும் இறப்பும் இரண்டுமே துக்ககரமானது" என சூபூதி பிக்கு அவர்கள் கூறினார்கள்.

"ஜானகி நான் தான் சுந்தரம்! அவர்கள் என்னை பெற்றோல் ஊற்றிக் கொளுத்தினார்கள். ஆம்! ஜானகி, ஜானகி... என் மகள்! என் மகள்!

"அப்பா....." ஜானகி தொடர்ந்து சொன்னது எதுவும் யாருக்கும் புரியவில்லை. டாக்டர் சாமிநாதன் அவளுடைய கையைப் பிடித்து ஆறுதல் கூறினார். "ஜானகி கொஞ்சம் மெதுவாக பேசுங்கள்! கொஞ்சம் மெதுவாக பேசுங்கள்!"

ஜானகி கண்ணீரைத் துடைத்துக்கொண்டு நிதானமாக பேசத் தொடங்கினாள். "அப்பா இறந்ததை நாம் அறியவில்லை. நான் அப்போது சிறுமியாக இருந்தேன். நான் அப்பா வரும்வரை காத்துக் கொண்டிருந்தேன். ஆனால் அவர் வரவில்லை. பின்னர் நான் ஓடோடி வந்தேன். அம்மா அழுதுகொண்டிருந்தாள். தம்பியும் அவளோடு சேர்ந்து அழுதான். நாங்கள் குடிசைக்கு வந்தது கொஞ்ச ஞாபகம் இருக்கிறது. எல்லாம் தீப்பற்றி சாம்பலாகி இருந்தது. அம்மா அங்கே புதைந்திருந்த பணத்தை எடுத்து, எங்களையும் கூட்டிக் கொண்டு அந்த இரவிலேயே அவ்விடம் விட்டு வெளியேறினாள். வழியில் சிறிது நேரம் தங்கினோம். பிறகு வண்டியில் ஏறி யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தோம்.

"அம்மாஎங்கே? அம்மா எங்கே?" என அஜித் கேட்டான். "இறந்து இரண்டு மாதங்கள் ஆகின்றன ஐயா." ஜானகி திரும்பவும் அழத் தொடங்கினாள். அம்மா பைத்தியம் பிடித்தவர் போலாகிவிட்டாள்.

'ஏன்?'

தம்பி ஓடிப்போனான். அடுத்தது என் மகன் வசந்த ராஜா. சிறைக்குப் போனான். தம்பி துப்பாக்கிச் சூட்டில் இறந்தான். மகேஸ் மாமாவும் துப்பாக்கியால் சுடப்பட்டு மரணமடைந்தார். எல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிந்தது. ஐயா! இதனாற்றான் அம்மாவுக்கு பைத்தியம் பிடித்தது.

அஜித் தன் உள்ளத்தில் எழுந்த வேதனையைப் பொறுத்துக் கொண்டான். "இவள் என்னுடைய மகள் அல்லவா!"

"நான் அம்மாவுடன் இருந்தேன். இப்ப நான் தனியாகி விட்டேன் ஐயா!"

"ஜானகி நான் வந்தது உங்களது மகனையும் பார்க்கத்தான். வசந்த ராஜாவை பார்க்க" என அஜித் சொன்னான்.

"ஆம் ஐயா" நான் மாதத்தில் இருமுறை அவனைப் பார்க்க போகிறேன். சிறையில் இருக்கிறது நல்லது ஐயா. இல்லை என்றால் எப்போதோ அவன் இறந்து இருக்கலாம். அல்லது மற்றவர்களை அவன் கொன்றிருக்கலாம்"

"நாம் எம்மால் முடிந்த உதவியைச் செய்வோம்" என பிக்கு கூறினார்.

"ஐயாவும் அப்பாவை போல்தான்" ஜானகி அஜித்தை நேராக பார்த்துக் கொண்டே சொன்னாள். கண்கள்-கண்கள் அந்த இரு கண்கள். அதே போலதான் இருக்கிறது" அஜித் சிரித்தான்.

"ஐயா! அப்பா எப்போது சிங்களவராகப் பிறந்தார்?

"ஐயாவுக்கு எப்படி தெரியும் அப்பா என்று"....?

டாக்டர் சாமிநாதன் சூபூதி பிக்கு அவர்களைப் பற்றியும், மோகனத்தின் உதவியால் முந்திய பிறவிகளைப்பற்றி அவர் அறிந்து கொள்ளும் விதத்தைப் பற்றியும் ஜானகிக்குச் சொல்லித் தந்தார். இதை அவர் கூறும்போது ஜானகி திடீரென மிக சுறுசுறுப்பாகி பொறுமையின்றி ஏதோ சொல்லத் தொடங்கினாள்.

"இதோ! ஜானகி கூறுவதை கேளுங்கள். அவளுடைய மகன் வசந்த ராஜாவும் இதே மாதிரியான கனவொன்றை கண்டானாம்" என்று சாமிநாதன் விளக்கிக் கூறினார். அவன் போதிபுரத் தாக்குதலுக்கு சென்றபோது இரு பெண்களை கண்டிருக்கிறான். இதற்கு முன் அவர்களை அவன் கண்டதாக ஒரு ஞாபகமாம். அந்த இருவரையும் அவன் கொல்லவில்லை. அப்போது தான் அவனுக்கு துப்பாக்கிக் குண்டுபட்டது."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வசந்த ராஜாவை முதலில் பார்த்தபோது எனக்கு ஒன்று ஞாபகத்திற்கு வருகிறது. பிக்கு அவர்களே." என அஜித் கூறினான்.

"நான் பார்த்தபோது அந்த சிறுவன் மார்பில் ஒரு தழும்பு இருந்ததாக ஞாபகம்."

ஜானகி சிரிக்க முயற்சித்தாள். மிகவும் முரடனான சிறுவன் ஐயா அவன். தவறான வழியில் வளர்ந்தவன்.

சூபூதி பிக்குவின் கண்களில் வேறு ஒரு காட்சி தென்பட்டது. "பிக்கு அவர்களே! நீங்கள் இந்த வசந்த ராஜாவை மோகனப்படுத்தினால், அவன் எதனால் இப்படி ஆனான் என்பதை தெரிந்து கொள்ள முடியும். ஆனால் அதை அவனது விருப்பத்தின் பெயரில் தான் செய்யலாம்..." என்று சாமிநாதன் பார்த்து கூறினார். இதை சாமிநாதன் ஜானகிக்கும் விளக்கிக் கூறினார்.

'சாது' நாம் ஏதாவது செய்து அதனால் மகனுக்கு நல்லது ஏற்பட்டால் உங்களுக்கு பெரிய புண்ணியம். பிக்கு அவர்களே! அந்த கனவு பின் மகனுக்கு பெரியதொரு வருத்தமாக இருக்கிறது ஐயா!

"நான் கேட்டுப் பார்க்கிறேன்."

தேநீர் அருந்தியபிறகு எல்லாரும் இராணுவ முகாம் திசையிலே நடந்து சென்றார்கள். இம்முறை ஜானகி அஜித்துக்கு மிகவும் சமீபமாக நடந்து சென்றாள். பிக்குவும் டாக்டரும் தனக்கு முன்னால் பேசிக் கொண்டு போவது எதையும் அஜித்துக்கு கேட்கவில்லை. ஜானகி தனக்கு சமீபமாக நடந்து வருவதில் ஒருவித சந்தோஷம் அஜித்துக்கு ஏற்பட்டது. கடந்த கால ஒரு இணைப்பு காரணமாக வாழ்க்கைச் சக்கரத்தில் இருந்த குறைபாடு ஒன்று நிறைவு பெற்றது போன்ற உணர்வு அவனுக்கு தோன்றியது.

வெளியே தீபத்தின் ஒளி அவன் இதயத்தில் சாந்தம் ஏற்படுத்தியது போலத் தெரிந்தது. முன்னொரு பிறவியில் தன்னுடைய இரத்தத்தினால் பிறந்த ஜானகி பெரியதொரு பெண்ணாக வளர்ந்து தன்னோடு நடந்து வருவது எவ்வளவு புதுமையானது! எல்லாம் எண்ணங்கள் மட்டுமே. எண்ணங்கள்! எண்ணங்கள்!

"எனக்கு இங்கே உள்ள 'பிரிகேடியர்' ஒருவரைத் தெரியும் என பிக்கு கூறினார். நான் பேசி, எல்லாவற்றையும் ஆயத்தம் செய்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகிறேன். அதுவரையில் நீங்கள் எல்லாரும் இந்த நிழலில் இருங்கள். சிறைச்சாலை, இராணுவ முகாமுக்கு மறு பக்கத்தில் தான் இருக்கிறது. நான் வசந்த ராஜாவோடு பேசிவிட்டு வருகிறேன்."

"சாது, நானும் மகனோடு கொஞ்சம் பேசவேண்டும்" என ஜானகி கூறினாள். "எனக்கு அங்கே கொஞ்ச நேரம் தான் கிடைக்கும்."

ஜானகி ஒரு பக்கத்திற்கு சென்றவுடன் பிக்கு பிரதான வாசலின் உள்ளே பிரவேசித்தார். அஜித் டாக்டர் சாமிநாதனுடன் "செக் போஸ்ட்டுக்கு" சென்று தனது இராணுவ அடையாள அட்டையைக் காட்டி அங்கிருந்த இராணுவ வீரர்களுடன் பேசத் தொடங்கினான். தான் 83ஆம் ஆண்டில் தாக்குதலின்போது காயம் அடைந்ததையும், தான் அன்று புரிந்த செயல்களைப் பற்றியும் சொல்லிக் கொண்டிருந்தான். மிகுந்த சந்தோஷத்துடன் அவன் பேசினான். காவலில் இருந்த இராணுவ வீரர்கள் கொழும்பு தகவல்களைப்பற்றி அவனிடம் விசாரித்தார்கள். இந்த யுத்தம் என்றைக்கு முடிவு பெறுமோ? என அடிக்கடி கூறிக் கொண்டார்கள்.

"அந்த சுபூதி பிக்குவும், இன்னும் சிலர் செய்யும் சேவை மிகவும் உத்தமமானது என ஒரு இராணுவ வீரன் சொன்னான்.

"என்ன வேலை?" அஜித் கேட்டான்.

"இயக்கத்தின் வேலை அந்த கிராமங்களிலுள்ள மக்களுக்கும், அகதிகளுக்கும் உதவி செய்வது. கொழும்பிலிருந்து மட்டுமல்லாமல், இப்போது பிற நாடுகளிலிருந்தும் மக்கள் அக் கிராமங்களை கட்டியெழுப்ப உதவி செய்து வருகிறார்கள்."

"எனக்கு அது தெரியவில்லை"

"பிக்கு எங்களுக்கு சொல்லுவார். சார் வேறு ஒரு விஷயமாக வந்தது போல தெரிகிறது."

"ஆம்! சிறைக் கைதி ஒருவனை சந்திக்க வந்தோம்."

"தமிழ் ஆளா?"

"ஆம்! ஆம்"

"சார் கூட ஏதோ வழியாக சேவை செய்வது போல தெரிகிறது."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாங்கள் மக்களை சிங்களவர் - தமிழர் என்று வேறுபடுத்தி பிரித்து பார்க்காமல் அவர்களை ஒரே மக்களாக மதிக்க நான் முயற்சி செய்கிறேன்."

"நம்மில் சிலருக்கு அதை விளக்குவது கொஞ்சம் கடினமாக இருக்கிறது ஸார்."

"விசேடமாக வடக்கை பிரிக்க முயற்சி செய்பவர்களுக்கு" இன்னொரு இராணுவ வீரன் சொன்னான்.

"வடக்கே உள்ள எல்லாரும் அப்படியானவர்கள் அல்லர்." எனக்கூறிய டாக்டர் சாமிநாதன் பேச்சில் கலந்து கொண்டார். ஒரு நாளைக்கு நாங்கள் எல்லோரும் எப்போதும் ஒரே இனத்திற்கு உரிமையானவர்கள் அல்ல என்பதை புரிந்து கொள்ளுவோம். பிக்கு அவர்கள் கூறியது போல இது எவ்வளவு தற்காலிகமான நிலைப்பாட்டால் ஏற்பட்டது? இவ்வாறு மிகத் தெளிவாக பேசிய தமிழ் டாக்டரை அஜித்தும் ஏனைய இராணுவ வீரர்களும் ஆச்சரியமாகப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

பிக்கு அவர்கள் திரும்பி வர அரைமணி நேரம் ஆகிவிட்டது. சாமிநாதனுக்கும் அஜித்துக்கும் உள்ளே போகத் தேவையான பத்திரங்களை அவர் வெள்ளைக்கொடி ஒன்றைக் கையில் ஏந்திக் கொண்டு வருவதைப் போல எடுத்துக் கொண்டு வந்தார்.

"நாங்கள் உள்ளே போவோம். நான் வசந்த ராஜாவோடு பேசிவிட்டு தான் வந்தேன். அவன் அதற்கு சம்மதம் தெரிவித்தான்."

"எந்த வேலைக்கு பிக்கு அவர்களே?"

"மோகனம் செய்ய"

"ஏதாவது செய்து அந்தப் பையனுக்கு அதனால் நன்மை ஏற்பட்டால் அது ஒரு பெரிய காரியம்" என சாமிநாதன் கூறினார். ஜானகியோடு நான் முதலில் பேசிய போது அவள் மகன் வசந்தராஜா தனக்கு கொடுத்த கஸ்டங்கள் எல்லாவற்றையும் எனக்குச் சொன்னாள். அவனுடைய அப்பா இறந்தபிறகு அவன் மிகவும் கெட்டுப் போனான். பிறகு மாமா ஒருவன் அவனை கூட்டிக் கொண்டு போயிருக்கின்றான். புலிகளுடன் அவனைச் சேர்த்து இருக்கின்றான்.

அவள் மிகவும் மன நிம்மதியற்ற நிலையில் இருப்பதாக பிக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறினார். தான் கண்ட ஒரு கனவைப்பற்றி அவன் எனக்கு சொன்னான். அவனுக்கு சிங்களமும் நன்றாக தெரியும்.

"வெள்ளவத்தையில் இருந்திருக்கிறார்கள்" அஜித் தான் அறிந்தவற்றைச் சொன்னான். இவன் எனது முன்பிறவி மகளின் மகன் அல்லவா? என அவன் நினைத்தான்.

தூசி நிறைந்த பாதையில் நடந்து சென்ற அவர்கள் முகாமிற்கு போகும் பாதையில் நுழைந்தார்கள். முகாம் ஒரு சிறிய கட்டிடமாக இருந்தது. முன்னால் தூண்கள் இருந்த பகுதியை ஜானகி பார்த்துக் கொண்டிருந்தாள்.

நான் வசந்தராஜாவை இங்கே அழைத்து வரச் சொன்னேன். பிக்கு விளக்கமாக கூறினார். "இது சாந்தமான இடம்."

"பின்னாலே ஒரு அறை காணப்படுகிறது" என்று சொன்ன ஜானகி அந்தப் பக்கமாக கையைக் காட்டினாள்.

வெளியே வந்த இராணுவ வீரன் ஒருவன் அவர்களை அந்த அறைக்குள்ளே அழைத்துச் சென்றான். அறையின் சுவர்களில் நீல நிற சாயம் பூசப்பட்டிருந்தது. அங்கே ஒரு சிறிய படுக்கையில் வெள்ளை நிற சாரத்தை உடுத்திக்கொண்டு வசந்த ராஜா உட்கார்ந்து கொண்டிருந்தான். அவன் அஜித்தைக் கண்டதும் அவனுடைய கையைப் பிடித்துக் கொண்டு கீழே பார்த்தவண்ணம் இருந்தான்.

அவ் அறையின் ஒரு மூலையில் நாற்காலிகள் சில கிடந்தன. அஜித்தையும் ஜானகியையும் அவற்றில் உட்காருமாறு கூறிய பிக்கு அங்கிருந்த இன்னுமொரு நாற்காலியைத் தன்னிடம் இழுத்து அதை படுக்கை அருகில் கொண்டுபோய் உட்கார்ந்து கொண்டார்.

ஜானகி தன் மகன் அருகில் இருந்த வண்ணம் அவன் காதில் மெதுவாக ஏதோ கூறினாள். வசந்த ராஜா அதற்கு தலையாட்டினான்.

"அவன் தயாராக இருக்கிறான் சாது" என அவள் பிக்குவிற்குக் கேட்கும்படி சொன்னாள்.

"உங்களுக்கு இஷ்டம் என்றால் இங்கேயே உட்கார்ந்து கொள்ளுங்கள்." பிக்கு அவர்கள் மீண்டும் சரியாக உட்கார்ந்தார். "வசந்த ராஜா அப்படியே படுத்துக் கொள்ளுங்கள். நாம் உங்கள் கனவு என்ன என்று பார்ப்போம்"?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஜித்திற்கு இது எல்லாம் புதியது அல்ல. பிக்கு அவர்களின் வேண்டுகோளின்படி வசந்த ராஜா உடல் பாரம் குறைந்து கொண்டுபோக, இரு கண்களையும் மூடிக்கொண்டு வேறு ஒரு உலகத்திற்கு மனத்தால் பறந்து போவதை அவன் பார்த்துக் கொண்டிருந்தான்.

"பாருங்கள் வசந்த ராஜா எங்கே இருக்கிறீர்கள் என்று"

"கண்டி - பேராதெனியவில்"

"பெயர் சொல்லுங்க பார்ப்போம்."

"எனது பெயர் லயனல் - லயனல்" வசந்த ராஜா பொறுமையின்றி சொல்லத் தொடங்கினான். தமிழ் மொழியில் சில வார்த்தைகள் பேசிய அவன் திடீரென சிங்களத்தில் பேசத் தொடங்கினான்.

"நான் லயனல். நான் கண்டியில் இருந்து போனேன். கால்லை - கால்லை - சேகுவேரா"

"என்ன நடந்தது லயனல்"?

"என்னைச் சுட்டார்கள். மார்பில் மார்பில்" வசந்த ராஜா வலது கையை மார்புமீது வைத்தான். முகத்தில் வேதனை தோன்றியது. கண்கள் கெட்டியாக மூடிக்கொண்டன.

லயனலுக்கு இப்போது வேதனை தெரியவில்லை.

"நாம் இன்னும் கொஞ்சம் முன்னாலே போவோம். சிறுவன் காலத்திற்கு உங்கள் வீட்டைப் பார்க்க...."

"நாங்கள் கொழும்பில்...."

"வேறு யார் இருக்கிறார்கள்."

"அம்மா, அப்பா, தங்கை, தம்பி சுநீதா-அஜித்"

"என் தம்பி அஜித் ஆம் இதோ இருக்கின்றான். அஜித் என் தம்பி. எனக்கு அவன்மேல் கோபம். எல்லோரும் அவனைத் தான் கவனிக்கிறார்கள். அதனால் எனக்கு கோபம். ஒரே கோபம். எனக்கு எல்லோரையும் பழிவாங்க வேண்டும் என்ற எண்ணம்"

அஜித் "அண்ணா" என கூறினான். இந்த படுக்கையில் தமிழ் இளைஞனாக படுத்திருப்பவன். தன்னுடைய இறந்த அண்ணனாகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லயனல் தானா?

அது ஒரு நினைவு மாத்திரமே.

"நான் பல்கலைக்கழகத்திற்கு போனேன். வசந்த ராஜா சொல்லிக் கொண்டே போனான். அங்கே தான் நான் அநுலாவுடன் உறவு கொண்டேன். அந்த அநுலா.... அநுலா... அவன் பலமாக மூச்சு எடுத்தான். நான் அநுலாவை விட்டு விட்டு போனேன். போராட்டம் நடத்த...

"அநுலா எங்கே"

"தெரியவில்லை. யான்ஒய அநுராதபுரத்தில் இல்லை... இல்லை... அந்த அநுலாவைத்தான் நான் போதிபுரத்தில் கண்டேன். அநுலா உடன்.... ஆம் அவள் என் மகள். எனக்கு இப்போது தெரிகிறது. நான் போவதற்கு முன்னால்... நாங்கள்.... நாங்கள் வசந்த ராஜாவின் பேச்சு நின்று விட்ட சமயம் அவன் கண்களிலிருந்து கண்ணீர் பெருக்கெடுத்தது. அவன் கண்களை மூடியிருந்தான்.

லயனல் இப்போது நாம் அந்த பிறவியில் மரணமடைந்த நேரத்திற்கு வருவோம். "லயனலுக்கு ஒரு வேதனையும் தெரியாது. உடலை விட்டு விட்டு பாரமின்றி மேலே செல்ல முடியும் அந்த உடலின் வேதனைகள் இப்போது தெரிவதில்லை. "பாருங்கள் என்ன நடக்கிறதென்று? நான் பொலிஸில் சிக்கிக் கொண்டேன். எனக்கு கோபம் வந்தது. அவர்கள் எல்லாரையும் கொன்று விட வேண்டும் என்று. அவர்கள் என்னைத் துன்புறுத்தினார்கள். மார்பில் இந்த இடத்தில் சுட்டார்கள்." வசந்த ராஜாவின் கை தழும்பு இருக்கும் இடத்தைக் காட்டியது.

"இப்போது வேதனை இல்லை. வசந்த ராஜா நான் மூன்று எண்ணும்போது எழுந்து விடுங்கள்.

வசந்த ராஜா கண்களில் வந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டு படுக்கையில் எழுந்து உட்கார்ந்தான். அவனுக்கு முதல் முதலில் அஜித்தினுடைய ஆச்சரியம் கலந்த கண்கள் தெரிந்தது. உட்கார்ந்திருந்த ஜானகி திடீரென எழுந்து படுக்கை அருகாமையில் சென்று தன் மகனைக் கட்டிப் பிடித்துக்கொண்டாள். அஜித் தனது உணர்வுகளைத் தடுத்து நிறுத்திக் கொள்ள முடியவில்லை. அவனும் எழுந்து அவர்கள் இருவரிடமும் சென்றான். அவர்களை கட்டிபிடித்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளும் பெரும் ஆசை அவன் உள்ளத்தில் தோன்றியது. அஜித், வசந்த ராஜாவின் மறு பக்கத்தில் உட்காரும் போது, வசந்த ராஜா அவனை கட்டிபிடித்துக் கொண்டான். அஜித், ஜானகி, வசந்த ராஜா ஆகிய மூவரும் ஒருவரை ஒருவர் கட்டிப் பிடித்துக்கொண்டு அழுது கொண்டிருக்கும்போது பிக்கு எழுந்து நின்று சாமிநாதனுக்கு இரகசியமாக ஏதோ சொன்னார். "நாம் வெளியே செல்வோம்." இந்த மூவரும் பேச வேண்டிய விஷயங்கள் பல இருக்கின்றன.

பிக்குவும் டாக்டரும் அறையிலிருந்து வெளியே போனது அந்த மூவருக்கும் தெரியாது.

"இது என் மகள் ஜானகி" என்று அஜித் சொன்னான். இது என் பேரன். என் அண்ணா - வசந்த ராஜா, லயனல் - இருவரும் ஒருவர்.

"அப்பா - அண்ணா" ஜானகி சொன்னாள். "என் மகன் - என் அப்பா - அண்ணா - தம்பி."

"எனக்கு.... எனக்கு அந்த அநுலாவைப் பார்க்க வேண்டும் போல் இருக்கிறது" வசந்த ராஜா அழுதுகொண்டு சொன்னான்.

"எனக்கு அநுலாவைக் காணும்வரை பொறுத்துக் கொண்டிருக்க முடியவில்லை."

"எனக்கு தெரியும். எனக்கு தெரியும்," அஜித் சொன்னான்.

மூவரும் படுக்கை மீது அமர்ந்து கொண்டு அழுவதும், பேசுவதுமாக இருக்கும். சமயத்தில், வெளியே மெள்ள மெள்ள இருள் சூழ்ந்து கொள்ள ஆரம்பித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



9

# அனைவரும்

## 1993

யான் ஓய பிரதேசத்திலே பிஸோவெவ என்ற கிராமத்தில் முப்பது புதிய வீடுகளை அகதிகள் குடும்பங்களுக்கு பகிர்ந்து கொடுக்கும் காரியத்தை முன்னிட்டு விழா ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

கடந்த இரவு பெய்த மாழையினால் அங்கு காணப்பட்ட நிலம் நன்ருகக் கழுவப்பட்டதால் புதியதொரு பூமியாக காட்சியளித்தது. மரங்களிலும், நிலத்தில் காணப்பட்ட புல்லிலும், இன்னும் பனித்துளிகள் இருப்பதைக் காணக் கூடியதாக இருந்தது. சூரியன் படிப்படியாக மேலே எழுகின்ற சமயத்தில் கிராமமக்கள் தமது முழு மனங்களையும் விழாவின் செயற்பாடுகளில் ஈடுபடுத்தினர். அவற்றின் மத்தியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைபட்டிருந்த அஜித் ஹேனகம பொறுமையற்றவராகக் காணப்பட்டார். வீடுகளுக்கு பக்கமாக திறந்த வெளியில் சில நாற்காலிகளும், அவற்றுக்கு முன்பாக தரையில் போடப்பட்டிருந்த பாய்களில் கிராம மக்கள் உட்கார்ந்திருந்தார்கள். சிறிது தூரத்தில் மரங்களுக்கு கீழே பலர் நின்று கொண்டிருந்தனர். அவர்கள் மரத்தால் செய்யப்பட்ட மேடைப் பக்கம் பார்த்துக் கொண்டிருந்தனர். அம்மேடையில் அமர்ந்திருந்தவர்கள் பேச்சாளர்களாவர். அவர்கள் கொழும்பிலிருந்தும், வெளியிடங்களிலிருந்தும் வந்தவர்களாக இருக்கலாம். அப்படி இல்லையென்றால் இந்த திட்டத்தில் பங்கு கொண்டவர்களாக இருக்கலாம்.

மக்கள் மத்தியில் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டிருந்த அஜித் தன் அருகில் இருந்த அம்மா, அப்பா, அக்கா, அவள் கணவர் ஆகியோரை ஒரு முறை பார்த்தான். இதில் ஏதோ குறைபாடு இருக்கிறதென்று அவன் நினைக்கின்றான். 'அவர்கள்' ஏனோ இன்னும் வரவில்லை.

இராணுவத்தில் இருந்த பிரிகேடியர் வீரரத்ன என்பவர் பேசத் தொடங்கினார். இந்த திட்டம் ஒரு கனவின் பிரதிபலனேயாகும் என்றார். இந்த கனவின் பலனாக இக்கிராமத்தில் இவ்வீடுகள் கட்டியெழுப்பப்பட்டன. அதே போல மேலும் கிராமங்கள் கட்டியெழுப்பப்படும். நமக்கு இப்போது இத்திட்டத்திற்காக எமது நாட்டில் மட்டுமல்லாமல் வெளிநாடுகளிலிருந்தும் உதவிகள் கிடைக்கின்றன. நான் ஆரம்பத்தில் கூறியதுபோல நாம் இவை செய்வது லாபம், புகழ், பாராட்டு ஆகியவற்றை எதிர்பார்த்து அல்ல. எமது மக்களுக்கு சேவை செய்வது தான் நோக்கம். இன்று நாம் வெற்றி பெற்றோம் என்று நினைக்கிறோம். அந்த வெற்றி எமது வெற்றி தான். அது துப்பாக்கியால் செய்யும் யுத்தத்தினால் கிடைக்கும் வெற்றி அல்ல. இந்த அகதிகளுக்கு உதவி செய்துகொண்டு, அவர்களை நிமிர்ந்து நிற்க கைகொடுப்பது தான் அந்த வெற்றி. அவர்கள் படும் துக்கத்தை உலக மக்களுக்கு எங்களால் கூற முடிந்ததுதான் வெற்றி. இதயங்களை வெல்வது தான் வெற்றி. இதயங்களை வெல்லுவது துப்பாக்கியால் செய்யக் கூடியதல்ல...

அஜித்துக்கு இதன் பிறகு பேச்சாளர் பேசியது ஒன்றும் கேட்கவில்லை. சூபூதி பிக்கு அவர்களின் காரணமாக இந்த கிராமங்களை மீண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டியெழுப்புவதில் அஜித் பங்கு கொள்கின்றான். அவன் இடைவிடாது செய்யும் இந்த சேவை ஒரு இனத்திற்காகவோ அல்லது ஒரு சமயத்திற்காவோ அல்ல. இந்த மனித வர்க்கத்தை நோக்கத்தில் கொண்டு செய்யும் சேவைதான் இது.

சுபூதி பிக்கு அவர்களுடன் சேர்ந்து பணியாற்றுவதன் மூலம் அஜித் ஒன்றை மாத்திரம் தெரிந்து கொண்டான். அதாவது தென்பகுதி மக்களுக்கும் கொழும்பு மக்களுக்கும் இங்கே நடக்கும் யுத்தம் பற்றிய உண்மையான செய்திகள் கொஞ்சம் மந்தமாகவே அவர்களை சென்று அடைகிறது என நினைத்தான். தூரத்தில் இருந்து வந்த மக்களையும் சேர்த்து, இந்த வடக்கு, கிழக்கு, வடமேல் மாகாணங்களில் வாழும் அகதிகளையும், சுற்றுச் சூழலில் வாழும் மக்களையும் புனருத்தாபனம் செய்து அவர்களுக்கு வீடுகள் கட்டி, மேலும் அவர்களது உரிமைக்கு போராடி, அவர்களுக்கு சக்தியையும் தைரியத்தையும் கொடுத்து பணம், உடு துணிகள் போன்றவற்றை தந்து இப்படி சில வருடங்களாக அஜித் வாழ்ந்த வாழ்க்கை அவனது வாழ்க்கை காலத்தில் மிகச் சிறந்த காலமாக அவனுக்கு விளங்கியது.

தன்னுடைய இந்த உலக வாழ்க்கையில் தன்னால் செய்யக்கூடிய கடமைகள் ஏதாவது இருந்தால் அதை செய்ய அவன் எப்போதும் தயாராக இருந்தான். சுபூதி பிக்குவிடம் தியானம் செய்யும் விதத்தையும் அஜித் கற்றுக்கொண்டான். சுயமாக செய்யக்கூடிய மோகனத்தால் சித்தத்தை ஒரு நிலைப்படுத்திக் கொண்டு, முந்திய பல பிறவிகளையும், அதன் விபரங்களையும் அவன் தெரிந்து கொண்டான். தான் முந்திய பிறவியில் சுந்தரம் என்ற தமிழ் மனிதனாக இருந்தது போல அதற்கு முன்னால் பல முறைகள் பல பிறவிகளில் வாழ்ந்து இருக்கலாம் என்றும், பல நம்பிக்கைகளையும் கருத்துக்களையும் நம்பி இருக்கலாம் என்றும் பல சமயங்களில் பிறந்து வழிபாடுகள் செய்து வந்திருக்கலாம் என்றும் அஜித் தன்னுள் எண்ணிக் கொண்டான். இந்த முறை தான் பிறந்த இனத்தைப் பற்றி விஷேட பெருமையை ஏற்படுத்திக் கொள்வது அவனால் முடியாமல் போயிற்று. தான் மனித இனத்திற்கு சொந்தமானவன் என்றும் அதில் வேறு பிரிவுகள் ஒருபோதும் இருந்தது இல்லை என்பதை உணர்ந்து கொண்டான். மக்கள் இவ்வாறான தற்காலிக உணர்வுகளினாலேயே தமக்குள் பேதமடைந்து ஒருவருக்கு ஒருவர் துன்புறுத்திக் கொள்கிறார்கள் என்று அஜித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்து கொண்டான். சூபூதி பிக்கு அவர்களின் வழிகாட்டலின் பின் அஜித் ஒரு பிறவியில் மட்டும் இணைந்து இருக்கவில்லை.

ஜானகி தன்னுடைய முன் பிறவியில் மகளாக இருந்தது உண்மை தான். ஆனால் இதைத் தவிர இன்னும் எத்தனை பிறவிகளில் தான் எத்தனை பேருடன் வெவ்வேறு இணைப்புகளை ஏற்படுத்திக் கொண்டு இருந்திருக்கலாம்? என அவன் மனதில் பட்டது. இப்படியாக போகும் இந்த பயணங்களில் மிகவும் முக்கியமானது இந்த இணைப்புகள் அல்ல. அந்த இணைப்புகளிலிருந்து பிரிவதே முக்கியமானது என அவன் உணர்ந்து கொண்டான். அஜித் இதன்பின் தனக்கென வாழாமல் மற்றவர்களுக்காக வாழ்ந்தான்.

தமிழ் கைதிகளுக்கு புனர் வாழ்வளிக்கும் பல செயல்களில் அவன் கலந்து கொண்டான். அவர்களில் சிலர் தியானத்தைப் பற்றி சூபூதி பிக்குவிடம் இருந்து கற்றுக் கொண்டனர். முந்திய பிறவிகளைப்பற்றி அறியவே இவற்றைக் கற்றுக் கொண்டார்கள். இந்த பிறவியில் இருக்கும் இந்த இனம் தனக்கு நிரந்தரமானது அல்ல என்பதை அறிந்தான். அதை அவன் இப்போது புரிந்து கொண்டான்.

இக்காலத்தில் அஜித் வவுனியா முகாமில் வாழ்ந்த வசந்தராஜா உடன் நட்பு கொண்டான். மோகன நிலைக்குப் பின் வசந்த ராஜா தான் முந்திய ஜன்மத்தில் லயனல் என்ற பெயருடன் அஜித்தினுடைய சகோதரனாக பிறந்தது உண்மையானது தான் என புரிந்துகொண்டான். அஜித் இதைப்பற்றி தன் பெற்றோர்களுக்குத் தெரிவித்த போதிலும், அவர்கள் சந்தேகப்பட்டார்கள். "போனது போகட்டும்" என்று விக்டர் ஹேனகம சொன்னார். "என் மகன் தேவலோகத்தில் இருப்பான்" என மல்லிகா கூறினாள். "அந்த தமிழ் இளைஞன் இதைக் காரணம் காட்டி சிறைச்சாலையிலிருந்து வெளியே வர நினைத்திருக்கலாம்."

அஜித்தினுடைய அக்காவும் அவன் சொல்வதை சந்தேகத்துடன் கேட்டாள். ஆனால் இவர்கள் இன்று இந்த விழாவில் கலந்து கொள்வதின் நோக்கம் அந்த வசந்த ராஜாவை பார்ப்பதற்கே ஆகும். ஆனால் அவர்கள் எதிர்பார்த்த மாதிரி வசந்த ராஜாவோ பிக்கு சூபூதி தேரோவோ இன்னமும் அங்குவரவில்லை. சொற்பொழிவாளர்களின் பேச்சுக்களை அஜித் பொறுமையின்றி கேட்டுக்கொண்டிருந்தான். பிரிகேடியரின் பேச்சுக்குப்பிறகு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்பகுதியிலிருந்து வந்த ஒரு பேச்சாளரும், பிக்கு ஒருவரும் பேசினார்கள். அதன்பிறகு அகதிகளாக அங்கிருந்த குடும்பத்தவர்களின் பரிதாபத்திற்குரிய நிலைமைகளைப் பற்றி கேட்டறிந்தனர். ஒரு பெண், புலிகள் தாக்குதலின்போது கடும் மழையில், காட்டில் மறைந்து இருந்தாள். அம்மழையில் தனது சிறு குழந்தையை தன்னோடு எடுத்துக் கொண்டு போக முடியாத காரணத்தால் குழந்தையை வீட்டில் ஒரு புறத்தில் மறைத்து வைத்துவிட்டு போயிருக்கிறாள். தாக்க வந்த புலிகள் அவள் சமைத்து வைத்திருந்த ரொட்டியை சாப்பிட்டுவிட்டு கடைசியில் குழந்தையை அடுப்புமேல் போட்டுவிட்டு போயிருக்கிறார்கள். இன்னொரு பிள்ளை பாடசாலையிலிருந்து வீட்டுக்கு வரும்போது புலிகளினால் தன் குடும்பம் முழுவதும் கொல்லப்பட்டிருந்ததைக் கண்டான்.

இதுபோன்ற கதைகளை அஜித் இதற்கு முன்னால் கேட்டிருக்கின்றான். ஆனால் இவற்றைக் கேட்கும்போதெல்லாம் அவன் உள்ளத்தில் வேதனை தான் ஏற்படுகின்றது. தனது முந்திய பிறவியில்தான் முகம் கொடுத்த பரிதாபத்திற்குரிய சம்பவங்கள் அவன் ஞாபகத்தில் வருகின்றன. நாற்காலியை சரியாக வைத்து உட்கார்ந்த அவன், சொற்பொழிவுகளை கேட்கத் தொடங்கினான்.

ஒரு பெண் உடன் இளம்பெண் ஒருத்தியும் மேடையில் அமர்ந்திருக்கிறார்கள். நடுத்தர வயதுடைய அப்பெண், இளம் பெண்ணுக்கு சமீபமாக போய் தன் சொற்பொழிவை ஆரம்பித்தாள்.

"நான் போதிபுரத்திற்கு என் கணவரோடும் மகளோடும் வந்தேன். அப்படி வந்ததற்குக் காரணம் இங்கு கமத்தொழில் செய்து வாழ்வதே. என் கணவர் யாருக்கும் பயப்படமாட்டார். அவர் ஒரு விவசாயி. போதிபுரத்தில் எமக்கு மகன் ஒருவன் பிறந்தான். 1987ம் ஆண்டில் தான் எமது கிராமம் அழிந்தது. பயங்கரவாதிகள் வருகிறார்கள் என்ற செய்தியைக் கேட்டு நாங்கள் காட்டிற்குள்ளே போய் மறைந்து விட்டோம். நானும் மகளும் ஒரு இடத்தில் இருந்தோம். அதற்கு சற்று தூரத்தில் என் கணவர் மகனை அணைத்துக் கொண்டு....." அவள் கண்களில் கண்ணீர் வந்தபோதிலும் மிகவும் தைரியத்துடன் பேசிக் கொண்டிருந்தாள். "அப்போது புலிகள் வந்து வீடுகள் எல்லாவற்றிற்கும் தீ வைத்துவிட்டுப் போனார்கள். அவர்கள் கண்ணில்பட்ட எல்லோரையும் கொன்றுவிட்டார்கள். நாங்கள் மறைந்து இருந்தோம். ஒருவன் நாம் இருந்த இடத்திற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவதை நான் கண்டேன். நான் கடவுளை வேண்டிக்கொண்டு என் மகளை இறுக அணைத்துக் கொண்டேன். அந்த மனிதன் என் கணவனை சுட்டான். என் மகன்.... ஐயோ, ஐயோ...." அவளுக்கு பேச்சை தொடர முடியவில்லை.

மகள் அவளுக்காக பேசத்தொடங்கினாள். "ஏதோ ஒரு காரணத்தினால் அந்த மனிதன் எங்களைக் கண்டபோதிலும் சுடவில்லை. எங்களையே பார்த்துக்கொண்டே இருந்தான். அப்போது தான் இராணுவத்தினர் அவனைச் சுட்டனர்." மக்கள் பெருமூச்சுவிடும் சத்தம் கேட்டது. அப்பொழுது மழை பெய்யத் தொடங்கியது. இவ்வளவு நேரம் பேசிய பேச்சுக்களை கேட்டோ என்னவோ ஆகாயத்தில் மேகங்கள் கவலை தெரிவித்தது போல இருந்தது.

நண்பர்களே! போதிபுர அநுலாதான் இப்போது பேசியவள். அநுலா பல்கலைக்கழகத்திற்கு தேர்ச்சி பெற்ற ஒருத்தி. ஆனால் அவை எல்லாவற்றையும் கைவிட்டு விவசாயம் செய்ய வந்தாள். இவள் என் மகள் விசாகா." பிரிகேடியர் அவர்களை கூடி இருந்தவர்களுக்கு அறிமுகம் செய்யும்போது மழை அதிகமாகப் பெய்யத் தொடங்கியது.

எல்லோரும் அங்கிருந்து விலகி வீடுகளின் கூரைக்குக் கீழே போய் நின்றார்கள். இன்னும் சிலர் குடைகள் பிடித்துக் கொண்டும், சிலர் மரங்களுக்கு அடியில் நின்று கொண்டனர். ஆனால் மழை அதிகமாக பெய்யவே கூட்டத்தை விட்டு மக்கள் வீடுகளின் கூரைக்கு கீழேபோய் நின்றனர்.

அஜித் தன் பெற்றோர்களையும், சகோதரி, அவள் கணவரையும் கூட்டிக் கொண்டு ஒரு வீட்டின் கூரைக்குக் கீழ் ஓடினான். அது புதியதொரு வீட்டின் திறந்த வாசல்படி.

"எல்லாம் கழுவப்பட்டு சுத்தமாகப் போக நல்ல மழை பெய்யட்டும்" என மல்லிகா ஹேனகம சொன்னாள்.

"புதிய ஆரம்பம்" சுநீதா அஜித்துக்கு கேட்கும்படியாக கூறினாள்.

"தம்பி இந்த மாதிரியான இடத்தில் வாழ உங்களுக்கு விருப்பமா?"

"உண்மையிலேயே எனக்கு விருப்பம் தான்." அஜித் பதில் சொன்னான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எனக்கு இப்போது இந்த பூமியில் எங்கே இருந்தாலும் ஒன்று தான்! என எண்ணத் தோன்றுகிறது. ஒரே பூமி. விக்டர் ஹேனகம மகனின் பேச்சைக் காதில் போட்டுக் கொள்வதுபோல சிகரெட் ஒன்றைப் பற்றவைத்துக் கொண்டான். கூரையிலிருந்து விழுந்த மழைநீர் தரையில் ஓடி அந்த இடத்தை சேறாக்கி விட்டது. அஜித் கூட மழைநீரில் தோன்றும் குமிழ்களை பார்த்துக் கொண்டிருந்தான்.

"அதோ அந்த மேடையில் பேசிய பெண் இந்த பக்கம் வந்துகொண்டிருக்கிறாள்" என்று சுநீதா சொல்ல அவன் தனது பார்வையை அவள் வரும் திசையில் செலுத்தினான்.

கடைசியாக மேடையில் பேசிக்கொண்டிருந்த அநுலாவும் அவள் மகள் விஸாகாவும் அவர்கள் நின்ற வீட்டுப் பக்கம் ஓடிவந்து கொண்டிருந்தார்கள். அநுலாதான் உடுத்தியிருந்த மஞ்சள் நிற புடவையின் தலைப்பைக் கையில் பிடித்துக் கொண்டு ஓடிவந்தாள். அவளை பின்தொடர்ந்து வந்த விஸாகா உடுத்திருந்த கவுண் மழையினால் வெகுவாக நனைத்திருந்தது. "ஆ" இப்படி வெளியே இருக்க வேண்டாம். உள்ளே வாருங்கள்! என அநுலா வீட்டு வாசலை நெருங்கிக் கொண்டே சொன்னாள். ஐயா! நோனா எல்லோரும் உட்காருங்கள்.

"இது எங்கள் வீடு"

அஜித்தினுடைய கண்கள் விஸாகாவைப் பார்த்தது. விஸாகா அநுலாவின் உடலில் ஒரு பாகம் போலவே அவனுக்குத் தென்பட்டது. ஒரே ஒரு வித்தியாசம் என்னவென்றால் அநுலா வயதில் சற்று அதிகமாக காணப்பட்டாள்.

"சூபூதி பிக்கு அவர்களும் வந்து பேசிக் கொண்டிருக்கிறார்கள்" என அநுலா கூறினாள்.

"இதோ வருகிறேன் என்று சொன்னார். இப்போது இங்கே வந்து கொண்டிருப்பார் என நினைக்கிறேன்" என்றாள். அஜித் முன்னால் பார்த்தான். பிக்கு குடை ஒன்றை பிடித்துக் கொண்டு வந்தார். ஆனால் அவர் தனியாக வரவில்லை. அதே குடைக்குக் கீழ் அவருக்கு பக்கத்தில் மறைவாக நடந்து வருகின்ற இளைஞன் யார் என்று அஜித் தெரிந்து கொண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நோனா உங்கள் பேச்சை நாங்கள் பின்னால் இருந்து கேட்டுக்கொண்டு இருந்தோம்." வீட்டுவாசலை அண்மித்து வந்து கொண்டிருந்த பிக்கு சொன்னார் "நாங்கள் வர சற்று தாமதித்தது."

"அமருங்கள் பிக்குவே" என கூறிய அநுலா வீட்டுக்குள்ளே பார்த்து கொஞ்சம் இருங்கள் நான் வெள்ளை துணி ஒன்றை கொண்டு வந்து நாற்காலியின் மேலே விரிக்கின்றேன்."

அவள் வீட்டுக்குள்ளே போகும்போது விஸாகாவும் அவளைத் தொடாந்து போனாள்.

பிக்குவுடன் வந்த இளைஞன் ஏதோ சந்தேகத்துடன் ஹேனகம குடும்பத்தினரைப் பார்த்துக் கொண்டிருந்தான். அஜித் மெல்ல அவனிடம் பேச்சுக் கொடுத்தான்.

"வசந்த ராஜா இது என் அம்மா, அப்பா இது என் அக்கா சுநீதா"

"எனக்கு தெரியும்" எனக்கூறிய வசந்த ராஜா அங்கு காணப்பட்ட ஒரு தூணில் சாய்ந்து கொண்டான். "எனக்கு தெரியும்." என மீண்டும் கூறினான். விக்டரும், மல்லிகாவும் ஊமைகளாகக் காணப்பட்டனர். வசந்த ராஜாவின் கண்களை காணும் போது, அவன் மீது ஒருவித ஆர்வம் அவர்கள் உள்ளத்தில் தோன்றியது.

"என்னைக் கண்டு பயப்படவேண்டாம்" என வசந்தராஜா தெளிவான சிங்களத்தில் சொன்னான்." எனக்கு தெரியும் இது யார் என்று..... ஞாகபம் இருக்கிறதா லயனல்?"

"அவன் என் மகன்" என சொல்லிக் கொண்டே மல்லிகா அழத்தொடங்கினாள். "லயனல், அது நான் தான்"...... நாங்கள் பிறக்கிறோம். பின்னர் இறக்கிறோம். அம்மா, இந்த பிக்கு எனக்கு இவற்றை விளக்கித் தந்தார்."

நாம் இறக்கின்றோம். பின்னர் பிறக்கின்றோம். அதற்கு முடிவே இல்லை. இந்த உலகப் பிறப்பில் இணைப்புகள் எல்லாம் தற்காலிகமானவை. அநுலா வெள்ளை நிறத்துணியைக் கொண்டு வரும்வரை வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்த பிக்கு சொன்னார்.

அதே நேரத்தில் அநுலா ஒரு வெள்ளை துணியைக் கையில் எடுத்துக் கொண்டு அறையிலிருந்து வெளியே வந்தாள். வெள்ளைத் துணியை நாற்காலியின் மேல் விரித்து போட்டுக் கொண்டே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிக்குவுடன் வந்த இளைஞனை நோக்கினாள்.

வசந்த ராஜாவும் அநுலாவையே பார்த்துக் கொண்டிருந்தான். அநுலா சீக்கிரமாக நாற்காலி மீது துணியை விரித்து பிக்குவை அதில் அமரச் செய்து, அவரை வணங்கினாள். ஏனையோரும் அவளைத் தொடர்ந்து பிக்குவை வணங்கினார்கள்.

"இது ஒரு புதுமையான சந்திப்பு" பிக்கு கூறினார்.

"அப்படி தானே?"

"அநுலா"

"என்னை ஞாபகம் இருக்கிறதா" வசந்த ராஜா அவளிடம் கேட்டான். பிக்கு அவர்களே! இந்த மனிதன் தான் அவன்! "என் சிரிபாலாவைக் கொன்றவன்" அநுலா பலத்த குரலில் அழுதுகொண்டு வெளியே ஓடினாள். வெளியே பெய்து கொண்டிருந்த மழை அவளுக்கு ஆசீர்வாதம் செய்வது போல இருந்தது. எல்லோரும் திடுக்கிட்டு பார்த்துக் கொண்டிருக்கும்போது வசந்த ராஜாவும் அநுலாவின் பின்னே ஓடினான்.

"அநுலா ..... அநுலா! என்னை மன்னித்து விடுங்கள். நான் செய்த குற்றத்திற்கு என்னை மன்னித்து விடுங்கள்."

"அம்மா" என கத்திக்கொண்டு விஸாகாவும் வெளியே ஓடினாள். அநுலா விஸாகாவை அணைத்துக்கொண்டு அழுதாள். வசந்த ராஜா அவர்களிடம் ஓடிப்போய், முழங்காலில் விழுந்து வணங்கி சொன்ன வார்த்தைகள் எதையும் அவர்களுக்கு சரியாகக் கேட்கவில்லை.

"அநுலா நான் தான் லயனல்.... எங்கள் காதலை பாதியில் விட்டுவிட்டு ஓடிய பாவி நான். ஒரு புரட்சிக்காக நான் உயிரை இழந்தேன். அநுலா! அதன் பின்னர் நான் பிறந்து இன்னொரு புரட்சிக்காக நான் மக்கள் பலரைக் கொன்று விட்டேன். அநுலா என்னை மன்னித்து விடுங்கள்..." வசந்த ராஜா கூறிய வார்த்தைகள் மழையின் சத்தத்தோடு கலந்தது. விக்டர் வீட்டு வாசலில் இருந்து வீசிய சிகரெட் துண்டு மழையினால் அணைந்து விட்டது. வெளியே ஆச்சரியமாக பார்த்துக்கொண்டு இருந்த மக்களுக்கு சூபூதி பிக்கு கூறியவை தெளிவாக கேட்கக் கூடியதாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வாழ்க்கை சக்கரத்தில் பிரயாணம் செய்யும் போது நாம் ஏற்படுத்திக்கொள்ளும் இணைப்புகள் பற்றி யோசித்துப் பாருங்கள். புண்ணியம் செய்பவர்களே! அதற்கு இடையில் நாம் ஏற்படுத்திக்கொள்ளும் ஆசைகள், பேராசைகள் காரணமாக உண்டாகும் துக்கங்களை எண்ணிப் பாருங்கள். தனக்குத் தானே என்று இல்லாத போது இவர்கள் எனது பெற்றோர்கள், இவர்கள் எனது பிள்ளைகள். இவை எனது சொத்துக்கள். இது எனது இனம் என சொல்லிக் கொண்டு மனதில் தீராத ஆசைகளை ஏன் வளர்த்துக் கொள்ள வேண்டும். புண்ணியம் செய்தோர்களே! நம்மால் முடிந்ததை மற்றவர்களுக்கு செய்வோம். இல்லாதவர்களுக்கு கொடுப்போம். கொடுக்கும் தானத்தினால்தான் இந்த ஆசைகளைத் துறந்து விட முடியும். தானத்தினால் நாம் உயர்வு அடைகின்றோம். அடுத்தபடியாக நாம் சீலத்தினாலும், தியானத்தினாலும் நமது சித்தத்தை தூய்மைப் படுத்திக் கொண்டு ஒரு உன்னத நிலையை அடைய முடியும். அதுதான் நிர்வாணம். புண்ணியம் செய்தோர்களே! அங்கே தான் நிர்வாணம்! (முத்தி நிலை).

சூபூதி பிக்கு அவர்களின் பேச்சை அஜித்தும் வெளியில் வந்து செவிமடுத்தான். வெளியே கொட்டிக் கொண்டிருந்த மழையினால் அங்கிருந்த நிலம் பரிசுத்தமடைந்தது போல தன்னுடைய இதயமும் பரிசுத்தமடைந்ததாக அவனுக்குத் தோன்றியது.

April 2nd 1995.

(Sunday)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநாதியான தேசாந்திரிகள்



## பத்ரஜீ

## மகிந்த ஜயதிலக

திரு. பத்ரஜீ அவர்கள் 1973ஆம் ஆண்டில் இருந்து ஐக்கிய அமெரிக்காவில் வாழந்து வருகின்றார். இவர் ஸ்ரீ லங்காவுக்கு அடிக்கடி விஜயம் செய்யும் வேளையில் இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்திலும், ரூபவாஹினி தொலைக்காட்சி நிறுவனத்திலும் சேவையாற்றுவார்.

இவர் ஐக்கிய அமெரிக்காவில் இருக்கும் மவுண்ட்சன்ட் கல்லூரியில் நாடகம், வீடியோ படம் எடுத்தல், ஓவியம் ஆகியவற்றைக் கற்பிப்பவராக பணிபுரிகின்றார். மேலும் இவர் ஹெமட்சின்டோ ரெப்பிட்டரி நாடகச்சங்கத்தின் நிர்வாகியாகவும் கடமையாற்றுகின்றார். ஹெமட்சன்யசின்டோ எழுத்தாளர் வட்டத்தின் தலைவராகவும் இவர் பணிபுரிகின்றார். திரு. பத்ரஜீ அவர்கள் பல கதைகளையும், நாவல்கள், சிறு கதைகள், மேடை நாடகங்கள், தொலைக்காட்சி நாடகங்கள், பாடல்கள், ஆகியவற்றையும் எழுதியுள்ளார்.

---

A SARVODAYA VISHVA LEKHA PUBLICATION
*Cover design: Priyantha Colombage*

ISBN 955-599-121-9
Rs. 150.00

SARVODAYA VISHVA LEKHA Printers

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org